# அமுதம்

கார்த்திகை 2023 11



## பெரிய நினைப்புப் பேராண்டிகள்

ஹிட்லர் இஸம்

# பெரிய நெனப்புப் பேராண்டிகள்!

வாழ்க்கையில் நான் கற்றுக் கொண்ட, கடைப்பிடிக்கும் தத்துவங்களில் மிகவும் முக்கியமானவை இரண்டு.

ஒன்று, உன்னையே நீ அறிவாய்!

தன்னை அறிந்து கொள்வது தான் ஒரு மனிதன் பெற்றுக் கொள்ளக் கூடிய உச்சபட்சமான அறிவு.

தான் யார்?
தனக்கு இந்தப் பிரபஞ்சத்தில் நிலையும் நோக்கமும் (place and purpose) என்ன?
தனக்குத் தெரிந்தது என்ன? தெரியாதது என்ன?
பலம் என்ன? பலவீனம் என்ன?
முடிந்தது என்ன? முடியாதது என்ன?

அதெல்லாம் தனது free will இனால் முடிவு செய்யப்படுவதா?
அல்லது தனது சக்திக்கு அப்பாற்பட்டதா?

அதையெல்லாம் அறிந்து சரணடைதல் தான் ஞானம் அடைந்த நிர்வாணம். அது தருவது தான் பேரின்பம்.

அதை இன்னமும் அடையாவிட்டாலும், என் தேடல் எப்போதும் அதை நோக்கியது தான்.

அந்த ஞானத்திற்கும் ஏட்டுப்படிப்புக் கல்விக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது!
துறை சார்ந்த கல்வியும், 'அடித்து விடுகிற' கதைகளும் அறிவுக்கான ஆதாரங்கள் இல்லை.

ஒரு சினிமாக் கதாநாயகனுக்கு கிடைக்கும் பிரபலத்திற்கும், பேரழகிக்குக் கிடைக்கும் பெருமைக்குமான ஆயுள் என்ன?

அதெல்லாம் தரும் கணப்பொழுது மகிழ்ச்சிகள் எல்லாம் வெறும் சுய இன்ப 'உச்சங்களே'!

பெண்கள் கல்லூரி முடிகிற நேரமாகப் பார்த்து வலம் வருகிற மைனருக்கு இருக்கும் பெருமிதம் போல!

வெளியீட்டு விழாவில், கொடுத்த விஸ்கிக்காக வழங்கப்படும் பாராட்டுரைகளால் அடையும் அந்த 'இலக்கிய ஆர்கசம்' போல!

இதையெல்லாம் அறிந்து கொள்கிற {ானம் தான் பணிவைத் (Humility) தருவது!

இந்தப் பிரபஞ்சத்தில் தனக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை (Nothing) என்பதையும், தான் இல்லாவிட்டாலும் அது இயங்கிக் கொண்டிருக்கும் என்ற உண்மையையும் உணர்த்துவது.

தன்னைச் சுற்றித் தான் உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது என்றும், தன்னுடைய வாயசைவுக்காகத் தான்

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

உலகமே காத்துக் கொண்டிருக்கிறது என்றும் நினைக்கும் பேரறிஞர்களை எல்லாம் பேஸ்புக்கிலும் அரசியல், இலக்கிய உலகிலும் நீங்களும் காணாமலா இருப்பீர்கள்?

இரண்டாவது, மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை ஊகித்து உணர்ந்து கொள்வது.

இது யாழ்ப்பாணிகள் மாதிரி, 'மற்றவே என்ன நினைப்பினம்?' என்பதற்காகவே, தங்கள் வாழ்க்கையை வாழ்கின்ற இயல்பு இல்லை.

நாங்கள் எதைச் சொன்னாலும், அது பற்றி எதிரில் இருப்பவர் என்ன நினைப்பார் என்பதை சரியாகவே முன்கூட்டியே உணர்ந்து கொண்டால், நாம் மற்றவர்களை விட ஒரு படி முன்னதாகவே இருந்து கொண்டிருப்போம்.

இதனால் தான், யாழ்ப்பாணிகள் மாதிரி, 'மற்றவனை மடையன் என்று நினைக்கிற' கதைகள் எதையும் என்னிடமிருந்து கேட்டிருக்க மாட்டீர்கள்.

என்னை ஒரு மேதாவியாகக் காட்டிக் கொள்ள உலக இலக்கியங்கள், தத்துவங்கள், உலகப் பிரபலங்களின் பெயர்கள், லோக்கல் பிரபலங்கள் எனது நண்பர்கள் என்றெல்லாம் போகிற போக்கில் அடித்து விடுகிற பீலாக்களைக் கண்டிருக்க மாட்டீர்கள்.

Tooting my own horn என்பது நான் வாழ்நாளிலேயே செய்திராதது. என்னை வேறு யாருக்காவது அறிமுகம் செய்யும்போது சொல்லப்படுகிறவை குறித்து பெரும் கூச்சமே அடைந்திருக்கிறேன்.

இப்போது கொஞ்சக் காலம் மட்டும், அபத்தத்தில் என்னைப் பற்றிக் 'கொஞ்சம் ஓவராகவே' சொல்லிக் கொள்வதை, நீண்ட காலமாக என்னைத் தெரிந்திருப்பவர்கள் உணர்ந்திருக்கக் கூடும்.

> **முன்பின் தெரியாத பிரபலங்களிடம் பெறும் முன்னுரைகளும், விஸ்கி உபயத்தில் வெளியீட்டு விழாக்களில் கிடைக்கும் புகழுரைகளும், உதவி ஆசிரியர்களுக்கு லஞ்சம் கொடுத்து வரும் பேட்டிகளும், கையைக் காலைப் பிடித்துக் கிடைக்கும் ஊடகப் பெட்டிக்குறிப்புகளும், விளம்பரத்துக்காக வழங்கப்படும் விருதுகளும் உண்மையாகவே தங்கள் திறமைக்குக் கிடைத்ததாக இவர்கள் நம்புகிறார்கள். அல்லது நம்புவதாக நடிக்கிறார்கள்.**
>
> **இது தான் இவர்களுக்கு தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.**

அது குறித்து எனக்கு வெட்கம் இருந்தாலும், இந்த self-proclaimed பேரறிஞர்களுக்குக் கடுப்பு ஏற்றுவதையும், 'உவன் பெரிய ஆளாயிடுவானோ!?' என்று பொறாமைப்படுவோருக்குக் கலக் கத்தை ஏற்படுத்துவதையும் தவிர வேறெந்த நோக்கமும் அதில் இருந்ததில்லை.

என்னைப்பற்றி மற்றவர்கள் பிரமித்து, புகழ வேண்டும் என்று நான் ஒரு போதும் நினைத்ததேயில்லை. இந்த இலக்கிய மேதகுக்கள் பலரை விட, நிறைய எழுதித் தள்ளியிருந்தாலும், புத்தகம் விட வேண்டும், வெளியீட்டு விழா நடத்த வேண்டும், அல்லது தமிழ்நாட்டு இதழ்களில் எழுதிப் பிரபலமாக வேண்டும், அவர்கள் பேட்டி காண வேண்டும் என்றெல்லாம் நான் ஒருபோதும் நினைத்ததேயில்லை.

எனக்கு இருக்கும், சமூக நீதியும், கொலைகாரக் கூட்டத்தின் பின்னால் போய் நாசமாகப் போய்க் கொண்டிருந்த நான் வாழ்ந்த சமூகம் பற்றியதுமான அக்கறையும் தவிர்ந்து, இதையெல்லாம் வைத்துப் பெயர் வாங்க வேண்டும் என்றெல்லாம் நான் நினைத்ததில்லை.

புலியைக் கடிப்பதை



facebook: George RC

வேண்டுமென்றே தவிர்த்து, கலை கலைக்காக என்று வேடம் போட்டோ, தமிழ்த்தேசியத்தைக் குஷிப்படுத்த இலங்கைத்தமிழ் மக்களின் அழிவையும், அவலத்தையும் வியாபாரப் பொருள் ஆக்கியோ, இங்கே வரும் இலக்கிய மேதகுக்களிடம் பல் இளித்து என் புத்தகங்களைத் திணித்தோ, தமிழ்நாட்டு இதழ்களில் எழுதிப் பிரபலமாவதும் புலன் பெயர்ந்த இலக்கியத்தின் 'ஜாம்பவான், பெருந்தகை' 'எனது நண்பர்' என்றெல்லாம் பெயர் வாங்குவதும் எனக்குப் பெரிய சிக்கலாக இருந்திருக்க முடியாது.

அங்கீகாரத்திற்காக பொய்யனாக வேண்டிய அவசியமும் அயோக்கியத்தனமும் என்னிடம் கிடையாது. அயோக்கியர்களின் போலிப் புகழ்ச்சிகளில் 'உச்சம்' அடையும் அளவில் நான் இல்லை.

இந்த அயோக்கியர்களிடம் வாங்குகிற அங்கீகாரத்தைக் கொண்டு, ஒரு டீ கூட வாங்க முடியாது.

கொலைப் பயமுறுத்தல்கள், புலன் பெயர் புலிவால்களின் பத்திரிகைத் தடை, என் தந்தையைப் புலி முகாமில் அடைத்து வைத்தது

எதுவுமே எனது நிலைப்பாட்டை மாற்றியதில்லை.

என்னை எனக்குத் தெரியும்! அதை மற்றவர்கள் சொல்லித் தான் அறிந்து கொள்ளவேண்டிய தேவை எனக்கு இருந்ததில்லை.

அதனால் தான், அகழ் மின்னிதழுக்கான பேட்டியில், 'நான் முட்டாள்களுக்குத் தலைவனாக அல்ல, புத்திசாலிகளுக்கு எதிரியாகவே இருக்க விரும்புகிறேன்' என்று சொல்லியிருந்தேன்.

தெரியாததைத் தெரியாது என்று சொல்வதில் வெட்கம் இருந்ததில்லை. மற்றவர்களை கவர்வதற்காக, தெரியாதவற்றில் பாண்டியத்தியம் பெற்றவனாகக் கதை விடுவதுமில்லை.

இதனால் தான் கிரிக்கட், தமிழ்த் திரையுலகக் கதாநாயகிகள் பற்றி எல்லாம் நான் கருத்துச் சொல்வதில்லை.

ஆனால், ஆர்வம் இருக்கும் எல்லாவற்றையும் பற்றிய தேடல் எப்போதும் இருக்கும். அதைக் கரை காண வேண்டும் என்ற துடிப்பு இருக்கும்.

நான் அறிந்து கொண்ட பல விடயங்கள் குறித்து புத்தகமே எழுதக் கூடிய அறிவும் இருக்கிறது. அது வீட்டுத் தோட்டம் முதல் இதழ் வடிவமைப்பு வரைக்கும், கணனிப் பயன்பாடு முதல் படப்பிடிப்பு வரை இருக்கிறது.

எப்போதும் எதையோ கற்றுக் கொண்டு தான் இருக்கிறேன். இப்போதும் Stop Motion Animation பற்றிய வகுப்புகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்.

மற்றவர்களைப் புத்திசாலிகளாக, சிந்திக்கத் தெரிந்தவர்களாக நினைப்பதால் தான், எதைச் சொன்னாலும் அதைத் தர்க்கரீதியான நியாயங்களோடு சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

அதை ஏற்றுக் கொள்வதா? விடுவதா? என்பது உங்களுடைய பிரச்சனை.

எனவே, நம் இலக்கியக் 'கதை சொல்லிகள்' மாதிரி, அடிச்சும் அவிழ்த்தும் விடுகிற விளையாட்டுகளில் எல்லாம் நான் ஈடுபடுவதில்லை. விசயம் தெரியாமல் அடித்து விட்டு, விசயம் தெரிந்தவர்களிடம் மொக்கயீனப்படும் அளவில் நான் இல்லை.

அதைப் போல, என் முன்னால் சொல்லப்படும் புகழுரைகளை நான் நம்புவதும் இல்லை.
'நான் கெட்டிக்காரன் என்பது எனக்கு ஏற்கனவே தெரியும், அதை நீ எனக்கு சொல்லித் தான் எனக்குத் தெரியணுமாக்கும்!' என்ற நினைப்பாகவும் இருக்கலாம்.

இதை விட, புத்திசாலித்தனமான பேர்வழிகள் என்று தங்களை நினைத்துக் கொண்டு, எனக்குச் சொல்வார்கள் என்று தெரிந்து கொண்டவர்களிடம் என்னைப் புழுகுகிறவர்களைப் பார்த்துச் சிரிப்புத் தான் வரும்.

ஆர்வத்தோடு வாசித்திருந்த ஒரு வாசகனின் மனம் நிறைந்த பாராட்டுக்கும், குஷிப்படுத்திக் கிளுகிளுப்பு ஊட்ட பொய்யாகப் புகழும் இலக்கியவாதியின் பசப்புக்குமான வித்தியாசம் எனக்கு நன்றாகத் தெரியும்.

வாசகர்களிடம் நேரடியாகவும், இலக்கியவாதிகள் மேடைகளில் சொல்வதற்கும், எனக்கு நேரடியாகச் சொல்வதற்குமான வித்தியாசங்கள் மூலமாகவும், இவற்றை அறிந்து கரை கண்டிருக்கிறேன்.

இவர்கள் தங்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதை, அவர்களின் உடல்மொழியையும், குரல், சொற்கள் தெரிவு மூலமான வாய்மொழியையும் வைத்து, அறிந்து கொள்வது என்பது தனிக் கலை.

அதை விடத் திறமையை அதிகம் வேண்டி நிற்கும் கலை, இவர்கள் சொல்வதை எல்லாம் எந்த உணர்ச்சியையும் முகத்தில் காட்டாமல், சிரித்த முகத்தோடு பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருப்பது தான்.

அது இன்னொரு கதை.
அது பற்றி எப்போதாவது எழுதக் கூடும்.

தன்னை அறிந்து கொள்வது தான் அறிதலின் உச்சப் பரவசம் என்றால்,

தன்னை எந்த விதமான அறிவும் திறமைகளும் இன்றி, மேலானவன் என்று நினைத்துக் கொண்டு, மற்றவர்களை முட்டாள்களாகவும், சாமான்யர்களாகவும் நினைப்பது மோசமான முட்டாள்த் தனம்.

அதிலும், ஏதோ ஒரு குழுமத்தில் பிறந்ததால், தான் மேலானவன் என்று நினைப்பது மனநோய்.

தனிமனிதனாக தன்னை எல்லாவருக்கும் மேலானவனாக நினைத்துக் கொண்டிருந்தால், அது வெறும் சுயமோகம்!

சரி, சுயபுராணம் தற்போதைக்குப் போதும்!

நீண்ட காலமாக தமிழ்நாடு மற்றும் புலன் பெயர்ந்த இலக்கிய, அரசியல் கும்பல்களைத் தெரிந்து வைத்திருந்ததால், நான் அடிக்கடி சொல்கின்ற ஒரு வார்த்தைப் பிரயோகம்...

'தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளோடு இருப்பவர்கள்!'.

எனக்குச் சில பேரைப் பார்க்கும் போது, சிரிப்பு வருவதுண்டு.

ஈழ விடுதலை இயக்கங்களில் ஏதோ வகையில் தங்களை இணைத்துக் கொண்டு இயங்கி, எல்லாமே முடிந்து, இங்கேயும் வந்து குடும்ப, கடன் அழுத்தங்களுக்குள் வாழ்ந்தபடி, மாலையில் ஒரு பியர்ப் போத்தலையும் வைத்துக் கொண்டு, தங்களை எல்லாம் 'ஈழ அரசியலின் தவிர்க்க முடியாத சக்திகள்' என்று

நினைத்துக் கொண்டிருப்போரைக் கண்டிருக்கிறேன்.

பேஸ்புக்கில் நடக்கும் தத்துவார்த்த விவாதங்களுக்கு இடையில், சகல சர்வதேசப் பிரச்சனைகளுக்கும் ஏதோ ஒரு சர்வரோக நிவாரணியை சதா prescribe பண்ணுகிற பலரை நீங்களும் தான் பேஸ்புக்கில் கண்டிருப்பீர்கள்.

இன்றைக்கும், தங்களைப் 'பயன்படுத்தி', பெரிய ஆட்களாகி விடுவார்கள் என்பதால், அப்படி எவரையும் தங்களுக்குப் போட்டியாக உருவாக்கி விடாமல், மிகவும் கவனமாக இருக்கிற, armchair விடுதலை இயக்கத் தலைவர்களான பேஸ்புக் சேகுவேராக்களைக் கண்டிருக்கிறேன்.

அடுத்த சர்வதேசப் புரட்சி தங்களின் தலைமையில் நடைபெற இருப்பதால், இப்படி 'எதிர்ப்புரட்சிச் சக்திகளை' வளர்த்து விட்டால், அந்தப் போராட்டத்தை மழுங்கடித்து மண் கவ்வச் செய்து விடக் கூடும் என்று இந்த முன்ஜாக்கிரதை முத்தண்ணாக்கள் பயம் கொள்வதில் நியாயம் இருக்கத் தான் செய்கிறது.

பேஸ்புக்கில் தோழர் வேலன், பாலன், பூலன் என்றெல்லாம் ஃபேக் ஐடிக்களை வைத்துக் கொண்டு தலைமறைவு வாழ்க்கை வாழும் இந்தத் சர்வ தேசியத் தலைவர்களின் புரட்சி வெடிக்கும் போது, அகதித் தஞ்சம் கோரி வேறு உலகங்களுக்குச் செல்ல, றொக்கட் விஞ்ஞானி ஆகி, நாசாவில் சேர்வதற்கும் எனக்கு வயதாகி விட்டது.

இருந்தாலும், அவர்களுக்குக் கிடைக்கிற பன்னிரண்டு விருப்புக் குறிகளையும், பத்து 'செம, தல!' பின்னூட்டங்களையும் பார்க்கும்போது, ஆட்சேர்ப்பு முடிந்து புரட்சி வெடிக்கும் வரைக்கும், தலைக்கறுப்போடு நடமாட முடியும் என்ற அசையாத நம்பிக்கையும் உண்டு.

இவர்களை விட, தாங்கள் வாசித்த(தாக?) சில புத்தகங்களை

**பேஸ்புக்கில் தோழர் வேலன், பாலன், பூலன் என்றெல்லாம் ஃபேக் ஐடிக்களை வைத்துக் கொண்டு தலைமறைவு வாழ்க்கை வாழும் இந்தத் சர்வ தேசியத் தலைவர்களின் புரட்சி வெடிக்கும் போது, அகதித் தஞ்சம் கோரி வேறு உலகங்களுக்குச் செல்ல, றொக்கட் விஞ்ஞானி ஆகி, நாசாவில் சேர்வதற்கும் எனக்கு வயதாகி விட்டது.**

வைத்துக் கொண்டு, சம்பந்தமில்லாமல் எங்கெங்கோ சொல்லப்பட்டதை எல்லாம் அதிகாரம், வசனம் சொல்லி வெட்டி ஒட்டி, எழுப்புதல் நடத்துகிற அல்லேலூயாக் கூட்டம் மாதிரி, அவற்றை மேற்கோள் காட்டி, அடுத்த சர்வதேசியப் புர்ச்சித் தலைவர்களுக்கு தாங்கள் தான் 'பாலேயங்கம்' என்றோ, அந்தப் புரட்சிகள் எல்லாம் மார்க்ஸ், மாவோவின் சித்தாந்தங்களின்படி 'ஹலால் முறையில்' தயாரிக்கப்பட்டவையா? என்ற முத்திரை குத்தும் தகுதி தங்களுக்குத்தான் இருக்கிறது என்றோ, நினைத்துக் கொண்டிருக்கிற இன்னொரு கூட்டம் இருக்கிறது.

இந்தப் 'புனித'ப் போராளிகளுக்கு, தாங்கள் மட்டும் தான் புனிதப் பேராளிகள், தாங்கள் மட்டும் தான் அந்தந்தத் தத்துவங்களை அட்சரம் பிசகாமல் கொண்டொழுகுகிறவர்கள் என்ற நினைப்பு இருக்கும்.

இதனால், இவர்களைத் தவிர, மற்ற எல்லோருமே, 'சாத்தானின் பிள்ளைகள்!'.

இவர்கள் 'தமிழ் அரசியல், இலக்கிய உலகில் அறம் கொண்ட படைப்பாளியை அடையாளம் காட்டுதல் சாத்தியமோ?' என்று கேட்டால், அதில் தன்னைத் தான் முன்மொழிவீர்கள் என்ற எதிர்பார்ப்பைத் தவிர வேறெந்த நோக்கமும் கிடையாது.

மேற்கு நாடுகளில் உடம்பு வளைத்து வேலை செய்து அறியாது, அந்த ஏகாதிபத்திய அரசாங்கங்கள் கொடுக்கும் சமூக உதவிப் பணத்திலோ, பெண்ணியம் பேசிக் கொண்டே வீட்டில் அடிமையாக வைத்திருக்கும் மனைவிமாரின் உழைப்பிலோ, ஓசிச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டே, ஊரில் வந்தவன் போனவனை எல்லாம், 'இந்த ஏகாதிபத்தியங்களின் கைக்கூலிகள்', 'அதிகாரத்தின் அடிவருடிகள்,', 'ஒத்தோடிகள்' (அல்லது பெண்ணியத்திற்கு எதிரானவர்கள், மகிந்தவின்ரை ஆள்!) என்றெல்லாம் முத்திரை குத்தியபடி, அடுத்த புரட்சி பற்றிக் கனவு கண்டு கொண்டிருப்பார்கள்.

அவர்களின் அந்தப் புரட்சிக்குப் பின்னான சமத்துவ உலகில் பெண்களுக்குச் சம உரிமை இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.

ஆனால், அவர்களின் துப்பாக்கி வர்க்கச் சர்வாதிகாரத்தில் வாயைத் திறந்தால் மண்டையில் போடுகிற அளவுக்குத் தான் கருத்துச் சுதந்திரம் இருக்கும் என்பதை மட்டும் உறுதியாகக் கூறலாம்.

இதே ஏகாதிபத்தியங்கள் உங்களைப் பயன்படுத்தி, அடுத்த உலகப் புரட்சியை நடத்தும் வரைக்கும் உங்களுக்கு தஞ்சம் அளித்து விட்டு வைக்க, நீங்கள்லாம் என்ன அயாத்துல்லா கொமெய்னியாடா? என்பதைச் சொல்ல முடியுமா?

துப்பாக்கிகளைத் தழுவிக் கொண்ட பின்னால் தான், அதற்கு நியாயம் சொல்ல தத்துவங்களைத் தேடியவர்கள் இவர்கள்.

பேஸ்புக்கில் சுய இன்ப 'ஆர்கசத்தோடு' காலத்தைக் கழிக்கும் இந்தத் துப்பாக்கி இல்லாத பிரபாகரன்களைக் கண்டால் உங்களுக்கு காறித் துப்பத் தோன்றலாம்.

நான் சிரித்துக் கொண்டே கடந்து போகப் பழக விட்டேன்.

நிர்வாண ஞானம்!

என்னுடைய அவதானத்தின்படி, பெருங்கனவுகளோடு இயக்கங்களில் இருந்த பலர், தங்களைத் தலைவர்களாக நினைக்க முடியாத அளவுக்கு, 'தன்னையே தான் அறிந்திருந்தாலும்', குறைந்த பட்சம், சென்ட்ரல் கமிட்டி பொலிட்பீரோவின் உறுப்பினர்களாகக் கனவு கண்டிருந்தவர்கள்.

ஆசிரியர் குழு சென்ட்ரல் கமிட்டிகளுக்குள், எதையும் செய்யாமல் உட்கார்ந்து இருந்தபடியே, 'தங்களைக் கேட்டுத்தான் எல்லாம் செய்ய வேண்டும்' என்று, செய்கிறவனையும் செய்ய விடாமல், ஒரு தனிமனிதனால் சாதிக்க முடிந்ததைக் குழுவாகக் கூடச் சாதிக்க முடியாதவர்களைக் கண்டிருக்கிறேன்.

இவர்கள் எல்லாம் தாங்கள் நினைப்பதற்கு தத்துவார்த்த விளக்கம் கொடுக்க பாலேய்ங்கங்களைத் தேடிக் கொண்டிருந்த குட்டிப் பிரபாகரன்கள்.

தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளோடு இருந்தவர்கள், தங்களுடைய தலைமையின் கீழ் தமிழீழத்தை வல்லரசாக்கும் கனவில் இருந்தவர்கள், நம்பிக்கைகளும் கனவுகளும் தகர்ந்து போய், எதிர்காலம் சூனியமான நிலையில், மன அழுத்தங்களுக்கு உள்ளாகி, மனநோய்க்கு மருந்து எடுப்பது வரைக்குமான நிலையில் உள்ளவர்கள்.

தங்களை 'ஒருத்தனும் கணக்கெடுக்கிறான் இல்லை' என்ற விரக்தியில், உலகமே தங்களை மறந்து விடாமல் இருப்பதற்காக, பதினைந்து நிமிடத்திற்கு ஒரு 'உள்ளேன் ஐயா' பதிவு போட்டுக் கொண்டு, தங்களின் இருப்பை வெளிஉலகுக்கு அறிவித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

இது ஈழ அரசியல் நிலை.

**இந்த ஈழத்துப் பூதந்தேவனார்களை வைத்து புலன் பெயர் சந்தைகளில் தங்கள் பிழைப்பை நடத்தலாம் என்று நினைக்கும் சஞ்சிகைகள், வார இதழ்கள், பதிப்பகங்களினால் குஞ்சம் கட்டி ஊதிப் பெருப்பிக்கப்பட்டவர்கள்.**

இதற்குள் இலக்கிய உலகம் வேறு.

ஈழ இலக்கியம், புலன் பெயர் இலக்கியத்திற்கெல்லாம் மேதகுக்கள்!

வெறும் தவிர்க்க முடியாத சக்திகள் இல்லை.
ஈழ, புலன் பெயர் இலக்கியத்தின் ஜாம்பவான்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்திகள் இவர்கள்.

எழுதுவதை விட, சுய மார்க்கட்டிங்கில் நிபுணர்கள்.

தமிழ்நாட்டு அங்கீகாரத்திற்காக விருது கொடுப்பது முதல் விஸ்கி காவுவது வரைக்கும் செய்து, தங்களைப் பற்றி அங்குள்ளவர்களைக் கொண்டு எழுத வைத்து தங்களை ஈழத்து இலக்கியப் பெருந்தகைகளாக்க, சகல சாம, பேத, தானங்களையும் செய்து வருகின்ற தண்டங்கள்!
தண்டியும் அண்டியும் பிழைப்பு நடத்துவோர்.

தேவைப்பட்டால் தலித் வேடமும் பூண்டு!

ஈழப் போராட்டத்தின் இலக்கிய wing பொறுப்பாளர்கள் ஒரு புறம். புலிகள் புனிதப் போராட்டம் நடத்தினார்கள் என்ற புலிப் பிரசாரத்தை புலி அழிந்த பின்னாலும், புலி தங்களிடம் கையளித்துச் சென்ற போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருப்போர்.

எந்த எதிர்காலமும் இன்றி அழிந்த ஒரு இனம் சிந்திய இறுதித் துளி இரத்தத்தையும் கசக்கிப் பிழிந்து அதில் பிழைப்பு நடத்தி பேரும் புகழும் அடையலாம் என்று தெரிந்த கிளிசரீன் ஹீரோக்கள் இவர்கள்.

இவர்களை விட, புலியைப் பற்றிச் சொன்னால், பிழைப்புக் கெடும் என்று வாயை மூடிக் கொண்டு, இரண்டு தரப்புக்கும் வேலையைக் கொடுக்கும் 'கலை கலைக்காக!' குளோசட் தமிழ்த் தேசியக் கூட்டம்.

இவர்கள் தப்பித் தவறியும் மற்ற இலக்கியவாதிகள் எவரைப் பற்றியும் தெரிந்ததாகவே காட்டிக் கொள்வதில்லை. எல்லாமே தங்களைப் பற்றியதாகவே இருக்கும்.

இவர்கள் புகழ்வது எல்லாம் தங்களைப் புகழக் கூடியவர்களை மட்டும் தான்.

இந்த ஈழத்துப் பூதந்தேவனார்களை வைத்து புலன் பெயர் சந்தைகளில் தங்கள் பிழைப்பை நடத்தலாம் என்று நினைக்கும் சஞ்சிகைகள், வார இதழ்கள், பதிப்பகங்களினால் குஞ்சம் கட்டி ஊதிப் பெருப்பிக்கப்பட்டவர்கள்.

இவர்கள் எல்லாருக்குமான ஒரே கனவு தமிழ்நாட்டு அங்கீகாரம் மட்டும் தான்!

அதற்காக இவர்கள் எவரையும் பகைத்துக் கொள்ளத் தயாராகவும் இல்லை.
எவருடைய கால்களையும் பிடிக்கத் தயங்குவதும் இல்லை.

அடுத்து, எங்கள் தமிழ்நாட்டு இலக்கியப் பெருந்தகைகளும் மேதகுக்களும்.

Self-proclaimed number one கள் முதல் 'also-ran மற்றும் பலர்' வரைக்கும் ஒரே கதை தான்.

படம் எடுக்க எல்லாம் ரெடி, கதை மட்டும் தான் கிடைக்கலை. எங்கே கிடைக்கும்? என்பது போல, அங்கீகாரத்தைத் தேடிக் கொண்டிருப்போர்.

இவர்களுக்குள் பல ரகங்கள்.

இளமை இதோ, இதோ என்னும் நம்பர் வண் 'நான் தான் சகலவலா வல்லவன்'கள்!

ஒரே ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டு, இலக்கிய உலகத்தையே திருப்பிப் புரட்டி வி(ட்ட)டும் கனவில் பெயருக்கு முன்னால் 'கவிஞரோடு' உலவுகிறவர்கள்.

உலக சினிமா, உலக இலக்கியம் என்றபடி, வாய்க்குள் புகாத பெயர்களை பேஸ்புக்கில் name dropping செய்யும் இலக்கிய விமர்சகர்கள்.

பின்நவீனத்துவத்தில் எழுதுகிறேன் பேர்வழி என்று எவருக்குமே புரியாத பிதற்றல்களில் புளகாங்கிதம் அடைவோர்.

வாழ்நாள் கனவான இலக்கிய சஞ்சிகை ஆசிரியராவது நனவாகி, ஒரே இதழ் தான் வெளிவிட முடிந்தாலும், அந்த இலக்கியப் பூகம்பத்தை வரலாறு மறந்து விடக் கூடாது என்பதற்காக, தங்கள் பெயருக்கு முன்னால் அந்தச் சஞ்சிகையின் பெயரை தாங்களே ஒட்டிக் கொண்டு அறிமுகம் செய்வோர்.

இவர்கள் சொல்ல வருவது என்ன?

எல்லை மீறிய தங்கள் மேதமையா? எல்லை கடந்த தேடல்களா?

இவர்கள் தங்களை அறிந்து கொள்வதுமில்லை.

தங்கள் கதை சொல்லல்களைக் கேட்கிறவர்கள் உள்ளூர என்ன நினைக்கிறார்கள் என்பதை ஊகித்து அறிந்து கொள்ளக் கூடிய திறமை வாய்ந்தவர்களாக இருப்பதுமில்லை.

தங்களைப் புத்திசாலிகளாகவும், மற்றவர்களை முட்டாள்களாகவும் நினைத்து அடிச்சும் அவித்தும் விடுகிற யாழ்ப்பாணத்துக் கதை சொல்லிகள் மாதிரி, இவர்களும் விளாசித் தள்ளுகிறார்கள்.

தங்களை இலக்கிய உலகின் தவிர்க்க முடியாத சக்திகளாகக் கற்பனை பண்ணுகிறார்கள்.

'நான் மட்டும் அமெரிக்காவில் பிறந்திருந்தால்?' என்றபடி, தங்களுக்குக் கிடைக்க வேண்டிய சர்வதேச அங்கீகாரத்தை, தமிழ் இலக்கிய உலகம் இருட்டடிப்புச் செய்கிறது என்று புலம்புகிறார்கள்.

இவர்களுக்கு கிளுகிளுப்பு ஊட்டும் 'அல்லக்கைகள், சொம்பு தூக்கிகள்' சொல்வதை நம்பிக் கொண்டு உச்சம் அடைகிறார்கள்.

தங்களுக்குக் கிடைக்கும் புகழும் அங்கீகாரமும் உண்மையானவையா? என்று தெரிந்து கொள்ளும் அளவுக்கு இவர்கள் தங்களை அறிந்திருக்க வேண்டும்.

முன்பின் தெரியாத பிரபலங்களிடம் பெறும் முன்னுரைகளும், விஸ்கி உபயத்தில் வெளியீட்டு விழாக்களில் கிடைக்கும் புகழுரைகளும், உதவி ஆசிரியர்களுக்கு லஞ்சம் கொடுத்து வரும் பேட்டிகளும், கையைக் காலைப் பிடித்துக் கிடைக்கும் ஊடகப் பெட்டிக்குறிப்புகளும், விளம்பரத்துக்காக வழங்கப்படும் விருதுகளும் உண்மையாகவே தங்கள் திறமைக்குக் கிடைத்ததாக இவர்கள் நம்புகிறார்கள்.
அல்லது நம்புவதாக நடிக்கிறார்கள்.

இது தான் இவர்களுக்கு தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

அந்த அதீதமான மதிப்பீடு இவர்களை தங்களை ஒரு sex symbol ரேஞ்சுக்கு நினைக்க வைப்பது பற்றி அபத்தத்தில் எழுதியிருக்கிறேன்.

அந்த நினைப்பு சாரு மாதிரி நம்பர் வண்களுக்கு மட்டுமல்ல, லோக்கல் சில்லறைகளுக்கும் இருக்கிறது. 'நான் இலக்கியவாதி, நான் நாலைந்து துணைவி, இணைவி வைத்துக் கொள்ளத் தானே வேண்டும்' என்று தத்துவ முத்து உதிர்த்த கதை கூட இங்கே உண்டு.

இவர்களுடைய உலகம் கிணற்றை விடச் சிறியது.

மணி ரத்தினத்தை தமிழ்நாட்டின் ஸ்டீவன் ஸ்பீல்பேர்க் என்பது போல, இலக்கிய உலகத்துக்குள்ளும் உலக நாயகர்களும், ஆஸ்கார் நாயகர்களும், சூப்பர் ஸ்டார்களும் உண்டு.

ஆசானின் கணிதப் புலமையின்படி, இலக்கிய உலகம் அதிகபட்சம் ஒரு லட்சம் பேரைக் கொண்டிருக்கக் கூடியது.

இலக்கிய உலகின் நம்பர் வண்களுக்கே ஆயிரம் புத்தகம் விற்க ஐந்து வருடங்களாகின்றன.

இதற்குள், பீலாவுக்கு மட்டும் குறைச்சலில்லை.

அந்தப் பீலாவை நம்பி தாலிக்கொடியை அடைவு வைத்து கவிதைத் தொகுப்பு வெளியிட, பலாப்பழத்தோடு வரிசையில் ஒரு கூட்டம்!

கடைசியில் பணம் பார்ப்பது பதிப்பகத்தினரும் அச்சகத்தினரும் தான்.

ஒரு புறத்தில், சிறுசஞ்சிகை உலகத்தின் கற்பு நெறி தவறாத கண்ணகிகளாக தங்களை உருவகித்துக் கொள்ள வேண்டியது.

மறுபக்கத்தில், வணிக வார இதழ்களில் எழுதுவதற்கும், அவற்றில் தங்களைப் பற்றிய பெட்டிச் செய்திகளும், பேட்டிகளும் வர வேண்டும் என்பதற்காகவும் தலையால் மண் கிண்டுவது.

தங்களை ஒருத்தனும் கணக்கெடுக்கிறான் இல்லையே என்று அங்கீகாரம் பற்றிப் புலம்புவது.

இடையில் தாங்கள் கனவு கண்டு கொண்டிருக்கும் ஏதாவது எவனுக்காவது கிடைத்தால், பொறாமையில் வேகுவது.

இறுதிப் புகலிடமாக, தாங்கள் திட்டித் தீர்த்த சினிமாவுக்குள் நுழைவதற்கான கனவோடு அலைவது.

சரி, பேசப்படவேண்டும் என்றால்,

என்னத்தைப் புடுங்கியிருக்கிறாய் என்று கேட்டால், எதுவும் இல்லை.

பேசப்பட வேண்டும் என்றால், எத்தனை பேரைத் தான் பேசுவது? எல்லாருமே பின்நவீனத்துவக் கவிஞர்கள்.

எழுதுவதைப் புரிந்து கொண்டால் தானே பேச முடியும்?

இந்த வியாதி பேஸ்புக்கில் ஒரு கவிதை எழுதியவருக்கு மட்டும் இல்லை, நம்பர் வண்களுக்கே இருக்கிறது என்பது தான் தமிழ் இலக்கிய உலகின் அவலம்.

வெளியீட்டு விழாக்களும் பாராட்டு விழாக்களும்.
பொன்னாடை போர்த்தல்கள், விருதுகள்.
உள்ளத்திலிருந்து வராத பொய்ப் புகழ்ச்சியும்,
உள்ளத்தின் அடியில் இருந்து வரும் பொறாமையும் புழுங்கலும்!

கொடுக்கிறவனுக்கும் வாங்குகிறவனுக்கும்
புகழ்கிறவனுக்கும் புகழப் படுகிறவனுக்கும் தெரியும்,
இதெல்லாம் பொய், இந்தப் பொய்யெல்லாம் தகுதிக்கானவை அல்ல என்பது.

இருந்தாலும், சொறிவதில் உள்ள சுகம் ஆர்கச உச்சம்!

இதற்குள், அறம் பற்றிய பீற்றலுக்கும், அறச்சீற்றத்துக்கும் மட்டும் குறைச்சல் இருக்காது.

சமூகம் பற்றியும், சமூக நீதி பற்றியும் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று கேட்டால்...

கலை கலைக்காகவே!

அப்போ எதுக்கடா, சமூகம் உங்களைக் கொண்டாட வேண்டும் என்று கேட்டால்...

பில்ஸ்தீன்கள், காமன்மேன்கள், சாமான்யர்கள்!

இதற்குள், 'சமூகம் வாசிப்பதில்லை. புத்தகம் வாங்குவதில்லை'.

சமூகம் நாறிக் கிடக்கிறது தான். புதிய கருத்துக்களை உள்வாங்குவதில்லை. புதிய சிந்தனைக்குத் தயாராக இல்லை.

அந்தச் சேற்றிலிருந்து அந்தச் சமூகம் மீண்டெழ நீங்கள் என்னடா செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால்...

'பின் நவீனத்துவக் கவிதை எழுதியிருக்கிறேன்!'

'செம, தலீவா!' பின்னூட்ட அல்லக்கைகள் மட்டும் தான் உலகம் என்றால், pdf please தான் தலையெழுத்து.

இந்தச் சமூகத்தை விட எழுதத் தெரிந்த நான் மேலானவன் என்றால், கட்டவுட்டுக்குப் பால் ஊற்றுகிற அதே புல்லரிப்போடு தானே முதல் நாள் முதல் ஷோ பார்த்து பேஸ்புக்கில் விமர்சனம் எழுதுகிறீர்கள்?
அவர்களைப் போலத் தானே தளுக்கல் குலுக்கல் நாயகிகளுக்கு ஜொள்ளு வடிக்கிறீர்கள்?
அவர்களை விட, எந்த விதத்தில் நீங்கள் உசத்தி?

இந்தச் சமூகம் சீரழிந்து கிடக்கிறது என்றால் அதன் அங்கம் தானே நீ.
அந்த சமூகத்தை விட நீ எந்த விதத்தில் உயர்ந்தவன்?

இந்தச் சமூகம் கொண்டிருக்கிற அதே சுயசாதிப் பற்றோடும், மற்றச் சாதிகள் மீதான வன்மத்தோடும், அரிவாளுக்குப் பதிலாக பேனாவை வைத்துக் கொண்டு அலைகிற பேர்வழி தானே நீ.

நாங்கள் எழுதுவது தான் இலக்கியம் என்றபடி, வணிக இதழ் வெற்றி எழுத்தாளர்களை நிராகரிப்பது தான் என்றால், அங்கே அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்று கனவு காண்பதும் தலையால் மண் கிண்டுவதும் முடியாத போது புலம்புவதும் என்ன அறம்?

**இந்தச் சமூகத்தை விட எழுதத் தெரிந்த நான் மேலானவன் என்றால், கட்டவுட்டுக்குப் பால் ஊற்றுகிற அதே புல்லரிப்போடு தானே முதல் நாள் முதல் ஷோ பார்த்து பேஸ்புக்கில் விமர்சனம் எழுதுகிறீர்கள்? அவர்களைப் போலத் தானே தளுக்கல் குலுக்கல் நாயகிகளுக்கு ஜொள்ளு வடிக்கிறீர்கள்?**

இந்த இலக்கிய உலகம் உன்னை மதிக்கவில்லை, பொறாமை மிக்கது என்றால், அது உன்னையும் அடக்கியது தானே!?

நீ மற்றவர்களிடம் கோருகின்ற அறத்தை நீ எப்போதாவது கடைப்பிடித்திருக்கிறாயா?

உன்னையே பிரமிக்க வைத்த படைப்புகளைப் பற்றி எப்போது நீ மனம் திறந்து பாராட்டியிருக்கிறாய்?

இன்னொருவன் பேர் வாங்கி விடுவான் என்ற பொறாமையைத் தவிர, உன் உள்ளத்தில் இருப்பது என்ன?

விருது கொடுக்கும்போது, 'ஆல் இன் ஆல் அழகுராஜா' எனக்குத் தராமல் கொடுப்பதா? என்ற பொறாமையைத் தவிர வேறென்ன?

மற்றவனுக்குக் கிடைக்கும் போது புழுங்கும் போதெல்லாம், தனக்குத் தந்தால் மூஞ்சியில் தூக்கி எறிவேன் என்று பகிரங்கமாகச் சொல்ல முடிகிறதா?

தனக்கும் கிடைக்கக் கூடும் என்ற எண்ணம் தானே, இயல்விருதுக்காக வடக்கு நோக்கியும், கனவு இல்லத்திற்காக கோட்டை நோக்கியும் தவம் இருக்க வைக்கிறது? அவற்றின் நோக்கம் பற்றி விமர்சிக்க முடியாமல் தடுக்கிறது?

வெற்றி பெற்ற வணிக எழுத்தாளனை நிராகரித்துக் கொண்டே, அதே கனவோடு வார இதழ்களில் இடம் பிடிக்க நினைக்காத இலக்கியவாதி யார்?

இன்னொருவன் பெயர் பெற்று விடுவான் என்ற பொறாமை தானே பிக் பொஸ் பற்றிய கற்பைப் பேசிக் கொண்டே அதைத் தவறாமல் பார்க்க வைக்கிறது?

சினிமாவை மட்டரகமானது என்று சொல்லிக் கொண்டே, பாலாபிஷேக நாயகனுக்கு பஞ்ச் டயலாக் எழுதும் கனவு இல்லாத இலக்கியவாதி என்று யாராவது மார் தட்டத் தயாரா?

அக்கிரோ குறோசோவா பற்றி அவ்வப்போது போகிற வழியில் பிரமித்துக் கொண்டே, அட்லியின் படங்களில் அதிகம் இருப்பது வன்முறையா? அழகியலா? ஆராய்ச்சிக் கட்டுரைகளும், விஜய் படங்களில் விஞ்சியிருக்கும் சமூகப் பார்வை பற்றி புத்தகங்களும் எழுதுகிற பேர்வழிகள் தானே விமர்சகர்களாக இருக்கிறார்கள்?

தங்களைப் பிரமாண்டங்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் இவர்களின் உலகங்கள் மிகவும் சிறியவை.

இங்கே எனக்குத் தெரிந்து இலக்கிய இமயங்கள், நோபல் பரிசு பெறக் கூடியவர்கள் என்று பல்வேறு பட்ட விமர்சகர்களால் எதிர்வு கூறப்படுகிறவர்கள், எவருமே இந்த தமிழ்நாட்டுப் பீலாக்கள் மாதிரி பீற்றிக் கொள்வதுமில்லை. புலம்புவதுமில்லை.

எல்லாம் பற்றியும் தெரிந்தது போலக் கருத்துச் சொல்வதுமில்லை. சமூகம் பற்றிய பிரச்சனைகளுக்கு நியாயமான முறையில் தங்கள் குரல்களை இணைத்துக் கொள்கிறார்கள்.

அவர்களுடைய பேட்டிகளை வாசிக்கும்போது, அவர்களின் கருத்துக்கள் சிந்தனையை வளப்படுத்துகின்றனவாக, ஒரு இலக்கிய ஆர்வலனுக்கு உற்சாகம் தருவதாகவே இருக்கும். ஒருபோதும் தங்களைப் பற்றிய மிகைப்படுத்தலாக இருப்பதில்லை.

இவர்களில் எவருமே தான் தான் நம்பர் வண் என்று சொல்வதுமில்லை. மற்றவர்களைப் போட்டிக் காரர்களாக நினைப்பதுமில்லை. பொறாமைப்படுவதும் இல்லை. புறக்கணிப்பதுமில்லை.

அவ்வாறு சொன்னாலும், ‘வைத்துக் கும்முவதற்கும்’ ‘அவர்களை அவர்களுக்கு உரிய இடத்தில் இருத்துவதற்கும்’ ஊடகங்களும் விமர்சகர்களும் இருக்கிறார்கள்.

இந்தத் தமிழ் இலக்கிய உலகில் தான் ‘தன்னையே தான் அறிந்து கொள்ளாமல்’ ‘தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகள்’ வருகின்றன.

பலர் தங்களை ஒளிவட்டங்களோடும், சீவப்பட்ட கொம்புகளோடும் கற்பனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

பொய்யான புகழ்ச்சிகளை உண்மை என்று நம்புகிறார்கள்.

அந்த எண்ணம் தங்களை சாமான்யர்களை விட மேலானவர்களாக நினைக்க வைக்கிறது.

தங்களைத் தாங்களே இவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

மற்றவர்கள் தங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பீடுகள் பற்றி தெரிந்து கொள்ளவும் முடியவில்லை.

இதெல்லாம் இல்லாமல், வெறும் கனவுலகத்தில் வாழ்ந்தபடியே, அல்லக்கைகள் போடுகிற விருப்புக்குறிகளில் இன்பம் கண்டு, பேஸ்புக்கில் மற்றவர்களுக்கு விருப்புக் குறி போடுவதைக் கூட கௌரவக் குறைச்சலாக நினைக்கும் அளவுக்கு, தங்களைப் பற்றிய கற்பனையில் மிதக்கிறார்கள்.

மற்றவர்கள் தங்களைப் புகழாவிட்டால் என்ன? என்றபடி, தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்கிறார்கள்.

இதெல்லாம் தங்களைத் தாங்களே அறிந்து கொள்ளாததால் வரும் கோளாறுகளும் குளறுபடிகளும்.

இந்தப் பெரிய நினைப்புப் பேராண்டிகளுக்கு நினைப்புத் தான் பிழைப்பைக் கெடுத்துக் கொண்டு இருக்கிறது.

இவர்கள் இன்றைக்கும் கொண்டாடுகிற, முன்னைய தலைமுறை இலக்கியக் கூட்டம் ஒன்று இருக்கிறது. அவர்கள் எல்லோரும் இன்றைய நிலை போல பீற்றலும் புலம்பலும் சீற்றமும் பொறாமையும் இல்லாமல் படைத்துக் கொண்டே இருந்தார்கள். பெரும்பாலானோர் ஏழ்மையிலேயே வாழ்வை முடித்துக் கொண்டார்கள். இலக்கியத்துக்காக தங்கள் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் அவர்களுக்குள் அதிகம் பேர் இருந்தார்கள். தங்களை முதன்மைப்படுத்தியதாக, அவையத்து முன்னமரச் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதித்ததாக அறிந்ததில்லை. கருத்து மோதல்கள் இருந்தாலும், அவர்களின் கருத்துக்களும் இலக்கியத்திற்கு அப்பால் பெரிதாக இருந்ததுமில்லை.


ஜெயகாந்தனுக்கும் சுந்தர ராமசாமிக்கும் பின்னால் தான் இந்த வியாதி பரவத் தொடங்கியது. ஆனாலும், அவர்கள் பொதுஜன மட்டத்திலும் இலக்கிய வட்டங்களிலும் நிலைத்து நிற்கக் கூடியதாக எதையோ எழுதி வைத்து விட்டுப் போய் விட்டார்கள்.

அப்படி காலத்தில் நிலை பெறக் கூடிய எதையுமே எழுதாமல், தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளோடு, மற்றவர்களை முட்டாள்கள் என்று நினத்து அடித்து விடுகிற இவர்களுக்கு எல்லாம்...


‘நீங்கள் நினைக்கிற மாதிரி, நீங்கள்லாம் பெரிய ஒளிவட்டக் கொம்பன்கள் இல்லையடா!’ என்பதை யாரோ ஒருத்தன் சொல்லித் தான் ஆக வேண்டும்.

# அபத்தம்

கார்த்திகை 2023







ஆக்கங்களுக்கு
ஆக்கியோர்களே
பொறுப்பு.
ஆயினும் அதைப்
பிரசுரிப்பதற்கான
பொறுப்புகளில் இருந்து
அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

**Editor/Design**
**George R. Ckrhushchev**







கோடை காலம் வந்தால், எனக்கு குதூகலம்.

என் தோட்டம் பூக்கள், பழங்கள், காய்கறிகள் என்று பூத்துக் குலுங்கும்.

பூக்களோடு போட்டி போட்டுக் கொண்டு வண்ணத்துப் பூச்சிகளும் நிறையும்.

அவற்றைப் படம் பிடிப்பது என்பது எனக்கு மிகவும் பிடித்தது.

ரொறன்ரோ பகுதியில் அதிகமாக உள்ள வண்ணத்துப் பூச்சி இனங்கள் உள்ளன. எனினும் எனது தோட்டத்தில் நாலைந்து வகையானவையே அதிகமாக நடமாடுகின்றன.

இவற்றை விட, இந்த வண்ணத்துப் பூச்சிகளைப் படம் பிடிப்பதற்காக நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர்கள் பயணம் செய்திருக்கிறேன்.

ரொறன்ரோவிற்கு அப்பால் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சி இருக்கும் பகுதியிலும் கேம்பிரிட்ஜிலும் வண்ணத்துப்பூச்சி காட்சியகங்கள் உண்டு. கண்ணாடிவீடுகளுக்குள் அவற்றுக்கான வாழ்வுச் சூழல்களை உருவாக்கி, வருடம் பூராவும் வளர்த்து காட்சிப்படுத்துகிறார்கள்.

அவை இரண்டுக்கும் சென்று படம் பிடித்திருக்கிறேன். அவற்றில் இறந்த வண்ணத்துப்பூச்சிகளை பூக்களில் ஒட்டியும் வைத்திருப்பார்கள்.

அதைவிட, ரொறன்ரோவின் ஒன்ராறியோ ஏரிப்பகுதியில், இங்கே கட்டடங்கள் கட்டத் தோண்டும் மண்ணைக் கொட்டி செயற்கையான பிரதேசத்தை உருவாக்கி இருக்கிறார்கள். அங்கு மரங்களும் செடிகளும் வளர்ந்து அங்கு பறவைகளும் வண்ணத்துப் பூச்சிகளும் குடியேறியுள்ளன. அங்கேயும் போய் படம் பிடித்திருக்கிறேன்.

American Lady, Monarch இனம் இரண்டும் எங்கள் பகுதியில் அதிகமானவை. கோவா இனப் பூக்களிற்காக வரும் வெள்ளை இனம் எப்போதுமே அசைந்து

கொண்டே இருக்கும்.

முன்பெல்லாம் அதிகளவில் காணப்படும் இவை கடந்த இரண்டு வருடங்களில் அரிதாகவே இருக்கின்றன.

இந்த வருடம் ஒன்றிரண்டையே கண்டிருக்கிறேன்.

வண்ணத்துப்பூச்சிகள் என்னை வியப்புக்குள்ளாக்குகின்றவை.

மயிர் கொட்டியும் வண்ணத்துப்பூச்சியும் ஒரே உயிர் தான் என்பது பாடசாலையில் உயிர் வட்டம் என்று சொல்லித் தரும்வரைக்கும் தெரிந்ததில்லை.

இந்த மொனாக் வண்ணத்துப்பூச்சிகள் இயற்கையின் அற்புதங்களில் ஒன்றாக இருக்கின்றன.

கனடா, அமெரிக்காவின் கிழக்குப் பகுதியிலிருந்து இவை *3000* மைல்கள் வரை பயணித்து மெக்சிக்கோவில் நடுப்பகுதியில் உள்ள காடுகளில் குளிர்காலத்தைக் கழிக்கின்றன. மேற்குப் பகுதியில் இருப்பவை கலிபோர்ணியாவில் குளிர்காலத்தைக் கழிக்கின்றன, பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கோடை காலத்தில் வட அமெரிக்காவுக்கு வந்து சேர்கின்றன.

பறவைகள் போல, குளிர் காலத்தில் வெப்ப வலய நாடுகளுக்குப் பயணம் செய்து திரும்பவும் வருகின்ற இனமாக வண்ணத்துப்பூச்சிகள் மட்டுமே இருக்கின்றன.

இவை தினசரி இருநூறு மைல்கள் பயணிக்கின்றன. இவர்களின் பயணத்திற்கு சில நேரம் இரண்டு மாதம் பிடிக்கும்.


இவை தங்கும் இடம் மத்திய மெக்சிக்கோவின் *2* மைல் உயரமான மலைப்பகுதி. அங்குள்ள ஒரு இன மரத்தில் இவை கூட்டமாகத் தங்குகின்றன. லட்சக்கணக்கில் ஒரே மரத்தில்













உட்கார்ந்திருப்பதால் இவற்றின் பாரத்தில் கிளைகள் முறிவதும் உண்டு.

ஆனால், புறப்பட்டுப் போன வண்ணத்துப்பூச்சிகள் தான் திரும்பி வருவதில்லை என்பது தான் பெரும் ஆச்சரியம். போகும் வழியிலேயே இவை அடுத்த தலைமுறைகளை உருவாக்கி இறந்து போக, புதிய தலைமுறை பயணத்தைத் தொடர்கிறது. அங்கே போய் தங்கி புதிய தலைமுறையை உருவாக்க அவை பயணித்து வழியிலேயே புதிய தலைமுறைகளை உருவாக்குகின்றன.

எனவே, எனது வீட்டிலிருந்து புறப்பட்டு, மெக்சிக்கோ போய் திரும்பி வருவது எட்டாவது தலைமுறையாகத் தான் இருக்கும். இவை எப்படி தங்கள் பாதையைத் தொடர்கின்றன, இதற்கான அறிவை எவ்வாறு பெற்றன என்பதெல்லாம், பல விஞ்ஞான விளக்கங்கள் இருந்தாலும் இயற்கையின் மர்மங்களில் ஒன்று தான்.

தற்போதைய உலக வளர்ச்சி, காலநிலை மாற்றங்களால் இவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்து வருகிறது.

என் தோட்டத்தில் ஸின்னியா, செவ்வந்தி, நியு இங்கிலாந்து அஸ்டர், கோல்டன் றொட் என்று பல்வேறு பூக்களை அவை விரும்புகின்றன. மில்க்வீட் எனப்படும் செடியின் இலைகள் தான் அவற்றுக்கு உணவாகின்றன. அந்த இலைகளில் உள்ள நஞ்சு இவற்றின் உடலில் செறிந்திருப்பதால், மற்ற பிராணிகள் இவற்றை உண்பதில்லை.

எனது தோட்டத்தில் மில்க்வீட் இல்லை. அவற்றில் வண்ணத்துப் பூச்சிகள் முட்டையிட்டு மயிர்கொட்டிகள் நிறையும் என்று யாரோ சொன்ன நினைவு.

ஆனால், என் தோட்டத்தில் மயிர்கொட்டிகளை நான் காண்பதுண்டு.




# பேராசிரியருடன் பாசாங்குகள் இல்லாத பகிர்வு 2

**ஜோர்ஜ்:** அது சரி, தமிழ் நாட்டில் எழுத்தாளர் ஜெயமோகன் அவர்களது அடையாளம் சார்ந்து கேட்கிறேன். ஒரு தனிமனிதனாக எப்படி இவ்வளவு பேரையும் வைத்து ஆட்டிக் கொண்டிருக்க முடியும்? அவர் சுயமாக தன்னியல்பிலேயே செய்கிறாரா? அவ்வது வேறு ஒரு 'அஜண்டா' விற்கு வேலை செய்கிறாரா?

**அ.ராமசாமி:** 'அஜண்டா' இருக்கலாம். ஆனால் அது எங்க இருக்கிறது என்பதைக் கண்டு

பிடிக்க முடியாது. ஏனென்றால் அஜண்டாவுடன் இருந்தவர்களுடன் அவருக்கு சில

நேரங்களில் தொடர்பு இருந்திருக்கிறது. சிலநேரங்களில் தனக்குத் தொடர்பு இல்லை என்றும் காட்டுகிறார். ஒருவேளை அந்தத் தொடர்புகளுடன் பயணித்து, இப்போ

தானே சுயமாக அதனைத் தொடருவதாகப் பயணிக்கலாம். அல்லது அவர்களின் நிதியுதவி தொடர்ந்தும் கிடைக்கலாம். அந்த நிதியுதவி கூட வெவ்வேறு விதமாக நடக்கும். நேரடியா இருக்காது. அவருக்கு மட்டுமல்ல் தன்னார்வ நிறுவனங்கள் வழியாகப் பலருக்கும் அப்படி கிடைக்கும். தன்னார்வ நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களாக மட்டுமே இருக்கும் என்றில்லை. உள்நாட்டில் இயங்கும் அமைப்புகளாகவும் தனிநபர்களாகவும் கூட இருக்கலாம். அங்கிருந்தெல்லாம் கிடைக்கும் நிதியை. உதவியைக் கொண்டு அவர் நினைக்கும் ஒரு அமைப்பை உருவாக்கிச் செயல்படுகிறார். நண்பர்களின் உதவியில் தான் விஷ்ணுபுரம் அமைப்பு செயல்படுகிறது என்பதை அவர் மறைப்பதில்லை.

இப்ப பார்த்தீர்களென்றால் சினிமாவில் அவரைவிட எழுதக் கூடியவர்கள் பலர் இருந்தாலும் அவருக்குத்தான் வாய்ப்புக்கள் போகின்றன. பொன்னியின் செல்வன் புறொஜெக்ட்' இருக்கிறது அல்லவா? அது அவரிடம் போகவேண்டும் என்று கட்டாயம் இல்லை. ஏற்கனவே பொன்னியின் செல்வனை நாடகமாக்கியது குமரவேல்.

குமரவேல் யாரென்றால் பாண்டிச் சேரியில் எங்களிடம் கல்விகற்ற முதல் செட் மாணவன்.

**சிவா:** அந்தப்படத்தில் குமரவேல்

குமரவேலை விடவும் அந்தக் கதைக்கு ஒரு பிரபலமான ஆளைப் போடவேண்டுமென யோசிக்கிறார்கள். எழுத்தாளராக ஜெயமோகனுக்கு இருக்கும் பிரபலம் அதற்குப் பயன்படுகிறது. ஏற்கனவே ஜெயமோகன் அவர்கள் மணிரத்தினம் காம்பில இருக்கிறவர்தான். அதனால் அவரை வைத்து சில அரசியல் சொல்லாடல்கள் திரைப்படத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணத் திற்கு, ஆழ்வாருக்கு அடியான் என்கிற கதாபாத்திரத்திற்கு ஒரு பிராமணச் சாயல் சேர்க்கப்பட்டது. ஏனெனில் தமிழ் நாட்டில் பிராமணரைக் கிண்டல் செய்தால் வெகுமக்களுக்குப் பிடிக்கும். அந்தப் படத்தில் ஜெயராம் வருகிற கதாபாத்திரத்துக்கான வசனங்களை எழுதினது ஜெயமோகனாக இருக்கவே வாய்ப்பு அதிகம்.

அதேமாதிரி பாட்டெழுதுவதற்காக இளங்கோ கிருஷ்ணனையும் 'ரெக்கமண்ட்' பண்ணி இவரே உள்ளே கொண்டு வந்திருக்கிறார். வைரமுத்துவைத் தவிர்க்கும் முடிவில் இதெல்லாம் நடக்கிறது.

என்பவர் பெயர் வருகிறது.

**அ.ராமசாமி:** ஆமா; அவன் படிக்கிற காலத்திலேயே அவனுடைய எக்ஸாம் புரொடெக்ஸனுக்கு நான் வழிகாட்டியாக இருந்துள்ளேன். படிப்பு முடிந்தவுடன் ஒரு குழு ஆரம்பித்து தயாரிக்க நினைத்தபோது நாடகம் எழுதிக் கொடுத்தேன். அது மகாபாரதத்தை வைத்து 'சதி பர்வம்' என்றபெயருடன் வந்தது. வசனம் குறைவான நாடகம். கண்ணன் எப்படி சதி செய்து அந்தப் போரை நிகழ்த்தினான் என்பதாகச் சொல்லும் நாடகம். குமரவேல் தயாரிக்க, ஷிபு எஸ்.கொட்டாரம் என்ற கேரளத்து மாணவர் இயக்கினார். சென்னையிலும் மதுரையிலும் மேடையேறிப் பார்வையாளர்களால் பாராட்டப்பட்ட நாடகம். அப்பொழுதே அவன் சொன்னான்,'

சேர் என்னுடைய பெரிய கனவே பொன்னியின் செல்வனை நாடகமாகப் பண்ணவேண்டும் என்பதுதான்' . அப்பொழுது நான் பொன்னியின் செல்வன் படித்ததில்லை என்று அவனுக்குச் சொன்னேன். இன்று வரை நான் பொன்னியின் செல்வனைப் படித்ததில்லை. நான் என்ன சொல்லமுடியும் அவனுக்கு? 'நீ நாடகமாக்கிக் கொடு. அது நாடகமாக வந்திருக்கிறதா இல்லையா என்று நான் பார்த்துச் சொல்லுகிறேன்' என்றேன். அவன் தன்னுடைய படிப்பை முடித்துப் போன பின்பு அதனைச் செய்து சென்னையில் 'மேஜிக் லாண்ட்ன்' என்ற குழுவின் வழியாகப் பிரமாண்டமாகத் தயாரித்தான். டிக்கெட் வைத்து மேடையேற்றிய நாடகம் அது.

அதில் திரைப்பட நடிகர் நாசர் நடித்தார். அப்போது நாடகத்தில் மட்டும் நடித்த பசுபதி, மு.ராமசாமி போன்றவர்கள் அதில் நடித்தார்கள். அது சென்னையில் மட்டுமல்ல தமிழ் நாட்டின் பல்வேறு நகரங்களில் மேடையேற்றப்பட்டது. அது 3 மணிநேர நாடகம். திரைப்படத்தில் மனோகர் போடுவார்தானே பிரமாண்டமான செட். அதுமாதிரிப் போட்டு மேடையேற்றப்பட்டது. இந்தப் பொன்னியின் செல்வன் என்ற திரைப்படத் திரைக் கதையும் அந்த நாடகப்பனுவலில் இருந்து தோன்றியதுதான்.

குமாரவேல் நன்றாக நடிக்கக் கூடியவர். நடிக்கும் காலத்தில் ரியலிஸ்டிக் நடிப்பை விரும்பிப் பயிற்சி செய்த மாணவன். அதனால் சினிமாவிலும் நடிக்கக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. மொழி, அபியும் நானும் போன்ற படங்களை இயக்கிய ராதாமோகனுடைய படங்களில் குறிப்பிட த்தக்க பாத்திரங்கள் செய்தவர். அவர் இயக்கும் படங்களில் இப்போதும் இருப்பான். குமரவேலை விடவும் அந்தக் கதைக்கு ஒரு பிரபலமான ஆளைப் போடவேண்டுமென யோசிக்கிறார்கள். எழுத்தாளராக ஜயமோகனுக்கு இருக்கும் பிரபலம் அதற்குப் பயன்படுகிறது.

ஏற்கனவே ஜெயமோகன் அவர்கள் மணிரத்தினம் காம்பில இருக்கிறவர்தான். அதனால் அவரை வைத்து சில அரசியல் சொல்லாடல்கள் திரைப்படத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு, ஆழ்வாருக்கு அடியான் என்கிற கதாபாத்திரத்திற்கு ஒரு பிராமணச் சாயல் சேர்க்கப்பட்டது. ஏனெனில் தமிழ் நாட்டில் பிராமணரைக் கிண்டல் செய்தால் வெகுமக்களுக்குப் பிடிக்கும். அந்தப் படத்தில் ஜெயராம் வருகிற கதாபாத்திரத்துக்கான வசனங்களை எழுதினது ஜெயமோகனாக இருக்கவே வாய்ப்பு அதிகம். அதேமாதிரி பாட்டெழுதுவதற்காக இளங்கோ கிருஷ்ணனையும் 'ரெக்கமண்ட்' பண்ணி இவரே உள்ளே கொண்டு வந்திருக்கிறார். வைரமுத்துவைத் தவிர்க்கும் முடிவில் இதெல்லாம் நடக்கிறது.

பொன்னியின் செல்வனின் 2வது பகுதியில சில ரொமாண்டிக் பகுதிகள் இருக்கின்றன. மனசுக்குள் ஒன்றை வைத்துக் கொண்டு காதலை வெளிப்படுத்துவது போன்று நந்தினியின் கதாபாத்திரம் இருப்பதனைப் பார்த்திருப்பீர்கள். இப்படியான சிறுகதைகளை ஜெயமோகன் அவர்கள் எழுதியிருக்கிறார். அதையெல்லாம் இதற்குள் கொண்டு வந்திருக்கிறார். இதெல்லாம் வெற்றிப்படமாக ஆகத் தேவையான சரக்குகள். அதனை அவர் செய்திருக்கிறார். அத்தோடு அவருக்கு இருக்கும் பிரபல இருப்பு இதற்குப் பயன்பட்டிருக்கிறது. ஆனபடியால் கடந்த நாலைந்து வருடமாக ஜெயமோகன் அவர்களுக்குச் சினிமா வழியாகவும் வருமானம் வருகிறது. அதற்கு முன்னால் பார்த்தோமானால் இந்தியாவிற்கு வெளியே இருக்கும் பெரிய நட்பு வட்டமும் அவரது இலக்கியச் செயல்பாடுகளுக்கு உதவியாக இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் அவருக்கு- அவரது விஷ்ணுபுரம் அமைப்புக்கு உதவும் பெரிய 'நெற்வேர்க்' இருக்கிறது.

**ஜோர்ஜ்:** அவரது தமிழ்

விக்கி புறோகிறாம் எல்லாம் அதற்குள்ளால்தானே நடக்கிறது?

**அ.ராமசாமி:** அது அதுமட்டுமில்லை. அமெரிக்காவில் நல்ல வருமானம் உள்ளவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அவருடைய எழுத்துக்கு ரசிகர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் வருகிற செப்படம்பர் மாதம் கூட வருகிறார். வந்து ஒரு மாதம் அவர்களுடன் இருக்கப் போகிறார். இந்தமுறை பெட்னா நிகழ்வுக்கு வந்த பவா செல்லத்துரை அமெரிக்காவின் பத்துப் பன்னிரண்டு நகரங்களுக்குச் சென்று கதை சொல்லியிருக்கிறார். அதே இடங்களுக்கு ஜெயமோகனும் செல்லக்கூடும். பவாசெல்லத்துரையும் ஜெயமோகனும் ஏறத்தாள இலக்கியத்தைப் பரவலாக்க வேண்டும் என்பதில் ஒத்துப்போகக்கூடியவர்கள். அது ஒருவிதமான கூட்டணி. பவா செல்லத்துரை இடதுசாரியாக இருந்து மெல்லமெல்ல மாறி வந்தவர். ஆனால் சிற்றிதழ் மரபில் இந்தப் பார்வை கிடையாது. எழுத்து மரபை ஆதரித்து பேச்சு மரபை எதிர்த்த மரபு சிற்றிதழ் மரபு. அப்போது பேச்சு மரபை திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைத்து கலை கலைக்காக எனச் செயல்பட்டவர்களும், கலை மக்களுக்காக எனப் பேசிய இட துசாரிகளும் விமரிசனம் செய்தார்கள். இப்போது அதனை மறுத்து பாப்புலராக ஆவதின் பலனை அறிந்து நகர்கிறார்கள்.

கதைசொல்லியாக பவா செல்லத்துரை மாறியதை வரவேற்கும் ஆளுமையாக இருக்கிறார் ஜெயமோகன். அவரே இப்போது தமிழ்நாட்டில். இந்தியாவில் இலக்கிய உரைகளைத் தாண்டி வாழ்வியல் உரைகளை நிகழ்த்தும் உரையாளராக மாறியிருக்கிறார். அமெரிக்காவிலும் இப்போது அத்தகைய உரைகள் நடக்கும். முன்னர் இலக்கியத்திற்காக வந்திருக்கிறார். இப்போது ரஜனீஸ், சத்குரு போன்றவர்கள் மாதிரி வாழ்க்கைக் கல்வி பேசுவது போல், தத்துவம் பேசுவது போல், ஆன்மீகம் பேசுவதும் போல் வருகிறார். இவரை அழைப்பவர்கள் அதற்குப் பணம்

> **“ஜெயமோகன் அவர்களது கெட்டித்தனமே தன்னை எதிர்ப்பவர்களை வாசிக்கப் பண்ணுவதுதான்.”**
>
> **“அதுதான் உண்மை. இப்பொழுது அண்மையில் கோயம்புத்தூரில் பேசியது. அது ஒரு கெட்டிக்காரத்தனமான பேச்சுக் கூடக் கிடையாது.”**

கொடுப்பார்கள். எழுத்தாளராக அவருக்குத் தேவையே இல்லை எனச் சொல்லலாம்.

ஆனால் இலக்கியச் செயல்பாட்டாளராக அது அவருக்கும் தேவையாக இருக்கிறது. தமிழ்நாட்டில் செயல்படும் குழுக்களைப் போல அமெரிக்காவில் பெரியதொரு குழுவாக இருக்கிறது என்பதை எனது பயணத்தில் கேட்டிருக்கிறேன். அதேபோல் பல ஊர்களில் இருக்கும் தமிழ்ச்சங்கங்களில் திராவிட இயக்கத்து ஆதரவு ஆட்களும் இருக்கிறார்கள். அவர்கள் திராவிட இயக்கப் பரப்புரைப் பேச்சாளர்களை- கவிகளை அழைக்கிறார்கள். அவர்களுக்கு எதிராக இருப்பவர்கள் இயல்பாகவே பி.ஜே.பியின் விடயங்களோடு ஒத்துப் போகிறவர்களாக இருக்கவே செய்வார்கள். அவரும் திராவிட அரசியலை = இலக்கியங்களைத் தொடர்ந்து மறுப்பது- அவதூறு பண்ணுவதுபோல் செயல்படுகிறவர் தானே?

**ஜோர்ஜ்:** ஜெயமோகன் அவர்களது கெட்டித்தனமே தன்னை எதிர்ப்பவர்களை வாசிக்கப் பண்ணுவதுதான்.

**அ.ராமசாமி:** அதுதான் உண்மை. இப்பொழுது அண்மையில் கோயம்புத்தூரில் பேசியது. அது ஒரு கெட்டிக்காரத்தனமான பேச்சுக் கூடக் கிடையாது.

**சிவா:** அவர் எழுதுவதோடு நிறுத்தலாம் .

**அ.ராமசாமி:** இல்லையே. எழுதுவதை விடப் பேச்சுக்குத் தானே பாப்புலாரிட்டி அதிகம். அவர் பேசுவதற்கூடாகத்தானே பணம் பெறுகிறார். இப்போது தமிழ் நாட்டில் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை, குறிப்பிட்ட கால இடைவெளியில் பேச்சரங்குகள்-காம்ப் நடத்துகிறார்கள்.

**ஜோர்ஜ்:** யேசு வருகிறார் என்பது போல்.

**அ.ராமசாமி:** அப்படிச் சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. ஆனால் அவரது பேச்சை. ரிக்கற் புக் செய்து கேட்க வருகிறார்கள். சினிமாவிற்கு ரிக்கற் விற்பனையாவதுபோல் விற்பனையாகிறது. ஜெயமோகன் பேசுகிறார் என விளம்பரம் செய்கிறார்கள். 500 பேருக்குக் குறையாமல் போய்ப் பார்க்கிறார்கள்.

**ஜோர்ஜ்:** இதே கதையை அவர் கேரளாவில் சென்று பேச முடியுமா?

**அ.ராமசாமி:** சொல்ல முடியாது என்றே நினைக்கிறேன். இன்றுவரை சொல்லவில்லை. ஆனால் இங்கே அவர் பேச்சைக் கேட்பதற்கான ஒரு பார்வையாளர்களைத் தயார் செய்து உருவாக்கியிருக்கிறார்கள். அதாவது திராவிட இயக்கத்தின் அரசியல், திராவிட இயக்கத்தின் கலைப் பார்வை போன்றவற்றை விரும்பாத நடுத்தரவர்க்கக் கூட்டம் இருக்கிறது. அவர்கள்தான் இவரது வாசகர்களும் கேட்பவர்களும். ஆனால் தேர்தலில் அவர்கள்கூட தி.மு.க.விற்குத்தான் வாக்களிப்பார்கள். இவரது பேச்சைக் கேட்பார்கள். ஆனால் தி.மு.க. விற்குத்தான் வாக்களிப்பார்கள்.

**ஜோர்ஜ்:** ஆன்மீக சொற்பொழிவைக் கேட்பதுபோல், வாரியார் சொற்பொழிவு மாதிரி?

**அ.ராமசாமி:** ஆமா. ஜெயமோகனே அதைச் சொல்லியிருக்கிறார். இங்குவரும் பலபேர் தி.மு.க.வை எதிர்க்கிறோம் என்கிறார்கள். ஆனால் என் கூட்டத்திற்கு வருபவர்கள் பலர் தி.மு.க.விலேயே இருக்கிறார்கள். அவர்கள் குடும்பமே தி.மு.க.வில் இருக்கின்றனர் என்கிறார்.

அவர் மட்டுமல்ல, நாஞ்சில் நாடனுக்கும் கருணாநிதிமேல கடுங் கோபம் இருக்கிறது. கல்லூ

**தமிழ்நாட்டில் எங்களுக்கு முதலில் அறிமுகமான பெயர்கள் வந்து கைலாசபதியும் சிவத்தம்பியும் நு:.மானுந்தான். எனக்கு மட்டுமல்ல அப்பொழுது தமிழ் நாட்டிற்கே இலங்கை பற்றிய விடயங்கள் இவர்கள் மூலமாகத்தான் வந்தன.**

**அவர்கள் கல்விப் புலத்திற்குள்ளால் வருகிறார்கள். கல்விப் புலத்திலிருந்து இடதுசாரிகளிடம் செல்கிறார்கள். அப்பொழுது அவர்கள் கூட டொமினிக்ஜீவா வருகிறார். அதன்பின் ஒரு காலகட்டத்தில் டானியல் அங்கேயே வந்து இருக்கிறார். அவர்கள் வரும் காலகட்டத்தில் மிகப்பெரும் போர் நடைபெறுகிறது. அந்தக் காலத்தில் ஆனந்தவிகடன் பத்திரிகையின் வாசகர்களாக அதிகம் இலங்கைத் தமிழர்கள் இருந்தார்கள். அப்பொழுது ஈழத்திற்கு ஆதரவான எழுத்துக்கள் அந்தப் பத்திரிகையில் வந்து கொண்டிருந்தன. இப்படித்தான் நாங்கள் அந்தப் பக்கத்தைப் பார்க்கக் கிடைத்தது.**

ரிப் படிப்பில் நல்ல மதிப்பெண் எடுத்த தன்னைப் போன்றவர்கள் தமிழ்நாட்டுக்கு வெளியே போய் வேலை பார்க்க வேண்டிய நெருக்கடியை திராவிட இயக்கமும் இட ஒதுக்கீடும் உண்டாக்கியதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

நான் சொல்வது 1970 களின் கதை. தி.மு.கவின் கொள்கைகளால் தான் தனக்கு வேலை கிடைக்கவில்லை என்பது அவரது கோபம். இங்கே அவர்களெல்லாம் போய் ஜெயமோகனுடன் சேருகிறார்கள். இதே மாதிரியான எண்ணவோட்டம் உள்ளவர்கள் அவருக்கு சேரும் கூட்டத்தில் கணிசமானவர்கள். இதனை விளங்கித்தான் அவரின் பின்னால் உள்ள கூட்டம் குறித்து நோக்க வேண்டும்.

**ஜோர்ஜ்:** சரி நாங்கள் சாருநிவேதிதா குறித்துக் கொஞ்சம் பேசுவோம்.

**அ.ராமசாமி:** எதைக் குறித்து உரையாட வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள் என்பது எனக்கு விளங்குகிறது. அவரை =அவரது எழுத்துகளை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று கேட்கவிரும்புவதாக நான் புரிந்துகொள்கிறேன். இது தொடர்பில் நான் சொல்ல விரும்புவது இதுதான். 'எனக்கு ஓர் அரசியல், சமூகப்பார்வை இருக்கிறது. அதனை உள்வாங்கிய எழுத்துகளை, எழுத்தாளர்களை மட்டுமே ஏற்று வாசித்து முன்வைப்பேன்' என நினைப்பது கல்விப்புலப் பார்வையல்ல. இங்கே விமரிசகர்களாக அறியப்படுகிறவர்களின் பார்வை அது. நான் அடிப்படையில் கல்விப்புலத்து ஆள். அவர்கள் இப்படி நினைக்கக்கூடாது. ஒரு மொழியின் இலக்கியங்களைக் கற்பிக்கும் ஒரு பேராசிரியர் அம்மொழியின் அனைத்துப் போக்குகளையும் அதனதன் இருப்பில் மாணாக்கர்களுக்குச் சொல்ல வேண்டும். இதைத்தான் நான் நம்புகிறேன் பின்பற்றுகிறேன். அதே நேரம் எனது இலக்கிய. அரசியல் பார்வையையும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆனால் அதனோடு ஒத்துப்போகும் பனுவல்களை மட்டுமே வாசித்து விமரிசிக்க நினைப்பதில்லை.

இலங்கை. புலம்பெயர் எழுத்துகளிலும் அப்படித்தான். தமிழ்நாட்டு எழுத்தாளர்களைப் பேசும்போதும் அப்படித்தான். எனது பயணத்தின்போது டொரண்டோவில் இரண்டு நாவல்கள், பயங்கரவாதி, பெர்ளின் வாசலில், வெளியீட்டு விழாவில் பேசினேன். அவை பேசும் அரசியல், நோக்கங்கள் எனக்குத் தெரியும். அதனோடு முழுமையாக உடன்படுவேன் என்றில்லை. ஆனால் அவை இரண்டும் நாவலாக எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு முந்திய பனுவல்களைப் போல இல்லாமல் புதிய பரப்புக்குள்ளும் புதிய செய்முறையிலும் இருக்கிறது என்பதைச் சொல்ல நினைக்கிறேன். அதைச் செய்கிறேன்.

என்னுடைய வாசிப்பும் என்னுடைய எழுத்தும் எப்படி இருக்கும் என்றால், நான் என்னை முதலில் ஒரு கல்வித்துறை சார்ந்த பேராசிரியர், academical professor என நினைப்பேன். ஒரு அகடெமிக் புரபசர், academical professor, றோல் வந்து வெளியில் இருக்கிற ஒரு திறனாய்வாளன். விமரிசகன் போல் இருக்க முடியாது என்று நினைக்கிறேன் இங்கே விமரிசகர்களாக இருப்பவர்கள் தாங்கள் நம்பும் இலக்கியத்தை, கலைக்கோட்டை நிலைநாட்டுவதற்காக வாசிப்பவர்கள் விமரிசிப்பவர்கள்.

ஒரு கல்விப்புலப்பேராசிரியர் அப்படியல்ல. அவர்களுக்கு மாணவர்களுக்குப் பலவற்றையும் அறிமுகப்படுத்துவது முதல் நோக்கம். அத்தோடு அவர்களது பார்வையையும் சொல்லவேண்டும் என்று நினைப்பேன். அதற்குக் கைலாசபதிபோல் இருக்கவேண்டும் அவர் தான் எனக்கு முன்மாதிரி. கைலாசபதி கல்கியையும் வாசிக்கிறார். அதனை வாசித்து அது எங்கேயிருந்து வருகிறது என்றும் காட்டுகிறார். எங்கேயிருந்து வருகிறது என்று சொல்வதற்கு அதனைப் படிக்கத்தானே வேண்டும். படித்தால்தானே சொல்லமுடியும். ஆக இந்தமாதிரியான விடயங்களை மாணவர்களுக்குச் சொல்ல வேண்டும். அந்த அடிப்படையில் தான் நான் எல்லாவற்றையும் வாசிப்பேன். சாருவையும் வாசிப்பேன். எழுதுவேன். அதே நேரம் சாருவை மொத்தமாக நிராகரிக்க முடியாது என்பதையும் அறிந்திருக்கிறேன். அவர் மாதிரி மொழியை லாவகமாகப் பயன்படுத்தும் எழுத்தாளர் இப்பொழுது இல்லை. அவர் நம்பும் விடயங்களை நன்றாக எழுதுவார். ஒரு மோசமான விடயம் என்று அவருக்குத் தெரிந்தாலும் தான் நம்புவதால் அதனை நன்றாக எழுதுவார்.அதனால்தான் அவருக்கு ஒரு இடம் இருக்கிறது என்கிறேன்.

அதேபோல் சாரு அவரை நம்பியவர்கள் பலபேரை ஏமாற்றியிருக்கிறார் என்று சொல்கிறார்கள். அவரால் ஏதாவது நடக்கும் என்றுதானே அவரோடு நெருக்கமாக இருந்திருப்பார்கள். அதாவது ஏமாந்ததாகச் சொல்கிறவர்கள் ஏமாறத் தயாராக

இருந்ததால் தானே நடந்தது. அவர் லத்தீன் அமெரிக்க, பிரெஞ்சு எழுத்தாளர்கள் பற்றி நிறையப் பெயர்கள் உச்சரிப்பார் அது உண்மையா பொய்யா என்றும் தெரியாது. அப்படி அவர் உச்சரித்து விட்டார் என்பதற்காகவும் அதனை நிரூபிப்பதற்காகவும் அவர் அதனைப் படிப்பார். அதற்காக வாதாடுவார். தமிழில் அப்படி ஒருவர் இருக்கிறார் எனச் சொல்வது அவசியம் தானே.

இதே நிலை தான் இலங்கை. ஈழ. புலம்பெயர் எழுத்துகளை வாசித்துப் பேசுவதிலும் இருக்கிறது. இலங்கைக்குள் நடந்த ஈழப்போராட்ட ஆதரவு நிலையிலிருந்து இலக்கிய வாசிப்புக்கு வந்தவனல்ல நான். அதற்கு முன்பே வாசிக்கத் தொடங்கியவன் தான். மாணவனாக இருந்த காலத்திலேயே, அப்பொழுது ஈழம் என்பதல்ல இலங்கை. இலங்கை எழுத்துக்களை வாசிப்பேன். தமிழ்நாட்டில் எங்களுக்கு முதலில் அறிமுகமான பெயர்கள் வந்து கைலாசபதியும் சிவத்தம்பியும் நுஃமானுந்தான். எனக்கு மட்டுமல்ல அப்பொழுது தமிழ் நாட்டிற்கே இலங்கை பற்றிய விடயங்கள் இவர்கள் மூலமாகத்தான் வந்தன. அவர்கள் கல்விப் புலத்திற்குள்ளால் வருகிறார்கள். கல்விப் புலத்திலிருந்து இடதுசாரிகளிடம் செல்கிறார்கள். அப்பொழுது அவர்கள் கூட டொமினிக் ஜீவா வருகிறார். அதன்பின் ஒரு காலகட்டத்தில் டானியல் அங்கேயே வந்து இருக்கிறார். அவர்கள் அங்கு வந்த காலகட்டத்தில் மிகப்பெரும் போர் நடைபெறுகிறது. அதே நேரம் வெகுமக்கள் தளத்தில் ஆனந்தவிகடன் போன்ற பத்திரிகையின் வாசகர்களுக்கு ஈழப்போராட்டம் அறிமுகமாகிறது. ஈழ ஆதரவுப் பாராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் தமிழ்நாட்டிலும் நடக்கின்றன ஈழத்திற்கு ஆதரவான எழுத்துக்கள் அந்தப் பத்திரிகைகளில் வந்து கொண்டிருந்தன. இப்படித்தான் தமிழர்கள் அந்தப் பக்கத்தைப் பார்க்கக் கிடைத்தது.. என்னனைப் போன்றவர்கள் அப்படியல்ல. எங்களுக்குக் கொஞ்சம் இடதுசாரிச் சார்புநிலை இருந்தது. அங்கு நடப்பதை விவாதிக்கும் நோக்கம் இருந்தது. நான் மாணவனாக இருந்தபொழுது கவிதா நிகழ்வு ஒன்றை முயற்சி செய்தோம்.

பொதியவெற்பன் அவர்கள் தான் அதற்கு முன் செய்திருந்தார். அவர்தான் இப்படிக் கவிதா ிழ்வு ஒன்றை இலங்கையில் செய்கிறார்கள் நாங்களும் முயற்சி செய்வோம் என முன்நின்று கும்பகோணத்தில் ஆரம்பித்தவர். அதன்பின் இரண்டு மாதத்தில் நாங்கள் மதுரையில் நடத்தினோம். அதில் நவீன கவிதைகளைத் தெரிதலில் அந்தக் காலத்தில் வெளிவந்த அத்தனை தொகுப்புக்களையும் எடுத்து வைக்கிறோம். அதில் சேரனுடைய ஜெயபாலனுடைய கவிதைகள் வந்து சேர்ந்தன. அவ்வாறுதான் நாங்கள் இவற்றை அடையாளம் காண நேர்ந்தது.

இப்படி வரும்போது எல்லாவற்றையும் நாம் வாசிக்கிறோம் விவாதிக்கிறோம். அதனால் எல்லாவற்றையும் ஆதரிக்கிறோம் என்பதல்ல நிலைபாடு

**ஜோர்ஜ்:** அவர் சொல்லிவிட்டார் என்பதற்காக யாராவது அதனைத் தேடிப்படிக்கிறார்களா?

**அ.ராமசாமி:** யாரும் படிப்பதில்லை என்றும் சொல்லமுடியாது. சிலர் படித்து விவாதம் புரிகிறார்கள்.

இலங்கை ஆட்களுக்கும் அவர் மீது கோபம் அவர் தங்களை ஏமாற்றிவிட்டார் என்பது. அவர் நிறையப் பேரை ஏமாத்தியிருக்கிறார் என்று சொல்கிறார்கள். தமிழ் நாட்டிலும் அவர் அதனை வேண்டுமென்றே செய்கிறார் என்று கூடச்சொல்லலாம். எனக்கு ஒரு அனுபவமிருக்கிறது. தி டிராமா ரெவ்யூ (TDR) என்றொரு பத்திரிகை. அமெரிக்காவின் சீகல் பதிப்பகம் வெளியிடும் அரங்கியல் சார்ந்த இதழ். பாண்டிச் சேரிப் பல்கலைக் கழகத்தின் நாடகத்துறை மாணவர்களுக்காகப் பணம் கட்டி வரவைத்தோம். ஒரு இதழில் இன்விசிபிள் தியேட்டர் என்பதை முன்வைத்த அகஸ்டோபாவால் குறித்த விரிவான கட்டுரைகளும் நேர்காணல்களும் வந்திருந்தன. அந்த இதழ் வந்த சில நாளில் நூலகத்திலிருந்து காணாமல் போய்விட்டது. ஆனால் சாரு நிவேதிதா அவற்றை அடிப்படையாக வைத்து அகஸ்டோபாவாலைத் தமிழுக்கு அறிமுகம் செய்து எழுதினார். அதன் பிறகுதான் அவர் எடுத்துக் கொண்டு போய்விட்டார் என்பது தெரிந்தது.

துறையில் நான் மட்டுமே அவருக்குத் தெரிந்தவர் என்றில்லை கே ஏ குணசேகரனும் கூட அவருக்கு நண்பர் தான். அது காணாமல் போனதால் எங்களுக்குப் பல்கலைக்கழகத்தினால் கேள்வி கேட்கப்படும் சிக்கல் இருப்பதைப் பற்றியெல்லாம் கவலைப்பட மாட்டார். குணசேகரன் அதைச் சொல்லவும் செய்தார். அதெல்லாம் உங்கள் பொறுப்பு என்று பதில் சொன்னார் என நினைக்கிறேன். இதனை அமைப்புகளைப் பயன்படுத்துவது அமைப்புகளுக்கு எதிரான செயல் போன்ற கருத்துகளால் நியாயப்படுத்தவும் செய்வார். அவரது ஸீரோ டிகிரியை பிரேம், ரமேஷ் எழுதியதாக ஒரு செய்தி உலவியது. ஏன் எழுதிக்

இலங்கை ஆட்களுக்கு அவர் மீது கோபம் அவர் தங்களை ஏமாற்றிவிட்டார் என்பது. அவர் நிறையப் பேரை ஏமாத்தியிருக்கிறார். தமிழ் நாட்டிலும் அதிகம் பேரை ஏமாற்றியிருக்கிறார். அவர் அதனை வேண்டுமென்றே செய்வார்.

எனக்கு என்னுடைய அனுபவமேயிருக்கிறது. டிடிஎஜ் என்றொரு பத்திரிகை. பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகத்திற்காக அந்தப் பத்திரிகை வந்து கொண்டிருந்தது. என்னுடன் வந்து பேசிக் கொண்டிருந்தவர் அதனை களவெடுத்துக் கொண்டு போய்விட்டார். அதன் பின் அதுகுறித்து பத்திரிகைக்கு எழுதும் பொழுது எப்படி இவர் எழுதுகிறார் என்று யோசித்தால் புரிந்தது. என்ன இது எனக் கேட்டால் பல்கலைக்கழகத்திற்கு என்ன பதில் சொல்வது எனக் கேட்டால், அதெல்லாம் உன் பொறுப்பு என்று பதில் சொன்னார்.

கொடுக்க வேண்டும்? என்ன ஆதாரம் இருக்கிறது.

இப்படியான தகவல்களுக்கெல்லாம் என்ன பதில்கள் இருக்கின்றன?

**கற்சுறா:** இல்லை. அப்படியில்லை. வெறும் சிறு கடிதங்களுடனும் குறிப்புக்களுடனும் கொண்டுவந்து பிரதியாக்க முனைந்தபோது அதனை ஒருநாவலாக, அதுவும் அப்பொழுது உரையாடலுக்குள் இருந்த நொன் லீனியர் பிரதியாக அதனைச் செப்பனிட்டுக் கொடுத்தது பிறேம் ரமேஸ் என்ற இரட்டையர்களே என்ற விவாதம் புதிதல்ல. காலச்சுவட்டில் கூட இவை உரையாடப்பட்டன அல்லவா?

**அ.ராமசாமி:** ஆமாம். வாசித்த ஞாபகம் இருக்கிறது. இதனை ஒரு விவாதமாகச் சொல்லவில்லை. சொந்த ஊரை விட்டுவிட்டுச் சென்னையில் இலக்கியத்திற்காகப் போய்த் தங்குவார்கள். அவர்களுக்கு எந்த வேலையும் அங்கு இருக்காது. ஆனால் இலக்கியத்தை நம்பித்தான் இருப்பார்கள். அவர்கள் எந்தக் கதைகளையோ தொடர்களையோ எழுதுபவர்களாகவும் இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு நிரந்தர வருமானம் எப்படி வரும் என்று நினைக்கிறீர்கள்?

**ஜோர்ஜ்:** ghost writers ஆக இருக்கிறார்களா?

**அ.ராமசாமி:** அப்படிப் பலபேர் இருக்கிறார்கள். நாவல் எழுதிக் கொடுப்பார்கள்.. கவிதை எழுதிக் கொடுப்பார்கள். புத்தகம் போட்டுத் தருவார்கள். முன்னுரை எழுதிக் கொடுப்பார்கள். இவையெல்லாம் புதுமையில்லை. எப்போதும் நடக்கும் ஒரு தொழில் தான். அதுவும் இலக்கியல் செயல்பாடு என்றே நம்பப்படுகிறது

**கற்சுறா:** இதன் பின்னால் பல கதைகள் இருக்கிறன்றன. அவை குறித்து என்னை வெளிப்படையாகச் சொல்லத் தூண்டக் கூடாது. ஈழத்தில் வெளிவந்த பல கவிதைத் தொகுப்புக்களுக்குப் பின்னால் இந்தக் கதை இருக்கிறது. சஞ்சிகைக்குப் பின்னால் இந்தக் கதை இருக்கிறது.

**'பிரபலமானவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள் என்று பொதுவாக ஒரு பழக்கம் இருக்கிறது. தமிழ்ச்சினிமாக் கதாநாயகர்களைப் பார்ப்பது போலான சிந்தனை அது.'**

**'ஆமா. அது ஒரு நம்பிக்கை. அவர்கள் நடிக்கும் கதாபாத்திரங்களைப் போலவேயிருப்பார்கள் என்று நினைக்கிறார்கள். சினிமாவைப் பார்ப்பதுபோல் அதனை இலக்கியச் சூழலிலும் பொருத்திப்பார்க்கும் கூட்டம் இருக்கிறது.'**

**ஜோர்ஜ்:** தமிழ்நாட்டில் இப்படியிருக்கிறது என அறிய எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**அ.ராமசாமி:** தமிழ்நாட்டிலும் நடைபெறுகிறது. பெயர்களைச் சொல்ல வேண்டியதில்லை. மொழிபெயர்ப்பு செய்து கொடுத்துவிட்டுப் பணம் பெற்றுக்கொடுக்கும் எழுத்தாளர்கள் உண்டு. அந்த மொழிபெயர்ப்புகள் அறியப்பட்டவர்கள் பெயரில் வரும். எழுதிய கதைகள். ஆங்கிலத்தில் எழுதியதைத் தமிழ்ப்படுத்தியும் கொடுப்பார்கள். பல்கலைக்கழகங்களில் ஆய்வாளர்கள் திரட்டித்தரும் தகவல்களைக் கொண்டு வழிகாட்டிகள் ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதைப் போலப் படைப்பிலக்கியத்திலும் நடக்கவே செய்கிறது. பணம் இருப்பவர்களுக்குப் புகழ் தேவைப்படும். புகழ் அடைவதற்குப் பயன்படும் எழுத்தை எழுதிக் கொடுப்பவர்களுக்குப் பணம் தருவார்கள். வேலை செய்பவர்கள் சும்மா செய்யமுடியாது

**ஜோர்ஜ்:** இங்கேயொரு கேள்வி எனக்கெழுகிறது. அந்த எழுத்துக் குறித்த உரையாடல் நிகழும் போது, ஒருவர், இன்னொருவர் எழுதியதற்கு எப்படி நியாயம் கற்பிப்பது? அவரிடம் கேட்டுத்தானே விளக்கம் சொல்ல முடியும்?

**அ.ராமசாமி:** அப்படி நுட்பமாக விவாதங்கள் நடப்பதில்லையே. எழுதியவர்கள் நான் தான் எழுதினேன் என முன்வராதபோது எதுவும் நடக்காது. எல்லாவற்றையும் பிசாசு எழுத்து, பாடிஎவ றசவைபே,, ஆகப் பார்க்க வேண்டியதில்லை. நண்பர்களோடு விவாதித்து செம்மைப்படுத்துவதாகவும் பார்க்கலாம். நண்பர்களாக இருக்கும் வரை அப்படித்தான் புரிந்துகொள்ளப்படும். அவர்களிடையே நட்பு முறியும்போது திருட்டு என்பதாக ஆகிவிடும்.

இப்பொழுது சாரு ஆர்த்தோ வாழ்வை மையப்படுத்தி ஒரு நாடகம் எழுதியிருக்கிறார். நான் பணியாற்றிய பாண்டிச்சேரி பல்கலைக்கழக நாடகப் பாடத்திட்டத்தில் ஆர்த்தோவின் நாடகமுறை பற்றிய அறிமுகம் இருக்கிறது. அவரது வலைப்பக்கத்தில் எழுதியதை வாசித்துவிட்டு, ஆர்த்தோ பற்றி நான் கருத்து சொன்னபோது அவர் எழுதிய இந்த நாடகத்தை எனக்கு அனுப்பி வைத்தார். அதனால் அந்த நாடகம் பற்றி விரிவாக எழுதினேன். அதில் ஒரு இடத்தில் 1938 இல் என்று தொடங்குகிறது. நாடகத்தில் இப்படி ஆண்டு குறிப்பிட்டு எழுதும் போது அது நாடகத்தன்மை இழந்து அது வரலாறாகி விடுகிறது என்று விளங்கப்படுத்தினேன்.

அதெல்லாம் சரி பண்ணி அனுப்பியிருக்கிறேன் பாருங்கள் எனத் திரும்பவும் அனுப்பினார். இதனை வைத்துக் கொண்டு நானும் அதில் பங்களிப்பு செய்திருக்கிறேன் என்று சொல்ல முடியாது. சாருவிடம் நல்ல அம்சங்கள் இருக்கும். ஆனால் திடீரென மேடையில் வந்து திட்டவும் செய்வார். தமிழ் தவிர ராமசாமிக்கு என்ன தெரியும் என்று திட்டுவார். திட்டினால் சரியென்று ஒத்துக்கொண்டு போய்விடுவேன்.

ஆனால் தமிழ்ச் சூழலில் அவருக்கு ஒரு அடையாளம் இருக்கிறது. குடும்பம் சார்ந்து பாலியல் சார்ந்து தைரியமாகப் பேச வேண்டும் என்று நினைத்த ஓராள் அவர். அந்த மாதிரிப் பேசுவதற்கான ஒரு சிறியகூட்டத்தைத் தயார் பண்ணியிருக்கிறார் அவர். உலக இலக்கியப்பரப்பில் அப்படியொரு

சிந்தனைப்போக்கு இருக்கும்போது தமிழிலும் இருப்பதில் என்ன தவறு. அவருக்கும் வாசிப்புக் கூட்டம் இருக்கிறது.

**கற்சுறா:** அவருக்கு வாசிப்புக் கூட்டம் இருக்கிறது சரி. அவர் மற்றவர்கள் எழுதாத பாலியல் கதைகளை எழுதுகிறார் சரி. சாதாரணமாக சமூகநீதிக்கான சிந்தனையுள்ளவனாக அவர் இருக்கிறாரா? அவர் எப்பொழுதும் தனது இருப்பிற்கான தனது வாழ்விற்கான நியாயங்களையே தமது எழுத்துக்களினூடாக நியாயம் கற்பிக்க முனைகிறார். கிட்டத்தட்ட நமது சூழலில் சோபா சக்தி போல். சாருவோ தனக்குத் துணையாக ஜோன் ஜெனேயை அடையாளம் காட்டுவார். ஜெனே தன்னுடைய வாழ்விலிருந்து எழுத்தைக் கண்டெடுத்தார். ஆனால் சாருவோ தன்னடையாளத்திற்காக ஜெனேயைக் காட்டுகிறார். தனது அயோக்கியத் தனத்திற்கு ஜெனேயின் வாழ்வை அடையாளம் காட்டுவது தர்க்கமல்ல. இலக்கியத்தின் முடிச்சவிக்கித் தனந்தானே? வாழ்வில் தன்வாழ்வு சார்ந்த அறம் கூட அவரிடம் இல்லை.

**அ.ராமசாமி:** அது முழுமையாக இல்லையென்று நீங்கள் சொல்லலாம் தான். நமது வாழ்க்கையோடு ஒத்துப் பார்த்துச் சொல்ல நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால் ஒருவருக்கு இருக்கும் அறம் இன்னொருவருக்கு வேறாக இருக்கிறது. அவர் தன்னுடைய அறத்தின்படி வாழ்கிறார் எழுதுகிறார். தான் நம்புவதை எழுதுகிறார்.

**கற்சுறா:** இல்லை. அவர் பணத்திற்காக எதையும் எழுதக் கூடியவர். அதற்கு நிறைய உதாரணங்களைச் சொல்லலாம்.

**அ.ராமசாமி:** ஆமா. அவர் பணத்திற்காக எதையும் செய்வார். நித்தியானந்தா தொடர்பில் அவர் மாறுபட்டுப் பேசினார் என்பதும் தெரிந்ததுதான். அவர் மட்டுமல்ல. இங்கே பலருந்தான் அப்படி இருக்கிறார்கள். தமிழ்நாட்டுச் சூழலில் எதுவும் நடக்கும். ஒருவருக்குக் கிடைக்கிற வருமானம் போதாத போது என்கிறபோது எதுவேண்டும் என்றாலும் செய்வார்கள். பல நேரங்களில் நியாயப்படுத்தவும் செய்வார்கள். விருதுகள் உருவாக்குவது கொடுப்பது, சிபாரிசு செய்வது, அதனைக் கொண்டாடுவது என எல்லாவற்றிலும் அறம் தாண்டிய போக்கு இருக்கவே செய்கிறது. வெளியே தெரியாதவரை அறம் மாறாதவர்கள்.

**ஜோர்ஜ்:** அந்தச் சூழலை நினைத்துத்தான் இங்கிருந்து செல்பவர்கள் எல்லோரும் சேட்டை செய்கிறார்கள். அவர்களுக்குப் பணத்தையும் பொருளையும் கொடுத்துத் தங்களுக்குரியவர்களாக மாற்றுகிறார்கள். அதன்மூலம் இலக்கியவாதியாகிறார்கள்.

**அ.ராமசாமி:** இங்கிருந்து செல்பவர்கள் பலரும் இதனைச் செய்கிறார்கள்? இதனைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அது குறித்து எனக்கும் கொஞ்சம் தெரியும். ஆனால் அதனைப் பேசுவது வதந்திப் பேச்சாக ஆகிவிடும். அல்லது கிசுகிசு போலப் பேசவேண்டியதாக மாறிவிடும்.

**ஜோர்ஜ்:** பிரபலமானவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள் என்று பொதுவாக ஒரு பழக்கம் இருக்கிறது. தமிழ்ச்சினிமாக் கதாநாயகர்களைப் பார்ப்பது போலான சிந்தனை அது.

**அ.ராமசாமி:** ஆமா. அது ஒரு நம்பிக்கை. அவர்கள் நடிக்கும் கதாபாத்திரங்களைப் போலவேயிருப்பார்கள் என்று நினைக்கிறார்கள். சினிமாவைப் பார்ப்பதுபோல் அதனை இலக்கியச் சூழலிலும் பொருத்திப்பார்க்கும் கூட்டம் இருக்கிறது.

‘ஜெயமோகன் கூட ஆர்.எஸ். எஸ். இல் இருந்தவர்தான். அவர் விஜயபாரதத்தில் எழுதியவர்தான். அதனை அவர் மறுக்கவேயில்லை. அங்கே எழுதிக் கொண்டு இருந்து விட்டு தபால் துறைக்கு வேலைக்கு வருகிறார். அவர் எப்படி கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்குகிற தொழிற்சங்கத்தில் எப்படிச் சேர்ந்தார்?’

‘அப்ப அது ஊடுருவல்.’

‘ஆமா. அவர்கள் இதனைத்தான் செய்வார்கள். ’

•••

**கற்சுறா:** தமிழ் நாட்டிலுள்ள பதிப்பகங்கள் பற்றிப் பேசுவோம். அது குறித்து எங்களிடம் அதிகமான அனுபவங்கள் உள்ளன. நீங்கள் அவை குறித்து என்ன சொல்வீர்கள்?

**ஜோர்ஜ்:** ஏன் இதுவரையும் எங்களால் ஒரு நேர்மையான பதிப்பகத்தையும் அடையாளம் காணமுடியாது இருக்கிறது?

**அ.ராமசாமி:** (மிகப்பெரிய சிரிப்பு.) (மிகப்பெரிய சிரிப்பு.) அங்கே யாருமே அதற்குரிய விடயங்களைச் சரியாச் செய்யவில்லை. தொழில் சார்ந்த நேர்மை ஒருவருக்கும் இல்லை. இதுவரை விடியல், காவ்யா, உயிர்மை, காலச்சுவடு, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், நற்றிணை, அம்ருதா, டிஸ்கவரி புக்பேலஸ் என எட்டு பதிப்பகங்கள் வழியாக என்னுடைய நூல்களை வெளியிட்டுள்ளேன். 26 நூல்கள் அச்சிட்டு விற்றிருக்கிறார்கள். பல்கலைக்கழக வெளியீடுகளும் செய்துள்ளேன். இதில் எந்தவொரு பதிப்பகமாவது அடிப்படைத் தொழில் சுத்தத்துடன் செயல்படும் பதிப்பகமாக ஒன்றையும் சுட்டமுடியாது. இப்போது இன்னொரு பதிப்பகத்தைத் தேடிக்கொண்டிருக்கிறேன்

**ஜோர்ஜ்:** கிழக்குப் பதிப்பகம் குறித்து ஒரு பதிவினை 15 வருடங்களுக்கு முன்பு ஒரு ஆங்கில சஞ்சிகையின் அறிவிப்பில தான் பார்த்தேன். ஒருவர் வெளிநாட்டிலிருந்து வந்து புதிதாகப் பதிப்பகம் ஒன்றைத் தொடங்கி முதலீடு செய்கிறார். றோயல்ரி கொடுக்கப் போறார் என்பதாக வாசித்தேன்.

**அ.ராமசாமி:** பத்ரி சேஷாத்ரி. அவரது கிழக்கு பதிப்பகத்தோடு நேரடித் தொடர்பு எனக்கு இல்லை. வணிக ரீதியாக அதனை வெற்றிகரமாகச் செய்யவில்லை என்றே நண்பர்கள் சொல்கிறார்கள். அவர் அமெரிக்காவின்

புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு அங்கேயே வேலை பார்த்தவர். அவர் கிழக்கு தொடங்கியபோது பதிப்புத்துறையில் நம்பிக்கையூட்டினார். மிகப்பெரிய சம்பளத் திட்டத்துடன் பலரை வேலைக்கு அமர்த்தினார். ஒரு வருட ஒப்பந்தத்தின் அடிப்பிடையில்தான். ஒருவருட வேலை அதன்பின் அவர்களது திறமையின் அடிப்படையில் நீடிக்கப்படும் என்ற பேச்சில் வேலைக்கு அமர்த்தினார். தொகுப்பு,திரட்டுதல், மொழிபெயர்ப்பு எனஎந்தத் தளம் வேண்டுமானாலும் அனைவரும் வேலை செய்யலாம்.

பதிப்பகத் துறைக்கு என அரசியல், இலக்கியப் பார்வையென எந்தக் கொள்கையும் இல்லாது எல்லாத்துறைப் புத்தகங்களையும் பதிப்புக்கும் நிலைப்பாடு இருந்தது. அப்பொழுதுதான் வியாபாரம் நடக்கும் என்று நினைத்தத் தொடங்கிய பதிப்பகந்தான் கிழக்குப் பதிப்பகம். நிறைய எழுத்தாளர்களை அழைத்து வேலை தந்தார். ஆனால் ஒப்பந்த அடிப்படையில் வேலையில் சேர்ந்த பலரும் பின்னர் வேலை இழந்தனர். அதனால் அங்கு வேலைக்குச் சேர்ந்ததின் பின் விளைவுகள் அவர்களை வருத்தத்தில் தள்ளியது. ஆனால் ஒப்பந்தப்படியே எல்லாம் நடந்தது என்பதால் ஒருவரும் முணுமுணுப்புகூடக்காட்டவில்லை.

**சிவா:** சூரியன் உதிக்கும் திசையைக் குறிப்பதாக அதனை அவர் வைத்திருக்கலாம் அல்லவா?

**அ.ராமசாமி:** அப்படியாயின் அது திராவிடமாயிரும் அல்லவா? உதயசூரியன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னம். அப்படியில்லை. அவர்கள் பேசும் பேச்சும் சிந்தனையும் அதுவல்ல. அது கிழக்கு எதிர் மேற்கு என்பதோடு தொடர்புடையது. ‘கிழக்கு‘ என்றால் என்ன? அது ஒரு பொலிட்டிக்கல் கலைச்சொல். அதாவது மேற்கிற்கு எதிரானது கிழக்கு. இப்பொழுது பி.ஜே.பி என்ன பேசுகிறது ஆண்டி பிறிட்டிஷ் தானே. வெஸ்டன் ஐடியோலஜி, வெஸ்டன் கல்ச்சர், வெஸ்டன் பொலிட்டிக்ஸ் போன்றவற்றிற்கு எதிராக இந்தியப் பண்பாடு, இந்திய அரசியல் என்று சிந்தித்து வைக்கப்பட்ட பெயர் அது. அதனை முன்வைத்து இந்தியன் என்று வைப்பதற்குப் பதிலாகப் பெரிய பரப்பில் கீழ்த்திசை - ஈஸ்ட் என்று வைத்திருக்கிறார். அந்தக் காலத்திலலேயே புலோசபியில்- வெஸ்டன் பிலோசபி, ஈஸ்டன் பிலோசபி என்று எதிரெதிர் நிலை இருக்கிறது. நீண்ட காலமாகப் பேசிவந்திருக்கிறார்கள். அதன் வேருக்குள்ளே போய் ஒரு பெயர் எடுக்கிறார் பத்ரி. இது மிகத் திட்டமிட்டு ஆழமாகச் சிந்தித்து எடுக்கப்பட்ட பெயர்.

இதற்குப் பின்னால் பெருங்கூட்டம் இருக்கிறது. ஜெயமோகன் கூட ஆர். எஸ்.எஸ். இல் இருந்தவர் தான். அவர் விஜயபாரதத்தில் எழுதியவர் அதனை அவர் மறுக்கவேயில்லை. அங்கே எழுதிக் கொண்டு இருந்து விட்டு தபால்த் துறைக்கு வேலைக்கு வருகிறார். அவர் எப்படி கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்குகிற தொழிற்சங்கத்தில் எப்படிச் சேர்ந்தார் செயல்பட்டார் என்பதுதான் ஆச்சரியம்?

**ஜோர்ஜ்:** அப்ப அது ஊடுருவல்.

**அ.ராமசாமி:** ஆமா. இந்தியாவில் வலதுசாரிகள் பலதளங்களில் ஊடுருவல் செய்திருக்கிறார்கள். எனது மாணவப்பருவத்தில் நடந்த நிகழ்வு இது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் எமர்ஜன்சியை, இந்திரா காந்தியை எதிர்த்தார். அவரோடு சேர்ந்து பி.யூ.சி.எல். என்ற அமைப்பினரும் வெளிப்படையாக எதிர்த்தனர். அதில் தார்குண்டே, அருண்ஷோரி, அருண் ஜேட்லி போன்றவர்கள் இருந்தார்கள். அதனுடைய தமிழ் நாட்டுப் பிரதிநிதி யார் என்றால், சோ. ராமசாமி. ஆனால் பின்னால் பிஜேபி உருவாகி ஆட்சிக்கு வந்தபோது இவர்கள் அதன் தீவிர ஆதரவாளர்களாக மாறினார்கள். அதே நேரம் அதில் இடதுசாரிகள் அதிகம் இருந்தார்கள். அதற்கு இடதுசாரி முகம் இருந்தது. அந்த இடதுசாரித்தன்மை கொண்ட அமைப்புக்குள் வலதுசாரிகள் ஊடுருவினார்கள் என்பது அருண்ஷோரி மத்திய அமைச்சரான பின்பு தான் தெரியவந்தது. அவசரநிலைக்காலத்தில் இந்திரா காந்தியை எதிர்த்து தீவிரமான இடதுசாரி போல எழுதினார். அரசின் தவறுகளை அம்பலப்படுத்தினார்.

**ஜோர்ஜ்:** இது ஒரு நீண்ட காலத்திட்டமாக இருக்கிறதல்லவா?

**அ.ராமசாமி:** ஆமா. இது நீண்டகாலத் திட்டத்தின் ஒரு பகுதிதான். கோல்வால்கருடைய திட்டந்தான். எப்பொழுதாவது ஒரு நாள் இந்தியாவை இந்து நாடாக மாற்றுவோம் என்பது அவரது திட்டம். அந்தத் திட்டத்திற்காக அவர்கள் தீவிரமாக வேலை செய்கிறார்கள். எதிர்ப்பவர்களின் நடைமுறையையே பின்பற்றுவார்கள்.

இப்பொழுது தமிழ்நாட்டில் பார்த்தீர்கள் என்றால் கிறிஸ்தவ பாடசாலைகளில் என்ன ஒழுங்கின்படி இயங்குகிறதோ அதன்படி இவர்களும் இயங்குகிறார்கள். இப்பொழுது தொடங்கப்பட்டுள்ள வித்யாஷ் மரங்கள், வித்யாலாயாக்கள் அப்படித்தான் இயங்குகின்றன. கிறிஸ்தவ பாடசாலைகளில் ஜெபம் பண்ணுவதுபோல் தங்களது வித்தியாலயாக்களை வழிபாடு நடத்துகிறார்கள். கடந்த இருபது வருஷங்களில் ஞானலாயாக்கள், சங்கரவித்யாலயாக்கள் என்று எத்தனையோ பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. அங்கே சமஸ்கிருதம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. வேதம் சொல்லிக் கொடுக்கிறார்கள். டான்ஸ் சொல்லிக் கொடுக்கிறார்கள். யோகா சொல்லிக் கொடுக்கிறார்கள். இவையெல்லாம் ஒரு நடுத்தரவர்க்கத்திற்கு ஈடுபாடான விடயங்கள். வேதம் படிப்பதும் அவர்கள் பரவாயில்லை என்று நினைப்பார்கள். ஆக ஒட்டுமொத்தத்தில் கல்வியை தம் வசப்படுத்த மிக நீண்ட திட்டத்தை அவர்கள் கொண்டு இயங்குகிறார்கள். கிறித்தவம் சமயப்பரப்பலைக் கல்வி வழியாக நிகழ்த்துகிறது என்ற புரிதலில் அந்தத்திட்டம் நடக்கிறது. ஆனால் கிறித்தவ மத எதிர்ப்பு

என்பதைத் தாண்டி, இந்தியர்களைப் பின்னோக்கித் திருப்புவது அதில் நடக்கிறது. இந்த நீண்டகாலத் திட்டத்தில் அமைப்புகள் ரீதியான நடைமுறைகளைக் கொண்டு இயங்குவது ஒரு பாதை. இன்னொன்று அவற்றுக்குரிய தனிமனித அறிவாளிகளின் செயற்பாடுகளை உருவாக்குவது. அந்தவகையில் தான் கிழக்கு, விஷ்ணுபுரம் போன்ற பெயர்களைப் பார்க்கிறேன்.

தனது உரைகளில், இலக்கியக் கோட்பாட்டில் ஜெயமோகன் முன்வைக்கும் இந்திய மரபு, இந்தியப்பார்வை போன்றவற்றையும் கணிக்கிறேன். இலக்கியத்தில் ஜெயமோகனின் செயல்பாடுகளை ஒத்ததாகவே பத்ரி சேஷாத்ரியின் கிழக்கும் அப்படிப்பட்ட சிந்தனையின் வெளிப்பாடுதான்.

ஒருவர் தான் நம்பும் கருத்தியலுக்காக எழுதுவதும் செயல்படுவதும் தவறானது என்றாகாதுதானே. நாம் அதை விமரிசிக்கலாம். அப்படிச் செய்யக்கூடாது என்று சொல்லமுடியுமா?

பத்ரியின் கிழக்கு அப்படியொன்றும் சந்தையை , புத்தக மார்க்கெட்டை உருவாக்கிப் பலனடையவில்லை என்றே தோன்றுகிறது. அதன் சாயலில் = பாதையில் இந்துத்துவ நோக்கத்தோடு இன்னும் சில பதிப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அதுதான் அதன் வளர்ச்சி.

எனது புரிதலில் இன்றும் மிகப்பெரிய நெட்வேர்க்கோடு இருக்கும் ஒரு பதிப்பகம் என்றால் நியூ செஞ்சரி புக் கவுஸ்தான். அதற்குத் தமிழ்நாடு முழுக்கப் புத்தக விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. இருக்கும் கடையைத் தாண்டித் தற்காலிகக் கடைகளையும் போடுவார்கள். அது முன்புபோல அரசியல் சார்பு நூல்களை மட்டும் பதிப்பது விற்பது என்றில்லாமல் அரசியல் நீக்கம் பெற்ற நூல்களின் நிலையமாக மாறியிருக்கிறது. வெகுமக்களின் தேவைக்கான நூல்களைத் துணைப்பதிப்பகங்கள் மூலம் வெளியிட்டு விற்கிறது. கலச்சுவடு முதலில் பதிப்பகம் என இருந்தது. பின்னர் பிறைவேட் லிமிட்டெட். அதில் 51 வீதப் பங்கு கண்ணனிடம் இருக்கலாம். அதன் எழுத்தாளர்கள் பலரும் அங்கு பங்குதார்களே. பங்குதாரர்களின் நூல்கள் அதிகமாக தொடர்ந்து வெளியிடப்படும் . மற்றவர்களின் நூல்கள் குறைவாகவே வெளியிடப்படும். பங்குதாரர்களுக்கு பங்காகவும் லாபமாகவும் பணம் வரும் வாய்ப்புண்டு..

**ஜோர்ஜ்:** புத்தகம் எழுதி விற்று நல்ல வசதியாக இருக்கிறார்கள் என்று நீங்கள் ஒருமுறை எழுதியிருந்தீர்கள். எனக்கு நம்பமுடியாமல் இருக்கிறது. புத்தகம் எழுதி விற்ற பணத்தில் மகளுக்குக் கலியாணம் செய்து வைத்தார் என்று எழுதியிருந்தீர்கள். தமிழ்நாட்டில் அப்படி இருக்கிறதா?

**அ.ராமசாமி:** ஆமா. அது உண்மைதான். அது தோப்பில் முகம்மது மீரானே ஒரு முறை பெருமையாகச் சொன்னார். புத்தக விற்பனையில் எல்லாருக்கும் எல்லாம் தெரிவதில்லை. பொதுவாகத்தெரிவது ஒருவகை . அதாவது புத்தகக் கண்காட்சியில் விற்கப்படுவதுதான் நமக்குத் தெரியும். ஆனால் ஒரு புத்தகம் கல்வித் துறைக்குள்ளே போனால் அதன் நிலை வேறு. நன்றாக விற்கும். படிக்கிறார்களோ இல்லையோ, புத்தகங்கள் வாங்கப்படும். அதனையும் விடப் பாடசாலை நூலகங்கள், அரச நூலகங்கள் என்று அதன் விற்பனை பலமடங்கு இருக்கும். பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் ஒரு நாவல் இடம்பெற்றால் மூன்றாண்டுகளில் குறைந்து 50 ஆயிரம் விற்கும் வாய்ப்பு முன்பு இருந்தது. இப்போது நிறைய பல்கலைக்கழகங்களும் தன்னாட்சிக் கல்லூரிகளும் வந்துவிட்டன. அதனால் சில 100 பாடத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அதனால் முன்புபோல் ஒரு புத்தகத்திற்குப் பெரிய சந்தை இல்லாமல் போனது. இப்போது திரும்பவும் ஒருங்கிணைந்த பாடத்திட்டம் தமிழ்நாட்டளவில் வரப்போகிறது. அப்போது விற்பனை நிலை என்பது மதிப்பிட முடியாதது.

எனக்குத் தெரிந்து தோப்பில் அவர்களது புத்தகம் ஒரே நேரத்தில் இரண்டு பல்கலைக்கழகத்தில் பாடமாக இருந்தது. மூன்று வருடத்தில் 56.000 புத்தகங்கள் விற்றன என்றார். அறவாணன் அவர்களை உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

**ஜோர்ஜ்:** ஓம் தெரியும். அங்கே தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வந்த நேரம் எமது பாடசாலைக்கு வந்து உரையாற்றியவர்.

**அ.ராமசாமி:** அவர் நன்றாக உரையாற்றுவார். அவரெல்லாம் புத்தகம் விற்று அதிகம் சம்பாதித்தவர். உரையாற்றும் இடங்களில் அவரது புத்தகங்கள் விற்பனைக்குக் கிடைக்கும். அதே உத்தியை இப்போது நவீனக் கதைசொல்லிகளும் எழுத்தாளர்களும் பின்பற்றுகிறார்கள். தங்கள் உரையைச் சந்தைப் படுத்துதலோடு இணைக்கிறார்கள். தங்களுக்கான பதிப்பகங்களைத் தொடங்கி நடத்தவும் செய்கிறார்கள்.

பேராசிரியர் அறவாணன் வருடத்திற்கு இரண்டுக்கும் குறையாமல் நூல்கள் எழுதுவார். அவரது மனைவி ஒரு புத்தகம் எழுதுவார். கல்விப்புலத்திற்கேற்ற நூல்கள் அவை. பொங்கல் வாழ்த்தோடு நூல்பட்டியல் அனுப்புவார் அவர்களது நூல்களை அவர்களே அச்சிட்டு விற்பனை செய்ய ஏற்பாடு செய்வார்கள். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் என்ற தகுதி புத்தக விற்பனையில் ஒரு கருவியாக இருக்கும் என்பதை அறிந்தவர்கள் அதைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.சந்தைப்படுத்தும் உத்தியாக அதைச் செய்வதற்குத் தயங்கவேண்டியதில்லை என்றும் சொல்லியிருக்கிறார். பண்டைத்தமிழ் இலக்கண, இலக்கியங்களை அச்சிடும் பதிப்பகங்கள் அவர்களின் பெயர்களைப் பதிப்பாசிரியர்கள் என்று பெயரைத்தந்து விற்பனை செய்கின்றன. புத்தக விற்பனையில் நூலக ஆணை பெறுவது, பாடத்திட்டத்தில் சேர்ப்பது

போன்றவற்றில் குறுக்கு வழிகளும் இருக்கின்றன.

பொது நூலகத்துறை அதிகாரிகளோடு சேர்ந்து பழைய நூல்களை அச்சிட்டு நூலகங்களில் நிரப்பும் வேலையும் நடக்கிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் அப்படியான விற்பனைப் பண்டங்களாக மாறியிருக்கின்றன. நாட்டுடைமையாக்குவது வாசிப்பவர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கவேண்டும் என்பதற்கு என்பதை மாற்றிப் பதிப்பகங்கள் அச்சிட்டு லாபம் பார்க்கின்றன. அண்மையில் எல்லாப் பதிப்பகங்களும் அச்சிடும் நூல்களாக எங்கள் துறையின் தலைவராக இருந்த தொ.பரமசிவனின் நூல்கள் இருக்கின்றன. பதிப்பித்தல், அச்சிடல் ஒழுங்குகளைப் பின்பற்றாமல் வெளியிடப்படும் இந்நூல்களை ஆய்வுத்தரவாகப் பயன்படுத்தக்கூட முடியாது. பதிப்பகத் துறை பற்றிப் பேச அதிக விடயங்கள் இருக்கின்றன.

அது பலரும் நினைப்பதுபோல ஓர் அறிவுச்செயல்பாட்டோடு தொடர்புடையனவாக இல்லை. விதிகளைப் பின்பற்றி நடக்கும் சட்டப்படியான வியாபாரமாகவும் இல்லை.

**ஜோர்ஜ்:** ஏன் எங்களுக்கென்று ஒரு சரியான நல்ல பதிப்பகத்தை எங்களால் அடையாளம் காணமுடியாமல் இருக்கிறது?

**அ.ராமசாமி:** ஒரு தொழில் முறைத் திட்டமிடல் இருக்கவேண்டும். அது அதிகமானவர்களிடம் இல்லை. காலச்சுவடு ஆரம்பத்தில் கொண்டிருந்தது. இப்போது இல்லை. அவங்கள் இப்பொழுது பிறைவேட் லிமிட்டட் ஆகிவிட்டார்கள். இப்பொழுது ஸீரோடிகிரிப் பதிப்பகம் அதனைச் செய்வதாகச் சொல்கிறார்கள். எழுத்தாளர்களுக்கு ராயல்டிக் கணக்குக் கொடுக்கிறார்கள். அதிலே செயற்படும் காயத்திரியும் ராம்ஜியும் முக்கியமானவர்கள். காயத்திரி ஒரு ஆங்கிலப் பேராசிரியர். ராம்ஜி சினிமா வினியோகஸ்தர். அவர்களுக்கு புத்தகங்கள் ஒரு பேரார்வம் உடைய விடயம். என்னிடம் கூடப்

**எனது இலங்கைப் பயணங்களின் போதும் புலம்பெயர் நண்பர்களின் தொலைபேசி அழைப்புகளின் போதும் எந்தெந்தப் பதிப்பகங்களால் ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்ற கதைகளைக் கேட்டிருக்கிறேன். இப்போதும் கூடச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.**

**ஒரு கவிதைப் புத்தகத்தைத் தயாரிக்க ஆகும் செலவைப்போல மூன்று மடங்கு தொகையைத் தந்த ஒருவருக்கு உரிய நேரத்தில் கவிதைப் புத்தகத்தை அச்சிட்டு விற்பனைக்குத் தராத பதிப்பகத்தை குறிப்பிட்டுச் சொல்லியி ருக்கிறார்கள். வெளியீட்டு விழாவில் பேச வருபவர்களுக்குச் செலவழித்த கதைகளும் இருக்கின்றன.**

பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு இதிலிருந்து பணம் பெரிய லாபமாக வரவேண்டும் என்பதில்லை. அதே நேரம் நஷ்டத்திற்காகச் செய்யவும் கூடாது என நினைக்கிறார்கள் அதனால்பதிப்பகத்துறையைநல்லபடி செய்வார்கள் என நினைக்கிறேன். அவர்களுக்கு இதனை ஒரு நல்லதொரு முன்மாதிரியாகச் செய்து காட்டவேண்டும் என்று ஆசையிருக்கிறது. நினைக்கிறார்கள்.

ஆனால் கிழக்குப் பதிப்பகமும் ப்படித்தான் என்று சொல்லித் தொடங்கியதுதான். ஆனால் இவர்கள் யாருக்குமே கல்வித்துறை சார்ந்து செயற்படத் தெரியவில்லை. ஆனால் ராம்ஜி அதனைத் தெரிந்து வைத்திருக்கிறார். அவர் என்னிடம் கேட்டார். ஆனால்நான் சொன்னேன், எனது புத்தகங்கள் அதிகமாக கல்வியியல் சார்ந்தவர்கள்தான் வாங்குவார்கள் என்று. பரவாயில்லை அதுக்குமான புத்தகங்கள் நமக்குத் தேவைதானே என்று சொல்கிறார். இதற்கு முதல் காலச்சுவட்டில் பேசும்போது அவர்களுக்கு ஈடுபாடில்லை. உயிர்மைக்கு அதனை விளங்கிக் கொள்ளும் பக்குவமேயில்லை. அதற்குக் கிட்டவே போகமுடியவில்லை. மனுஷ்யபுத்திரனும் என் மாணவர்தான். அவருக்கு நேரடியாகவே சொன்னேன். தொழில் முறைப்படி ஒரு பதிப்பகம் செயல்பட்டு லாபம் கண்டு எழுத்தாளர்களுக்கு ராயல்டி கொடுப்பது தொடங்கினால் மற்றவர்களும் மாறும் வாய்ப்புண்டு. நடக்குமா என்று தெரியவில்லை. பார்ப்போம்..

இப்போது ரொரண்டோ நகரம் தமிழ்ப்புத்தகங்களுக்குப் பெரிய சந்தை. இது யாருக்குத் தெரியும்? நேற்றுத்தான் பார்த்தேன். முதல் நாள் ஆ.சி. கந்தராசாவின் உறவினர்கள் தான் இந்தமாதிரி மொய் எழுதுகிறார்கள் என்று நினைத்திருந்தேன். நேற்று தீபச் செல்வன் புத்தக வெளியீட்டிலும் எல்லோரும் வாங்கினார்கள்.

**ஜோர்ஜ்:** இதில வந்து ஒரு விடயம் முக்கியமானது. புலி மனநிலை என்பது மிக முக்கியமானது.

**அ.ராமசாமி:** உண்மை. இதில் இவர்களுக்கு ஒரு குற்றவுணர்வு இருக்கிறது. அங்குள்ளவர்களுக்கு தாம் ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான் அது.

**ஜோர்ஜ்:** அதுவொரு விசுவாச மனநிலை. இப்பவும் ஒரு மாவீர நிகழ்வு போன்று எதையாவது செய்தால், உடனேயே ஒரு மத நிகழ்வு போல் வந்து குவிவார்கள். அப்படித்தான் பழக்கப்பட்டிருக்கிறது இந்த சமூகம். அதனை நடத்துபவன் ஒரு அயோக்கியனாக இருந்தாலும் இவர்கள் போவர்கள். போய்க் காசை எடுத்துக் கொடுத்து ஒரு பூவை வாங்கிச் சட்டையில் குத்தி வாழும் கூட்டம் ஒன்று எங்களுக்குள் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

**அ.ராமசாமி:** முதல் நாள் ஆ.சி. கத்தராசாவின் வெளியீட்டில் அதிக பட்சமாக ஒரு இருபது டொலர் கொடுத்திருப்பார்கள். ஆனால் நேற்றுப் பயங்கரவாதி நாவல் வெளியீட்டில் என்னைத்தான் புத்தகத்தைக் கொடுக்கச் சொன்னார்கள். வந்தவர்கள் அனைவரும் 50 டொருக்கும் குறையாமல் கொடுத்தார்கள். நான்

பணத்தை கையால் வாங்கவில்லை. மேசையில் அப்படியே வையுங்கள் என்றேன். ஆனால் பெருமளவு பணம் அது.

**ஜோர்ஜ்:** இந்தப் புத்தகங்கள் எல்லாம் வாங்கப்படுவது வாசிப்பதற்காகவல்ல.

**அ.ராமசாமி:** இருக்கட்டுமே. இந்தப்பணத்தை இங்கே கொடுக்காது விட்டால் வேறு எதற்கோ கொடுக்கப் போகிறார்கள். இதற்குக் கொடுக்கட்டுமே. அவர்கள் படிக்கிறார்களோ இல்லையோ புத்தகங்கள் அடுத்தடுத்து வருந்தானே.

**கற்சுறா:** இது கொஞ்சம் இடையூறான கேள்விதான். புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர், தமிழ்நாட்டின் பலவேறு பதிப்பகங்களுடன் தமது தொடர்பைப் பேணிவரும் சூழலை அவதானித்திருப்பீர்கள். பணத்தை மட்டும் குறியாகக் கொண்டு இயங்கும் பல பதிப்பகங்களை அவர்கள் அடையாளம் கண்ட பின் அவற்றிற்கு மாற்றான சூழலை உருவாக்க நினைக்கும் சமூகம் சார்ந்த அக்கறை கொண்ட சில பதிப்பகங்களோடு தம்மை ஈடுபடுத்திச் செயற்பட முனைந்தார்கள்.

ஆனாலும் நிலைமையில் மாற்றமில்லை. அதே செக்குமாட்டுத் தனந்தான். சுற்றிச் சுற்றி ஒரே வகையான சுத்துமாத்துக்களைத்தான் தொடர்ந்தும் அடையாளம் காண நேரிடுகிறது. கருத்தியல் சார்ந்து இயங்கும் நிலை யாரிடமும் இல்லை. இங்கிருந்து என்ன குப்பை வருகிறதோ அதனுடன் பணமும் வருகிறது என எண்ணிச் செயற்படுகிறார்கள். புலம் பெயர் சூழலைத் தமிழ்நாட்டில் அணுகும் விதம் குறித்த கதைகள் எங்களிடம் அள்ளு கொள்ளையாக இருக்கிறது. அதனை நினைத்து நாங்கள் சிரித்தே காலங்கழிக்கிறோம். ஆனாலும் இந்தப் பதிப்பகங்களது பிற்போக்குத் தனங்களை மனதளவில் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. இதையெல்லாம் உங்கள் அனுபவத்தில் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**இந்தப்போக்கில் சந்தை மதிப்புடைய எழுத்தாளர்கள் விதிவிலக்காக எப்போதும் இருப்பார்கள். இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி, நுஃமான் ஆகியோருக்குக் கல்விப்புலத்திலும் திறனாய்வுத்தளத்திலும் மதிப்பு இருந்தது. அவரது எழுத்துகளைத் தமிழ்நாட்டுப் பதிப்பகங்கள் கேட்டு வாங்கிப்பதிப்பித்தார்கள். ஆனால் புனைவெழுத்துகளுக்கு அப்படியொரு மதிப்பில்லை என்பதால் எழுதியவர்களே அவர்களது செலவில் வெளியிட்டார்கள் என்பதுதான் ஈழப்போர்க் காலத்திற்கு முந்திய நிலை. அந்த நிலை ஈழப்போர்க்காலத்தில் மாற்றம் கண்டது.**

**அ.ராமசாமி:** தமிழில் அச்சிடும் பணியை -தொழிலை- தமிழ்நாட்டில் மட்டும்தான் நடத்த முடியும் என்றொரு காலகட்டம் இருந்தது. அதற்காகத் தமிழில் நூல்களை வெளியிட நினைத்த இலங்கைத் தமிழர்கள், மலேசிய, சிங்கப்பூர்த்தமிழர்கள் என அனைவரும் தமிழ்நாட்டுப் பதிப்பாளர்களின் பணியைப் பயன்படுத்திக்கொள்ளும் நிலை இருந்தது. இங்கிருந்தெல்லாம் வரும் எழுத்துகளுக்குத் தமிழ்நாட்டில் சந்தை இருக்காது என்ற நிலையில் எழுத்தாளர்களிடமே அச்சாக்கு வதற்கும் வெளியீடு செய்வதற்கும் ஆகும் முழுப்பணத்தையும் பெற்றுக்கொண்டு தமிழ்நாட்டுப் பதிப்பாளர்கள் அதனைச் செய்து கொடுத்தார்கள்.

இந்தப்போக்கில் சந்தை மதிப்புடைய எழுத்தாளர்கள் விதிவிலக்காக எப்போதும் இருப்பார்கள். இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி, நுஃமான் ஆகியோருக்குக் கல்விப்புலத்திலும் திறனாய்வுத்தளத்திலும் மதிப்பு இருந்தது. அவரது எழுத்துகளைத் தமிழ்நாட்டுப் பதிப்பகங்கள் கேட்டு வாங்கிப்பதிப்பித்தார்கள். ஆனால் புனைவெழுத்துகளுக்கு அப்படியொரு மதிப்பில்லை என்பதால் எழுதியவர்களே அவர்களது செலவில் வெளியிட்டார்கள் என்பதுதான் ஈழப்போர்க் காலத்திற்கு முந்திய நிலை. அந்த நிலை ஈழப்போர்க்காலத்தில் மாற்றம் கண்டது. ஈழப்போர் ஆதரவு மனநிலை தமிழ்நாட்டில் உருவானது. ஈழப்போராட்ட இயக்கங்களே தங்களுக்கான வெளியீடுகளை = இதழ்களாகவும், நூல்களாகவும் தயாரித்துத் தரத் தமிழ்நாட்டுப் பதிப்பகங்களை நாடியதுண்டு. தார்மீக ரீதியான ஆதரவு நிலைகொண்ட எழுத்தாளர்களும் பதிப்பாசிரியர்களும் உதவினார்கள். அதே போல் ஈழப்போராட்ட குழுக்களும் இங்கிருந்து ஆதரவு தந்தவர்களுக்கு அச்சகம் சார்ந்த முதலீட்டிற்குப் பண உதவியும் செய்ததையும் கேள்விப் பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிற் குள்ளேயே பிரசுரங்களை விற்று அச்சகங்களுக்குத் தருவது, போராளிக்குழுக்களுக்கு உதவுவது என்பதெல்லாம் நடந்தது.

போர்க்காலத்திற்கான ஆதரவு தெரிவிக்கும் மனநிலை மக்களுக்கு இருந்த நிலையில் வணிகப் பத்திரிகைகளும் ஈழப்போராட்டத்தைச் சந்தைப் பொருளாக நினைத்துக் கவனித்தன. உணர்ச்சிகரமான போர் நிகழ்வுகளையும், நியாயங்களையும் முன்வைத்த கவிதைகள் 1990 களில் தமிழ்நாட்டிலும் விற்பனைக்குரியனவாக இருந்தன. கவிதைகள் அச்சிடப்பெற்றன. விற்பனையும் இருந்தது. அதேபோல் போரின் நியாயங்கள், அரசியல் சூழல் பற்றிய கட்டுரைகள், சிறுபிரசுரங்கள் என வந்துகொண்டே இருந்தன. உணர்ச்சிகளும் கருத்துகளும் திரளான மக்களிடம் போய்ச் சேர்ந்தால் போதும் என்றே நினைத்திருப்பார்கள். அவற்றுக் கெல்லாம் பணம் கொடுத்துத்தான் அச்சிட்டிருப்பார்கள் . அதேபோல் பதிப்பகங்களிடமிருந்து எழுதியவர் களும் ராயல்டியும் எதிர்பார்த்திருக்க

மாட்டார்கள். அதில் எல்லாம் பெரிய அளவு சுரண்டல், ஏமாற்று நடந்திருக்க வாய்ப்பில்லை.

புலம்பெயர்ந்து போனவர்கள் தங்களின் இலக்கிய அடையாளத்தை உருவாக்கிக் கொள்ள விரும்பிக் கதை, கவிதை எழுதி நூல்களாகக் கொண்டுவர நினைத்தபோது தான் தமிழ்நாட்டுப் பதிப்பகங்களின் தகிடுதித்தங்களும் அதிகமாகி யிருக்கின்றன. புலம்பெயர்ந்து போனவர்களுக்குள் செயல்படும் ஒருவிதக்குற்றவுணர்வு தங்களின் ஈடுபாட்டை எழுத்தாக மாற்றித் தார்மீகக் குரலாகப் போரோடு இணைத்துக் கொள்ளத் தூண்டியது. போர் நிலத்திலிருந்து விலகியிருக்கும் மனநிலையில் பழைய நினைவுகளை எழுதுவதும் நிலத்திலிருந்து வரும் அவலத்தில் எப்படிப்பங்கெடுப்பது என்று நினைப்பதும் எழுதத்தூ ண்டத்தான் செய்யும். அந்நினைவுகளை எழுதுவதும், அதனைப்பதிவு செய்து புலம்பெயர்ந்த தமிழர்களுக்கிடையில் வெளியிட்டுத் தங்களை நிறுவிக்கொள்ள நினைப்பதும் ஒருவிதக் கடமையாகவும், சில நேரங்களில் தன்னார்வச் செயல்பாடுகளாகவும் வெளிப்படுவதைப் பார்க்கிறோம். அதற்காக எல்லா எழுத்துகளையும் தன்னார்வ எழுத்து என்றும், தங்களை நிறுவும் நோக்கம் கொண்ட எழுத்து என்றும் சொல்வதாக நினைக்க வேண்டியதில்லை. தொடர்ச்சியாகத் தங்களின் அரசியல் நிலைபாட்டை = போர்க் காலத்தின் மீது தங்கள் பார்வையைப் பதிவுசெய்யும் பொறுப்புணர்வோடும் எழுதியிருக் கிறார்கள். அதிலிருந்து விலகிய எழுத்துகளும் வந்தன . எல்லாவற்றையும் அச்சிட வேண்டும் என ஆசைப்பட்டுத் தமிழ்நாட்டுப் பதிப்பகங்களை நாடினார்கள். அதற்காகப் பணம் செலவாவது பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்த நிலையில், போர்க்காலத்திலிருந்த தார்மீக ஆதரவு என்ற நிலைபாட்டிலிருந்து விலகி, வணிக மனநிலையில் சிந்திக்கத் தொடங்கியிருந்தன பதிப்புத்துறை. போர்க்காலத்தை எழுதுவதும் அச்சிட்டு வெளியிடுவதும் தங்களின் தொலைந்துபோன வாழ்வினைத் தேடும் தேடலின் பகுதியாக நினைத்தார்கள். ஆனால் அந்த மனநிலையைத் தங்களின் வியாபார நோக்கத்திற்குப் பயன்படுத்த முடியும் என்று தமிழ்நாட்டுப் பதிப்பகங்கள் நினைத்தன. அங்கே சுரண்டலும் ஏமாற்றும் அரங்கேறியதாகத் தோன்றுகிறது. எனது இலங்கைப் பயணங்களின் போதும் புலம்பெயர் நண்பர்களின் தொலைபேசி அழைப்புகளின் போதும் எந்தெந்தப் பதிப்பகங்களால் ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்ற கதைகளைக் கேட்டிருக்கிறேன். இப்போதும் கூடச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**ஒரு கவிதைப் புத்தகத்தைத் தயாரிக்க ஆகும் செலவைப்போல மூன்று மடங்கு தொகையைத் தந்த ஒருவருக்கு உரிய நேரத்தில் கவிதைப் புத்தகத்தை அச்சிட்டு விற்பனைக்குத் தராத பதிப்பகத்தை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். வெளியீட்டு விழாவில் பேச வருபவர்களுக்குச் செலவழித்த கதைகளும் இருக்கின்றன. இதில் தமிழ்நாட்டுக்காரர்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் சென்னையிலேயே தங்கியிருக்கும் இலங்கை எழுத்தாளர்கள் சிலரும் முகவர்கள் போல இருந்து பணம் பெற்று ஏமாற்றியும் இருக்கிறார்கள்**

ஒரு கவிதைப் புத்தகத்தைத் தயாரிக்க ஆகும் செலவைப்போல மூன்று மடங்கு தொகையைத் தந்த ஒருவருக்கு உரிய நேரத்தில் கவிதைப் புத்தகத்தை அச்சிட்டு விற்பனைக்குத் தராத பதிப்பகத்தை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். வெளியீட்டு விழாவில் பேச வருபவர்களுக்குச் செலவழித்த கதைகளும் இருக்கின்றன. இதில் தமிழ்நாட்டுக்காரர்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் =சென்னையிலேயே தங்கியிருக்கும் இலங்கை எழுத்தாளர்கள் சிலரும் முகவர்கள் போல இருந்து பணம் பெற்று ஏமாற்றியும் இருக்கிறார்கள். பணம் பெற்றுக் கொண்டபின் கால தாமதத்திற்குக் காரணம் கூடச் சொல்லாமல் இருந்தவர்களை எப்படிச் சகிப்பது என்று கேட்டவருக்கு என்னால் ஒரு பதிலும் சொல்லமுடியவில்லை.

புலம்பெயர்ந்த எழுத்தாளர்களில் பலரும் முழுப்பணத்தையும் முன்பணமாகத் தந்தே தங்கள் நூ ல்களை அச்சிட்டுக் கொள்கிறார்கள் . நட்சத்திர மதிப்புடைய ஒன்றிரண்டு கவிகள், நாவலாசிரியர்களிடம் பணம் வாங்காமல் ஒன்றிரண்டு பதிப்பகங்கள் நூல்கள் வெளியிட்டிருக்கலாம். ஆனால் பெரும்பாலான பதிப்பகங்கள், புலம்பெயர் எழுத்தாளர்களிடம் பணம் பெற்றுக்கொண்டே நூ ல்களைப் பதிப்பித்துள்ளன. அவர்களுக்குள் உரிமத்தொகை கொடுப்பது பற்றியெல்லாம் ஒப்பந்தங்கள் இல்லை. பொதுவாகத் தமிழ்நாட்டுப்பதிப்பகங்கள் ஒப்பந்தம் போட்டுப் பதிப்புத்தொழில் செய்யும் நடைமுறையை ஏனோதானோ என்று தான் செய்கின்றன.

‘ஈழப் போராட்டத்தில் ஈடுபாடெல்லாம் கிடையாது எங்களின் நோக்கம் வியாபாரம் மட்டுமே‘ என்று செயல்படும் பதிப்பகங்கள் மட்டும்தான் இப்படிச் செயல்படுகின்றன என்றில்லை. சமூகப்பொறுப்பும் ஈழப்போராட்ட ஆதரவும் தார்மீகக் கோபமும் கொண்டவர்களாகக் காட்டிக்கொள்ளும் பதிப்பக ஆட்களும் கூட ஈழத்தமிழர்களிடம் சுரண்டுவதைப் பற்றிக் கூச்சப்படுவதாகத் தெரியவில்லை. புலம்பெயர் நாடுகளில் கைநிறையச் சம்பாதிக்கிறார்கள் தங்களின் எழுத்தடையாளத்தைக் காட்டிக்கொள்ள நினைக்கிறார்கள். அதற்காகப் பணம் செலவழிக்கத் தானே வேண்டும் என்ற மனநிலைப் பதிப்புத்துறையில் இருக்கிறது.

தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கு எழுத்துக்கு ராயல்டி கிடைக்கவில்லை என்ற ஒரு வருத்தம்தான். புலம்பெயர் எழுத்தாளர்கள், பணம் கொடுத்துப் புத்தகம்போட்டும் அதற்குரிய மதிப்பும் மரியாதையும் இல்லையே என்ற வருத்தத்தையும் சேர்த்தே வெளிப்படுத்துகிறார்கள். அ




# இக்காலப் போர்

மாவிலாற்றின் நீரை 2006ல் ஜூலையில் விடுதலைப்புலிகள் விவசாயிகளுக்கு கிடைக்காது அணையை மறித்தபோது, இலங்கை அரசு இலங்கையின் கிழக்கே போர் தொடங்கியது. அந்தப் போர் தமிழர்களுக்குப் பேரழிவாக மே 2009யில் முள்ளிவாய்க்காலில் முடிந்தது. விடுதலைப்புலிகள் பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய வரலாறு பலர் மறந்துவிட்டார்கள். தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக முள்ளிவாய்க்காலை பேசியபடி விடுதலைப்புலிகள் மேய்ந்த அதே மேச்சல்த் தரையில் மேய்ந்தபடி ஜெனிவாவுக்கு எண்ணற்ற தரம் துலாக்காவடி எடுத்துள்ளார்கள். ஆனால் இது அதைபற்றிய எனது கட்டுரையல்ல.

ஈழம் நாலாவது போர் தோல்வியில் முடிவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஏற்கனவே கானல் தேசத்தில் லியோ லியோரோல்ஸ்ரோய் போரும் சமாதானத்தில் உள்ளதை படிமமாக குறிப்பிட்டுள்ளேன்°

'அப்பிள் நிலத்தில் விழுவது, அதனது காம்பு சூரிய வெப்பத்தில் காய்ந்துவிடுவதாலா? காற்று பலமாக வீசியதாலா? புவியீர்ப்பினாலா? அல்லது அப்பிள் மரத்தின் கீழே நின்ற சிறுவன் அதை உண்பதற்கு விரும்பியதாலா?'

இப்படிப் பல காரணங்கள் பழமொன்று விழுவதற்கு இருக்கும்போது, ஏனைய விடயங்களுக்கு எத்தனை காரணங்கள் இருக்கலாம் என ருஷ்ஷிய எழுத்தாளர் லியோரோல்ஸ்ரோய் கேள்வி எழுப்பியிருக்கிறார். ஆனால் நம்மவர் மத்தியில் 50 நாடுகள் ஒன்றிணைந்து தாக்கியதே முக்கிய காரணமாக பேசப்படுகிறது.

மெல்பேனின் நடந்த உதயம் பத்திரிகையின் நிருவாக ஆசிரியராக நான் அக்காலத்தில் இருந்தபோது சம்பூரில் விடுதலைப்புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் நடந்த போரில் எடுத்த 40 மேற்பட்ட படங்கள் எனது மின்னஞ்சலுக்கு வந்தது. அதில் மணலால் அமைந்த பதுங்கு குழிகளின் உள்ளேயும் வெளியேயும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் உடல்கள் கருகி இறந்தபடி கிடந்தது என்னால் பார்க்கக் கூடியதாக இருந்தது.

**நோயல் நடேசன்**

அதைப்பற்றி அக்காலத்தில் ஆய்வு செய்தபோது, அமெரிக்காவினால் தலைபான் தீவிரவாதிகளுக்கு எதிராகப் பாவிக்கும்படி பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்ட மல்ரிபரல் (MBRL) என்ற பீரங்கிகளால் அந்த சம்பூர் தாக்குதல் நடந்தது. அதற்கான குண்டுகள் கிழமைதோறும் கொழும்புக்கு கப்பலில் வந்தன. மல்ரிபரல் பீரங்கிகள் குண்டுகளை ஒரே நேரத்தில் சுடுவதுடன், அவைகள் வீழ்ந்த இடத்தில் சுற்று வட்டாரத்தையே எரிக்கும் தன்மையுடையவை. அவைகள் ஏரியா வேபன் (Area Weapon) வகையைச் சேர்ந்தவை. போர்வீரனது தகமைகள், திறமை , பயிற்சி என்ற இங்கு முக்கியமில்லை. போரில் பாவிக்கப்படும் சுடுகலன்களே போரின் விளைவுகளைத் தீர்மானிக்கிறது.

அப்பொழுது என்னால் ஒரு முடிவுக்கு வரமுடிந்தது. இந்தப் போர், விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களுக்குத் தோல்வியில் முடியும். அதைவிடப் போரின் முடிவில் சிறுபான்மை சமூகமும் ஒரு பொருட்டற்று போகும் என்பதால்,

பல தடவைகள் உதயத்தில் போருக்கு எதிராகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் உதயத்திலும், இலங்கைப் பத்திரிகைகளிலும் எழுதினேன்.

நான் மட்டுமல்ல டிபிஎஸ் ஜெயராஜ், ஆனந்தசங்கரி போன்றவர்களும் எழுதினார்கள். தமிழ்நாட்டிலிருந்து கனிமொழி அமைச்சர் சிதம்பரம் போன்றவரகள் முயற்சித்தார்கள். நிட்சயமாக நோர்வே முயற்சித்திருக்கும்- ஆனால் கெடுகுடி சொல் கேட்காது. இப்படி முயற்சிக்காதவர்களே தற்போது தம்பி எப்ப முடியும் திண்ணை எப்போது காலியாகும் என ஆவலுடன் காத்திருந்தவர்கள்.

அதே நேரத்தில் விடுதலைப்புலிகள் தங்களது மூளையைப் பாவித்து 100- 50 பேர் கொண்ட சிறிய யூனிட்டுகளாக பிரிந்து காட்டில் வேகமாக இயங்கியபடி போர் நிறுத்தத்தையோ சமாதானம் பேசவேண்டும் எனச் சாதாரண மக்களது நன்மை கருதி உள்ளூரக் கனவு கண்டேன்.

ஆனால் இறுதியில் நான் துரோகியாகப் பல முட்டாள்களால் பிரகடனப்படுத்தப்பட்டேன். அதற்கு உதவியாக இன்பத்தமிழ்வானொலி, SBS எனப்படும் வானொலிகளும் உதவினார்கள்.

அக்காலத்தில் தினமும் பல மணிநேரம் போர் நிகழ்வுகளில் பல சானல்களில் வரும் செய்திகளைப் பார்ப்பேன். அக்காலத்தில் சொந்த தொழிலானபடியால் கம்பியூட்டரில் ஐந்து மணிநேரம் செலவழிக்க முடிந்தது. அத்துடன் பத்திரிகைக்குச் செய்தி சேகரிப்பதுமாக இருந்ததால் அவை மனைவியால் கண்டு கொள்ள முடியவில்லை.



கடந்த ஐந்து வருடங்களாக இளைப்பாறி இருப்பதால் உக்கிரேன் ருஷ்ஷியப் போரில் பிபிசி அல்ஜிசீரா என்பன அக்கால தமிழ்நெட் அல்லது இலங்கை அரசின் மிலிட்றறி தகவல் பகுதி போலாகி விட்டது. ருஷ்ஷிய சமுக வலைத்தளமாகிய ரெலிகிராம் மற்றும் ருஷ்ஷிய தகவல் நிலைகளை என்பவற்றுடன் யுரியுப் என்பனவற்றில் சேர்த்துப் பார்க்கும்போது போர் மேகத்தில் எழும் புழுதிகளை ஊடுருவிப் பார்க்கமுடியும். இதற்குப் பல மணி நேரம் செலவாகும்.

இதைப் பார்த்து, உக்ரேய்ன்-ருஷ்ஷியா போரை அறிந்து உங்களுக்கு என்ன பிரயோசனம் என மனைவியும், எப்பொழுதும் உக்ரேய்ன் போரா என எனது பேரனும் கேட்கிறார்கள். மனைவி மருத்துவ சனல்களையும், பேரன் சிறுவர் சனல்களையும் பார்க்கும்போது நான் பார்த்தவை யுரியுப்பில் தெரியும்.

இலங்கைப் போர் போல் இதுவும் ஒரு முட்டாள் தனமான நடவடிக்கையால் உருவாகியது.

2014ல் ருஷ்ஷியாவிற்கும் உக்ரேய்னுக்கும் இடையே பிரான்ஸ் ஜேர்மனி மத்தியஸ்தத்தில் உருவான மின்ஸ் ஒப்பந்தம் (Minsk Accord) நேட்டோ நாடுகளால் திட்டமிட்டு முறியடிக்கப்பட்டதால் போர் உருவாகியது. எனது நோக்கம் இங்கும் போரின் காரணத்தை ஆராய்வது நோக்கமில்லை.

உக்ரேனில் தற்பொழுது நடக்கும் போரில் போர் வீரர்களுக்கு எந்த மதிப்புமில்லை. போர்வீரர்கள் காட்டுத்தீயில் அகப்பட்ட குருவிக் குஞ்சுகளாக கருதி இறக்கிறார்கள் என்பது கவலைக்குரியது.

ட்ரோன் எனப்படும் சிறிய ஆளற்ற விமானத்தால் பார்த்தபடி கீழே உள்ள பீரங்கியோ அல்லது டாங்கி அல்லது ஏவுகணை கொண்டு பல கிலோ மீட்டர்கள் தூரத்திலிருந்து குறிபார்த்து ஒரு நகரத்தையோ அல்லது ஒரு கூட்டம் படைவீரர்களையோ தாக்கமுடியும். தற்போதைய போரில் பெரும்பாலான இறப்புகள் இப்படியாகக் குண்டுகளாலோ, படைகள் நகரும்போது பீரங்கிகளோ, அல்லது நெருப்பு வீசும் பீரங்கியால் (Thermobaric bombs) பொசுக்கப்படுகிறார்கள். காயப்பட்டு தப்புபவர்கள் குறைவு

**உக்ரேனில் தற்பொழுது நடக்கும் போரில் போர் வீரர்களுக்கு எந்த மதிப்புமில்லை. போர்வீரர்கள் காட்டுத்தீயில் அகப்பட்ட குருவிக் குஞ்சுகளாக கருதி இறக்கிறார்கள் என்பது கவலைக்குரியது.**

**ட்ரோன் எனப்படும் சிறிய ஆளற்ற விமானத்தால் பார்த்தபடி கீழே உள்ள பீரங்கியோ அல்லது டாங்கி அல்லது ஏவுகணை கொண்டு பல கிலோ மீட்டர்கள் தூரத்திலிருந்து குறிபார்த்து ஒரு நகரத்தையோ அல்லது ஒரு கூட்டம் படைவீரர்களையோ தாக்கமுடியும்.**

அப்படித் தப்பினாலும் அங்கங்கள் இழந்தவர்களாகவே உயிர் தப்புவார்கள்.

ஒரு காலத்தில் குதிரைகள், தேர்கள் மீது ஏறி வாள் வில் பாவிப்பதும், பின்பு துப்பாக்கியால் குறிபார்த்து சுடுவதும் என்ற வகையிலிருந்து போர்முறை மாறிவிட்டது.. அக்காலத்தில் நாங்கள் படித்த போர்களில் மனிதர்கள் பங்கு முக்கியமாக இருந்தது. இவர்கள் வீரர்கள் என அடையாளப்படுத்துவார்கள். தற்பொழுது அது குறைந்துவிட்டது. இப்பொழுது டாங்கிகள், பீரங்கிகள் ஏன் விமானங்களது தேவை கூட குறைந்துவிட்டது. ஆளில்லாத ட்ரோன்களது முக்கியமே உள்ளது. ஆகாயத்தில் மிதந்தபடி காத்திருந்து தாக்கும் ட்ரோன்கள் (loitering drones) முக்கியமானதாக கருதப்படுகிறது.

சமீபத்தில் ஒரு உக்ரேனியா கொமாண்டர் கூற்றுப்படி ‘ ஒவ்வொரு குழுவிலும் 15 மேற்பட்ட ராணுவ வீரர்கள் மட்டுமே தாக்குதலுக்குச் செல்கிறார்கள் ‘ என்கிறார். காரணம் அதற்கு மேலான தொகையாகப் போர்வீரர்கள் இருந்தால் ருஷ்ஷிய ட்ரோன்கள் கண்டு பிடித்துவிடும் என்கிறார்

இதுவரை போர் முறைபற்றி எழுதினேன். ஆனால் போர்முறை மட்டுமல்ல போர் நோக்கத்திலும் வேறுபாடுகள் உள்ளது. இலங்கைப் போரில் தரைப்பிரதேசத்தை எப்படியும் கைப்பற்றவேண்டும் என்ற தேவை இருந்ததால்

**இப்பொழுது டாங்கிகள், பீரங்கிகள் ஏன் விமானங்களது தேவை கூட குறைந்துவிட்டது. ஆளில்லாத ட்ரோன்களது முக்கியமே உள்ளது. ஆகாயத்தில் மிதந்தபடி காத்திருந்து தாக்கும் ட்ரோன்கள் முக்கியமானதாக கருதப்படுகிறது.**

இலங்கை அரசு மூன்று வருடங்கள் போரை நடத்தியது. தற்போதைய ருஷ்ஷியாவை பொறுத்தவரை அவர்களுக்கு அதிக நிலம் தேவையில்லை. நேட்டோவால் பயிற்றுவிக்கப்பட்டு, ஆயுதம் தரித்த உக்ரேனிய ராணுவத்தை அழிப்பதுடன் இனிமேல் எதிரியாகவோ, சவாலாகவோ அல்லது நேட்டோவின் எடுபிடியாக எதிர்காலத்தில் இயங்காது இருக்கவேண்டும் என்பதே ருஷ்ஷியாவின் குறிக்கோள் என்பதால் போரில் போர்வீரர்களை மட்டுமல்ல உக்ரேனேனின் முக்கிய எண்ணைச் சுத்திகரிப்பு, போர்த்தளவாடங்களது களஞ்சியம், மின்சார உற்பத்தி நிலையங்களை அழிப்பது மட்டுமே தேவைப்படுகிறது.

உக்ரெய்ன் அழிந்து அங்கு மக்கள் இறந்தாலும் பரவாயில்லை. ருஷ்ஷியாவின் பொருளாதாரம், படைப்பலம் என்பவற்றில் ஏற்படும் பாதிப்பு, அழிவு எங்களுக்குத் தேவையானது என்ற நோக்கத்தில் நேட்டோ மற்றும் அமெரிக்கா நாடுகள் செயல்ப்படுகின்றன. இந்த போரில் இதுவரை நாம் அறிந்து கொள்ளாத போரின் நோக்கமாக உள்ளது.

இதைவிட இன்னுமொரு விடயத்தை பார்த்தேன்.

நமது விடுதலைப்புலிகளுக்கும் இங்கும் ஒரு ஒற்றுமை உள்ளது விடுதலைப்புலிகளுக்கு வங்கிகளில் கடன் வாங்கி பணம் கொடுத்த தமிழர்கள் பல நாடுகளிலிருந்தாலும் சுவிஸ்லாண்டில் மட்டுமே அதிகமானவர்கள் தங்கள் கடனட்டையை வைத்து பணம் கொடுத்தவர்கள். அதற்குக் காரணம் சுவிஸ்லாந்திலுள்ள விடுதலைப்புலி பொறுப்பாளர்களது திறமையே. மற்றைய இடங்களிலிருந்தவர்கள் அந்தளவு திறமைசாலிகள் அல்ல.

கனடா பிரான்சில் கொஞ்சம் சரத்தை(லுங்கி) தூக்கி கட்டும் சண்டியர்கள் மட்டுமே. அஸ்திரேலியாவில் பிற்காலத்தில் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு பொறுப்பாக இருந்த எனது பாடசாலை நண்பர் சண்முகம் சபேசன் தானாக தனது வீட்டை அடைவு வைத்து செலவு செய்தார் . ஆனால் அவரை சுற்றி இருந்தவர்கள் பலர் பணக்காரராகினார்கள்.

அதே போல் இங்கும் 6300 உக்ரேனிய அதிகாரிகளும் ஐந்து லட்சத்திற்கு அளவான உன்ரேனிய வீரர்களும் இறந்தபோதும் உக்ரேனியர் பலர் மில்லியனர்களாகி விட்டார்கள்- இதையே அமரிக்காவும் சொல்கிறது.

அமெரிக்காவும் கடனில் மூழ்கிய நாடு (33 trillion). சீனா, அமெரிக்கா, சவுதி அரேபியா போன்ற நாடுகளிலிருந்து கடன் பத்திரங்கள் (Bond) மூலம் வாங்கி உக்ரேனிய போருக்கு உதவுகிறார்கள் என்பதும் நாம் கவனிக்க வேண்டியது.

இதற்கப்பால் கொஞ்சம் போரை அவதானித்தால் பல ஒற்றுமைகளை நீங்கள் காணலாம். இலங்கை அரசால் 3 வருடங்கள் போரை நடத்தமுடியும் எனும் போது ருஷ்ஷியா தற்போது ஒன்றரை வருடங்கள் மட்டுமே செல்கிறது முடிவைக்காண இன்னமும் சில வருடங்கள் நாம் காத்திருக்கவேண்டும்.



# வாசிப்பும் யோசிப்பும்



## வ.ந.கிரிதரன்

### பாரதியாரின் நினைவாக: 'திக்குகள் எட்டும் சிதறி' மழைக்கவிதை!

என்னை மிகவும் பாதித்த இலக்கிய ஆளுமைகளின் முதலிடத்தில் இருப்பவர் மகாகவி பாரதியார். குறுகிய அவரது வாழ்வு மானுட உலகுக்கு ஒளி தந்ததொரு மின்னலாக அமைந்து விட்டது. என்னை அவரது சிந்தனைத் தெளிவு மிகவும் கவர்ந்தது. அவரிடம் காணப்படும் முரண்பாடுகள் கூட அவரது தேடலின் விளைவுகளே.

தேசிய விடுதலை, வர்ண விடுதலை, வர்க்க விடுதலை, பெண் விடுதலை. மானுட விடுதலை பற்றி அவருக்கு மிகுந்த தெளிவு இருந்தது. அதனையே அவரது எழுத்துகள், வாழ்க்கை ஆகியன புலப்படுத்துகின்றன. வர்ண விடுதலைக்காக ஏனைய விடுதலைகளை அவர் புறக்கணித்து விடவில்லை. வர்ண விடுதலையை, பெண் விடுதலையை வற்புறுத்திய அவர் கூடவே வர்க்க விடுதலையையும் வலியுறுத்தினார். அத்துடன் நிற்கவில்லை மானுட விடுதலையையும் முன் வைத்தார். மானுட விடுதலையை வேண்டிய அவர் அதற்காக ஏனைய விடுதலைகளைப் புறக்கணித்துப் போரிடாது ஒய்ந்திருக்கவில்லை. அனைத்து விடுதலைகளுக்காகவும் களத்தில் இறங்கிப் போராடிய சமூக, அரசியற் போராளி அவர். அவரது அந்த ஆளுமை என்னை மிகவும் கவர்ந்தது.

இவ்விதம் மானுடரின் பல்வகை விடுதலைக்காகவும் குரலெழுப்பின அவரது எழுத்துகள். அத்துடன் நின்று விடவில்லை. மானுடரின் இருப்பு பற்றிய கேள்விகளையும் எழுப்பின. நல்லதோர் உதாரணம் அவரது 'உலகத்தை நோக்கி வினவுதல்' என்னும் 'நிற்பதுவே நடப்பதுவே' என்று ஆரம்பமாகும் புகழ்பெற்ற கவிதை.

தமிழ் இலக்கியத்துக்கான அவரது பங்களிப்பும் மகத்தானது. கவிதை, சிறுகதை, வசனகவிதை, காப்பியம், மொழிபெயர்ப்பு என அவரது பன்முகப்பட்ட பங்களிப்பு முக்கியமானது.

அவரது எழுத்துகளின் வீரியமும் முக்கியமானது. வாசிப்போரைத் தட்டி எழுப்புவன அவை. வாசிப்போருக்கு இன்பம் தருபவை அவை. வாசிப்போரைச் சிந்திக்க வைப்பவை அவை. வாசிப்போருக்கு வழிகாட்டிகளாக இருப்பவை அவை.

எனக்கு மிகவும் பிடித்த இயற்கை நிகழ்வு கொட்டும் இடித்தாளத்துடன் மின்னிப் பெய்யும் மழை. அதனை இரசிப்பதென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். மழை பற்றிய இரு கவிதைகள் எனக்கு மிகவும் பிடித்தவை. ஒன்று கவீந்திரனின் (அ.ந.கந்தசாமி) 'சிந்தனையும் மின்னொளியும்', அடுத்தது மகாகவி பாரதியாரின் 'திக்குகள் எட்டும் சிதறி' .



அ.ந.க.வின் கவிதை இயற்கை நிகழ்வு கவிஞனுக்குக் கற்பிக்கும் பாடத்தைக் கவித்துவத்துடன் வெளிப்படுத்தினால், பாரதியாரின் 'திக்குகள் எட்டும் சிதறி'யோ இடியுடன் மின்னிப் பெய்யும் மழையைச் சொற்சித்திரமாக்கி உணர்வினை வசியப்படுத்தும்.

பாரதியாரின் 'மழை' கவிதை முழுமையாகக் கீழே:

திக்குகள் எட்டும் சிதறி-தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
தீம்தரிகிட

பக்க மலைகள் உடைந்து-வெள்ளம்
பாயுது பாயுது பாயுது-தாம்தரிகிட
தக்கத் ததிங்கிடத்தோம்-அண்டம்
சாயுது சாயுது சாயுது-பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று-தக்கத்

தாம்தரிகிடத்தாம் தரிகிடத்தாம்
தரிகிடத்தாம் தரிகிட

வெட்டி யடிக்குது மின்னல் கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை
யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம்-கூ
கூவென்று விண்ணைக் குடையுது
காற்று
சட்டச்சடசட சட்டச்சட டட்டா-
என்று
தாளங் கொட்டிக் கனைக்குது

வானம்
எட்டுத் திசையும் இடிய, மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா

அண்டம் குலுங்குது தம்பி-தலை
ஆயிரந் தூக்கிய சேடனும்
பேய்போல்
மிண்டிக் குதித்திடு கின்றான்-திசை
வெற்புக் குதிக்குது வானத்துத்
தேவர்
செண்டு புடைத்திடு கின்றார்-என்ன
தெய்விகக் காட்சியைக் கண்முன்பு
கண்டோம்
கண்டோம் கண்டோம் கண்டோம்
இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு
கண்டோம்

மகாகவியை நினைவு கூரும் முகமாக அவரது 'மழை'க் கவிதையின் காணொளிகளைப் பார்த்து, கேட்டு மகிழ்வோம்.

பாரதியாரின் 'திக்குகள் எட்டும் சிதறி'க் காணொளிகள்:

1. மழை www.youtube.com/watch?v=Qce-Gun6NoU

2. திக்குகள் எட்டும் சிதறி www.youtube.com/watch?v=_zidiBlBy2A

3www.youtube.com/watch?v=6VLwFlKbesY

## எழுத்தாளர் நா.சோமகாந்தனின் (ஈழத்துச் சோமு) அறியப்படாத நாவல் 'களனி நதி தீரத்திலே'

எழுத்தாளர் சோமகாந்தன் வெளியிட்ட நூல்களிலோ அல்லது அவர் பற்றிய கட்டுரைகளிலோ அவரது 'களனி நதி தீரத்திலே' என்னும் இந்த நாவல் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்ததாக எனக்கு நினைவிலில்லை. ஒரு வேளை நான் தவற விட்டிருக்கலாம். நான் அறிந்த வரையில் இந்நாவல் நிச்சயம் இதுவரை நூலாக வெளியாக வில்லையென்றே கருதுகின்றேன். ஆனால் அவரது நாவல்களில் இதுவொரு முக்கியமான நாவலாகவே எனக்குப் படுகிறது.

எழுத்தாளர் வரதரின் 'புதினம்'



பத்திரிகையில் 20.8.1961 தொடக்கம் 29.101.961 வரை மொத்தம் 11 அத்தியாயங்கள் வெளியாகியுள்ளன. 1- 4 வரையிலான அத்தியாயங்களுக்குத் தலைப்புகள் இடப்பட்டிருக்கவில்லை.

கதைச்சுருக்கம்: கதை சொல்லியும் அவன் நண்பன் நடராஜனும் பால்ய காலத்திலிருந்து நண்பர்கள். இருவரும் எஸ்.எஸ்.சி சித்தியடைந்து கொழும்பில் வேலை கிடைத்துச் செல்கின்றார்கள். ஒன்றாகத் தங்கியிருக்கின்றார்கள். இருவரும் களனிகங்கை நதிக்கரையில் றோசலின் என்னும் அழகியொருத்தியைச் சந்திக்கின்றார்கள். அதன் பின் ஒரு நாள் வேலைக்குச் செல்லும் நண்பர்கள் வழக்கமாகச் செல்லும் ட்ரொலி வருவதற்கு நேரமெடுக்கவே 'ராக்சி' பிடித்துச் செல்லத் தீர்மானிக்கிறார்கள். றோசலின் அன்று புதிய வேலை கிடைத்துச் செல்வதற்காக 'ட்ரொலி'யை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள். அவளுக்கும் நேரமாகிவிடவே இவர்களிடம்


காங்கு
புதினம் 20-8-61

'களனி நதியின் இயற்கை வனப்பு மிக்க சூழலிலே பிறந்து சிட்டுக் குருவிபோலச் சிறகடித்துத் திரிந்த றோசலின், வாழ்வின் திருப்பப் பாதைகளிலெல்லாம் நடைபோட்டுக் கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்தது போல் பாதை முழுவதும் பூம்பாதையாக அமைந்திருக்கவில்லை ..' என்கிறார் இலங்கையின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான 'ஈழத்துச்சோமு'. றோசலினை எங்கெல்லாம் அவர் இழுத்துச் செல்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் கதையைத் தொடர்ந்து படியுங்கள் —

# களனி நதி தீரத்திலே...

"ஈழத்துச் சோமு" எழுதும்
சிறிய தொடர்கதை.

ஒரு பேரழகி ஆற்றில் குளித்துவிட்டு வந்து கொண்டிருந்தாள்

தனக்கும் 'ராக்சி'யில் இடம் தர முடியுமா என்று கேட்கின்றாள். இவர்களும் சம்மதித்து அவளுக்கு உதவுகின்றார்கள். அன்று முதல் மூவரும் நண்பர்களாகின்றார்கள்.

அவர்களுக்கிடையில் நட்பு வளர்கிறது. அவள் இருவருடனும் சகஜமாகப் பழகி வருகின்றாள். ஆனால் இருவரும் ஒருவருக்கொருவர் தெரியாமல் அவள் பேச்சு, செயல்களை வைத்து அவள் மீது காதல் கொள்கின்றார்கள். ஒரு சமயம் கதை சொல்லி உடல் நலம் கெட்டு ஊருக்குச் சென்று திரும்புகையில் நண்பன் நடராஜன் றோசி மேல் காதல் கொண்டிருப்பதை அறிந்து அவன் மேல் ஆத்திரமடைகின்றான். றோசியும் தன்னை ஏமாற்றி விட்டதாகக் கருதி அவள் மீதும் கோபமடைகின்றான்.

றோசி காரணமாக நண்பர்களுக்கிடையில் மோதல் முற்றி கதை சொல்லி நண்பன் நடராஜனைத் தாக்கவே, நடராஜனும் ஆத்திரமடைந்து அவனைவிட்டு விலகி, றோசியின் வீட்டுக்கே சென்று விடுகின்றான். உண்மையில் அதுவரை றோசி அவர்களுடன் சாதாரணமாகவே பழகி வந்திருக்கின்றாள். நடராஜன் அவளிருப்பிடத்துக் சென்ற பின்பே அவனது தன் மீதான தீவிர காதலை உணர்ந்து அவனைக் காதலிக்கத் தொடங்குகின்றாள்.

பின்னர் கதை சொல்லி ஊரிலிருக்கும் அவனுக்குத் தெரிந்த பெண்ணான கமலா என்பவளை மண முடிக்கின்றான். இதற்கிடையில் நாடு தழுவி நடைபெற்ற தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டு பேசுகையில் முற்போக்குவாதியான கதை சொல்லிக் காடையர்களால் தாக்கப்படும் சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது. ஆனால் இறுதியில் அத்தொழிலாளர் வேலை நிறுத்தமும் எவ்விதப் பயனுமற்று முடிவுக்கு வந்து, தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்புவதுடன் முடிவுக்கு வருகின்றது.

நாவலின் இறுதி துயர் மிக்கது. நாட்டின் அரசியல் சூழலால் வெடிக்கும் வன்முறையில்

நடராஜன் கொல்லப்பட்டு ஆற்றில் வீசப்பட்டு விடுகின்றான். றோசியும் பலரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, தாதியாகி கர்த்தரிடம் சரணடைகின்றாள். கதை சொல்லியின் குழந்தைப்பேறுக்கும் அவளே தாதியாக உதவியும் செய்கின்றாள்.

அவளது வீடு காடையர்களால் எரிக்கப்படுகையில் அதற்குள் சிக்கி அவளது தந்தையும் எரிந்து போகின்றார். நாட்டில் நடந்த இனக்கலவரம்தானது. ஆனால் கதாசிரியர் அதனை மறைமுகமாகவே எடுத்துரைப்பார்.

'வடக்கில் மின்னல், தெற்கில் முழக்கம். எந்நேரமும் மழை கொட்டத்தயாராகக் கருமேகங்கள் நாடு பூராவும் கவிந்திருந்தன.' எத்தனையோ லட்சம் ஜனங்களின் அமைதிக்கு உலை வைப்பது போல, இலங்கை வானில் கவிந்திருந்த கரு மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஆக்ரோசமாக முட்டி அகங்காரமாக மோதி பலத்த மழையாகக் கொட்டத் துவங்கிவிட்டன. பயங்கரப் பிரவாகம். எத்தனை உயிர்கள், உடமைகள் அதில் அடித்துச் செல்லப்பட்டனவோ?' போன்ற சொற்றொடர்களால் நாட்டுச் சூழல் விபரிக்கப்படுகின்றது.

நாவலில் கதை சொல்லியின் பெயர் எங்கும் கூறப்படவில்லை. ஆனால் முற்போக்குச் சிந்தனை மிக்க எழுத்தாளன் என்னும் அவனது ஆளுமை நண்பர்களுக்கிடையிலான உரையாடல், சம்பவங்கள் மூலம் விபரிக்கப்படுகின்றது. நாவலின் நடை வாசகர்களைக்கவரும் எளிமையான , ஆனால் சுவையான நடை.

இன்னுமொரு விடயம் நாவலில் வரும் றோசி பேர்கர் இனப்பெண்ணா அல்லது சிங்களக் கிறிஸ்தவப் பெண்ணா என்பது தெளிவாக்கப்படவில்லை. ஆனால் றோசியும் நடராஜனும் இரு வேறு இனத்தவர்கள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவே எழுத்தாளர் சோமகாந்தனின் முதல் நாவல். இந்நாவல் அவரது சொந்த அனுபவத்தில் புனையப்பட்டது என்று 'புதினம்' பத்திரிகைக்கான நேர்காணலில் அவரே கூறியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாவல் தொடராக வெளியானபோது பத்திரிகை ஆசிரியரும், வெளியீட்டாளருமான வரதர் இன்னுமொரு விளம்பர உத்தியையும் பாவித்திருந்தார். டேவிட் லீனின் (David Lean) இயக்கத்தில் 1957இல் வெளியாகி 7 ஆஸ்கார் விருதுகளைப் பெற்ற சிறந்த படம் The Bridge on the River Kwai. இதன் காட்சிகள் இலங்கையிலும் எடுக்கப்பட்டிருந்தன. இதில் கொட்டாஞ்சேனையில் நிறுவனமொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த அழகான தோற்றமுள்ள விண்டா என்னும் பெண்ணும் நடித்திருந்தார். அவரை நாவலின் றோசி பாத்திரமாக்கி புகைப் படப்பிடிப்பாளர் சிவம் என்பவரைக்கொண்டு புகைப்படங்கள் எடுத்து வெளியிட்டிருந்தார்.

நாவல்: 'களனி நதி தீரத்திலே' - நா. சோமகாந்தன் (ஈழத்துச் சோமு)

அத்தியாயம் 1 - (20.8.1961)
அத்தியாயம் 2
அத்தியாயம் 3
அத்தியாயம் 4
அத்தியாயம் 5 - றோசியும் றோசாவும்
அத்தியாயம் 6 - இரண்டு மலர்களும் ஒரு வண்டும்
அத்தியாயம் 7 - மோகவலை
அத்தியாயம் 8 - மண் கோட்டையா? மதிற் கோட்டையா?
அத்தியாயம் 9 - பாவ விமோசனம்
அத்தியாயம் 10 - கருமுகில்
அத்தியாயம் 11 - அஞ்சலி (29.10.1961)

ஈழத்துச் சோமுவின் 'களனி நதி தீரத்திலே..' நாவலை நூலகம் தளத்தில் பத்திரிகைகள் பிரிவிலுள்ள 'புதினம்' பத்திரிகைகளில் வாசிக்கலாம்.

'நூலகம்' தளத்துக்கான இணையத்தள முகவரி: https://noolaham/org



**சமூக, அரசியற் செயற்பாட்டாளர் சாந்தி சச்சிதானந்தம் நினைவாக...**

சமூக,அரசியல், மனித உரிமை மற்றும் பெண்ணியச் செயற்பாட்டாளரான அமரர் சாந்தி சச்சிதானந்தம் மொறட்டுவைப் பல்கலைககழகத்தில் கட்டடக்கலைத் துறை பட்டதாரி. 'விழுது' என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஸ்தாபகர். 'இருக்கிறம்' என்னும் மாதச்சஞ்சிகையை அந்நிறுவனம் மூலம் வெளியிட்டவர். ஆங்கிலம், தமிழ் மொழிகளில் இவரது சமூக, அரசியல் மற்றும் பெண்ணியம் சார்ந்த கட்டுரைகள் பல வெளியாகியுள்ளன.

'பெண்களின் சுவடுகளில்' (தமிழியல் வெளியீடு) , 'வறுமையின் பிரபுக்கள்' (மன்று வெளியீடு) , 'தடைகளைத் தாண்டி' (விழுது வெளியீடு) மற்றும் 'சரிநிகர் சமானமாக' (விழுது வெளியீடு) என்னும் நூல்களை எழுதியவர். இவரது தந்தையாரான வல்லிபுரம் சச்சிதானந்தம் வழக்கறிஞர். லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் 1970 இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் நல்லூ ரில் போட்டியிட்டவர். இவரது கணவரான அமரர் மனோரஞ்சன் ராஜசிங்கம் அவர்களும் ஒரு சமூக, அரசியற் செயற்பாட்டாளராக இயங்கியவரே.

இவர் என்னுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் படித்த சக தமிழ் மாணவி. இவரைக் கடைசியாக 83

கலவரக்காலத்தில் சரஸ்வதி அகதி மண்டபத்தில் இவரது கணவருடன் சந்தித்தேன். சிறிது நாட்கள் அம்முகாமில் தங்கியிருந்தார். அப்பொழுது தன் கணவரை அறிமுகப்படுத்தினார். பின்னர் பல வருடங்களின் பின்னர் முகநூலில் நண்பர்களில் ஒருவராக வந்து இணைந்தார். சிறிது காலத்திலேயே நோய்வாய்ப்பட்டு மறைந்து விட்டார்.

எம்முடன் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்திலேயே பெண் விடுதலையையொட்டிய பெண்ணியக் கருத்துகளில் தெளிவாகவும், உறுதியாகவுமிருந்தார். நன்கு பாடும் திறமை மிக்கவர். ஓய்வு நேரங்களில் இவர் பாடுவதைக்கேட்டு இரசிப்பதுண்டு. நண்பர் லெஸ்லி இரவிச்சந்திரா (மட்டக்களப்பு), மோகன் அருளானந்தம் (மட்டக்களப்பு) ஆகியோரும் இவருடன் இணைந்துப் பாடி எம்மை மகிழ்வித்த பல்கலைக்கழக நண்பர்கள்.

'பெண்களின் சுவடுகளில்' நூலை வாசிக்க - https://noolaham.net/project/73/7294/7294/pdf

'சரிநிகர் சமானமாக' நூலை வாசிக்க https://noolaham.net/project/142/14175/14175/pdf

பெண்களின் சுவடுகளிலிருந்து சில அடிகள் - https://noolaham.net/project/665/66429/66429/pdf

'பெண்ணொடுக்கு முறையின் ஒரு வரலாறு' என்னும் இவரது 'திசை'க் கட்டுரையை வாசிக்க https://noolaham.net/project/249/24823/24823/pdf



## எழுத்தாளர் க.நவத்தின் 'எனினும் நான் எழுகின்றேன்' மொழிபெயர்ப்புக் கவிதைத்தொகுப்பைப் பற்றிய எண்ணப்பதிவுகள்!

அண்மையில் நான் வாசித்த நூல்களில் என் கவனத்தை ஈர்த்த நூல்களிலொன்று ஒரு கவிதை நூல். எழுத்தாளர் க.நவம் மொழிபெயர்த்து 'நான்காவது பரிமாணம்' வெளியீடாகக் கைக்கடக்கமான அளவில் வெளியாகியுள்ள கவிதைத்தொகுதியான 'எனினும் நான் எழுகின்றேன்'. நோபல் பரிசு பெற்ற கவிஞர்களான பப்லோ நெருடா (சிலி நாட்டுக் கவிஞன்), 'மாயா ஆஞ்ஜெலோ, அமெரிக்கக் கவிஞரான லாங்ஸ்ரன் ஹியூஸ், பாலஸ்தீனியக் கவிஞரான சாலா ஓமார் உட்படப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கவிஞர்கள் எழுதிய கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைத் தொகுப்பு. மிகவும் சிறப்பான தேர்வு தொகுப்பின் முக்கியத்துவத்தை அதிகரிக்கின்றது.

மேலே செல்வதற்கு முன் சில வார்த்தைகள்நூலிலுள்ள கவிஞர்கள் பற்றிய ஓரிரு வரிக் குறிப்புகள் நிச்சயம் இடம் பெற்றிருக்க வேண்டும். கவிதைகளுடன் கவிஞர்கள் பற்றிய அறிமுகத்துடன், அவர்களைப் பற்றிய மேலதிகத் தேடல்களுக்கும் அது நிச்சயம் வழி வகுத்திருக்குமென்பதென் திடமான நம்பிக்கை. இதன் அடுத்த பதிப்பில் நிச்சயம் நவம் இதனை நிறைவேற்று வாரென்று எதிர்பார்ப்போம்.

நூலின் அடுத்த முக்கியமான அம்சம்° மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கிலக் கவிதைகளையும் தொகுப்பு உள்ளடக்கியிருப்பது. அண்மைக்காலமாக இவ்விதமாக மொழிபெயர்ப்புக் கவிதைகளின் தொகுப்புகள் வெளிவரத் தொடங்கி இருப்பதை அவதானிக்கிறேன். ஆரோக்கியமான விடயமிது. ஏனைய மொழிபெயர்ப்புக் கவிதைகளை வெளியிடும் பதிப்பகங்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இத்தொகுப்பு நாம் வாழும் உலகின் நானா பக்கங்களிலும் பற்றியெரியும் பல்வகைப்பட்ட மனித உரிமைகளைப் பற்றிக் குரல் கொடுக்கிறது. இனம், மதம், மொழி, வர்க்கம், பால், நிறம் எனப் பல்வகைப்பிரிவுகளால் எரிந்துகொண்டிருக்கும் உலகை நோக்கிய கவிஞர்களின் தர்மாவேச உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதைகள் பலவற்றை இத்தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. நாடுகளின் பூர்வீகக் குடிகளின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கவிதையையும் காண முடிந்தது. பல கவிதைகளைப் போர்ச்சூழலில் பல்வேறு அடக்குமுறைகளுக்குள் வாழ்ந்த, வாழும் தமிழர்களாகிய எம்மால் புரிந்து கொள்ள முடிவதுடன், அவற்றில் வெளிப்படும் உணர்வுகளுடன் ஒன்றிணையவும் முடிகின்றது. தொகுப்புக் கவிதைகளில் சில சூழற் பாதிப்பையும், மானுட நேயத்தை வெளிப்படுத்துகின்றன.

எகிப்தில் பிறந்த பாலஸ்தீனியக் கவிஞன் சாலா ஓமார். எட்டு வயதிலிருந்து கவிதை எழுதத்தொடங்கிய கவிஞன். புகழ்பெற்றபாலஸ்தீனியக்கவிஞரான மஹ்மூட் தர்வீஷின் பாதிப்பால் கவிதை எழுதத்தொடங்கிய கவிஞன். கவிதை தன் உணர்வுகளுடன் தன்னை ஈடுபட வைப்பதுடன் வாசகர்களுடன் உரையாட வழி சமைப்பதாகவும் கூறும் இக்கவிஞனின் தொகுப்பிலுள்ள்ள கவிதைகளில் ஒன்று 'என் அடக்குமுறையாளனுக்கு ஒரு திறந்த மடல்' ( An Open Letter to My Oppressor)/ கவிதையை வாசித்தபோது கவிஞர் சேரனின் 'இராணுவ முகாமிலிருந்து சில கடிதங்கள்' நினைவுக்கு வந்தது. அதில் சிங்களச் சிப்பாய் ஒருவன் சக சிப்பாய்க்கு எழுதும் கவிதையில் தாம் செய்வதை விபரித்திருப்பான். இதில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் ஒருவன் அடக்குமுறையாளனான இராணுவ அதிகாரிக்கு எழுதும் கடிதமாகக் கவிதை உருவெடுத்துள்ளது. அதில் அவன் தன் மக்கள் மேல் புரிந்த வன்முறைகளைப்

பட்டியலிட்டிருப்பான்.

கறுப்பினத் தந்தைக்கும், வெள்ளையினத் தாய்க்கும் பிறந்தவர் லாங்ஸ்ரன் ஹுயூஸ். அமெரிக்கக் கவிஞரான இவர் சமூக, அரசியல் செயற்பாட்டாளர். நாடக, நாவலாசிரியர். பத்தி எழுத்தாளர். 'ஜாஸ் கவிதை' என்னும் இலக்கிய வடிவத்தின் முன்னோடிகளில் ஒருவர். கறுப்பின மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் இவரது எழுத்துகள் இன்னுமொரு விடயத்துக்காகவும் முக்கியத்துவம் மிக்கவை. இரு வேறு இனத்தைச் சேர்ந்த பெற்றோருக்குப் பிறந்த கலப்பின மனிதர்களுக்காகவும் குரல் கொடுப்பவை. அவர்கள் தம் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

இத்தொகுப்பிலுள்ள கலப்புயிரி (Cross) என்னும் கவிதை அத்தகைய கவிதைகளில் ஒன்று. இன்று சில நிமிடங்கள் எழுத்தாளர் நவத்துடன் உரையாடியபோது அவரது கலப்புயிரி என்னும் சொற்பதத்தைச் சிலாகித்துக் கூறினேன். அப்பொழுது அவர் கூறிய ஒரு விடயம் முக்கியத்துவம் மிக்கது. சிலர் மேற்படி கவிதையை மொழிபெயர்த்தபோது Cross என்பதை அதன் நேருக்கு நேர் மொழிபெயர்ப்பான சிலுவை என்று மொழி பெயர்த்திருந்தார்களாம். படைப்புகளை மொழி பெயர்க்கும்போது மொழி பெயர்க்கப்படும் படைப்புகளை முழுமையாக உள்வாங்கி மொழிபெயர்ப்பது அவசியமென்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. மேற்படி கவிதை My old man is white old man. And my old mother is black என்று ஆரம்பித்து, My old man died in a fine big house. My ma died in a shack. I wonder where I'm gonna die. Being neither white or black? என்று முடியும் கவிதை. இவ்விதமாகக் கவிதையின் கூறுபொருள் தெளிவாக இருக்கையில், Cross என்பதைச் சிலுவை என்று மொழிபெயர்த்தவர்களின் செயல் வியப்பை அளிக்கிறது.

இக்கவிதையின் நவத்தின் மொழிபெயர்ப்பு பின்வருமாறுள்ளது:

**கலப்புயிரி**
**லாங்ஸ்ரன் ஹியூஸ்**

என் முதிய தந்தை ஒரு வெள்ளைக்
கிழவன்.
என் முதிய அன்னை ஒரு கறுப்பி.
என் வெள்ளைக் கிழவனை நான்
எப்போதாவது சபித்திருந்தால்,
இப்போது என் சாபங்களை
மீளப் பெறுகிறேன்.

என் முதிய கறுப்புத் தாயை
நரகத்துக்குப் போவாயென்று
எப்போதாவது நான்
திட்டியிருந்தால்
அக்கெட்ட திட்டுதலுக்காய்
வருந்துகிறேன்.

இப்போது அவளை வாயார
வாழ்த்துகிறேன்.

என் முதிய தந்தை
ஒரு அழகிய பெரிய வீட்டில்
இறந்தான்.

என் அன்னை
ஒரு குடிசையில் இறந்தாள்.

நான்
எங்கு உயிர் துறக்கப் போகிறேன்?

எனக்குள் எண்ணி ஏங்குகிறேன்.
வெள்ளையனுமல்லாமல்
கறுப்பனுமல்லாமல்
இருப்பதனால்.




ஜோய்ஸ் கில்மரின் (Joyce Kilmar) 'மரங்கள்' (Trees) தொகுப்பிலுள்ள இன்னுமொரு என் கவனத்தை ஈர்த்த கவிதை. கவிதை மரங்களின் பெருமையை வலியுறுத்துகின்றது. அவ்விதம் வலியுறுத்துவதனூடாகச் சூழல் அழிப்பை நினைவூட்டி விமர்சிக்கின்றதாக நான் கருதுகின்றேன். மரத்தைப் படைத்தவர் படைத்ததொரு அழகான கவிதையாகக் கவிஞர் காண்கின்றார். அதே சமயம் மானுடர் படைக்கும் கவிதைகளை அறிவிலிகள் ஆக்கும் படைப்புகளாகவும் கருதுகின்றார். இதனை வெளிப்படுத்துகின்றன கவிதையின் முடிவில் வரும் பின்வரும் வரிகள்

கவிதைகள்
என் போன்ற அறிவிலிகளால்
ஆக்கப்படும்

ஆனால் ஆண்டவனால் மட்டுமே
ஒரு மரத்தை ஆக்க முடியும்.

அமெரிக்கக் கவிஞையான மாயா அஞ்ஜலோவின் கவிதைகளான 'எனினும் நான் எழுகின்றேன் 1, 'எனினும் நான் எழுகின்றேன் 11, 'எனினும் நான் எழுகின்றேன் 111 தொகுப்பின் முக்கியமாக கவிதைகள். இனம், பால், நிற வேறுபாடுகள் ஏற்படுத்தும் அவமானம், வலி போன்ற உணர்வுகளை உள் வாங்கி, அவ்வித உணர்வுகளால் சிதைந்து , அடங்கிப் போகாமல் நிமிர்ந்தெழும் உரிமைக் குரல்கள் அவை.

'உன் சொல்லால் என்னை நீ
சுடலாம்.
உன் கண்ணால் என்னை நீ
காயப்படுத்தலாம்.
உன் கொடூர வெறுப்பால் என்னை
நீ கொல்லலாம்.
ஆயினும், நான் மேலெழுவேன்
காற்றைப் போல.'

(எனினும் நான் எழுகின்றேன் -11)

'அச்சமும் பயங்கரமுமான
இரவுகளையும் விட்டு வெளியேறி
நான் எழுகின்றேன்.

அற்புதமான தெளிவுடன் புலரும்
அதிகாலையில்
நான் எழுகின்றேன்.

என் மூதாதையர் கையளித்த

கொடைகளைக் கொண்டுவரும்

நானே
அடிமைகளின்
கனவும் நம்பிக்கையுமாவேன்.

நான் எழுகின்றேன்.
நான் எழுகின்றேன்.
நான் எழுகின்றேன்.

(எனினும் நான் எழுகின்றேன் -111)

என்னை நீ வரலாற்றில்
எழுதிவிடலாம்

கசப்பான, திரிக்கப்பட்ட உனது
பொய்களுடன்,
என்னை நீ மிதமிஞ்சிய
அழுக்கிலிட்டு நீ மிதிக்கலாம்

ஆயினும், நான் மேலெழுவேன், தூசி போல.'

(எனினும் நான் எழுகின்றேன் -1)

தொகுப்பிலுள்ள சக உயிர்கள் மீதான மானுட நேயத்தை வெளிப்படுத்தும் கவிதைக்கு உதாரணமாக லெம் வோர்ட் கிறிஸ்பீல்ட்டின் ( Lem Ward Crisfield) கழிவிரக்கம் (Remorse) என்னும் கவிதையைக் குறிப்பிடலாம்.

வேட்டைக்காரன் ஒருவன் வாத்துச்சோடியொன்றைச் சுட்டு விடுகின்றான். அவை காயம்பட்டு நிலத்தில் விழுந்து விடுகின்றன. காயம்பட்ட ஆண் வாத்து தன் பெண் துணையை வேதனைத் துயரத்துடன் அழைக்கின்றது. அதன் அனுங்கலைக் கேட்ட காயம் பட்ட பெண் வாத்து ஆண் வாத்தை நெருங்கி, அணைத்து, வருடிக் கொடுக்கின்றது. அவ்விதமே உயிரிழக்கின்றன. வேட்டைப்பிரியனான அவனை அக்காட்சி பாதிக்கின்றது. அவ்வாத்துச் சோடியைப் புதைத்து விட்டுச் செல்கையில் தன் துப்பாக்கி, இடுப்புப்பட்டி ஆகியவற்றை விரிகுடாவில் வீசிவிட்டுச் செல்கின்றான்.

கவிதையின் இறுதி வரிகள் பின்வருமாறு முடிகின்றன॰

ஓர் அப்பட்டமான மட்டரக
விளையாட்டு வீரனென
மற்றைய வேட்டையர்கள் என்னை
அழைப்பர்.
நான் செய்த செயலையிட்டுக் கேலி
செய்வர்.

ஆனால்
அன்று ஏதோ ஒன்று
என் இதயத்தை உடைத்து
நொறுக்கியது.

மீண்டும் சுடுவதா..?
கடவுள் தடுப்பாராக.

தொகுப்பின் இன்னுமொரு முக்கியக் கவிதை பாலஸ்தீனத்துக் கவிஞையான ஃப்ட்வா ருகானின் (Fadwa Tuqan) என்றும் உயிர்ப்புடன் (Ever Alive) கவிதை. ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில், இன்னும் அவர்களது உரிமைப் போராட்டம் முற்றுப்பெறாத நிலையில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பலர் இவரது கவிதை வரிகளில் தம் உணர்வுகள் கிடப்பதை உணர்வார்கள்.

என் அன்புக்குரிய தாய்நாடே
கொடுங்கோன்மையின் பாழிடத்தில்
வலியின், துன்பத்தின் தடங்கள்
எவ்வளவு காலம்தான்
உன்னைக் கடைந்திடினும்
உனது கண்களைப் பிடுங்கவோ
அல்லது உனது நம்பிக்கைகளையும்
கனவுகளையும் சாகடிக்கவோ
அல்லது மேலெழும்
உனது மனவுறுதியைச்
சிலுவையிலறையவோ
அல்லது உனது பிள்ளைகளின்
புன்னகையைக் களவாடவோ
அல்லது அழிக்கவோ எரிக்கவோ
அவர்களால் ஒருபோதும் முடியாது.

ஏனெனில்
எங்கள் ஆழ்ந்த சோகங்களிலிருந்து
நாங்கள் சிந்திய குருதியின்
புத்துணர்விலிருந்து
வாழ்வினதும் மரணத்தினதும்
அதிர்விலிருந்து
உன்னிடத்தே வாழ்வு மீண்டும்
மறுபடி பிறக்கும்.

ஸலா ஒமாரின் ஜெருசலத்தில் தொலைந்தேன் (Lost in Jerusalem) கவிதையில் நவம் நட்சத்திரப் பெருவெடிப்பான சுப்பர் நோவா (Supernova) என்பதற்கு நல்லதொரு கலைச்சொல்லை உருவாக்கியுள்ளார். அது 'மீயொளி விண்மீன்'. நல்லதொரு புதுச்சொல்லாக இதனைக் காண்கின்றேன்.

கவிதை தன் காதலியுடன் கடிதங்கள் படையினரால் தடுக்கப்பட்ட நிலையில், தொடர்புகொள்ள முடியாத நிலையில் வாடும் இளைஞன் ஒருவனின் அவள் மீதான காதல் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. யுத்தபூமியில் மரணத்துள் வாழும் மக்களின் பிரதிகளில் ஒருவன் அவன்.

இவை இத்தொகுப்பு பற்றிய முழுமையான பார்வை அல்ல. வாசித்த கவிதைகளை மையமாக வைத்து எழுந்த உணர்வுப் பதிவுகள். நல்லதொரு மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுப்பைத் தந்ததற்காக எழுத்தாளார் க. நவம் நிச்சயம் பெருமைப்படலாம். எதிர்காலத்தில் மேலும் பல இத்தகைய தொகுப்புகளை எதிர்பார்க்கின்றோம்.

## பெருமாள் முருகனின் 'பூக்குழி' நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு Pyre

எழுத்தாளர் பெருமாள் முருகனின் 'பூக்குழி' நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பான Pyre, அனிருத்தன் வாசுதேவனால் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட நாவல். 'பூக்குழி' தமிழில் காலச்சுவடு பதிப்பக வெளியீடாக வெளியானது. ஆங்கில மொழிபெயர்ப்பு Hamish Hamilton Limited பதிப்பகத்தால் வெளியிடப்




பட்டுள்ளது. இப்பதிப்பகமானது பென்குவின் நிறுவனத்தின் ஐக்கிய இராச்சியத்திலுள்ள சேய் நிறுவனமாகும் என்பதும், குறிப்பிடத்தக்கது.

இந்த பூக்குழி நாவல் இரு வேறு சமூகப்பின்னணியைக் கொண்ட குமரசேனனும், சரோஜாவும் மணம் செய்து, இருவரும் குமரேசனின் கிராமத்துக்கு வருகின்றார்கள். அக்கிராமத்தில் சாதி வெறி பிடித்தலையும் குமரேசனின் கிராமத்தவர்கள் இளம் மனைவியான சரோஜாவைப் பல் வழிகளிலும் துன்புறுத்துகின்றார்கள். முடிவில் அவளுக்கு என்ன நேர்ந்தது என்பதுதான் பூக்குழி நாவலின் மையக்கரு. முடிவைக்கூட பலவிதங்களில் வாசகர்கள் அர்த்தங்கள் கற்பித்துக் கொள்ளும் வகையில் எழுதியிருக்கின்றார் பெருமாள் முருகன். நாவலை தருமபுரி இளவரசனுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார் நாவலாசிரியர். இளவரசன் சாதி வெறியர்களினால் படுகொலை செய்யப்பட்ட ஒருவர்.

இந்நாவலின் இன்னுமொரு சிறப்பு இது வெகுசன இதழான கல்கியில் தொடராக வெளியான நாவல். பொதுவாக வெகுசனப் படைப்புகளை எள்ளி நகையாடும் தீவிர இலக்கியவாதிகள் இன்று இவ்விதம் எழுதப்பட்ட தொடர் நாவலொன்று அண்மையில் மதிப்பு மிக்க 'சர்வதேச புக்கர்' விருதுக்குப் பரிந்துரைக்கப் பட்டதைக்கண்டு நிச்சயம் வியப்படைந்திருப்பார்கள்.

பூக்குழி என்றால் தீ மிதிப்பு அல்லது குளிப்புக்காகத் தணல்களுடன் இருக்கும் நெருப்புப் படுக்கை. உண்மையில் பூக்குழி என்பது இங்கு இடக்கரடக்கல் சொல்லாகப் பாவிக்கப்படுகின்றது.

இந்நாவல் விரிந்ததொரு பெரு நாவலல்ல. 146 பக்கங்களை உள்ளடக்கியுள்ள நாவலே. ஆனால் இந்நாவலுக்கு இன்று கிடைத்துள்ள முக்கியத்துவம் பல வழிகளிலும் உலகின் பல்வேறு மொழிகளிலும் எழுதும் எழுத்தாளர்களுக்கும், மொழி பெயர்ப்பாளர்களுக்கும்,




வாசகர்களுக்கும் நன்மையினையே அளித்துள்ளது எனலாம். தமிழில் உலகத்தரம் மிக்க புனைகதைகள் பல இருக்கின்றன. ஏனைய இந்திய மொழிகளிலும் எத்தனையோ படைப்புகளுள்ளன. இவற்றை யெல்லாம் மொழி பெயர்ப்பதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் இனிமேல் நிச்சயம் முயற்சிகள் செய்வார்கள். ஏனெனில் இவ்விதமான மொழிபெயர்ப்புகளுக்கு பண விருதுகள் கிடைக்கும்போது அதனை மூல எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளரும் பகிர்ந்து கொள்வார்கள்.

மேலும் 'சர்வதேச புக்கர் விருது'க்குப் பரிந்துரை செய்யப்பட்டதன் காரணமாக உலக அளவில் இந்நூலின் விற்பனை அதிகரித்திருக்கும். இது நூலாசிரியருக்கு நன்மை தருவது.

அண்மையில் ஆஸ்கார் விருது RRR திரைப்படப்பாடலான 'நாட்டு. நாட்டு' பாடலுக்குக் கிடைத்தது. தமிழ் ஆவணபடமான The Elephant Whisperersற்கும் சிறந்த ஆவணப்பட ஆஸ்கார் விருது கிடைத்துள்ளது. இப்போது பெருமாள் முருகனின் 'பூக்குழி' நாவல் 'சர்வதேச புக்கர்'' விருதுக்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. அனைத்துமே மகிழ்ச்சி தருவது.

## அ.ந.க.வின் மலையக இலக்கிய மற்றும் அரசியல் பங்களிப்பு!

அ.ந.கந்தசாமியின் 'நாயினும் கடையர்', 'காளிமுத்து வந்த கதை' ஆகிய கதைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றேன். கிடைக்கவில்லை. 'நாயினும் கடையர்' வீரகேசரியிலும், 'காளிமுத்து வந்த கதை' தேசாபிமானியிலும் வெளிவந்ததாக அறிகின்றேன். உங்களுக்கு அவை பற்றிய தகவல்கள் தெரிந்தால் அறியத்தாருங்கள். இவற்றை வைத்திருப்பவர்கள் பகிர்ந்துகொள்ளுங்கள்.

இக்கதைகளை வாசித்தவர்கள் அவை பற்றிய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். இவை மலையகத்தமிழ் மக்களைப் பற்றியவை

அ.ந.கந்தசாமி மறைவதற்கு முன்னர் 'கழனி வெள்ளம்' என்னுமொரு நாவலையும் எழுதி வைத்திருந்தார். அதுவும் மலையகத் தமிழ் மக்களைப் பற்றியது. அது எழுத்தாளர் செ. கணேசலிங்கனிடமிருந்தது. அதனை அவர் 83 இனக்கலவரத்தில் இழந்து விட்டார். அவரும் அந்நாவல் பற்றிய கருத்துகள் எதனையும் பதிவு செய்திருக்காததால் அதன் கதைச்சுருக்கம் பற்றியும் அறிய முடியவில்லை. அது பற்றியும் அறிந்தவர்கள் தமது கருத்துகளையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அ.ந.க வீரகேசரியில் முதன் முதலாகத் தொழிற் சங்கம் ஒன்றினை ஸ்தாபித்து தொழிலாளர் உரிமைக்காகப் பாடுபட்டவர்' என்று தனது 'ஈழத்துச் சிறுகதை மணிகள்' நூலில் குறிப்பிடுவார் எழுத்தாளர் செம்பியன் செல்வன்.

இது பற்றிய அந்தனி ஜீவாவின் 'சாகாத இலக்கியத்தின் சரித்திரன் நாயகன்' 'வீரகேசரி' ஆசிரியர் குழுவில் பணியாற்றினார். வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் அச்சகத் தொழிலாளர்கள் படும் துன்பத்தைக் கண்டு மனம் நொந்தார். அவர்களின் நலனில் அக்கறை கொண்டார். பொதுவுடமைக் கருத்துகளில் ஊறிப்போயிருந்த அ.ந.க. அச்சகத் தொழிலாளர்களுக்காகப் போராடத்

தயங்கவில்லை. அதனால் அச்சக முதலாளிகளின் வெறுப்பினைச் சம்பாதித்துக் கொண்டார். அதனால் வீரகேசரியிலிருந்து விலக்கப் பட்டார்.' என்று பதிவு செய்யும்.

மேற்படி 'சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன்' கட்டுரைத் தொடரில் அந்தனி ஜீவா அ.ந. கந்தசாமியின் மலையகம் சார்ந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுகையில் 'கம்யூனிஸ்ட கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றிய காலத்தில் அ.ந. கந்தசாமி தொழிற்சங்க இயக்கங்களில் பெரும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். மலையகத்தின் எல்பிட்டி என்னுமிடத்தில் சிலகாலம் தோட்டத் தொழிலாளர்கள் பிரதிநிதியாகக் கடமையாற்றினார். உழைப்பையே நம்பி வாழும் தோட்டத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டித் தீவிரமாக உழைத்தார். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டார். அ.ந.கந்தசாமி மலைநாட்டு உழைக்கும் தொழிலாளர்கள் மீது எப்பொழுதும் பெருமதிப்பு வைத்திருந்தார். தொழிலாளர்களி னுரிமைப் போராட்டத்தில் முன்னின்று உழைத்துள்ளார். அவர்களின் உரிமைக்காகத் தோட்ட நிர்வாகத்தினரிடம் நியாயம் கோரியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற பிரசித்தி பெற்ற டிராம் தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெற உழைத்தவர்களில் முக்கியமான ஒருவராக அ.ந. கந்தசாமி கணிக்கப் படுகின்றார்.' என்று குறிப்பிடுவார்.

ஆனால் இன்றுள்ள மலையகத் தமிழ் எழுத்தாளர்கள் பலருக்கு இவையெல்லாம் தெரியவில்லை. அதனால் அவை பற்றி அவர்கள் தம் எழுத்துகளில் குறிப்பிடுவதில்லை. அந்தனி ஜீவா மட்டும் தனது கட்டுரைகளில் குறிப்பிட்டிருக்கின்றார். மிகவும் பயனுள்ள குறிப்புகள் அவை. அதற்காகத் தமிழ் இலக்கிய உலகம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது. அவர் ஒருவரே முதன் முதலாக அ.ந.க.வின் ஒட்டுமொத்த இலக்கிய, அரசியல் பங்களிப்பு பற்றிய தகவல்களைப் பதிவு செய்திருக்கின்றார்.

**அ.ந.க வீரகேசரியில் முதன் முதலாகத் தொழிற் சங்கம் ஒன்றினை ஸ்தாபித்து தொழிலாளர் உரிமைக்காகப் பாடுபட்டவர்' என்று தனது 'ஈழத்துச் சிறுகதை மணிகள்' நூலில் குறிப்பிடுவார் எழுத்தாளர் செம்பியன் செல்வன்.**

அ.ந.க.வின் (கவீந்திரன் என்னும் புனைபெயரில் எழுதிய) தோட்டத் தொழிலாளர் பற்றிய 'பாரதி' இதழில் வெளிவந்த கவிதை கீழே:

## தேயிலைத் தோட்டத்திலே

அ.ந.கந்தசாமி (கவீந்திரன்)

1.காலையிலே சங்கெழுந்து பம்மும்! 'நேரம்
கணக்காச்சு! எழுந்துவா! தூ
க்கம்போ தும்.
வேலைசெய வேண்டு'மெனச்
சொல்லு மஃது!
வேல்விழியாள் உடன்வித்தாள்!
துடித்தெழுந்தாள்!

பாலையுண வேண்டுமெனப்
பாலகன் தான்
பதறுமன்றோ?என நினைத்தாள்
பாய்மேற்பாலன்
காலைமெல வருடினாள் கமலப்
பூபோல்
கண்விரித்துக் காலையுதைத்
தெழுந்தான் பாலன்!

2.
முகத்தைமெல முத்தமிட்டாள்!
ராசா வென்றாள்!

முத்தம்பின் முத்தமிட்டு
முறுவலித்தாள்!

அகத்தினிலே அணைகடந்த
அன்பின் வெள்ளம்
அமுதமாய் மார்பிடையே சுரக்கவஃ
தை
அகம் குளிரப் பசிதீர உடல்வளர
அருந்தட்டும் குழந்தையென
அணைத்துக் கொள்வாள்!

முகம்மலர வாய்குவித்துச்
சிரத்தையோடு
முழித்தவண்ணம் பாலகந்தான்
பருகுகின்றான்!

3.அன்னையுளம் அழகிய
பூங்கனவுபல
அரும்பி வரும்! சின்னவந்தப்
பாலகன்தான்
மன்னவன்போல் மல்லார்ந்த
புயத்தனாகி
மணஞ்செய்து மக்கள்பல பெற்று
வேண்டும்

பொன்னோடும் பூணோடும் சிறக்க
வாழ்வான்!

பொறாமைப்பேய் உறவினரை
விழுங்கும் உண்மை!

என்னென்ன நினைவெல்லாம்
என்மனத்தே!

எனநினைந்து தன்னுள்தான்
வெட்கிக்கொள்வாள்!

4.பால்குடித்துமுடிய அந்தக்
குழந்தை இன்பப்
பசுமுகத்தில் பால்வடியக்
கலகலென்று
மால்தீர உளத்துன்ப மாசு ஓட
மனங்குளிரச் சிரித்துத்தன் கையை
ஆட்டி
காலையுதைத் திருள் தீரும் காட்சி
நல்கும்!

காரிகை மனத்தின்பம் சீறிப்
பொங்கும்!

நாலைந்து முத்தமந்த வெறியிற்
கொட்டி,
நங்கைதன் வேலைக்குக்
கிளம்புகின்றாள்!

5.பானையிலே தண்ணீரில
இட்டிருநத
பழயதனை எடுத்தே உண்டுமிஞ்ச
மானைநிகர் கண்ணாள் தன்
மணவாளர்க்கு
மற்றதனை வைத்துவிட்டு விரைந்து
சென்று
கானகத்து மூங்கிலிலே வேய்ந்த
கூடை
கழுத்தினிலே பின்புறமாய்த்
தொங்கவிட்டு
தானெழுந்து விரைவாள் தன்
வேலைக்காடு!

தன் கண்ணின் ஓரத்தைத்
துடைத்துக்கொள்வாள்!



**எழுத்தாளர் நந்தினி சேவியர் நினைவாக....**

எழுத்தாளர் நந்தினி சேவியர் அவர்களின் பிறந்தநாள் மே 25. அதனையொட்டி நான் எழுதிய குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகளின் தொகுப்பிது. முகநூல் எனக்கு நண்பராக்கிய மூத்த கலை, இலக்கிய ஆளுமைகளில் ஒருவர். இருந்தவரையில் விடாமல் இயங்கிக் கொண்டிருந்தார். அவரது விடா முயற்சியும், கொண்ட கொள்கை தவறாத உறுதிமிகு மனநிலையும் என்னை மிகவும் கவர்ந்தவை.

தனது எழுத்துகளைச் சமூகச் சீர்கேடுகளைச் சுட்டெரிக்கும் போர் வாளாகப் பாவித்தவர் அவர். எப்பொழுதுமே தான் நம்பும் கோட்பாடுகள் விடயத்தில், குறிப்பாக மார்க்சியக் கருத்துகள் விடயத்தில், சமரசம் செய்து கொள்ளாதவர். சமூக, அரசியுல், பொருளியல் விடுதலைக்கான மார்க்சியக் கருத்துகள் ரீதியில் அமைந்த போராட்டம், அதனுடன் இணைந்த தீண்டாமைக்கெதிரான போராட்டம் என்பவற்றில் தெளிவான, உறுதியான கருத்துகளைக் கொண்டிருந்தார்.

இன்னுமொரு விடயமும் என்னை மிகவும் கவர்ந்தது. தான் வாசித்த, தனக்குப்பிடித்த இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகள் பற்றிய விபரங்களைச் சுருக்கக் குறிப்புகள் மூலம் ஆவணப்படுத்தியவர் அவர். சிலர் அக்குறிப்புகளை உதாசீனப் படுத்தினர். அவை விமர்சனங்களல்ல என்றும் கிண்டல் செய்தனர். ஆனால் அவர்கள் அவற்றின் நோக்கத்தை, முக்கியத்துவத்தைக் காணத்தவறி யானை பார்த்த குருடர்கள் என்பேன். அவற்றின் மூலம் அவர் எழுத்தாளர்கள் பலரை ஆவணப்படுத்தியுள்ளார். அதுதான் அவரது நோக்கமும் கூட. அதனைக் காணத் தவறியவர்கள்தாம் அவற்றில் குற்றம் குறை கண்டார்கள். ஆனால் அதற்காக அவர் அதனை நிறுத்தவில்லை. தொடர்ந்தும் அறிமுகப் படுத்திக் கொண்டேயிருந்தார். இலங்கைத் தமிழ் இலக்கிய ஆய்வுகளுக்கு உதவும் ஆவணக்குறிப்புகளாக அவை எப்போதுமிருக்கும்.

அவரது முகநூற் குறிப்புகளும் முக்கியமானவை. அவற்றினூடு அவரது சினிமா, இலக்கியம், அரசியல் பற்றிய எண்ண ஊட்டங்களை அறிய முடியும். அவை நிச்சயம் ஆவணப்படுத்த வேண்டிய பதிவுகள்.

இவரது முகநூல் பதிவுகள் இவரது கலை, இலக்கியம் மற்றும் சமூக நீதி, பொதுவுடமை சமுதாய அமைப்பு ஆகியவை பற்றிய, ஆளுமைகள் பற்றிய விமர்சனக் குறுங்குறிப்புகளாக அமைந்திருக்கின்றன. இலங்கை அரசின் சாகித்திய விருது, கொடகே அமைப்பின் வாழ்நாள் சாதனையாளர் விருது உட்படப் பல விருதுகளைப் பெற்ற ஈழத்தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்த படைப்பாளிகளிலொருவர். இவரது முகநூற் குறிப்புகள் மூலம் நான் இவரைப்பற்றி அறிந்து கொண்ட இவரது ஆளுமை பற்றிய பிரதான அம்சங்களாகப் பின்வருவனவற்றைக் கூறுவேன்°

1. மானுட சமூக விடுதலைக்காக இவர் வரித்துக்கொண்ட கோட்பாடு மாரக்சியக் கோட்பாடு. இலங்கையில் சீனசார்புக் கம்யூனிச அமைப்பினூடு, மானுட சமூக, பொருளாதார விடுதலைக்காக, கட்சியில் இணைந்து செயற்பட்ட இலக்கியப்போராளிகளிலொருவர் இவர். இவ்விடயத்தில் , தான் பின்பற்றும் கோட்பாடு விடயத்தில் இவர் மிகவும் தெளிவாக இருக்கின்றார். தீண்டாமை போன்ற சமூகப்பிரச்சினைகளுக்கு மார்க்சியக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட கட்சியொன்றினூடு இணைந்து போராடுவதே ஒரே வழி என்பதில், வர்க்கப்போராட்டமே ஒரே வழி என்பதில் உறுதியாக இருக்கின்றார். இந்த அடிப்படையில் இவர் அரசியல் ஸ்தாபனங்களைப்பற்றி, ஆளுமைகளைப்பற்றித் தன் விமர்சனங்களை முன் வைக்கின்றார்.

2. அடுத்த இன்னுமொரு விடயம். இவர் யாருக்காகவும் தனக்குச் சரியென்று பட்டதை எடுத்துரைக்கத் தயங்குவதில்லை. தான் தெளிவுடன் அணுகும் அரசியல் கோட்பாட்டின் அடிப்படையில் தன் வாதங்களை ஆணிதரமாக முன் வைப்பவர் இவர்.

3. தன் தனிப்பட்ட உடல்நிலை, பொருளியல் நிலை போன்ற விடயங்கள் தன் கலை, இலக்கியச் செயற்பாடுகளை, எண்ணங்களைத் திசை திருப்பி விடாதவாறு பார்த்துக்கொள்கின்றார்.

4. முகநூலை ஆக்கபூர்வமாகத் தொடர்ச்சியாகப் பாவித்துத் தன் எண்ணங்களை எடுத்துரைத்து வருகின்றார்.

5. கடந்த காலக் கலை, இலக்கிய மற்றும் அமைப்புகளின் செயற்பாடுகளை அவ்வப்போது இவ்விதமான குறிப்புகள் மூலம் பதிவு செய்வதோடு, அவை பற்றிய தன் விமர்சனங்களையும் முன் வைக்கின்றார்.

இவரது முகநூல் குறிப்புகளை வாசிக்கும்போது நான் இவரைப்பற்றி, அதாவது இவரது ஆளுமையைப்பற்றி, கலை, இலக்கிய மற்றும் அரசியல் பற்றிய கருததுகளை அறிந்து கொள்கின்றேன் புரிந்து கொள்கின்றேன். இவரது முகநூ ல் குறிப்புகள் எனக்குப் பின்வரும் உண்மைகளை எடுத்துரைக்கின்றன°

1. இவரது கலை, இலக்கிய மற்றும் அரசியற் செயற்பாடுகளைப் புரிவதற்கு, மற்றும் இவரது ஆளுமையை அறிந்துகொள்வதற்கு மிகவும் உறுதுணையாக விளங்குவதால், அவற்றை ஒருபோதுமே புறக்கணிக்க

முடியாது. எனவே இவரைப்போன்ற ஆளுமைகளின் முகநூற் குறிப்புகள் இலக்கியச்சிறப்பு மிக்கவை புறக்கணிக்க முடியாதவை.

2. இலக்கியத்திறனாய்வாளர்கள் இவரைப் போன்ற படைப்பாளிகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு அவர்களது படைப்புகளை மற்றும் கவனத்திலெடுப்பதுடன் நின்று விடாது, இணையம் குறிப்பாகச் சமூக ஊடகங்களில் அவர்கள் எழுதும் குறிப்புகளையும் (குறுங்குறிப்புகள் . நெடுங்குறிப்புகள்) கவனத்திலெடுத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணத்துக்கு நந்தினி சேவியர் அவர்களின் முகநூற் குறிப்புகள் சிலவற்றை இங்குப் பட்டியலிடுகின்றேன் நந்தினி சேவியரின் முகநூற் குறிப்புகள் சில°

'நாங்கள் சரியான கருத்தைத்தான் பேசுகிறோம், அவற்றில் தவறுகள் இருப்பதை சுட்டிக்காட்டினால், நியாயமானால் திருத்திக் கொள்ள சித்தமாகவும் இருக்கிறோம்!'

'வெறுப்பு! கெட்டவர்களை விமர்சிக்காது. அவர்கள் தமிழ் உணர்ச்சியாளர்களாக இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களைச் சிலாகிக்கும், நான் மதிக்கும் சில நண்பர்கள் மீது கடும் வெறுப்பில் இருக்கிறேன். என்னால் அவர்கள்போல் இருக்க ஒருபோதும் முடியாது.!'

'தவறு -ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றி எழுதும் படைப்புகள் எல்லாம் முற்போக்கு இலக்கியம் எனும் மயக்கம் பலரிடம் இருப்பதை நான் அவதானிக்கிறேன். அவற்றில் சில அடித்தள மக்களின் வீரத்தை கொச்சைப் படுத்துவதாகவும், அவர்களின் பலவீனங்களை அம்பலப்படுத்துதாகவும் இருப்பதை இவர்கள் அவதானிப்பதாகத் தெரியவில்லை. அவற்றை கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தாது தமிழகத்தில் மீள்பிரசுரம் செய்வது எதிரணியினருக்கு நாம் தடி எடுத்துக்கொடுக்கும் செயல் என்பதை சம்பந்தப்பட்டவர்ளுக்கு தெரியப்படுத்துறேன்.'

'சுயம் இழத்தல் மிகப் பெரும் துயரம்!'

'கலைஞர்களே, இலக்கியவாதிகளே! இந்த உலகில் வெகுமதியுள்ள எந்தப் பொருளையும் தொழிலாளர்களும், விவசாயிகளும் தான் உருவாக்கியுள்ளார்கள். ஆகவே கலையும் இலக்கியமும் அவர்களுக்கு சேவை புரிய வேண்டும். அவர்களுக்கு சேவை புரிவதற்காக கலைஞர்களும், இலக்கியவாதிகளும் அவர்கள் மத்தியில் சென்று அவர்கள் வாழ்க்கையை புரிந்து கொள்ள வேண்டும். விவசாயிகளின் சேறு சகதியைப் பூசித்தான் இதனை அவர்கள் செய்யமுடியும்.!'

'சேறு சகதி. - விவசாயிகளின் கால்களில் படிந்திருக்கும் சேறு சகதியைக் கழுவிவிட முடியும். ஆனால் பூர்ஷ்வா அறிவுஜீவிகளின் மனங்களில் படிந்திருக்கும் சேறு சகதியைத் துப்பரவு செய்ய பெரிதும் பாடுபடவேண்டும். சிலரைப் பொறுத்தவரை துப்பரவு செய்யவே முடியாது.!'

'நாங்கள் மலைகளை அகற்றிய மூடக்கிழவனின் சந்ததியினர்!'

'பெரியாரியம், அம்பேத்கரியம் என்பவற்றைவிட மார்க்சியம், லெனினியம், மாவோயிசம் எனக்கு நிறைந்த ஆதர்சமாக இருக்கிறது. ஏனெனில் அவற்றுக்குள் முரண்பாட்டை நான் காணவில்லை மார்க்சியத்தின் வளர்ச்சியே மாவோயிசம்.!'

'உன்னதம், அற்புதம் - எங்காவது ஒரு கூட்டத்தில் உன்னதம், அற்புதம் என்னும் வார்த்தைகள் அடிக்கொருதரம் உரத்த தொனியில் உச்சரிக்கப்படுகிறது என்றால் அக் கூட்டம் 'ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டம், அல்லது இயேசு அவசரமாக வருகிறார் என்பது போன்ற ஜெபக்கூட்டம் என தவறாக எண்ணிவிடாதீர்கள். அது ஒரு இலக்கியக்கூட்டந்தான். பேசிக்கொண்டிருப்பவர் தன்னை ஒரு இலக்கிய ஜாம்பவானாக கருதிக்கொண்டிருக்கும் ஒரு பட்டதாரியான முன்னாள் ஆசிரியர் என்பதையும் நீங்கள் கவனம் கொள்ளவேண்டும்.'

' நாங்கள் உதிரியாக இருக்கிறோம் உண்மை ஆனால் உறுதியாகவும் இருக்கிறோம் அதுவும் உண்மை.!'

'சுயநலவாத தலைமைகள் இருக்கும் வரை, இனத்துக்கிடையிலோ இனங்களுக்கு இடையிலோ ஒற்றுமையை எதிர்பார்க்க முடியாது.!

'எளிமை அழகு தான். ஆனால் ஏழ்மை அழகல்ல கொடுமை.!'

'சிலரை புகழ்வதின் மூலம் தாங்கள் யார்?. தங்களின் அறிவு முதிர்ச்சி என்ன? என்பதை பிறருக்கு தெரியப்படுத்தி விடுகிறார்கள் மெத்தப் படித்த வித்தகர்கள்!'

'நாளைப் பொழுது என்றும் நல்ல பொழுதாக உழைப்போம்.!'

' நிமிர்வு - நாம் மார்க்சிய இயக்கத்தில் இணைந்தது, நாளை இங்கு புரட்சி நடக்கும் என்ற எதிர்பார்ப்போடு அல்ல. அது ஒரு நீண்டபயணம் என்பதை நாம் அறிந்திருந்தோம். எதிர் பார்ப்போடு இணைந்தவர்களே எதிர் புரட்சியாளர்களாகினர். எத்தனை இடர் வரினும் அந்த இலட்சியத்தில் நாம் நிமிர்ந்தே நிற்கிறோம். அந்த இலட்சியம் நிறைவேற மரணபரியந்தம் உழைப்போம்.! நிச்சயம்!!.'

'கடைசி வாங்கு - முதுகு சொறிய மனதில்லை. முன்னும் பின்னும் பந்தங் காவ விருப்பில்லை. விலாங்குத்தனம் எனக்கு இருந்ததில்லை

அதனால் என் அணிசார்ந்தவர்களின் கவனிப்பைக்கூட நான் பெறவில்லை. ஏகலைவனாக இருந்தேன். இப்போதும் இருக்கிறேன். ஆயினும் கடைசி வாங்கில் எனக்கோர் இடமிருக்கிறது. இல்லாது விட்டாலும் நான் கவலைப்படமாட்டேன். ஏனெனில் என்னை அறிந்த என் தோழமைகள் அகிலமெங்கும் உள்ளனர். அது ஒன்றே போதும். நன்றி என் தோழமைகளே,!'

மேலதிகத்தகவல்களுக்கு ° நந்தின் சேவியர் பற்றிய விக்கிபீடியாக் குறிப்பு

**சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காஞ்சிரமோடை!**

இதுவரை கால்கமும் காஞ்சிரமோடை எஞ்னும் இப்பகுதியை நான் காஞ்சிரமொட்டை என்றே அறிந்திருந்தேன். இப்பகுதியை நான் அறியக் காரணமாகவிருந்தது எண்பதுகளில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் பொறுப்பேற்று நடத்திய காந்தியத்தின் 'நாவலர் பண்ணை'த் தன்னார்வத் திட்டம். அப்பொழுது மருதோடை வரை மட்டுமே பஸ் செல்லும். அங்கிருந்து பண்ணைக்கு மூன்று மைல்கள் வரையில் நடக்க வேண்டும். இத்தூரத்தைக் குறைப்பதற்காக காஞ்சிரமோடைக் காட்டினூடு பாதை அமைப்பதும் அத் தன்னார்வத் திட்டத்தின் ஓரம்சம். அத்திட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்றவர்களில் நானுமொருவன். அப்பொழுது நான் என் படிப்பை முடித்து வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அப்பகுதி மக்கள் அப்பகுதியைக் காஞ்சிரமொட்டை என்றே அழைத்தார்கள். அல்லது அவ்விதமே எனக்குக் கேட்டது. அதனால் அப்பகுதியின் பெயர் அவ்விதமே என் மனத்தில் படிந்து விட்டது. அண்மையில் எழுத்தாளர் 'பண்டிதர்' க.சச்சிதானந்தனின் 'யாழ்ப்பாணக் காவியம்' நூலின் முன்னுரையை படிக்கும் வரையில் அவ்விதமே எண்ணியிருந்தேன். படித்ததுமே அப்பகுதியின் பெயர் காஞ்சிமோடை என்றும், அதன் வரலாற்று முக்கியத்துவம் பற்றியும் அறிந்துகொண்டேன்.

'யாழ்ப்பாணக் காவியம்' நூலில் எழுத்தாளர் 'பண்டிதர்' க. சச்சிதானந்தன் எழுதியுள்ள முன்னுரையில் காஞ்சிரமோடை பற்றிக் கூறப்பட்டுள்ள பகுதிகள் வருமாறு°

'1958ம் ஆண்டு சிறியேன் நெடுங் கேணியிலிருந்து மருதோடை வழியாகக் காஞ்சிரமோடை சென்று அங்கிருந்து காட்டுப்பூவரசங் குளத்தைக் கடந்து பணிச்சமடு என்னுமிடத்துக்குப் பலமுறை செல்லவேண்டியிருந்தது. இங்கு குறிப்பிடும் காடு மிக அடர்ந்தது. கொடிய வனவிலங்குகளும் பேராபத்தக்களும் நிறைந்துள்ளன. பனிச்சமடுவென்னும் ஏரியின் கரையிலே சிலநாள் வசித்த சிறியேன், மிக உயர்ந்த பாலை மரமொன்றின் உச்சியில் மூன்றாம் அடுக்குப் பரணில் நித்திரை செய்து வந்தேன். ஒருநாள் நள்ளிரவில் கடலிரைவது போல் நீரின் ஓசை கேட்டுப் பயந்தேன். ஆனால் நீர்ப்பெருக்கு சிறியேன் இருந்த இடத்தை அடையவில்லை. மறுநாள் சிறியேனும் வேறு பணியாளர்களும் பாதையற்ற காடுவழியே நீரோசைத் திசைநோக்கிச் சென்றோம். அக்காடுகளிலெல்லாம் இடிந்த பிள்ளையார் கோவில்களும், சிவன்கோவில்களும், தூண்களும் தூபிகளும் வாயிற்படிகளும் காணப்பட்டன. கருங்கல் வேலைகளும் சிற்பங்களும் அங்கங்கே போன வழி யெல்லாம் சிதறிக் கிடந்தன. ஈற்றில் ஒருயர்ந்த பிரதேசத்துக்கு வந்தபொழுது, கருங்கல்லாற் கட்டப்பட்ட ஒரு பெரிய அணைக்கட்டுக் காணப்பட்டது. அங்கு பிரயோகிக்கப்பட்ட நீள்சதுரக் கனவடிவக் கருங்கற்கள் மிகப்பிரமாண்ட மானவை அன்றியும் கருங்கல் வேலை மிக உன்னதமானது. அணையின் நடு விலே சில கருங்கற்கள் குலைந்தமையால் அந்த இடைவழியாக நீர் மிக உயரத்திலிருந்து குதிக்கிறது. ஒரு நீர்வீழ்ச்சிபோன்று குதிப்பதால் பேரிரைச்சல் உண்டாகிறது. விழுமிடத்தில் மிகப் பலமாக நீர்சுழன்று அகப்பட்டவற்றைப் பல பரிவலுவுடன் இழுத்துச் செல்கிறது. கால் வைக்கப்பயமாக இருக்கும். வழிந்த நீர் சிற்றாறு போல் ஓடுகின்றது. அதன் இருமருங்கிலும் கண்ட இயற்கைக் காட்சியை என்னென்பது பூக்களின் மகரந்தம் சொரிந்து, பசுமை கலந்தபொன்போன்று நிலத்திற் பரந்திருப்பது நெஞ்சை அள்ளுகிறது. எத்தனை வண்ணச் சேர்க்கைகள் கொண்ட வண்ணாத்திப்பூச்சிகள்! விதம் விதமான புள்ளிசைகள், மிருகங்களின் உறுமல்கள்! இந்த நீர்வீழ்ச்சியின் ஓசை மனத்தைப் பறையடித்துக் கிளர்த்தியது. அதன் உன்னதம் உள்ளத்தை மீட்டியது. அந்த எழுச்சியே இக்காவியத்தைப் பாடுவதற்குச் சுருதியாயிற்று. பின்னர் காஞ்சிர மோடையில் வாழ்ந்த முத்தரம்மான் என்ற மூத்தோரை இதன் வரலாறு பற்றிச் சிறியேன் கேட்டேன். அவர், 'இது பரராசன் அணைக்கட்டு' என்று கூறினார். இங்கு கருங்கற்களில் பல எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவை மங்கியிருந்தன. இவ்வணைக்கட்டுப் பற்றிச் சரித்திரநூல்களில் தேடியபோது ஒன்றுங் கிடைக்கவில்லை. இப்பிரதேசம், வட, வடமத்திய, கீழ் மாகாணங்கள் பொருந்துமிடத்தில் தமிழ்ப் பிரதேசத்தில் உள்ளது. பதவியாவின் வடக்கே பத்துப் பதினொரு மைல் தூ ரத்திலுள்ளது. புறோகியர் என்பார். புறோகியர் (Brohior 1934 P 41) இது பற்றிக் குறிப்பிட்டிருப்பவற்றைக் கீழே மூலத்திலுள்ளவாறு ஆங்கிலத்தில் தருகின்றோம்.

'About ten or eleven miles down more or less sinuous course of Ma Oyo. which passes out the breach of Padaviya tank. there is an ancient stone dam or weir which is entitled to take one of the foremost place among the structures of the kind in Ceylon/ This is known Varnardi Palam. Only one authority has ever inspected this monument of labour/ Parker Sessional paper. XX11 of 1886#

**கவிஞர்**
**வ.ஐ.ச. ஜெயபாலனின்**
**'இலையுதிர்கால நினைவுகள்'**
**மற்றும் 'வசந்த காலம் 1971'**

நவீன இலங்கைத் தமிழ்க் கவிஞர்களில் என்னை மிகவும் கவர்ந்த கவிஞர்களிலொருவர் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன். கவிஞர் என்று அறியப்பட்டாலும் இவர் கவிதை, கதை, கட்டுரையென இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தடம் பதித்த எழுத்தாளர்களிலொருவர். சிறப்பான சொற்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆர்வம் காட்டி கவிதைகளைப் படைக்கும் பலர் விடும் முக்கிய தவறு அவர்கள் தம் உணர்வுகளைக் கவிதைகளாக்கு வதில்லை. தம் அறிவினை,

புலமையினை வெளிப்படுத்தவே கவிதைகள் எழுதுகின்றார்கள். உணர்வுகளின் வெளிப்பாடாக அவர்கள்தம் கவிதைகள் இல்லாததனால்தான் அவர்கள்தம் கவிதைகள் வாசகர்களின் இதயங்களைத் தொட்டு அவர்கள்தம் இதயங்களில் இடம் பிடிப்பதில்லை. இவர்கள் தம் மேதாவித்தனத்தை வெளிப்படுத்தும் சாதனமாகக் கவிதையெழுதுதலைப் பார்க்கும் போக்கினைக் கைவிட வேண்டும்.

இவ்விதம் கவிதை எழுதுபவர்களுக்கும், அன்று தம் மேதாவிலாசத்தைக் காட்ட மரபுச்சூத்திரத்துக்குள் கவிதைகள் படைத்தவர்களுக்குமிடையில் வித்தியாசமில்லை. சிறந்த மரபுக் கவிஞர்கள் உள்ளனர். அவர்கள்தம் கவிதைகளை நான் இங்கு குறிப்பிடவில்லை. மரபுக்கவிதையின் எதிரியும் நானல்லன். மரபுக்கவிதை படைப்பதாக எண்ணித் தம் புலமையினை வெளிக் காட்டுவதற்காகக் கவிதைகள் படைத்தவர்களையே குறிப்பிடு கின்றேன். அவர்களது உணர்வுகளை வெளிப் படுத்துவதற்குப் பதில், புலமையினை வெளிப்படுத்தியவர்கள் அவர்கள். அவர்களைப்போன்றே இன்று வாழும் கவிஞர்கள் பலர் உள்ளனர். இவர்கள் புலமையினைக் காட்ட எழுதும் கவிதைகளைக் குறிப்பிடுகின்றேன். இவர்கள் தம் வாழ்க்கை அனுபவங்கள் விளைவாக எழுந்த, எழக்கூடிய உணர்வுகளை வெளிப்படுத்தும் சாதனமாகக் கவிதையினைக் கருத வேண்டும். அவ்விதம் கருதியே கவிதைகளை எழுத வேண்டும். அவ்விதம் எழுதினால் இவர்கள்தம் கவிதைகளும் நீண்ட காலம் நிலைத்து நிற்கும். இவ்விடயத்தில் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் வித்தியாசமானவர். தன் வாழ்க்கை அனுபவங்கள் தந்த உணர்வுகளையே கவிதைகளாகப் படைக்கின்றார். அதனால்தான் அவற்றைக் கேட்கையில்யே சிந்தையில் இன்பம் பொங்குகின்றது. எம்மை அவரது கவிதை வரிகள் ஈர்க்கின்றன.

அவரது புகழ்பெற்ற கவிதைகளிலொன்று 'இலையுதிர்கால



நினைவுகள்'. முக்கியமான புகலிட அனுபவங்களை விபரிக்கும் கவிதை. கனவு (தமிழகம்) சஞ்சிகையின் 'இலங்கைச் சிறப்பிதழ்' (ஆகஸ்ட் 1991) மலரில் வெளியான கவிதை. இக்கவிதையில் வரும் படிமங்கள் (உருவகங்கள் மற்றும் உவமைகள்) என்னை மிகவும் கவர்ந்தவை. காற்றுக் குதிரைகள், வானிலோர் அகதியான சூரியன், புது அகதி போல் தரையிறங்கும் பழுத்த பேர்ச் இலை, வாழ்விழந்து வசதி பெருக்குகின்ற மனிதச் சருகுகள், ஓயாது இலை உதிர்க்கும் முதுமரமான தாய் நாடு, 'காற்றில் விதிக் குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத் தலையணையான புகலிடத் தமிழ்க் குடும்பங்கள்.. இவ்விதம் படிமங்கள் மலிந்த நல்லதொரு கவிதை 'இலையுதிர்கால நினைவுகள்'. கவிதையில் வரும் மக்பை என்னும் காக்கையினப் பறவை குளிர்காலம் வந்தபோதும் ஏனைய துருவப் பறவைகளைப்போல் வெப்ப நாடுகள் நாடி மிண்டும் பறக்கவில்லை. கவிஞனோ தன் உயிர் காப்பதற்காக வெப்ப நாட்டிகிருந்து துருவத்துக்கு ஓடி வந்துள்ளான். ஆனால் மக்பை பறவையோ குளிர் வந்தபோதும் ஏனைய பறவைகளைப்போல் வெப்பநாடுகள் நோக்கிப் படையெடுக்காமல் இருக்குமிடத்திலேயே வாழுமொரு பறவை. அதனால்தான் அப்பறவை இழிவாகக் கவிஞனை நோக்குகின்றது. இக்கவிதையில் வரும் பின்வரும் வரிகள் என்னை மட்டுமல்ல பலரையும் கவர்ந்தவை:

யாழ்நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினிலே
தமிழ்நாட்டில் என் அம்மா
சுற்றம் பிராங்போட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ்
நாட்டில்

நானோ
வழிதவறி அலாஸ்க்கா வந்துவிட்ட
ஒட்டகம்போல்
ஒஸ்லோவில்'

'பாட்டனார் பண்படுத்தி
பழமரங்கள் நாட்டி வைத்த
தோப்பை அழியவிட்டு
தொலை தேசம் வந்தவன் நான்.

என்னுடைய பேரனுக்காய்
எவன் வைப்பான் பழத் தோட்டம்.'

கனவு இலங்கைச் சிறப்பிதழை வாசிக்க: https://noolaha.net/project/08/788/788/pdf

### கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலனின் 'வசந்த காலம் 1971

ரோகண விஜேவீராசுதந்திரமடைந்த இலங்கையில் தென்னிலங்கையில் நிகழ்ந்த முதல் புரட்சி 71இல் நடைபெற்ற ரோகண விஜேவீரா தலைமையிலான ஜேவியினரின் 'சேகுவேராப் புரட்சி' என்று கூறப்பட்ட புரட்சி. புரட்சி தோல்வியில் முடிந்தாலும் முக்கியமானதொரு நிகழ்வு. ஆயிரக்கணக்கில் சிங்கள இளைஞர்களைப் பலியெடுத்த புரட்சி. அப்புரட்சியின் குறியீடுகளிலொன்றாக நிற்பது கதிர்காம அழகி மன்னம்பெரியின் மரணம். 2009இல் நடைபெற்ற யுத்தத்தின் குறீயீடுகளிலொன்றாக

எவ்விதம் இசைப்பிரியாவின் மரணம் உள்ளதோ அத்தகையது மன்னம்பெரியாவின் மரணம். மன்னம்பெரியாவின் மரணத்துக்குப் பின்னர் நீதி கிடைத்தது. இசைப்பிரியாவின் மரணத்துக்கு இன்னும் கிடைக்கவில்லை.

ஜேவியினரின் புரட்சி நடைபெற்ற காலத்தில் நான் எட்டாம் வகுப்பு மாணவனாக யாழ் இந்துக் கல்லூரியில் சேர்ந்திருந்தேன். உடனடியாக விடுமுறை விட்டார்கள். நீண்டகால விடுமுறை. உடனடியாக வவுனியா திரும்பி விட்டேன். அப்பொழுது வவுனியாவில் வசித்துக் கொண்டிருந்தோம். முதன் முதலாக இராணுவத்தினரைச் சுழல் துப்பாக்கிகளுடன் கண்டது அப்போதுதான். யாழ் நகரசபை மைதானத்தில் வந்திறங்கும் இந்தியக் ஹெலிகாப்டர்களைப் பார்த்திருக்கின்றேன். அவற்றிலிருந்து மடுக்கந்தைப் பகுதியில் மறைந்திருந்த போராளிகள் மீது குண்டுகள் போடுவார்கள். காற்றினூடு அவ்வோசை கேட்பதுண்டு. நாம் எண்ணுவதுண்டு. நினைவிலுள்ளது. புரட்சி தோற்று, நாளுக்குநாள் சரணடையும் இளைஞர்களைப் பற்றிய விபரங்களைத் தாங்கிப் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. வாசித்திருக்கின்றோம்.

அப்புரட்சியினைப்பற்றி கவிஞர் ஜெயபாலன் தனது வசந்த காலம் 71 கவிதையினைப் பகிர்ந்திருந்தார். அதனை இங்கு பகிர்ந்து கொள்கின்றேன். அக்கவிதையில் வரும் பின்வரும் வரிகள் இலங்கைத் தமிழர்களின் ஆயுதபோராட்டக் காலகட்டத்தினை நினைவுக்குக் கொண்டு வந்தன.

'எனினும் இலங்கைத் தீவில்
சிங்களக் கிராமப் புறங்களில்
மட்டும்
இளைஞர்கள் சில பேர் ஒருவரை
ஒருவர்
இரகசியமாகத் தட்டி எழுப்பினர்.

நீண்ட நீண்ட இரவுகள் விழித்து
இருளில் தூங்கும் மக்களுக்காக
மலைகளை அகற்றும்
பரம ரகசியம் பேசிக் கொண்டனர்.

திடீரென அந்த வசந்த நாட்களில்
தெருக்கள் தோறும் துப்பாக்கிச்
சன்னதம்
குடியானவரைத் திடுக்கிட
வைத்தது.

வீதி மருங்கெலாம் இரத்தப் பூக்கள்'

வசந்த காலம் 1971 வ.ஐ.ச. ஜெயபாலன் -

காடுகள் பூத்தன,
குயில்கள் பாடின,
எந்த வசந்தமும் போலவே
இனிதாய்
எழுபத் தொன்றிலும் வசந்தம்
வந்தது.

இராமன் ஆளினும் இராவணன்
ஆளினும்
ஊர் ஊராக என்றும் போலவே
எந்த ஒரு பெரிய சவால்களுமின்றி
அதே அதே பெரிய குடும்ப
ஆதிக்கம்
அந்த வசந்த நாளிலும் தொடர்ந்தது.

சேற்றில் உழல்வதை இயல்பாய்க்
கொள்ளும்
எருமைகள் போலச் சொரணைகள்
செத்த
விதியே என்னும் கிராமியப் பண்பை

அந்த வசந்த நாட்களில் புதிதாய்
எந்த ஓர் விசயமும்
உடலுப்பிடவில்லை

எந்த வசந்த நாட்களும் போலவே
அந்த வசந்த நாட்களும் நடந்தன.

'எனினும் எனினும் இலங்கைத்
தீவில்
சிங்களக் கிராமப் புறங்களில்
மட்டும்
இளைஞர்கள் சில பேர் ஒருவரை
ஒருவர்
இரகசியமாகத் தட்டி எழுப்பினர்.

நீண்ட நீண்ட இரவுகள் விழித்து
இருளில் தூங்கும் மக்களுக்காக
மலைகளை அகற்றும்
பரம ரகசியம் பேசிக் கொண்டனர்.

திடீரென அந்த வசந்த நாட்களில்
தெருக்கள் தோறும் துப்பாக்கிச்
சன்னதம்
குடியானவரைத் திடுக்கிட
வைத்தது.

வீதி மருங்கெலாம் இரத்தப் பூக்கள்,

இருண்ட அந்தக் கிராமங்கள்
தோறும்
எத்தனை எத்தனை இள
ஞாயிறுகள்
கரிசல் மண்ணுள் புதைக்கப்பட்டன.

குயில்கள் பாட
திருமண ஊர்வலம் போல வந்த
எழுபத் தொன்றின் வசந்த காலம்
ஆந்தைகள் அலற
மரண ஊர்வலமாகக் கழிந்தது.

எங்கள் கிராமங்கள்
மண்வளம் மிகுந்தவை

எதைப் புதைத்தாலும்
தோப்பாய் நிறையும்.






படம் இலக்கியத் தோட்டம்

# ஆசானின் அருண்மொழி மர்மம்

## A man is known by the company he keeps!

ஆசான் ஜெயமோகன் கனடாவில் இலக்கியத்தில் அறம் பற்றியதொரு பேருரை நிகழ்த்தப் போகிறார் என்று, இலக்கியத் தோட்டம் 'அனைவரையும் வரவேற்கிறோம்' றிருந்தது.

இதென்னடா, பட்ட மரத்தில பால் வடியுது?

இலக்கிய ஆதீன 'மடைப்பள்ளித் 'தொட்டால் தீட்டு' 'பெரியவாள்' ஆகும் நோக்கில், இலக்கியத்தை உயர்ஜாதி மேல்தட்டு விவகாரமாக, விருது வைபவங்களை Invitation Only Black Tie Affair ஆக்கி வைத்திருந்த இலக்கியத் தோட்டம், என்னைப் போன்ற தோட்டக்காரச் சாமான்யர்களையும், பில்ஸ்தீன்களையும், 'காமன் மேன்'களையும் எல்லாம், 'அன்போடு' வரவேற்று உபசரித்திருந்தது, ஐந்து டொலர் கட்டணத்தோடு ஆசானின் அருண்மொழி காண!

நுழைவுக் கட்டணம் அறவிடாத, மாற்றுக் கருத்துத் தோழர்களின் கூட்டங்களிலேயே, வடையும் டீயும் இலவசமாக உபசரிக்கப்படும்போது, ஐந்து டொலர் நுழைவுக் கட்டணத்திற்கு இலவச இணைப்பாக சிற்றுண்டிப் பொதி கிடைக்குமோ? அல்லது அங்கே விரிக்கப்பட்ட புத்தக ஸ்டாலில், அதே சிற்றுண்டிப் பொதி கட்டணத்தோடு, 'செவிக்குணவில்லாத போழ்தில் சிறிது வயிற்றுக்கும் ஈயப்படுமோ?

யாருக்குத் தெரியும்?

எது என்னவோ, சாமான்யர்களும், 'காமன்மேன்'களும் இலக்கிய உலகின் ஜாம்பவான்களோடு, 'தோள் உரச', (செல்பி எடுக்கும் போதாவது!) சாமான்யர்களுக்கும் சமரசம் உலாவுகின்ற இலக்கிய தோ(கூ)ட்டம் என்பதே, ஒரு 'மனித இனத்தின், அல்லது குறைந்த பட்சம் தமிழ் இலக்கிய உலகின் முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் தான்.

புலிகள் தங்கள் கூட்டங்களை பிரிட்டிஷ் பாராளுமன்ற அறைகளிலும், ஜெனிவா ஐ.நா மண்டப தேனீர்க் கடைகளிலும் நடத்தி விட்டுப் பீலா விடுவது போல, நகரசபை மண்டபத்தில் பேருரை நிகழ்ந்தது குறித்து ஆசானும் பிரமித்திருந்தார்.

மாற்றுக்கருத்துத் தோழர்களின் நிகழ்வு கூட கடந்த வாரங்களில் அவ்வாறானதொரு 'சேம்பரில்' தான் நடைபெற்றிருந்தது.

பதிவு செய்யப்பட்ட எந்தச் சமூகச் சங்கங்களுக்கும், கறுப்பு டை கட்டும் அவசியம் இல்லாமல், இலவசமாகவே இடம் கிடைக்கும், சமரசம் உலாவும் இடம் அது. கல் தோன்றி மண் தோன்றாக் காலம் முதல், பின் தோன்றிப் புலன் பெயர்ந்த

**‘ரொறன்ரோவில் உரைக்கு கட்டணம் வைத்தது இதுவே முதல் முறை என்றனர்’ என்று ஆசானும் பெருமிதப்பட்டிருந்தார்.**

**மார்க்கம் நகர சபையில் உள்ள ஃபிளேட்டோ அரங்கில் நிகழ்வுகளுக்கு கட்டணம் வைப்பது வழமை. பெரும் கலை நிகழ்வுகளுக்கானது என்பதால், அதற்கான வாடகையும் அதிகம்.**

**ஆனால், நகரசபை ‘மேயர், சேர்மன்களும் வார்டு கவுன்சிலர்களும்’ கூட்டம் நடத்தும் சேம்பருக்குள் நடந்த நிகழ்வுக்கு, ‘கட்டணம் வைத்திருப்பதாக நான் அறிந்தது இதுவே முதல் முறை!’.**

*பின்னாலும் சங்கம் அமைத்து, அடிபட்டுப் பிரிந்து, போட்டிச் சங்கம் அமைக்கின்ற புலன் பெயர் ரமில்ஸின் வேட்டி சால்வைப் பணச்சடங்குக் கவிதை வெளியீட்டு விழாக்கள் எல்லாம் வாராவாரம் வழமையாக நடக்கும் இடம் தான்.*

*‘ரொறன்ரோவில் உரைக்கு கட்டணம் வைத்தது இதுவே முதல் முறை என்றனர்’ என்று ஆசானும் பெருமிதப்பட்டிருந்தார்.*

*மார்க்கம் நகர சபையில் உள்ள ஃ பிளேட்டோ அரங்கில் நிகழ்வுகளுக்கு கட்டணம் வைப்பது வழமை. பெரும் கலை நிகழ்வுகளுக்கானது என்பதால், அதற்கான வாடகையும் அதிகம்.*

*ஆனால், நகரசபை ‘மேயர், சேர்மன்களும் வார்டு கவுன்சிலர்களும்’ கூட்டம் நடத்தும் சேம்பருக்குள் நடந்த நிகழ்வுக்கு, ‘கட்டணம் வைத்திருப்பதாக நான் அறிந்தது இதுவே முதல் முறை!’.*

*எனக்குத் தெரிந்தவரை, ஸ்காபரோ நகர மண்டபம் முற்றிலும் இலவசமாகவே சமூக நிகழ்வுகளுக்காக வாடகைக்கு வழங்கப்படுகிறது. அங்கே கட்டணம் அறவிட அனுமதியில்லை.*

*‘பணம் செலுத்திய ரசீதைப் பார்வையிட்டு’ பிரசாதம் வழங்கும் இலக்கிய வாயிற்காப்போர்களை ஒருபோதும் அங்கே நான் கண்டதில்லை.*

*நிகழ்வை நடத்தியவர்கள் ஓசியில் மண்டபத்தை வாடகைக்கு எடுத்து, விதிகளை மீறி டிக்கட்டுக்களையும் விற்று விட்டு, ஆசானுக்கு அடித்து விட்டிருக்கிறார்கள்.*

*ஆசானும் தன் பங்குக்கு…!*

*இவ்வாறானதொரு அரங்கில் தான், முன்னாள் லிபரல் கட்சித் தலைவர் பொப் ரே, புலிகளின் சிறார் படைச் சேர்ப்புப் பற்றி, மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்ட அறிக்கை குறித்து பேச வந்த போது, புலிக் கூட்டம் களேபரம் பண்ணி, புலிகளுக்கான கனடியத் தடைக்கான இறுதி ஆணி அடிக்கப்பட்டது.*

*ஒருவேளை, பணம் அறவிட்டதற்கான காரணமே, புலிகள் பற்றிய ஆசானின் கருத்துக்களுக்கு எதிராகச் சபை குழப்ப, திறந்த வீட்டில் நாய் புகுந்தது போல, புலிவால்களும் நுழையக் கூடும் என்ற பயமாக இருந்திருக்கக் கூடும்.*

*அல்லது என்னைப் போன்றோர் வந்தால், ‘மன்னிக்கவும். அரங்கம் நிறைந்து டிக்கட்டுக்கள் விற்றுத் தீர்ந்து விட்டன. நூறு கோடி வசூல்’ என்று கதை விடுவதற்காகவாவதும் இருக்கலாம்.*

*தங்களுக்கு விசேட அழைப்புக் கிடைத்ததாக சிலர் பேஸ்புக்கில் பதிவிட்டிருந்தார்கள்.*

*நல்ல காலம், உந்த இலக்கியப் பெருந்தகைகளோடு உறவாடி, விசேட அழைப்பு கிடைக்கும் அளவுக்கு நான் இலக்கியகாரனாக இல்லாமல் இருப்பது.*

*இருந்திருந்தால், அழைப்பு விடுக்கும்போது, ‘முகத்தை முறிக்க முடியாமல் போயிருக்க வேண்டி இருந்திருக்கும்.*

*ஐந்து டொலரையும் ‘குறைக்க மாட்டியளோ?’ என்ற கேள்விக்கான தேவை இல்லாமல்!*

*ஆசான் வந்தார்! சொன்னார்! சென்றார்!*

*ஆனாலும், அவர் திருவாய் மலர்ந்தருளிச் செய்த அருண்மொழிகளை நானும் தான் உடனடியாகத் தேடிக் கொண்டிருந்தேன்.*

*அஞ்சலட்டை கண்ட, விருது கொடுத்த புரவலருக்கு ‘கடவுள் தொடங்கிய இடம்’ மியூசிக் வீடியோ யூடியூப்பில் வந்து, பாட்டெழுதியவருக்கு விருதுப் பரிசிலும் கொடுத்து முடிந்த வேகத்தைப் பார்க்கும்போது, ஆசான் அருளிச் செய்தவற்றை இன்னமும் காண முடியவில்லையே என்பது ‘அருண்மொழி மர்ம’மாகத் தான் இருந்தது.*

*எப்போதுமே ஆசானுக்கு நாவில் சனி அருள் பாலித்தபடி!*

*எனக்கு வாழ்வில் அருள் பாலிப்பது போல!*

*அப்படி எந்தச் சர்ச்சையும் இல்லாமல், எந்த உப்புச் சப்புமில்லாமல் எதையாவது பேசியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றியிருந்தது.*

*அல்லது, அதையெல்லாம் விழுங்கிச் சாப்பிடுவது போல, ஏடாகூடமாக எதையாவது அருண்மொழிந்திருப்பாரோ!?*

*நண்பர் கிரிதரன் எழுதிய குறிப்புத் தவிர்ந்து, இந்த உரை குறித்து சுடச் சுட ‘பிரேக்கிங் நியூஸ்’ வரவில்லை*

என்பது ஆச்சரியமாக இருந்தது.

சரி, நம்மைப் போன்ற சாமான்யர்களை விட்டுத் தள்ளுங்கள்.

ஆசானுக்கு என்று ஒரு அடிதடிப்பொடிகள் கூட்டமே இருக்கிறதே.

யாராவது ஆசான் பற்றி வாயைத் திறந்தால், 'கதா'யுதங்களோடு வந்து இறங்குவதற்கு.

அவர்களுக்குக் கூட, ஆசானின் நா அசைந்து அகிலமெல்லாம் அசைந்தது பற்றி அறிந்து கொள்ள ஆவலாயிருக்காதா?

அல்லது, அவர்களுக்கும் அஞ்சு டொலர் கையில காசு, வாயில தோசைமாவு தானா?

இப்படியெல்லாம் இந்த மர்மங்களைச் சிக்கெடுத்தபடி, விசில் அடிக்கத் தயாராக ஒரு கையும், அதை செல்பி எடுக்க மறுகையுமாக, நகத்தைக் கடித்தபடி, தயாராக சீட் நுனியில் உட்கார்ந்திருக்க...

வீடியோ சாவகாசமாக வந்து சேர்ந்தது.
மோசமான ஒலிப்பதிவுடன்!

ஆசான் உரைத்த அருண்மொழிகள் வெளிவரத் தாமதமானால் தான் என்ன?

ஆசானதும் விருதுப் புரவலரதும் பரஸ்பர பிரமிப்புகள் அருண்மொழிகளை விட முக்கியமானவையாக முன்தோன்றின.

அருஞ்சொல்லில் ஜெயமோகன் பற்றி எழுதிய கட்டுரையில், 'விஷ்ணுபுரம் வெளிவந்த பிறகு, அவர் வாழ்க்கையில் பெரும் திருப்பு முனை ஏற்பட்டது. முதல் இருபது பக்கத்தைப் படித்து விட்டு புத்தகத்தைக் கீழே வைத்து விடுவேன். பிரமிப்பு தாங்க முடியவில்லை. முடிந்து விடுமோ எனப் பயந்து கொண்டு மெதுமெதுவாக வாசித்தேன். அற்புதமான நாவல் என்று கண்டுபிடித்த முதல் பத்துப் பேர்களில் நானும் ஒருவனாக இருப்பேன்.' என்று அ.முத்துலிங்கம் பயந்து கொண்டே பிரமித்திருப்பார்.

**ஏற்கனவே அ.முத்துலிங்கம் ஆசான் பற்றி இத்தனை பிரமிப்பு என்றால், பூரிப்பு அடைந்த ஆசான் தனது கடனை உரிய இடத்தில் செலுத்த வேண்டாமா?**

**'தனித்தனி நபர்களால் இயற்றப்பட்டாலும், கலை இலக்கியம் என்பது ஒரே ஒழுக்குத் தான். அதில் தான் நானும் அ.முத்துலிங்கமும் ஷேக்ஸ்பியரும் கம்பனும் இருக்கிறோம்.'**

**இதைப் பற்றி ஓஷோ என்ன சொல்லியிருப்பார் என்ற மலைப்பிலும், அதிர்ச்சியிலும் இருந்தே நான் இன்னமும் மீளவில்லை. இதற்குள் அசோகமித்திரன் தன் புதைகுழிக்குள் புரள்வாரா, அல்லது கங்கைக்குள்ளோ, கடலுக்குள்ளோ கண்ணீர் விட்டுக் கதறுவாரா என்பதைப் பற்றி என்னால் எப்படிக் கற்பனை செய்ய முடியும்?**

Give credit where it's due.

இதை அருண் அம்பலவாணர் பக்கத்தில் கண்டேன் என்பதைச் சொல்லாவிட்டால், 'இது தான் உன் இலக்கிய அறமா?' என்று, பிணி... அல்லது சனி... என்னையும் விடாது!

ஏற்கனவே அ.முத்துலிங்கம் ஆசான் பற்றி இத்தனை பிரமிப்பு என்றால், பூரிப்பு அடைந்த ஆசான் தனது கடனை உரிய இடத்தில் செலுத்த வேண்டாமா?

'தனித்தனி நபர்களால் இயற்றப்பட்டாலும், கலை இலக்கியம் என்பது ஒரே ஒழுக்குத் தான். அதில் தான் நானும் அ. முத்துலிங்கமும் ஷேக்ஸ்பியரும் கம்பனும் இருக்கிறோம்.'

இதைப் பற்றி ஓஷோ என்ன சொல்லியிருப்பார் என்ற மலைப்பிலும், அதிர்ச்சியிலும் இருந்தே நான் இன்னமும் மீளவில்லை. இதற்குள் அசோகமித்திரன் தன் புதைகுழிக்குள் புரள்வாரா, அல்லது கங்கைக்குள்ளோ, கடலுக்குள்ளோ கண்ணீர் விட்டுக் கதறுவாரா என்பதைப் பற்றி என்னால் எப்படிக் கற்பனை செய்ய முடியும்?

Literary parlance இல் அதிகம் பயன்படுத்தப்படும் இந்த பரஸ்பர பிரமையும், பிரேமையும், பிரமிப்பும் என்ன கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது பற்றிச் சில நேரம் இலக்கியப் பரிச்சயம் இல்லாதோருக்கு மயக்கங்கள் இருக்கக் கூடும்.

இதை நம்மைப் போன்ற சாமான்யர்களும், காமன் மேன்களும், in layman's terms, முதுகு சொறிதல் என்று அழைப்பதுண்டு.

சென்ற அபத்தம் இதழ் இலக்கியமும் அறமும் பற்றிய ஏடு இட்டோர் இயலும், ஆசானுக்கு ஒரு சாமான்யன் கட்டுரையும் தாங்கி வெளிவந்திருந்தது.

அந்தக் கட்டுரையும் ஏற்கனவே எழுதத் தொடங்கி, ஆசான் வருகிறார் என்று அறிந்ததும், அதை வெளியிடாமல் கடந்த இதழில் வெளியிட்டது பற்றியும் குறிப்பிட்டிருந்தேன்.

அதை விட, பேராசிரியர் அ. ராமசாமியுடனான அபத்தத்தின் 'பாசாங்குகள் இல்லாத பகிர்வின்' இரண்டாம் பாகத்தில், முன்னர் வந்திருக்க வேண்டிய, ஆசான் பற்றிய சில குறிப்புகளையும், பேஸ்புக்கில் 'விசேட பதிப்பாக' வெளியிட்டிருந்தோம்.

இதன் நோக்கமே, ஆசானின் பேருரையை நினைவூட்டி, அதைப் பலரும் சென்று கேட்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான்.

அபத்தத்தின் ஏடு இட்டோர் இயலைப் பேஸ்புக்கில் பகிர்ந்த கற்சுறாவும், அந்த உரையைக் கேட்கும்படி தான் குறிப்பிட்டிருந்தார்.

தேடலில் கிடைக்கின்ற புதிய கருத்துக்களால் மட்டுமே சிந்தனை செழுமையடைய முடியும். ஏற்கனவே கற்றுக் கொண்ட, அல்லது தாங்கள் கொண்டிருக்கிற கருத்துக்கள் மட்டுமே உண்மை என்ற நினைப்போடு, காற்று நுழைவதற்கு கதவுகளைத் திறக்காமல் மூடி வைத்திருக்கும், சிந்தனைக் குட்டை தேங்கியிருக்கும் இலக்கிய, அரசியல் பிரகிருதிகள் தான் எங்கள் தமிழ்ச் சூழலில் அதிகம்.

அதிலும் ஆசான் மாதிரியானோர் புதிதாக எதையாவது அருண்மொழிந்தால் (அல்லது உளறினால்!) தானே அதைப் பற்றி நாங்கள் விவாதிக்க முடியும்.

ஆனாலும், இந்த உரையை நேரடியாகக் கேட்பதற்கு நான் விரும்பியிருக்கவில்லை.

என்னுடைய பிரசன்னம் ஒரு அனாவசியமான distraction ஆகவோ, side show ஆகுவதையோ நான் விரும்பவில்லை. நாங்கள் போவதா என்பது பற்றிய கற்சுறாவுடனான உரையாடலின் போதும் அதை நான் சொல்லியிருந்தேன்.

'அது அவருக்கான இடம். தன்னுடைய கருத்துக்களை அவர் எந்த அனாவசிய தலையீடுகளும் தலையிடிகளும் இல்லாமல் தெரிவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.'

கருத்துக்களோடு உடன்படா விட்டாலும், அதைச் சொல்வதற்கான சுதந்திரத்தை மதிப்பது தானே எங்களது இயல்பு.

'உவர் எப்படி உதைச் சொல்லலாம்? நீர் எப்படி அதைப் பிரசுரிக்கலாம்?' என்கிறவர்களுக்கு எல்லாம், 'முதல்ல அவனைக் கதைக்க விடு! அவன் என்ன சொல்றான் எண்டதை முதல்ல கேட்பம்!' என்று தானே சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**எனக்குப் பிரமாண்டங்கள் பற்றி எந்தப் பிரமிப்பும் இருந்ததில்லை என்பதால் பல் இளிப்புக்கு... வாய்ப்பே இல்லை, ராஜா!**

**எல்லாம் பற்றி எல்லாமும் தெரிந்த மேதை என்ற கணக்கில், அமெரிக்காவில் பெண்களுக்கான வாக்குரிமை 1972 ல் தான் வழங்கப்பட்டது என்று, போகிற போக்கில் ஆசான் அடித்து விட்ட போது, 'அப்ஜக்ஷன் யுவர் ஆனர்! அது 1920' என்று மூஞ்சிக்கு நேரே சொல்லி மூக்குடைத்து, என் மேதாவித்தனத்தை உலகறியச் செய்ய வேண்டும் என்பதெல்லாம் எனக்கு ஆகாதவை!**

அதிலும் attention seeking என்பது எனக்கு ஆகாத ஒன்று. எனக்கு மேடையில் மைக்கைத் தந்து மரியாதை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் அளவுக்கு நான் என்ன பெரிய ஒளிவட்டக் கொம்பனா?

அல்லது, தமிழ்நாட்டு நடிகையின் கையைக் குலுக்க, பணம் கட்டி வரிசையில் நின்ற யாழ்ப்பாணிகள் மாதிரி, ஆசானோடு செல்பி எடுக்க முன்னால், 'நானும் இரண்டு சஞ்சிகை நடத்தினனான்', 'ஒரு புத்தகம் விட்டனான்', 'நான் ஒரு poet', 'நான் குறும்புப்பட பிலிம்மேக்கர்' 'நான் ஒரு பூடகர்!' என்று என்னை அறிமுகப்படுத்திப் பல் இளித்துப் படம் எடுத்து, ஆசானின் பிறந்த நாளுக்கு 'நண்பர் ஆசானோடு!' என்று பேஸ்புக்கில் படம் போடுகிறவனும் இல்லை.

எனக்குப் பிரமாண்டங்கள் பற்றி எந்தப் பிரமிப்பும் இருந்ததில்லை என்பதால் பல் இளிப்புக்கு... வாய்ப்பே இல்லை, ராஜா!

எல்லாம் பற்றி எல்லாமும் தெரிந்த மேதை என்ற கணக்கில், அமெரிக்காவில் பெண்களுக்கான வாக்குரிமை 1972 ல் தான் வழங்கப்பட்டது என்று, போகிற போக்கில் ஆசான் அடித்து விட்ட போது, 'அப்ஜக்ஷன் யுவர் ஆனர்! அது 1920' என்று மூஞ்சிக்கு நேரே சொல்லி மூக்குடைத்து, என் மேதாவித்தனத்தை உலகறியச் செய்ய வேண்டும் என்பதெல்லாம் எனக்கு ஆகாதவை!

கேள்வி நேரத்திலும், யாராவது என்னைத் திரும்பிப் பார்த்தாலும், 'நீங்கள் விசயம் தெரிஞ்ச ஆக்கள் கதைக்கிறியள். உதுக்குள்ள நான் என்ன சொல்ல இருக்குது!?' என்று, பணிவன்போடு மறுத்து விட்டுப் போகிறவன் நான்.

அந்தத் தளம் அவருக்கானது. தான் விரும்பியதைச் சொல்வதற்கான சகல உரிமைகளும் சுதந்திரங்களும் அவருக்கு உண்டு.

தூஷணம் பேசிக் கலைக்க நான் என்ன இன்னொரு யாழ்ப்பாணியா?

எனவே, ஏற்கனவே முகமூடிகளோடு வந்திருக்கும் புலன் பெயர் இலக்கியச் செம்மல்களுக்குள், எம்.ஜி.ஆர் மாதிரி, மாறுவேடம் பூணவும் முடியாது.

நேரில் போக விரும்பா விட்டாலும், இயல்பாகவே என்னுள் இருக்கும் தேடல் காரணமாக, அந்த உரையைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

ஆனால், அவரும் பணம் கட்டிய ரசீதைக் காட்டினால் தான் அருள்வாக்கு சொல்கிற தற்போதைய கோர்ப்பரேட் சாமிமார் போலவோ, கனடாவில் தமிழ்க் பலசரக்குக்குக் கடைகளின் நிலக்கீழ் பகுதியில் எழுந்தருளி, சர்வ இன்னல் தீர்க்கும் தமிழ்நாட்டு 'Black Magic Woman' சோதிடர்கள் போலவோ, கையில காசு, முகத்தில தோசைமாவு நிலைக்கு வந்து விட்டார்.

மேலே சொன்ன காரணங்களுக்காக, நான் இந்த நிகழ்வைத் தவிர்க்க விரும்பியிருந்தாலும், போக விரும்பியதற்குக் காரணம் உண்டு.

ஆசானைப் பார்த்து அருள் பெறுவதற்காகவோ,

அல்லது என் கனரக ஆயுதங்களோடு களமிறங்கிச் சுட்டுத் தள்ளவோ… அதுதான் ஆசானின் கம்பீரத் தோற்றத்தைப் படம் பிடிப்பதற்காகவோ இல்லை. அதற்கு அனுமதித்திருக்கவும் மாட்டார்கள்.
All rights reserved to the *ஆசானின் அருண்மொழி* copyright owners!

நான் போக விரும்பியதெல்லாம், ஆசானோடு அளவளாக அங்கு வருகின்ற நம் புலன் பெயர் இலக்கியச் செம்மல்களின் உடல்மொழிச் சுவாரஷ்யங்களைப் பார்த்து மகிழ்வதற்கு.

ஆசானைக் குஷிப்படுத்தி, நெருக்கத்தை ஏற்படுத்தவும், காட்டவுமான வளைவு, நெளிவு, குழைவுகளைப் பார்க்க வேண்டும் என்பது உண்மையாகவே, நம்புகிறீர்களோ இல்லையோ, எனக்கு விருப்பமானதாக இருந்தது.

முன்பு எஸ்.ராமகிருஷ்ணன் வந்தபோது, அவர் எழுதிய நாடகத்தை மேடை ஏற்றியபோது, அவருக்குப் பக்கத்தில் இருந்தவரின் உடல்மொழி பற்றி அபத்தத்தில் எழுதியிருக்கிறேன்.

இவ்வாறான தருணங்களில், நம் புலன் பெயர் இலக்கியப் பெருந்தகைகளைப் பார்க்கும்போது, எனக்கு வெட்கமாகவும் கூச்சமாகவும் இருக்கும்.

படைப்பாளிக்கு ஒரு குறைந்த பட்சத் தன்னம்பிக்கை இருக்க வேண்டும்.

என்னைப் போல திமிர் இல்லாவிட்டாலும்!

தன்னை விட மேலானவர் என்று கருதுகிற, தான் அடையக் கனவு காணும் இடத்தில் இருப்பவர் என்று கருதுகிற ஒருவரைக் கண்டு, அவரது பிரேமத்தினதும், ஃபிரேமினதும் எல்லைக்குள் தங்களையும் திணித்துக் கொள்ள எடுக்கும் பகீரதப் பிரயத்தனங்கள் என்னவோ, எனக்கு வெட்கத்தை வரவைக்கின்றன.

**புலிவால்களுக்கு புதுவையை மிஞ்சி இலக்கியம் இல்லை.**

**கருணாகரன் முதல் நிலாந்தன் வரைக்கும், தமிழ்க்கவி, அகரமுதல்வன், தீபச்செல்வன் ஈறாக, 'குப்பி கடிக்காத' புலிகளின் போர்க்கால இலக்கியம் அவர்களைப் பொறுத்தவரை இலக்கியமே இல்லை.**

**இவர்கள் எல்லாம் தமிழ்நாட்டுக்கான 'ஈழத்து இலக்கியவாதிகளே' அன்றி, புலன் பெயர்ந்த புலிவால்களுக்கான 'ஈழத்து இலக்கியவாதிகள்' இல்லை. தமிழ்நாட்டுப் புகழ் ஈழத்து இலக்கியவாதிகள் புலன் பெயர் புலிவால்களால் கொண்டாடப்படுவதில்லை.**

**குறைந்த பட்சம் அவர்களை வாசிப்பதும், அவர்களின் புத்தகங்களுக்கு விமர்சனக் கூட்டங்கள் நடத்துவதும் புலிகளாலும் வால்களாலும் துரோகிகள் ஆக்கப்பட்ட மாற்றுக்கருத்துத் தோழர்கள் தான்.**

ஆசான் போன்ற சுயமோகிகளுக்கு சில நேரம் அந்தப் பொய்ப் பாசாங்குப் புகழ்ச்சியில் லயிப்பு ஏற்படக் கூடும்.

இதையெல்லாம் பார்க்க முடியவில்லை என்ற மனக்குறை தவிர்ந்து, எனக்கு ஆசானின் 'தீர்க்காயுஸ்மான் பவ' கிடைக்காமல் போனதில் குறையொன்றுமில்லை!

Black Tie Affair பாரம்பரிய இலக்கியத் தோட்டம், இதை ஒரு low key affair ஆக எதற்காக வைத்திருந்தது என்பது மர்மமாகவே இருக்கிறது.

அது குறித்து எனக்கு ஒரு சந்தேகமும் இருக்கிறது.

மண்டபத்தில் வதந்தி ஒன்று நடமாடியிருக்கிறது.

'ஆக்கள் குழப்பப் போறாங்களாம்!'.
'கற்சுறா உள்ளுக்க வந்து நோட்டீஸ் குடுக்கப் போறாராம்!'

ஆசானின் அருண்மொழி பேஸ்புக்கில் வராவிட்டாலும், இந்த வதந்திகள் குறித்து பதிவுகள் வந்திருந்தன.

வெறும் கற்பனைகளையும் ஊகங்களையும் வைத்துத் தான் ஈழத்தமிழ் அரசியலும், இலக்கியமும் இயங்கிக் கொண்டிருப்பது ஒன்றும் எங்களுக்குப் புதிய விடயமும் இல்லை.
'அடிச்சுப் பறிப்பார்' முதல் 'தீபாவளிக்குத் தீர்வு' வரைக்கும் நாங்கள் காணாததா?

இப்படிக் கற்பனையான கதைகளைக் கிளப்பி விடுகிறவர்களின் நோக்கமே, 'என்ன பிரச்சனை எண்டாலும், பாதுகாப்புக் குடுக்க நாங்கள் இருக்கிறம். பயப்பிடாதையுங்கோ' என்று தங்களை முக்கியமானவர்களாகத் தோட்டத்துக்குள் திணித்துக் கொள்வது தானே!?

அடே, இப்படிச் சபை குழப்புகிற பழக்கமே புலிகளுக்குரியது தானேடா? இந்த வதந்திகளைக் கிளப்பிப் பரப்புகிறவர்களும் அந்தப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் தானே?

'ஊருக்கு வா, கவனிக்கிறம்' முதல் 'அம்மணமா வெளியில வாடா' என்று வீரலட்சுமி அம்மணிகள் வருந்தி அழைத்தது வரைக்கும் நாங்கள் கண்டுகளித்தபடி தானே இருக்கிறோம்.

புலிவால்களுக்கு புதுவையை மிஞ்சி இலக்கியம் இல்லை.

கருணாகரன் முதல் நிலாந்தன் வரைக்கும், தமிழ்க்கவி, அகரமுதல்வன், தீபச்செல்வன் ஈறாக, 'குப்பி கடிக்காத' புலிகளின் போர்க்கால இலக்கியம் அவர்களைப் பொறுத்தவரை இலக்கியமே இல்லை.

இவர்கள் எல்லாம் தமிழ்நாட்டுக்கான 'ஈழத்து இலக்கியவாதிகளே' அன்றி,

புலன் பெயர்ந்த புலிவால்களுக்கான 'ஈழத்து இலக்கியவாதிகள்' இல்லை. தமிழ்நாட்டுப் புகழ் ஈழத்து இலக்கியவாதிகள் புலன் பெயர் புலிவால்களால் கொண்டாடப்படுவதில்லை.

குறைந்த பட்சம் அவர்களை வாசிப்பதும், அவர்களின் புத்தகங்களுக்கு விமர்சனக் கூட்டங்கள் நடத்துவதும் புலிகளாலும் வால்களாலும் துரோகிகள் ஆக்கப்பட்ட மாற்றுக்கருத்துத் தோழர்கள் தான்.

எனவே, ஆசானின் புளித்த மாவை வைத்து, புலிகள் வடை சுட்டு வியாபாரம் பண்ண முடியாது.

ஆசானோடு நேரம் செலவிட முடியாதபடிக்கு, அவர்கள் துவாரகாவோடு பிசியாகி விட்டார்கள்.

அடுத்து மாவீரர் மாதம் வேறு! கார்த்திகைப் பூ மொத்த இறக்குமதிப் பிரச்சனை தலைக்கு மேல்!

பிழைப்பு முக்கியம்!

பேராசிரியர் அ.ராமசாமிக்கே வகுப்பு எடுத்த, கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை 'அம்மணமா வெளியால வாடா!' என்று வருந்தியழைத்த அந்த 'அம்மண' அம்மணி கூட, கணக்கெடுக்கும் அளவுக்கு ஆசான் இல்லை என்பது தான் ஆசான் பற்றிய புலிகளின் புரிந்துணர்வுக்கான சரியான அளவுகோல்!

**அப்படியானால், மாற்றுக்கருத்துத் தோழர்களா?**

**மாற்றுக் கருத்துத் தோழர்களுக்கு எல்லாம், ஆசான் ஒரு பொருட்டே இல்லை.**

**மாவோ முதல் மார்க்ஸ் வரைக்குமான அன்றாட சர்வதேச சர்வரோக நிவாரணி prescription, இவர்களிடம் இருந்து உடனடித் தீர்வை வேண்டி நிற்கும் உக்ரெய்ன், காசா என எதிர்பாராமல் வரும் அதிர்ச்சிகள், போதாக்குறைக்கு முதல்நாள் முதல் ஷோ, பிக் பொஸ், தமிழ் இலக்கிய உலகம் என, சகல உள்ளூர், சர்வதேச நிகழ்வுகளுக்கும் கட்டாய கருத்துச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர்கள் மரண பரியந்தம் வரை ஒவ்வொரு கணமும் அல்லலுறும்போது, அதையெல்லாம் பற்றி ஒரு வாரம் காத்திருந்து கருத்துச் சொல்ல, இதென்ன ஆசானின் அருண்மொழி வீடியோ மாதிரி, முக்கியத்துவம் இல்லாத விடயமா?**

அப்படியானால், மாற்றுக்கருத்துத் தோழர்களா?

மாற்றுக் கருத்துத் தோழர்களுக்கு எல்லாம், ஆசான் ஒரு பொருட்டே இல்லை.

மாவோ முதல் மார்க்ஸ் வரைக்குமான அன்றாட சர்வதேச சர்வரோக நிவாரணி prescription, இவர்களிடம் இருந்து உடனடித் தீர்வை வேண்டி நிற்கும் உக்ரெய்ன், காசா என எதிர்பாராமல் வரும் அதிர்ச்சிகள், போதாக்குறைக்கு முதல்நாள் முதல் ஷோ, பிக் பொஸ், தமிழ் இலக்கிய உலகம் என, சகல உள்ளூர், சர்வதேச நிகழ்வுகளுக்கும் கட்டாய கருத்துச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர்கள் மரண பரியந்தம் வரை ஒவ்வொரு கணமும் அல்லலுறும்போது, அதையெல்லாம் பற்றி ஒரு வாரம் காத்திருந்து கருத்துச் சொல்ல, இதென்ன ஆசானின் அருண்மொழி வீடியோ மாதிரி, முக்கியத்துவம் இல்லாத விடயமா?

அவர்கள் இதெல்லாம் பற்றி சுடச்சுட அறச்சீற்றம் அடைந்தே ஆக வேண்டும்.

இல்லாவிட்டால், இவர்களின் 'கள்ள மௌனம்' குறித்து மற்றவர்கள் அறச்சீற்றம் அடைந்து விடுவார்கள்,

இவ்வாறாக, கட்டாய அறச்சீற்றம் கொள்ளும் அவர்களுக்கு ஆசான் எம்மாத்திரம்!?

அவர்களுக்கு ஆசானும் ஒன்று! சீமானும் ஒன்று!

அவர்களுக்கு வடை, டீ அரசியல் கூட்டங்கள் இருக்கின்றன. பேஸ்புக் இருக்கிறது.

ஆசான் பற்றிய அவர்களின் mandatory பதிவு ஒன்று ஏற்கனவே பேஸ்புக்கில் எங்கோ ஒரு மூலையில் கட்டாயம் இருக்கும்.

பாலஸ்தீனப் பிரச்சனை மாதிரி, ஒரு போஸ்டைப் போட்டு, 'கள்ள மௌனக்' குற்றச்சாட்டை ஜாலியாகக் கடந்து போய் விடலாம்.

பாலஸ்தீனப் பிரச்சனைக்கு அவரது பதில் என்ன என்று பேஸ்புக்கிலேயே சவால் விட வழி இருக்கும்போது, வடை, டீ கிடைக்காத கூட்டத்திற்கு ஐந்து டொலர் அழ வேண்டுமாக்கும்!?

அவர்களுக்கு கேள்விகள் தான் முக்கியம். பதில்கள் அல்ல!

அவர்களுடைய கேள்விகள் அறிந்து கொள்வதற்காகக் கேட்கப்படுகிறவை அல்ல. அவர்களுடைய மேதாவித்தனத்தை நீங்கள் அறிய வேண்டும் என்பதற்காகக் கேட்கப்படுகிறவை.

அவர்களுக்கு அந்தப் பதில்கள் ஏற்கனவே தெரியும்.
அதனோடு நீங்கள் உடன்படுகிறீர்களா என்பது தான் அவர்களின் தலை போகிற, வெடிக்கிற பிரச்சனை.

ஆனால், பாலஸ்தீனம் பற்றிய ஆசானின் கருத்து என்ன என்பதை அறிந்து என்னதான் செய்யப் போகிறார்களோ?
எனக்குத் தெரியாது.

அவர் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்து விட்டால் மட்டும், அவரது

இந்துத்துவ சிந்தனைக்காக அவரை துவைத்தெடுப்பதை நிறுத்தி, ஜோர்தான் நதியில் நீரினால் {ானஸ்நானம் கொடுத்து அவரது பாவங்களைக் கழுவப் போகிறார்களா?

அவர் இஸ்ரேலுக்கு ஆதரவாக கருத்துச் சொல்வார், இன்னொரு பேஸ்புக் அறச்சீற்றம் கொள்ளலாம் என்பதைத் தவிர, அவர்களுடைய நோக்கம் வேறென்னவாக இருக்கக் கூடும்?

அதை விட, அவர்களுக்குத் தெரியாத, புதிதான ஏதாவதையா ஆசான் சொல்லி விடப் போகிறார்?

அப்படித் தான் அவர்கள் வர நேரிட்டாலும், எதற்காக அவர்கள் சபை குழப்ப வேண்டும்?

மைக்கைக் கொடுத்தால், கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், அரை மணி நேரம் தங்களைப் பற்றி நீட்டி முழக்கி, பதில் சொல்கிறவருக்கு எந்தச் சிரமமும் வைக்காமல், கடைசி வரியில் 'ஆம் அல்லது இல்லை' என்ற பதிலை மட்டும் எதிர்பார்த்து, தங்களுடைய கருத்தோடு உடன்படுகிறாரா என்பதை மட்டுமே அறிந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்தைக் கண்டே ஆசான் வாழ்க்கை வெறுத்து அருண்மொழி மறந்து, உண்மையிலேயே சாமியாராகப் போய் விடக் கூடும்.

இந்தச் சூழ்நிலையில் 'குழப்பப் போறாங்களாம்' என்ற கதையைக் கிளப்பி, 'பாதுகாப்பு வளையம்' போட்ட இலக்கிய wannabe பிரகிருதிகளை என்ன செய்ய?

கற்சுறா துண்டுப்பிரசுரம் வினியோகிக்கப் போகிறார் என்று என்ற வதந்தியின் பின்னணி என்ன?

எங்கள் நண்பர் ஒருவர் வேண்டுமென்றே கிளப்பிய கதை. வாய்க்கால் வழியோடிப் புல்லருக்கும் பொசிந்தது.
வதந்தியாகக் கசிந்தது.

துண்டுப்பிரசுரம்?

எது? அபத்தத்தில் வந்த கட்டுரைகளா?

எங்களுக்குத் தெரியாத எங்கள் புலன் பெயர் இலக்கியச் செம்மல்களா?

எந்தக் கட்டுரை பற்றிக் கேட்டாலும், 'அதை நாங்கள் வாசிக்கவே இல்லை' என்று பெருமையாகவும், 'ஆரோ சொன்னவை, நான் பாக்கேலை' என்று கேள்விச் செவியாகவும், சேவல் கூவ முன்னால் மும்முறை என்ன, முப்பது முறையும் மறுதலிக்கிற இவர்கள், வரிக்கு வரியும், வரிகளுக்கு இடையிலும் வாசித்திருப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியாததா?

அதை விட, பேஸ்புக்கில் அதை கற்சுறா பதிவேற்றி, நானும் பகிர்ந்து, இவர்களின் கண்ணில் படாமலும் போயிருக்காது.

பிறகெதற்கு, அனாவசியமான போட்டோக்கொப்பிச் செலவு!? அவ்வளவு தூரத்திற்குக் கார் ஓட்டம்!?

எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று தோன்றிய கருத்து இருந்தது. சொல்ல வேண்டிய தளத்தில், சொல்ல வேண்டிய விதத்தில் நாகரீகமாகவும் தர்க்கரீதியாகவும் சொல்லியும் இருக்கிறோம்.

அதை நாங்கள் வாசிக்கவேயில்லை என்பதைப் பெருமையாகச் சொல்வதே எங்களுக்குப் பெருமையான விடயம் தான்.

முரகாமியையும் தோஸ்து விஸ்கியையும் வாசித்ததாகப் பெருமை கொள்கிறவர்கள், இதை நாங்கள் வாசிப்பதேயில்லை என்று சொல்வது கூட எங்களுக்கும் பெருமை தான்.

முதல் நாள் முதல் ஷோ பார்த்துச் செல்பி போடுகிற இவர்கள், கிசுகிசுக்களில் பிழைப்பு நடத்தும், சு.ரா போன்ற இவர்களின் இலக்கியக் கடவுளர்களால் சபிக்கப்பட்ட, வணிக வார இதழ்களில் தங்கள் படைப்புகளும் படங்களும் பேட்டிகளும் வருவதில் பெருமிதம் கொள்கிற இவர்கள், 'இதை நாங்கள் வாசிப்பதேயில்லை' என்று பெருமை கொள்ளும்போது, அது எங்களுக்குப் பெருமை தரும் விடயம் தானே!?

தாங்கள் வாசிக்கவேயில்லை என்று பெருமிதம் கொள்கிற இவர்களின் மனதில் உள்ள பயம், கவலை எல்லாம் 'இதையெல்லாம் எவன் எவன் வாசித்திருப்பானோ!?' என்பது தான் என்பது எங்களுக்குத் தெரியாததா?

இத்தகைய போலிப் பாசாங்குகளின் முகமூடிகளைக் கிழிப்பதற்கு, நேரத்தையோ பணத்தையோ விரயம் செய்ய வேண்டிய எந்த அவசியமும் இல்லை.

ஆனால், ஆசான் மட்டும் எங்கள் கையில் வசமாக மாட்டியிருந்தால், நடப்பதே வேறாக இருந்திருக்கும்.

ஒன்றுமில்லை. ஆசானோடும் ஒரு பாசாங்கு இல்லாத கருத்துப் பகிர்வு செய்திருப்போம்.

ஆசானைக் குஷிப்படுத்திக் கிளுகிளுப்பூட்டி, 'கடைசியாக, புலன் பெயர்ந்த ஈழத்தமிழ் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?' என்று நேர்காணல் செய்யாமல், வெளியே இதுவரை தெரிந்திராத ஆசானின் இன்னொரு முகத்தை வெளியே கொண்டு வந்திருப்போம்.

பதிவுகள் இணையத்தளத்தில் எழுதியது பற்றி கிரிதரனும், தங்களோடு மொன்றியலில் தங்கியிருந்தது பற்றி மைக் ஜெயரூபனும், தமிழ்நாட்டில் தனது நூல் வெளியீட்டுக்கு வந்தது பற்றி சிறினோ சிறிசு சிறிஸ்கந்தராசாவும் எழுதியிருந்தவை பற்றி வாசித்த போதெல்லாம், ஒரு எளிமையான படைப்பாளியாக இருந்த ஒரு மனிதன், ஏன் ஒரு சுயமோகியாவதில் முடிந்திருக்கிறது என்பதில் எங்களுக்குக் கேள்வி இருக்கிறது. அதன் பின்னால் இருக்கும் தன்னம்பிக்கையீனத்தினதும், தாழ்வு

மனப்பான்மையினதும் பின்னணிகள் எதுவாக இருக்கும் என்பதில் கேள்வி இருக்கிறது.

எல்லாவற்றிலும் நிபுணத்துவம் காட்ட முனைவதற்கும், எது குறித்தும் தன்னுடைய கருத்துக்களே அறுதியும் இறுதியுமானதாக நிறுவ முயற்சிப்பதற்கான காரணங்கள் பற்றிய கேள்விகள் இருக்கின்றன.

தன்னுடைய போட்டிக்காரர்கள் என்று நினைக்கிறவர்கள் மீது அவதூறு செய்யும் இயல்பின் தேவை பற்றி...

சீரிய சிற்றிலக்கிய இதழ்க்காரன் என்று பெருமைப்படும் ஒருவர் சினிமாவில் இறுதிப்புகலிடம் கண்டது பற்றி...

பகிரங்கமாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்வதைத் தவிர்த்து, கொஞ்சக் காலம் மறைந்திருந்து, சர்ச்சைகள் தணிந்த பின்னால் வெளியே வந்து, அது பற்றி எந்தக் கதையும் இல்லாமல், தனி மனிதத் தாக்குதல்களில் ஈடுபடுவது பற்றி நிறையக் கேள்விகள் இருக்கின்றன.

அறைக்கலன் முதல் தோசை மாவு வரை, சாருவுக்கு விருது முதல் உரையில் அடிச்சு விட்ட விடயங்கள் வரை என இன்னோரன்ன உட்பட!

இதையெல்லாம் நாகரிகமாகவும், நாசூக்காகவும், எல்லாவற்றுக்கும் மேலாக, எந்தப் பாசாங்கும் இல்லாத நேர்மையுடனும் எங்களால் கேட்க முடியும்.

அதைப்போல, அவரது முதுகில் சவாரி செய்ய நினைக்கும் அயோக்கியர்கள் போல் இல்லாமல், எங்கள் அறத்திலும் நேர்மையிலும்... ஏன் அறிவிலும்... அவர் நம்பிக்கை கொண்டு, மனம் திறந்து பேச வைத்திருக்க முடியும்.

We would have charmed our way into making him drop his pants... err... guards down!

ஆனால், ஆசானை யாரும் நெருங்கிவிடாதபடிக்கு பாதுகாப்பு வளையங்கள் எக்கச்சக்கம். தங்கள் கைக்குள் அவர் இருக்க வேண்டும், அவர் யாரைச் சந்திக்க வேண்டும் என்றும், தங்களை மீறி அவரோடு யாரும் நெருக்கமாகி விடக் கூடாது என்றும் அவதானமாக இருக்கும் ஒரு கும்பலின் கைக்குள் தான் அவர் இருந்திருக்கிறார்.

தனியாக முதுகில் கமெராப் பையைத் தூக்கிக் கொண்டு, சவால்களுக்கு முகம் கொடுத்து, உலகைப் பார்க்க முயல்கின்ற என்னைப் போன்ற தேடல் மிகுந்த ஒருவனாக இல்லாமல், நம்ம தமிழ்நாட்டு armchair தேசாந்திரி எஸ்.ராவை விட கொஞ்சம் ஒருபடி மேல் போய், பயண முகவர்களால் தயார்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல்களில் சொகுசு வண்டிகளில் சொகுசாகப் பயணித்து, வழிகாட்டிகளின் விளக்க உரைகள் வேதமாக, இலையுதிர்கால அழகைப் பார்த்து ரசித்து, செல்போன் பட நினைவுகளிலே புல்லரித்துப் போகிற ஒரு சாதாரண உல்லாசப் பயணியைப் போல, he wasn't ready for any challenges or adventures.

He was taking comfort in the familiar.

அவருக்கு அது சொகுசாகவும் சௌகரியமாகவும் இருந்திருக்கிறது.

He is someone who feels secure in walled gardens.

அதை இந்த 'பச்சைத்தண்ணியில் பலகாரம் சுடுகிற' 'சல்லிப்பயல்' முகவர்கள் சாதகமாகப் பயன்படுத்தியும் இருக்கிறார்கள். (அதனால் one for the road என்று, உரை முடிந்து போகிற வழிக்கு யாராவது ஏமாளியைத் தலையைக் கழுவிப் 'பச்சைத்தண்ணியில் சுட்ட' பலகாரப் பொதி!)

இந்தப் பாதுகாப்பு வளையங்களைக் கடந்து, எங்களோடு வந்திருந்தால், ஈழத்தமிழ் இலக்கியத்தில் புதிய உலகைக் காட்டியிருப்போம்.

ஆசான் தற்போது lecture circuit களில் ஈடுபாடு காட்டுவதற்கான காரணமும் உண்டு. அது ஒருவகையில் எழுத்தை விட, சினிமாவுக்கு அடுத்ததான பணவருவாய் அதிகமாக உள்ள வழியாகி விட்டது.

அல்லது, ஆசானின் இலக்கியக் கையிருப்பு முடிந்து விட்டது!

பாதம் தொட்டு வணங்கி, உண்டியல் நிரப்பும் பக்தர்களுக்கும் குறைவில்லை.

கதை சொல்லி பவா செல்லத்துரை இலக்கிய உலகின் திருமுருக கிருபானந்தவாரியார் என்றால், ஆசான் இலக்கிய உலகின் சுகி சிவம்.

அவரது உரையில், தர்க்க ரீதியாக, அறம் பற்றி முடிவாக எதையும் சொன்னதாக பிரமிக்க முடியவில்லை.

புறநானூற்றுத் தலைவன் கரிகாலன் வதை முகாம்களிலும், மின் கம்பங்களிலும் போட்டுத் தள்ளியதை எங்கள் வாழ்நாளில் காணும் பாக்கியம் பெற்ற எங்களுக்கு, சேரமான் கணைக்கால் இரும்பொறையின் புறநானூற்று அறம் பற்றி வியப்பதற்கு என்ன இருக்கிறது? ராஜினி முதல் செல்வி வரைக்கும் கண்டு வந்த எங்களுக்கு 'பெண்ணைக் கொல்லாத' அறம் பற்றி பிரமிக்க என்ன இருக்கிறது?

அவருடைய உரையை ஒன்றரை மணி நேரம் செலவிட்டுக் கேட்டதில், எனக்கு ஐந்து டொலர் சேமித்த திருப்தி!

இப்படி காசில் ருசி கண்டால், எழுத்தை விட்டு ஆசான் இப்படி உலகம் சுத்தும் வாலிவனாகி விடவும் கூடும்.

ஆசானுக்கும் எனக்கும் சம வயது தான்.

எங்கோ வாசித்தது உண்மையாயின், ஆசானும் நானும் ஒரே நட்சத்திரமும் கூட.

As if it is relevent or does matter.

என்னவோ, ஆசான் தனது potential ஐ இப்படி விரயமாக்குவது தமிழ் இலக்கியத்திற்கு செய்யும் அநியாயம் என்பதை விட, தனக்குச் செய்யும் self destruction என்றே எனக்குப் படுகிறது.

ஆசான் தன்னைச் சுற்றி இருப்பவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

ஆசானைச் சுற்றி அவர்கள் போடும் பாதுகாப்பு வளையங்கள் எல்லாம் ஆசானைப் பாதுகாப்பதற்காக அல்ல, தங்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும், ஆசானைப் பயன்படுத்தவும் தான்.

ஆசான் தன் கனடியப் பயணத்தில் சந்தித்தவர்கள் குறித்து சிலாகித்திருந்ததைப் படித்த போது, என்னத்தைச் சொல்ல?

அதில் இருந்தவர்களில் பலரை எனக்கு பல ஆண்டுகளாக நேரடியாகவே தெரியும்.

A man is known by the company he keeps.

எனவே, அவர்களைப் பார்க்கும்போது, நான் நேரில் சந்தித்திராத ஆசானைப் பற்றி நன்றாகவே தெரிகிறது.

உண்மைகளை மறைத்து, குஷிப்படுத்த பொய்களை அவிழ்த்து விடுகிற அந்த ‘இதுவே முதல் முறை என்றனா்’ கும்பல் பற்றி ஆசான் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

ஆசான் is almost past his prime.

தான் வரலாற்றில் அறியப்பட வேண்டியது தன் எழுத்துக்களாலா? அல்லது இலக்கியம் கடந்த அனாவசியமான, அதிமேதாவித் தனமான, பிற்போக்குத் தனமான கருத்துக்களாலா? என்பதை ஆசான் இப்போது முடிவு செய்து கொள்ள வேண்டும்.

ஆசான் உதாரணம் காட்டும் ஓர்ஹான் பாமுக், முரகாமி எல்லாம் தங்கள் எழுத்துக்களால் தான் அறியப்பட்டிருக்கிறார்களே அன்றி, கருத்துக்களால் இல்லை.

அவ்வாறே, உலகின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஒருவர் ஆசானையும் உதாரணம் காட்டவேண்டும் என்றால்...

சர்வதேச அளவில் அங்கீகாரங்களும் விருதுகளும் கிடைக்க வேண்டும் என்ற கனவுகளுடன் இருந்தால்...

ஆசான் எழுதிக் கொண்டேயிருக்க வேண்டும்...

வாயைத் திறக்காமல்!

நோபல் பரிசுக் கனவு வைரமுத்து மாதிரி, வெறுவாயை மென்று கொண்டிருக்கக் கூடாது!

ஆசான் தான் இருக்கும் வரைக்கும் தானே நம்பர் வண் என்று சொல்லிக் கொள்ளலாம்.
அது ஒரு சுயமோகிக்கு சுய இன்பமும் கூட!

History is the harshest judge.

வரலாறு ஈன இரக்கம் பார்ப்பதில்லை.

அதையும் விட, மேசைக்குக் கீழால் தவழ்ந்து காலில் விழுகிற ஜால்ராக்களின் உண்மை முகத்தைத் தெரிந்து கொள்ளாமல்,
இந்தக் கூட்டத்தைத் தன்னைச் சூழ வைத்துக் கொண்டு, அது போடும் ஜால்ராவில் லயித்து, அதில் அந்த ‘ஆர்கச உச்சம்’ கண்டு கொண்டிருந்தால்...
ஆசான் கடைசியில், அறம் பற்றிப் பேசிக் கிடைக்கும் பொருளில் இன்பம் கண்டு வீடு ஏகுவதில் திருப்தியுற்று...
எப்போதாவது ஃபெட்னாவில் வழங்கப்படும் ‘அருண்மொழி உபாசகர்’ பட்டத்தோடு, வெறும் ‘ஆன்மீகச் சொற்பொழிவாளர்’ ஆவதில் தான் வந்து முடியும்.

(ஆசான் தனது ஆங்கிலப்புலமை பற்றியும், சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், ஆற்றூர் ஆகியோர் தன்னை ‘தமிழின் அக ஒலியிசைவை இழந்து விடுவேன்’ என்று தவிர்க்கும்படி கூறியதாகவும், (சீமான் மாதிரி, அவர்கள் இறந்த பின்னால் சொல்லப்படும் கதையாக இருக்குமோ!?), தனக்கு தமிழில் கிடைக்கும் வரவேற்பு, அங்கீகாரத்தை விட, மலையாளத்தில் பல மடங்கு உண்டு என்றும் (அபத்தத்தில் வந்த பாசாங்கு இல்லாத பகிர்வுக்கான பதிலாக இருக்குமோ!?) கூறியிருந்தார்.

ஆசானே, நான் ஒரு பட்டம் பெறாத ஆங்கில ஆசானாக இருந்தவன். எனக்குள்ளே ஒரு Grammar police உள்ளான்.
அது take off இல்லை. Takeaway!
While acknowledging it could have been a slip of the tongue.
வெளியில் போகும்போது கொடுத்த சிற்றுண்டிப் பொதி, takeout.

எங்கள் சில்லறை இலக்கியப் பிரகிருதிகள் போலவே, மாற்றுக்கருத்துக்களைப் படிப்பதில்லை என்பதில் பெருமை கொள்ளும் ஆசான், தன் மீதான போற்றிப் பாடல் தவிர்ந்த அனைத்தையும் வசை, வம்புகள் என்று வகைப்படுத்தி, நண்பர்கள் வாசித்துச் சொல்வதைக் கேட்பதாகக் கூறிக் கொள்வதில் பெருமை கொள்கிறவர்.

இப்போது நாங்கள் எழுதுவதையும், இந்த சல்லிப்பயல்களின் நண்பர்கள் வாசித்துச் சொல்லி, அதை அந்தச் சல்லிப்பயல்கள் ஆசானுக்கு எடுத்துச் சொல்லி...

ஏன்டா, உதையெல்லாம் நாங்கள் வாசிப்பதே இல்லை என்று பெருமையடிக்கிற உங்களுக்கு, நீங்கள் எல்லாம் வெறும் கேள்விச்செவியர்கள் என்று சொல்லிக் கொள்வதில் வெட்கமே இருப்பதில்லையா?)

ஜோர்ஜ் இ.



# நானும் நூல்களும் நூலகமானது

**பபி ரவி**

நாங்கள் ஓர் ஆசிரியரின் வீட்டில் வாடகைக்கு இருந்தோம். அப்போ எனக்கு 5 வயது. முதலாம் வகுப்பில் சேர்த்திருந்தார்கள் அங்கு சுவரில் கறுப்பு மை அடிக்கப்பட்டிருந்தது. ஒற்றைக் கொம்பிற்கும் இரட்டைக் கொம்பிற்கும் வேறுபாடு தெரியாமல் தவறாக எழுதிக் கொண்டும், வாசித்துக் கொண்டும் திரிந்தேன்.

அப்பா அந்த கறுப்புச் சுவரில் ‘பெரிய பேய்க்கு பொல்லால் போட்டோம்‘ என எழுதி என்னைச் சொல்ல வைத்தார், எழுத வைத்தார். இது என் மனதில் ஆழப் பதிந்திருந்தது. என் எழுத்துக்களின் ஆரம்பம் அதைத் தான் இழுத்து வரும். பின் இரண்டாம் வகுப்பிற்கு வேறு ஊருக்குப் போனோம். எம் புத்தகங்களை மட்டுமல்ல. பல புத்தகங்களையம் பெட்டிபெட்டி ஆக அடுக்கினோம்.

அது அப்பாவின் தலைமறைவுக் காலம். இதற்கிடையில் சுமார் ஆறு மாதங்கள் வேறு ஒரு வீட்டில் இருந்தோம். எம் புத்தகங்கள் எங்கிருந்தன என்று நினைவில் இல்லை. எம்முடன் சேர்ந்து குமரேசு மாமாவும் அடுக்கினார் பின் எமது பயணம் துவிச்சக்கர வண்டியில் இரண்டு, மூன்று தடவைகள் அமைந்தது.

அவரும் எமக்கு சில நாட்கள் பாடம் சொல்லித் தந்திருக்கிறார். அப்போது தான் வியட்னாம் யுத்த காலத்தை - கருப்பு வெள்ளையில், வழுவழுத்த தாளில் தடவிப் பாத்து, அதன் வலி உணர்ந்தேன்.

அழும் குழந்தை அருகிருக்க, ஏழைத் தாயின் முலையில் பால் குடிக்கும் முதலாளியின் வன்மம் பதிந்திருந்தது. அந்தப் படம் தந்த வலி இன்றும் சீற்றம் தரும். கை, கால், தலை இழந்த போர் காட்சிகள். குண்டின் புகைக்குள் புதைந்திருந்த சிறுவர்கள் என .... அதை எத்தனை தரம் புரட்டியபடி அதன் மேல் படுத்திருப்பேன் .

வழுவழுத்த தாளில் கலர் படங்கள் தங்கி அல்பேனியா நாட்டு படங்கள். பூக்கள், தொழில்சாலைகள், பாடசாலைகள், அழகிய பெண்கள், சிறுவர்கள், நீச்சல் குளத்தில் பெண்கள் என இரு முரண் மனநிலைகளைக் காட்டும் புத்தகங்கள் நினைவில் இருந்தன.

பின் உலகப்படப் புத்தகத்தில் கண்ணை மூடிக்கொண்டு தேசங்களைத் தொட்டுக்காட்டும் அளவிற்கு அண்ணா வளர்ந்திருந்தான். எமக்கும் போட்டிகள் வைத்தார். அம்மா வேலைக்கு சென்று மாலை வருவார். அப்பா பல நாட்கள் வீட்டிற்கு வரமாட்டார் (JVP தலைமறைவுக்காலம்). அவரைத் தேடி சி ஐ டி வந்ததாக பின் அம்மா சொன்னார்.

படங்கள் பார்த்து முடிந்த காலம் போக தாமரை, செம்மலர், கணையாழி போன்ற சிற்றிதழ்களில் இருக்கும் பெனார்ட்ஷா துணுக்குகள், முல்லா நகைச்சுவைகளை அண்ணா அறிமுகப் படுத்தினார். பின் அதிலுள்ள சிறுகதைகளை வாசிக்க ஆரம்பித்தேன். ஜெயகாந்தன், வல்லிக்கண்ணன், அப்பாஸ்...என நீண்டது. அப்பா வரும்போது நாம் படித்ததைச் சொல்லுவோம்.அ வரது புருவம் உயரும் அளவே, எம் மகிழ்ச்சியின் நீட்சியாய் இருந்தது.

மிகச் சிறிய ஒடுங்கிய ஒழுங்கையில் குடியிருந்தோம். பக்கத்து வீட்டில் ஒரு வயசான அப்பா, அம்மாவும், கலியாணம் செய்யாத முதிர்ந்த அக்காவும் இருந்தனர். அந்த வயதானவர் கோர்வையாக கெட்ட வார்த்தைகளை பாட்டாக பாடுவார். சரியான உச்சரிப்புத் தெரியாமல் தேவாரம் போல பாடமாக நாமும் சொல்லுவோம். அந்த அக்கா பட்லி, ஜமீலா, பிடி சாமி கதைகள் என வைத்திருந்ததை நாமும் அவை எல்லாம் படிக்க ஆரம்பித்தோம். எம் வாசிப்பு தடம் மாறுவதை அப்பா உணர்ந்தார். எமக்கான கதைகளை வாங்கித் தந்தார். அந்த நேரத்தில் பல ருசியா, சீன கதைகளை வாசித்தோம். தாய் நாவலை அண்ணாவின் பார்வையில், எனது பார்வையில். அம்மாவின் பார்வையில் என விபரித்துக் கேட்பார். ஒவ்வொரு அத்தியாயமும் எம் வாழ்வையும் சேர்த்துச் சொன்னது. அந்த நேரத்தில் தான் ’நல்லப்பு மாமாவை காவல் படை சுட்டது. டானியல் மாமாவின் பஞ்சமர் வந்தது. வீரம் விளைந்தது, வோல்காவில் இருந்து கங்கை வரை, காண்டேகர், பாரதி, திருக்குறள், ஷெல்லி , சரத் சந்தர், கல்கி,அகிலன், மு.வரதராஜன்.. என வாசிப்பு அதிகரித்தது.

1975 இல் சத்தியமனை வீட்டிற்கு வந்தோம்.வீட்டில்இருந்தபுத்தகங்கள் முடிந்தன. பாடசாலையில் அதிகம் நூல்கள் இருக்கவில்லை. ஊரில் இருந்த பண்ணாகம் நூ லகத்திற்கு செல்ல ஆரம்பித்தேன்,

பின் எம் வட்டாரத்தில் உள்ள சங்கானை நூலகம் முழுதும் துழாவி எடுத்தோம். நூலகர்கள் நண்பர்கள் ஆனார்கள். (அதுவரை நான் அம்புலி மாமா புத்தகம் கண்டதில்லை. நூலகத்திலும் சிறுவர் பக்கம் போனதில்லை) எனது ஆன்டி வாங்கும் குமுதம், கல்கி, ஆனந்தவிகடன், ராணிமுத்து ஓர் எழுத்து விடாது வாசிப்பேன். சத்தியமனையில் எமக்கான புத்தகத் தட்டை அமைத்துக் கொண்டோம். அங்குதான் முருகையன் மாமா கவிதைகளை வாசித்தேன். சிவசேகரம் மாமாவும் அவரின் கவிதைகளும் அறிமுகமாகின. அதனை டிகோட் பண்ணி அப்பா சொன்னார். பின் புரிந்துகொள்ள ஆரம்பித்தேன். "தாயகம்' இதழுக்காக சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், இயக்கச்சி கருணா ... என நீண்டது. நூல்கள் இன்றி என் படுக்கை இல்லை என்றானது..

காலம் ஓடியது. திருமணம், குழந்தை என ஆனது.. என் கணவர் புத்தகத்தினுள் வாழும் ஓர் ஜீவன். என் தாய்மைக்காலம் வாசிப்பில் இருந்ததாலோ என்னவோ என் மகளும் ஓர் புத்தகப் பிரியை. சில இடப்பெயர்வுகள் நிகழ்ந்தன.

எம்மிடம் இருந்த சொத்து நூல்கள் மட்டுமே. அப்பா எம்மிடமிருந்து விடை பெற்றபோது அவரைச் சுற்றி அவரால் உருவான நூல்களே நிறைந்திருந்தன. சத்தியமனையை விட்டு இடம் பெயர்ந்த போது எமக்கான சில நூல்களை மட்டுமே எடுத்துச் செல்ல முடிந்தது. பின் ஊரில் இருந்து வருபவர்கள் மூலம் சிலதை பெற்றுக்கொண்டோம். சிலதை எம் அனுமதி இன்றி எடுத்துச் சென்றனர். அப்பா பத்திரிகைகள், படங்கள், கடிதங்கள் என அனைத்தையும் சேர்த்து வைத்திருந்தார். சிலது அழிந்து விட்டது .

மீண்டும் சத்தியமனை வந்த போது 30 வருட இடைவெளியில். நாம் விட்டுச் சென்றதை விட மிக மிக அதிகமான நூல்களுடன் வந்து சேர்ந்தோம். அப்பாவின் தகனம் இடுதலின்போது, நிறை மாதமாக இருந்த என்னால் அங்கு செல்ல முடியவில்லை. வீட்டிற்கு எடுத்து வந்த சாம்பலின் ஒரு சிறு பங்கை எடுத்து என் அடையாள அட்டையோடு காவித்திரிந்தேன்.

எம்மிடமிருந்த எல்லா நூ ல்களையும் பேண வேண்டும். சத்தியமனையோ சிறியது. ஒரு நூலகம் அமைக்கலாம் என என் கணவர் கூறினார். எம்மிடம் பணம் இல்லை. இடவசதியும் இல்லை. நல்ல நூல்களை வாசித்த உணர்வு உருவாக்கிய எம் குழந்தைகள் தாமே முன்வந்தார்கள். மகன் இடம் வாங்க உதவினான். மகள் மாதம் மாதம் நூலகம் அமைக்க உதவினாள். அதன் உபயோகம், பராமரிப்பு பற்றி சந்தேகத்துடன் இருந்த என் தம்பியும் பின் சேர்ந்து கொண்டான். கட்டிடம் ஆரம்பமானபோது பாரிஸ் சுகன் தானுழைத்த மிகக் குறைந்த வருமானத்தில் மிச்சப்படுத்தி 40, 30 ஆயிரங்களைத் தந்தார். மிக நிறைவான, தரமான கே ஏ எஸ் சத்தியமனை நூலகம் அப்பாவின் சாம்பலுடன், கன்னி மூலையின் அடி அத்திவாரத்துடன் கலந்து நிமிர்ந்து வளர்ந்து நிற்கிறது.

எம் மீது தீராத பாசம் காட்டிய பாரதி அறிஞர் பெ.சு.மணி அவர்கள் தனது அனைத்து நூ ல்களையும் எமக்கு தந்தார். பின் பேராசிரியர் சிவசேகரம், நீர்வை பொன்னையன், நடனசபாபதி, பேராசிரியர் தில்லைநாதன், சவுத் விஷன் பாலாஜி எனப் பலரும் தம் நூல்களைத் தந்தனர். பலர் தமது சொந்த நூல்களைத்த தந்தனர்.

எம் சிறு வயதில் ‘சிறுபொறி என ஓர் கையெழுத்துப் பத்திரிக்கை ஒன்றை எம் அண்ணா நடத்தி வந்தார். 50 வருட இடைவெளியின் பின்னர் நூலகத்தினால் மாணவருக்கென ‘சிறுபொறி வெளி வருகிறது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வயதானவர்கள் எனப் பலரும் வருகிறார்கள். பல ஊக்குவிப்பு நிகழ்வுகளைச் செய்கிறோம். ஆர்வமுடன் பங்கேற்கிறார்கள். இந்த மாதத்தில் வாசிப்பை முன்னிட்டு மூன்று நாட்கள் தொடர்ந்த நிகழ்வுகள் நடக்கின்றன. நூலகத்தின் வளர்ச்சியுடன் ஒன்றிய சில யுவதிகள், இளைஞர்கள் மனப்பூர்வமாக இதனை எதிர்பார்ப்புகள் இன்றித் தாங்கிக்கொள்கிறார்கள்.எதிர்காலம் நம்பிக்கை தருகிறது.

எம்மிடம் இருக்கும் நூல்கள் பற்றி சத்தியமனை இணையதளத்தில் பிரிவு வாரியாக அறிந்துகொள்ள முடியும். https://sathiamanai.blogspot.com/2022/10/sathiamanai-librarys-book-list/html

எமக்குப் பின்னரும் இந்த நூலகமும் அரங்கும் தொடர்ந்து இயங்க ஒரு ட்ரஸ்ட் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. எம் வீடான சத்தியமனையும் மாணவர்கள் தங்கி பயன்படுத்தும் இடமாக இருக்கும்.

ஊர் கூடி இதனைப் பேணுவோம்!!

சத்தியமனையில் சத்தியங்கள் வாழட்டும்!

••• குமரேசு மாமா- ஒடுக்கப்பட்ட சமூகத்தில் படித்த ஓர் இளைஞன். அப்பா,அம்மா அப்புறம் இவர்தான் எம் கல்வியை கவனித்தார். பின் சில காலம் அவரைக் காணவில்லை. திடீரென ஒரு நாள் எம் பாடசாலை முன் தெருவில் காலில் தும்புச் சாக்கை காலில் கட்டியபடி தார் ஊற்றிக்கொண்டிருந்தார். நான் பாடசாலை வளவிற்குள் நின்றபடி மாமா மாமா என கத்தினேன். நிச்சயம் அலுத்து இருப்பேன். என்னை அடையாளம் கண்ட அவர் என்னை போகும்படி கைகளைக் காட்டினார். வான் சென்று மறையும் வரை உள்வாங்கிய உருவம். இன்றுவரை அழுத்தம் தருகிறது. பின் அவர் இறந்து விட்டதாக அறிந்தோம்.

••• நல்லப்பு மாமா - நிச்சாமத்தில் நடந்த சாதிய போராட்ட காலத்தில் ஒடுக்கியோரின் ஏவல் படையாகச் செயல்பட்ட காவற்படை அவர மறைந்திருந்து சுட்டுக் கொன்றது. நான் அறிந்த முதல் மரணம். எத்தனையோ நினைவுகள் அவர் விட்டுச் சென்றிருக்கிறார். வெண்ணாடை பூண்ட கருத்த வைரம். எங்கள் குடும்பத்தையே கலங்கடித்த மரணம் அது.

# வகுப்பறைக்கு வெளியே...



## எஸ்.ஃபாயிஸா அலி

நுண்ணங்கிகளின் தொழிற்பாடு பற்றி அறிவதற்கு ஈஸ்ட் (மதுவம்), சீனி இரண்டையும் சுடுநீரில் கரைத்து அவதானிப்பு மேற்கொள்ள போத்தலும் பலூனும் கொண்டு வருமாறு எட்டாம் வகுப்புப் பிள்ளைகளிடம் சொல்லி இருந்தேன்.

தயாரித்த கலவையை போத்தலினுள் ஊற்றி, அதன் திறந்த முனையில் பலூனைப் பொருத்தி இருபது நிமிடத்தில் அவதானித்தால் பலூனிற்குள் காபனீரோற்சைற்று வாயு வெளியாகி பலூனை நிறைக்கும்.

அதை அவதானிப்பதுதான் குறித்த செயற்பாடு.

அடுத்தநாள் வகுப்பில் ஆளுக்கொரு போத்தலும் பலூனுமாய் உற்சாகத்தோடு என்னை வரவேற்ற பிள்ளைகளுக்கு குறித்த செயற்பாடு தொடர்பில் அறிமுகம் செய்துவிட்டு...

'செல்லங்களே... இவ்வாறு உற்பத்தியாகும் வாயுவின் காரணமாகவே ஈஸ்ட் போட்டு செய்ற பாண், பணிஸ் போன்ற நாம பேக்கரியில் வாங்குற சாப்பாடுகள் எல்லாம் மென்மைத் தன்மையை அடையுது.. சரியா..' என்று விளக்கியவாறே அவர்களின் செய்முறைகளில் கவனம் செலுத்துகிறேன்.

ஒவ்வொருவரும் தாம் கொண்டு வந்திருந்த போத்தல்களை மேசையில் வைத்து விட்டு மதுவ, சீனிக் கரைசலைத் தயாரிக்கத் தொடங்கியிருந்தனர் .

அப்போதுதான் ஆதில் கொண்டு வந்திருந்த போத்தலை அவதானிக்கிறேன்.

மாறுபட்ட உயரமும் அழகான வடிவமும் கொண்ட வித்தியாசமான ஒரு போத்தல் அது.

அதைக் கண்டவுடன் என் மூத்த மகள் என்னிடம் சொன்ன விடயம் நினைவு வந்தது.

மகள் போத்தல்களை அலங்காரம் செய்து அழகு பார்ப்பதில் ஆர்வம் உள்ளவர்.

எங்கேயாவது வித்தியாசமான வடிவில் போத்தல்கள் கண்டால் வாங்கி வாங்கம்மா..' என்று அடிக்கடி சொல்வார்.

மெதுவாய் நான் அருகில் சென்று குறித்த போத்தல் தொடர்பில் ஆதிலிடம் விசாரித்தேன்.

அவரோ பதில் சொல்லத் தயங்குவது போலிருக்க நான் கையில் எடுத்து முகர்ந்து பார்த்ததும் அதன் வாசனையில் உடனே லேசான தலைசுற்றலும் குமட்டலுமாய்.. மெதுவாய் வகுப்பறைக்கு வெளியே போய் விட்டேன் .

அவனுக்குப் பக்கத்தில் இருந்த சிறுவன் என் பின்னாலேயே ஓடி வந்து

‘ரீச்சர் அது சாராய போத்தல். அவண்ட மச்சான் குடிக்கிறயாம்.‘

அவர் ஊருக்கு வாற நேரம் எல்லாம் அங்கே விடிய விடிய பார்ட்டிதானாம். இவண்ட வாப்பாவும் பெரிய குடிகாரன் தானாம். இவனும் குடிக்கிறானோ தெரியா ரீச்சர்... எண்டாலும் நான் சொன்னண்டு சொல்லி விட வேணாம்..அடிப்பான்‘ என்று மூச்சு விடாமல் மெதுவாய் என் காதில் ஊதிவிட்டு ஓடி விட்டான்.

எனக்கோ இந்தக் கதையைக் கேட்டதில் ஆதிலின் வீட்டுச் சூழலை நினைத்து முன்னரிலும் அதிகமாய் தலைச்சுற்றத் தொடங்கிற்று.

காபனீரொட்சைற்றுத் தயாரிக்கும் பரிசோதனை செயற்பாடுகள் எல்லாம் முடித்து நல்ல வடிவாய் ஊதிப் பருத்துக் கிடக்கும் பலூன்களைக் கைகளில் ஏந்திக் கொண்டு மாணவர்கள் குதூகலித்துக் கொண்டிருக்க.. கடைசியாய் ஆதிலை மட்டும் ஸ்டாப் ரூமுக்கு வரச் சொல்லி விட்டு வந்திருந்தேன்.

மெதுவாய் தயங்கித் தயங்கி வந்தவனிடம் தலை தடவி...‘காலையில் என்ன சாப்பிட்டீங்க ஆதில்..‘ என்று தொடங்கி மெதுமெதுவாய் விசாரித்துப் பார்க்கிறேன்.

கொஞ்சம் தயக்கத்தோடுதான் பிள்ளை சொல்லத் தொடங்கினான்..

அவனின் உம்மா வெளிநாட்டுக்குச் போய் விட்டாராம். சகோதரி ஊரில் ஒரு தடவை கலை களியாட்ட நிகழ்ச்சி நடத்த வந்திருந்த சர்க்கஸ் குழுவில் மோட்டர் பைக் ஓட்டும் காலியைச் சேர்ந்த ஒரு சிங்களப் பையனை விரும்பி திருமணம் செய்து அவரோடு போய் விட்டாவாம். அவ இப்ப ஊருக்கு வாற நேரம் எல்லாம் அந்தப் பிள்ளையின் கணவர் தன் நண்பர்களையும் கூடவே அழைத்து வருவாராம்.

இங்கிருந்து போகும் வரைக்கும் தண்ணி, சிகரெட் என்று ஒரே கூத்துத்தானாம்.

**சிலநேரம் அளவிற்கு மீறிய போதையில் தன்னிடமும் குடித்துப் பார்க்கக் குடுப்பாராம்..கால் கையை அமுக்கி விடச் சொல்லிக் கரைச்சல் குடுப்பாராம்.**

**வாப்பாவும், ராத்தாவும் இதையெல்லாம் கண்டு கொள்வது கூட இல்லையாம்.**

**தன் மச்சான் எவ்வளவு வற்புறுத்திக் கொடுத்தாலும் தான் ஒரு நாளும் மதுபானம் எதையுமே தொட்டுக் கூடப் பார்க்கவில்லை என்று அழுது கொண்டே சத்தியம் செய்தான்.**

சிலநேரம் அளவிற்கு மீறிய போதையில் தன்னிடமும் குடித்துப் பார்க்கக் குடுப்பாராம்..கால் கையை அமுக்கி விடச் சொல்லிக் கரைச்சல் குடுப்பாராம்.

வாப்பாவும், ராத்தாவும் இதையெல்லாம் கண்டு கொள்வது கூட இல்லையாம்.

தன் மச்சான் எவ்வளவு வற்புறுத்திக் கொடுத்தாலும் தான் ஒரு நாளும் மதுபானம் எதையுமே தொட்டுக் கூடப் பார்க்கவில்லை என்று அழுது கொண்டே சத்தியம் செய்தான்.

இந்தப் பிஞ்சின் பரிதாப நிலை கண்டு எனக்கும் கொஞ்சம் அழுகை எட்டிப் பார்க்கவே..

‘சரி..உம்மா வெளிநாட்டில் இருந்து கோல் எடுத்தா இந்தக் கரைச்சல் எல்லாம் சொல்லி அவரை உடனே வரச் சொல்லு ஆதில.

அதோட இனி ராத்தா..மச்சான் ஊட்டுக்கு வார நேரத்தில் உன்ர ரூமுக்குள்ள நேரத்தோடையே போய் கதவைப் பூட்டிக் கொண்டு தூங்கிடு. விடிஞ்சு நேரத்துக்கு எழும்பிப் படி..‘என்று சொல்லி.. இன்னும் கொஞ்சம் ஆறுதல் படுத்தி அனுப்பி விடுகிறேன்.

அவன் வீடு அமைந்திருக்கும் குறித்த பகுதியில் உள்ள நிறைய வீடுகளில் இவ்வாறான சிக்கல்களை இந்தப் பிள்ளைகள் எதிர்கொள்வதை இன்னும் சில மாணவர்கள் மூலமும் அறிந்து கொண்டபோது இதை எப்படித் தடுக்கலாம் என்று யோசித்து.. அதிர்ச்சியும் கவலையும் மட்டுமே கொள்ள முடிந்தது என்னால்.

என்றாலும் மறுநாளே அவனின் வாப்பாவை வரவழைத்து இந்தக் குடி கூத்து பற்றி டக்கென்று தொடங்காமல் அவன் வகுப்பில் அடிக்கடி நித்திரை கொள்கிறான்... ஒழுங்கா வீட்டு வேலைகள் செய்து வாறலை போன்ற விடயங்களை எடுத்து சொல்லி... ‘நீங்க தொடர்ந்து கடலுக்கு போறீங்க...ஆதிலைக் கவனிக்க உங்களுக்கு நேரம் இல்லைதானே.. அவர்ட உம்மாவை வெளிநாட்டில் இருந்து எடுக்கிற நல்லம் இல்லயா.‘ என்று மெதுவாய் அவரிடம் போட்டு வைத்தேன்.

முதலில் கொஞ்சம் கோபமாக பதில் சொன்னாலும்... தொடர்ச்சியான எங்கள் உரையாடலில் கொஞ்சம் இறங்கி வந்து...பார்ப்போம் ரீச்சர் என்று கூறிப் போனார்.

என் பிரார்த்தனை எல்லாம் இப்படி நல்லா படிக்கக் கூடிய பிஞ்சு மாணவர்கள் மனசுக்குள் ஆயிரம் ஆயிரம் கனவுகள் பூத்துக் குலுங்கிக் கிடக்கும்...அவைகள் இப்படி பொறுப்பற்ற பெற்றோர் மட்டும் குடும்பச் சூழலால் கலைந்து போய் விடக் கூடாது... அக்கனவுகள் யாவும் மெய்ப்பட வேண்டும் என்பதுதான்.

இந்தச் சம்பவம் நடந்து வருடங்கள் பல கடந்தும்... நான் வேறொரு பாடசாலைக்கு மாற்றலாகி விட்டிருந்தும் கூட. நுண்ணங்கி தொடர்பான குறித்த பாட அலகைப் படிப்பிக்கத் தொடங்கும் போதெல்லாம் அந்தச் சிறுவனின் முகம் மறுபடியும்.. மறுபடியுமாய் நினைவுகளுக்குள் வந்து வந்து போகும்.

பிள்ளைகளின் கல்வியில்..ஒழுக்கம் நடத்தைப்பண்புகளில் எல்லாம் அவர்களது வீட்டுச் சூழல் எவ்வளவு தூரம் தாக்கம் செலுத்துகிறது என்பதை நன்கு அறிந்திருந்தும் இந்த அப்பாவிப் பிஞ்சுகள் வாழ்வில் இதுவரைக்கும் என்ன பெரிய மாற்றங்களை கொண்டு வர முடிந்திருக்கிறது நம்மால்..?

# வாழ்வின் பந்தாட்டம்



**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

லிவர்பூல் (Liverpool) காற்பந்தாட்ட அணியின் பழம் பெரும் பயிற்சியாளரான பில் ஷாங்க்லியின் (Bil Shankly) மிகப் பிரபலமான கூற்றுறொன்று இருக்கிறது.

'Some people believe football (soccer) is a matter of life and death. I'm very disappointed with that attitude. I can assure you it is much. much more important than that.'

இதனை ஏறத்தாழ இவ்வாறு மொழிபெயர்க்கலாம்.

‘சிலருக்கு உதைபந்தாட்டமானது வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்டதொன்றா? என்ற எண்ணத்தைத் தருகிறது. இந்த எண்ணம் என்னைத் துயருற வைக்கிறது. ஏனெனில், உதைபந்தாட்டம் அதனை விட முக்கியமானதென்பேன் நான்’.

எனக்கும் லிவர்பூல் அணிக்குமான தொடர்பும் அப்படியானது. 1980களின் ஆரம்பத்தில் இலங்கையின் தேசியத் தொலைக்காட்சி இங்கிலாந்தின் FA Cup போட்டிகளை ஒரு வாரத்தின்பின் காண்பிப்பார்கள். அந்நாட்களில் அறிமுகமான அணிகள்தான் லிவர்பூல், மான்செஸ்டர் யுனைடட், ஆர்சனல், லீட்ஸ் கழகங்கள்.

ஊரில் எங்களின் விளையாட்டுக் கழகத்திற்கும் மான்செஸ்டர் யுனைடட் கழகத்தின் பெயரைப் போலவே ஏறாவூர் யுனைடட் என்று பெயர் வைத்துக்கொள்வதற்கும் அப் போட்டிகளே காரணம்.

அந்நாட்களில் பிடித்த லிவர்பூல் பைத்தியம் இப்போதும் குறைந்துவிடவில்லை. குடும்ப உறவு போன்ற உறவு அது. எங்கள் அணியின் தோல்விகள் வலியானவை. பல நாட்கள் வலித்த தோல்விகளும் உண்டு. அதேபோல் நினைத்து நினைத்து மகிழும் வெற்றிகளும் உண்டு.

ஏசி மிலான் அணியுடனான 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற சாம்பியன் லீக் போட்டியின் இடைவேளையின்போது, 0-3 என்று தோல்வியில் இருந்த விளையாட்டு, 3-3 ஆகி, இறுதியில் வெற்றியைப் பெற்றுக் கொண்டதும், 2019 ஆம் ஆண்டு சாம்பியன் லீக் முதலாவது அரையிறுதிப் போட்டியில் 3-0 என்று பர்சலோனாவிடம் தோற்றிருந்த அணி, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் (வைகாசி 7ஆம் திகதி) பார்சலோனா அணியை தனது அன்பீல்ட் ரோட் (Anfeild Road) மைதானத்தில் சந்தித்தபோது 4-0 என்று பெற்றுக்கொண்ட வெற்றியை இப்போது நினைத்தாலும் உணர்ச்சி வசப்படாதிருக்க முடிவதில்லை.

எனக்கு முதலாவது குழந்தை கிடைக்கவிருந்த நாட்களில், கிடைப்பது ஆணோ பெண்ணோ லிவர்பூல் கழகத்தின் ஆதரவாளராக்குவது என்றும், அதற்கான உடைகளையும் வாங்கிவைத்திருந்தேன். எதைக் கனவு கண்டேனோ அதுபோல் மூத்த மகளும் லிவர்பூல் கழகத்தினையே கொண்டாடுகிறாள்.

பல ஆண்டுகளுக்கு முன் மூதாளர் பராமரிப்பகத்தில் பணிபுரிந்துகொண்டிருந்தேன். நினைவு மறதி நோயின் பாதிப்பில் உள்ளவர்களைப் பராமரிக்கும் இடம். அவருக்கு வயது ஐம்பதுக்கும் குறைவு. மிகவும் குறைந்த வயதில் நினைவு மறந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு முன் அவர்

எமது முதாளர் பராமரிப்பகத்திற்கு அனுமதிக்கப்பட்ட நாட்களில் அவரால் நடமாடவும் உரையாடவும் முடிந்தது.

ஒரு நாள் அவரது மகன் அவரைப் பார்க்க வந்திருந்தபோது, லிவர்பூல் கழகத்தின் டீ சேட் அணிந்து வந்திருந்தார். அவருடன் உரையாடியபோது தனது தந்தை லிவர்பூல் கழகத்தின் தீவிர ஆதரவாளர் என்றும், தானும் அப்படியே என்றபோது, நானும் அப்படித்தான் என்றபின் எங்களுக்கிடையில் உறவு சற்று நெருக்கமாயிற்று.

அந்நாட்களில் தேசியத் தொலைக் காட்சியில் இங்கிலாந்து அணிகளின் காற்பந்துப் போட்டிகளைக் காண்பிப்பார்கள். சனிக்கிழமைகளில் அவருக்கு லிவர்பூல் அணியின் டீ சேட் ஐ அணிவித்து, பியர், உருளைக்கிழங்குப் பொரியல் ஆகியவற்றுடன் உட்கார்ந்திருந்து போட்டிகளைப் பார்ப்பேன். 90 நிமிடங்கள் தன்னையும் நோயையும் சுற்றாடலையும் மறந்து போட்டியை ரசிப்பார். மிகவும் விறுவிறுப்பான போட்டிகளின்போது மிகவும் உணர்ச்சிவசப்படுவார். கண்கள் கலங்கியதையும் கண்டிருக்கிறேன்.

இயன் றஷ் (Ian Rush). கென்னி டக்லீஷ் (Kenny Dalglish). ஜோன் பார்ண்ஸ் (John Barnes). புரூஸ் க்ருப்ளார் (Bruce Grobbelaar) ஆகியோரின் பரம ரசிகர். 1988, 89 ஆம் ஆண்டு அவருக்கு நினைவிருந்தது. அந்த வருடம் லிவர்பூல் லீக் போட்டியின் இறுதிப்போட்டியில் சமநிலை பெற்றாலே லீக்ஐ வென்றுவிடும் சந்தர்ப்பம் இருந்தது. இருப்பினும், ஆர்சனல் கழகத்திடம் தனது மைதானத்திலேயே 0-2 என்று தோல்வியைத் தழுவியதால் ஆர்சனல் கழகம் வெற்றி பெற்றது.

15, சித்திரை 1989 அன்று Nottingham Forest கழகத்துடன் 53000 ஆதரவாளர்களுக்கு மத்தியில், Hillsborough Stadium இல் நடைபெற்ற FA Cup அரையிறுதிப்போட்டியில், ஆதரவாளர்களை அதிகமாக மைதானத்தினுள் உள்வாங்கியதால், 97 ஆதரவாளர்கள் உயிரிழக்க, 766 பேர் காயமுற்றனர். இதன்பின் 07.05.1989 அன்று இப்போட்டி மீண்டும் நடைபெற்றபோது, லிவர்பூல் கழகம் 3-1 என்று வெற்றியீட்டி இறுதிப்போட்டியில் எவர்டன் கழத்தினை 3-2 என்று வெற்றிகொண்டது.

Hillsborough Stadiumத்தில் நடைபெற்ற சம்பவம் அனைத்து லிவர்பூல் ஆதரவாளர்களையும் பெரிதும் பாதித்தது. தற்போதும் அந்நாளில் நடைபெறும் போட்டிகளின் போது நினைவு வணக்கம் இடம்பெறும்.

இவைபற்றிய காட்சிகளை இணையத்தில் தேடி எடுத்துக் காண்பிப்பேன். உணர்ச்சி வசப்பட்டுப் பார்ப்பார்.

ஏறத்தாழ ஒன்றரை வருடங்களுக் கிடையில் அவரது நோய் முற்றி, படுத்த படுக்கையானார். மொழியை இழந்தார். ஒரு சில வார்த்தைகள் மட்டும் அவருக்கு நினைவிருந்தன. தொடர்பாடல் குன்றிப்போய் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தபடியே உலகை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார்.

அவ்வப்போது லிவர்பூல் கழகம் பங்குகொள்ளும் போட்டிகள் பற்றிக் கூறுவேன். நோயின் உக்கிரத்தினால் புலன்கள் திறனை இழந்து கொண்டிருப்பதால், சலனமேதும் இன்றிக் கேட்டுக் கொண்டிருப்பார். அவருக்கு நான் சொன்னவை புரிந்திருக்கலாம், இல்லாமலுமிருக்கலாம்.

லிவர்பூல் கழகத்திற்கு You'll Never Walk Alone என்றொரு பாடலுண்டு. உலகம் எங்கும் காற்பந்தாட்ட ரசிகர்கள் தங்கள் கழகங்களின் ஆதரவாளர்களை இன, மத, மொழி வேறுபாடின்றி தோழமைத்துக் கொண்டாடுவதில்லையா! அது போலத்தான் லிவர்பூல் கழகத்தின் ஆதரவாளர்களும்.

எவரும் ஒருபோதும் தனித்து நடப்பதில்லை. எங்கோ ஒரு இடத்தில் எனது கழகத்தின் ஆதரவாளனைக் காணும்போது, நட்பும் தோழமையும் ஊற்றெடுக்கிறது.

இதுபோலத்தான் எனக்கும் அவருக்குமான உறவும். நான் பணிபுரிந்த முதுமக்கள் மனையில் வேறு பலர் தங்கியிருந்தாலும், இவரிடத்தில் சற்றே அதிகமான கரிசனையும் அக்கறையும் இருந்தது என்பது உண்மைதான்.

அவரது நோய் முற்றிற்று. கையும் காலும் இறுகிவிட்ட நிலையில், தலையும் ஒருபக்கம் சரிந்து போயிற்று. முன்பிருந்த சிறிய தொடர்பாடலையும் இழந்துபோனார். பல நேரங்களில் கேவி கேவி அழுவதைக் கண்டிருக்கிறேன். தோழமைத்து ஆதரவாக கைகளைப்பற்றி ஆறுதலாகப் பேசும்போது அழுகை நின்றுபோகும். இயன்றவரையில் லிவர்பூல் கழகத்தின் போட்டிப் பெறுபேறுகளை அவருக்குச் சொல்வேன். கண்கள் எங்கோ வெறித்திருக்க, எதுவித சலனமும் இன்றி இருப்பார்.

அவரது வாழ்வின் இறுதி நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. குடும்பத்தினர் அவ்வப்போது வந்து போவார்கள். ஓரிரு நண்பர்களும் வந்துபோனார்கள்.

13ஆம் திகதி சித்திரை மாதம் 1991ஆம் ஆண்டு சனிக்கிழமை மாலை எனக்கு அவரைப் பராமரிக்கும் பணி கிடைத்தமையினால், அவருடன் இருந்து உரையாடிக் கொண்டிருந்தேன். வானொலியில் லிவர்பூல் கழகம் லீட்ஸ் கழகத்தினை 4 - 5 கோல் ரீதியில் வெற்றி பெற்றதை அறிவித்தார்கள். அவரிடம் அதைச் சொன்னேன்.

திடீர் என்று முகம் மலர்ந்தது, கண்கள் ஒளிகொண்டன, கையை அசைத்தார், ஒரு வித மகிழ்ச்சியான ஒலியெழுப்பினார்.

You'll Never Walk Alone என்று சொல்லி அவர் கையை அழுத்தினேன். எனது கையை இறுக்கிப் பற்றிக்கொண்டார்.

அடுத்து சனிக்கிழமை எங்கள் அணியின் வெற்றியைச் சொல்ல அவர் இருக்கவில்லை. அ



# ‘ஒரு ஏதோ..!’

## அங்கும் இங்கும், எங்கும் ஒரு நீள் கதை

### ‘அதிகாரம் மூன்று’

‘அங்கு’

கொடிச்சிவாலிக் கிழவியைப் பற்றி பெரிதாய் பறையத் தேவையில்லையெனினும் தேவை. நிதமும் மனுஷியைப்பற்றி பறைய ஏதாவது இருந்து விடுகிறது.

கொண்டோடிச் சுப்பி வேலை, அள்ளி வைப்பு, ஏற்றி இறக்கல், ஏற்றாமலேயே இறக்கல், கவிழ்த்து விடல், கவிழ்க்காது புரட்டி மூடல் என்று கிழவியின் தினப்பட்டியல் பரந்ததாகையால் பறைந்து கொண்டே இருக்க வாகாகிறது.

கிழவியின் கடைசிக் கவணில் அகப்பட்டது இவனும் அம்பிகையும்.

கிழவியின் கவண் புராதன காலத்து, பொய்யைதீகக் கடவுளர்களின் பல் கைகளில் அச்சுறுத்தும் சகல கொல்லாயுதங்களிலும் வலியது. விவிலிய BOOK OF SAMUEL இல் வரும், David இன் ஐந்து சலவோடைக்கற்கள் அடிக்கவிருந்த கவணெல்லாம் ஈடாக வாகே இல்லை.

இந்த கவண்-கவட்டடியின், ‘அடி மூலம்‘, ஒரு ஆவளைப்பிள்ளையார் கோவில் ஐந்தாம் திருவிழாவில் தான் துவங்கிற்று.

அதொரு நீண்ண்ண்ண்ட கதை. சுருக்கமாய் சொல்ல வாகாகாது. சுருக்கிக்க முடியாதென்பதற்காக சொல்லாமல் விடுவதும் ஈனம்.

கோவிற்கதைகள் பல் வகையானவை. படாரம்ப மனித ஜாதி,- செத்த சுற்றத்தை அடக்கம் செய்யவென்ற அளவிற்கு மண்டை விருத்தியாக துவங்கியதிலிருந்து ‘குறு மத குற்றம்‘, குரங்குகளை, கற்களை, வான ஒளியை, ஒன்றுமேயில்லாத ‘ஒன்றை‘ கடவுளாக்கி விழுந்து, தெண்டனிட்டு, தலையாட்டுவதான வகையறாக்களின் வழி ஏறி, ஏறுப்பட்டு, இன்று, இங்கு வந்து, இதில் நிற்கிறது. இதில் விழுவோர்,

சிறினோ சிறி சிறிசு

தலையாட்டுவோரே அறுதி அநேகர்.

அந்த ஆவளைப்பிள்ளையார் கோவில் ஐந்தாம் திருவிழாவிற்கு இந்தியாவில் இருந்து எந்த உபரி பிரபலங்களும் இறக்கப்படவில்லை. ஆனால், முதல் நாள் நாலாந்திருவிழாவுக்கு நாலாந்தர பாட்டுக்கோஸ்டி ஒன்று இறக்கப்பட்டிருந்தது. அதன் தாடி வளர்த்த தலைமைப் பாடகர்,- வேளைகளில் கதை வீரியத்திலும் பாடலுக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கும், இந்திய சினிமாவின் திரைப்படமொன்றில் ஒரேயொரு பாட்டினையே பாடியிருந்தார். அவருக்கும் அவர் கோஸ்டிக்கும்,- வாகனத்து மண்டையில் ஒலிபரப்பி குழல் பூட்டி, வெக்கை பரத்தும் ஊர்த்தெரு, புழுதி பரப்பும் ஊரொழுங்கை எல்லாம் உலங்கி, பலத்த கத்தல் விளம்பரம் கிளப்பி விடப்பட்டது. நாலாந் திருவிழா விஞ்ஞாபன துண்டுப்பிரசுரத்தில், 'இந்திய சினிமாவின் புகழ் பூத்த, பிரபல பாடகர், 'ஆரோபுரம் ஆரோசாமி' (?) அவர்களும் அவரது புகழ் பூத்த, பிரபல இசைக்குழுவும் பாட வருகின்றனர், என்றே பிரச்சாரிக்க, பிரசுரிக்கப்பட்டது. வாசிக்கத்தெரியாத, வாகனத்தை விரட்டி, பிரசுரக்கடதாசி பொறுக்கிய, சின்னப்பையன்கள் அவற்றினை பெரியவர்களிடம் கொடுக்க, அவர்கள், இந்தியப்பிரபலங்கள் புஷ்பக விமானங்களில் வந்திறங்கி, திருவிழாவில் தேவகானம் பாடி, பக்த கோடிகளை கிலாரடித்து, சாமி கொடுக்கவிருக்கும் திருவருள் போல, இசைஞானி-இசையருள் கொடுக்கவிருப்பதாக சுற்றூரெல்லாம் வதந்திக்க, ஊரான ஊரரெல்லாமிருந்து சனம் கொடிகட்டி வந்தது.

**நாலாந் திருவிழா விஞ்ஞாபன துண்டுப்பிரசுரத்தில், 'இந்திய சினிமாவின் புகழ் பூத்த, பிரபல பாடகர், 'ஆரோபுரம் ஆரோசாமி' (?) அவர்களும் அவரது புகழ் பூத்த, பிரபல இசைக்குழுவும் பாட வருகின்றனர், என்றே பிரச்சாரிக்க, பிரசுரிக்கப்பட்டது. வாசிக்கத்தெரியாத, வாகனத்தை விரட்டி, பிரசுரக்கடதாசி பொறுக்கிய, சின்னப்பையன்கள் அவற்றினை பெரியவர்களிடம் கொடுக்க, அவர்கள், இந்தியப்பிரபலங்கள் புஷ்பக விமானங்களில் வந்திறங்கி, திருவிழாவில் தேவகானம் பாடி, பக்த கோடிகளை கிலாரடித்து, சாமி கொடுக்கவிருக்கும் திருவருள் போல, இசைஞானி: இசையருள் கொடுக்கவிருப்பதாக சுற்றூரெல்லாம் வதந்திக்க, ஊரான ஊரரெல்லாமிருந்து சனம் கொடிகட்டி வந்தது.**

ஆனால், இந்தியாவிலிருந்து புஷ்பக ஊர்தியில் யாரும் இறக்கப்பட வில்லையாயினும் ஆவளைப் பிள்ளையாரின் இந்த ஆண்டு- சுற்று தோற்றுப்போன ஐந்தாந் திருவிழாவிற்கு, தேவதேவதைகள்- வாழ் சொர்க்கமிருந்து ஒரு தேவதை இறங்கியிருந்தாள். அது பற்றி, வாகனத்தலையில் ஒலி பெருக்கி பிணைத்து 'விளம்பரம் கத்தவில்லை'. துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கவில்லை.

இவனுக்கு மாத்திரமே தேவதை தெரிந்தாள். தேவதையாக தெரிந்தாள்.

தேவதை மச்சாள் பொடிச்சியுடன் வந்திருந்தாள். இருவரும் பொன் பளக்கும் செந்நீல நீள் துணி சுழற்றியுடுத்திய அரைச்சேலை அணிந்திருந்தனர். சிவப்பு சட்டைகள். தேவதைகளும் கிட்டமட்ட இவ்வாறே நிறமும் துணி-பட்டு- பீதாம்பரங்களும் சொர்க்க ஜவுளிக்கடைகளில் தெரிந்தெடுப்பது போல நிறைய கற்பனாவிஸ்தாரண சுவரோவி யங்களில் கீறப்பட்டிருக்கிறது.

தேவர் லோகம், நிஜத்தில் இல்லை. செந்நீல சரிகை, பட்டு இல்லை. தொங்கல் வானிலிருந்து கீழே பாவும் கந்தர்வ ஸ்திரீக்களான அப்ஸராக்கள் இல்லை. எல்லாம் கற்பனா விஸ்தாரணம். ஆனாலும், எல்லா மரபும் நியமமும் மீறி, இவனுக்கு மச்சாள் பொடிச்சியுடன் சேர்ந்து வந்திறங்கி, பாவிய அப்ஸரா தெரிந்தாள், செந்நீல அரைச்சேலை சுற்றிய பொன்னுருவாய்.

அம்பிகை.

அம்பிகை தானவள்.

ஆளாய் வந்து, கோவிலில் கண்ட குங்குமக்காரி.

அது, 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்,' கணியத்தான மிதிலாபுரி கதையாய்த்தான் முதற்பொறியில் துவங்கிற்று.

நீண்ண்ண்ண்ட கதையைச் சுருக்கினால், அது இவனும் அம்பிகையும் களவியலில் ஈடுபட்ட, முதல் பளீர் மின் பொறி பறந்த, வேகக்கதையைச் சொல்லும். உரோமம் துளிரும் வயதின் வேகம் இப்படியான இளம்பருவ, விடலை விடயங்களுக்கு குங்குலியம் புகைக்க வாகாக்கி விடுகிறது.

ஆவளையாரின் ஐந்தாம் திருவிழா முடிந்து, ஆறேழெட்டொன்பது கடந்து, தேர்,- முட்டிக்கு திரும்பி, கொடி இறங்கி, பூங்காவனச் சப்பரத்தில் பிள்ளையார் ஆடி, மடை கழிந்தும்,- இவனது திருவிழாக்கள் பெரு விழாக்களாய் தொடர்ந்ன. அம்பிகையின் திருவிழாக்கள். அம்பிகையுடனான திருவிழாக்கள். அவை இந்தியப்பிரபலங்களை இறக்கி ஆடும் தி.வி.களிலும் கோடி மடங்கு ஏற்றமானவையாயிருந்தன,- இவனுக்கும் அம்பிகைக்கும்.

ஆவளைப்பிள்ளையார் கோவில் தேர்முட்டி முகடு இறங்கும்,- பழசாகி, பழுதாகிய உழுத்த சாமி வாகனங்கள் இடறுண்ட குகையறை இருட்டிலும் இவண் அம்பிகையை சந்தித்திருக்கிறான்.

அது பாதுகாப்பான குகை போலத்தான் துவக்கத்தில் பட்டது. வயதுன்னும் விரஸ விஸாரத்தின் விளைவாக 'இவணோம்பிகா நமஹ' என்ற தோரணையிலான அம்பிகாபிஷேக அலுவல்களும் சாடைமாடையாய், சாமி வாகன இருட்குகையறையில் நிகழ்ந்தன.

அங்குதான், அச்சுமேலச்சு செவ்வையாய் ஒட்டியதாய், கொடிச்சிவாலிக்கிழவியின் இவண்

மேலான, கவண்-கவட்டடியும் சிக்காராய் நிகழ்ந்தது.

கள்ளக்காதலருக்கு தேர்முட்டியடி இருளறை,- இருள் பிரசன்னத்துக்கும் இடறுண்ட அடிப்பிற்கும் படு(ஊ) வசதியாய் தெரிந்திருந்த அளவுக்கு, கொடிச் சிவாலிக்கிழவிக்கும் கொண்டோடி கலகங்களை கலகிக்கும் கவண்-கவட்டடிப்புக்கு அது வசதியாய் இருந்தது.

•••

இங்கு

அதுவும் இராக்கொழுவல்தான். இதற்கு முன் ஒரு போதும் இருந்து 'இராத' கொழுவலென்ற படியாலும் அது முன்னிரவொன்றில் நிகழ்ந்து 'இருந்த' படியாலும் அதை இராக்கொழுவல் எனலாம்.

துவக்கத்தில், எல்லாம் சுமுகமாக இருப்பதாயே தோற்றிற்று. இவனும் சுமுகமாய்த்தான் இருந்தான். ஆனால், சடக்குப்புடக்கு-புடுக்கு சடக்கென்று சூழ்நிலை மாறிற்று. வரும்போதென்னவோ, உஸோமி,- ஏலவே இரைப்பையடைந்து, அங்கு சேறாய்க்குமைந்த தின் புல்லையும் அது கலந்த குடி தண்ணீரையும் பாட்டறியக்கிடந்து, அசை போட்டு, இரை மீட்டு, பால் கறக்க தயாரான பசுப்போல்,- பசுப்பால் குளிர்வுடன்தான் வந்தாள்.

உஸோமியை நம்ப முடியாது. எக்கணம், எப்படி மாறுதலுறுவாள், என்பதை. அது,- Mood Swing. Bipolar Defect. Lunacy… என்று எல்லாம் கலந்த ஒரு குழப்ப, உறைப்பினிப்பு கூழாங்கூழ். அது, மருத்துவ புலத்தில் ஏதாவது தனிப்பெயரால் நாமிக்கப் பட்டிருக்கிறதா, என இவனுக்கு தெரியாது. இந்நாள்வதிக்கு, படு நவீன மருத்துவ உலகிலும் அதற்கேதும் பெயரில்லைத்தான். இந்த லோக, சகல தனி மனுஷ மண்டைத்தர நிலபரமும் நிச்சயமாக ஆளுக்காள் வேறுபட்டதாக, இருக்கிற வகையில்தான்,- சூர்யனுக்கு கீழான கரு மேகங்களில் ஒளியாலும் உளியாலும் எழுதப்பட்டிருக்கிறது. உஸோமியின் மண்டைத்தனம். தரம்,- இதிலும், இன்னும் படு(ஊ) விநோதமானது.

அவள் முன்னிரவில் வந்தபோது, சூர்யன் இன்னும் இருப்பில் நின்றது. அது நடு வேனில். சூரியனுக்கு கீழே கரு மேகங்களில் சூர்யன் தன் ஒளி உளி கொண்டு தாறுமாறாக விநோத வண்ணத்தில் வண்ண கோரோவியம் கீறியிருந்தான்.

அது நல்ல சகுனமல்ல.

சூர்யனே தாறுக்கு மாறாக நடக்க வெளிக்கிடின், அவனொளிக்கு கீழே வாழும் உஸோமி எம்மாத்திரம்;.???!!!

வெளியின் வழியாயிருந்த தள உப்பரிகைக்குப் போகும் பெரிய கண்ணாடிக்கதவுகளில் மாட்டப்பட்டிருந்த 'பொன் பளக்கும் செந்நீலத்திரைச்சேலை' நீக்கலூடு, ஆதி பகவன் சூர்யனின் கதிர்கள் கன்னக்கோலராய் உட்புகுந்து, சமையலறைக் கதிரையில் குந்தியிருந்த இவனது வெற்றுப்பாதங்களில் படிந்தவேளை, அவை தெறித்து அருகில் நின்ற உஸோமியின் வெறும் பாதங்களிலும் பட்டாற்போல் பட்டது. அது ஒளியின் விநோதமாயும் இருக்கலாம்.

'நீங்கள் கீழைத்தேயர், பெரும்படியாய் பொய்யர்,' என்றாள் உஸோமி. அப்படிச்சொன்னதற்கான அடிமூலம் இவனுக்கு தெரியாது. எப்பனும் தெரியாது. அவள் அப்படித்தான். அவள் பேச்சின் அடிமூலம் தெரியாதபடி 'அடி' வரும். மூல அடி. அது மூலத்திலிருந்து வருவதோவென்றும் தெரியாது. ரிஷி மூலம், நதி மூலம், உயிர் மூலம், பிரபஞ்ச மூலம்;.., என்று எதைக் கிரஹித்துக்கொண்டாலும் உஸோமி மூலத்தை காண முடியாது.

'நீங்கள் கீழைத்தேயர், பெரும்படியாய் பொய்யர்,' என்றாள் உஸோமி, இரண்டாம் முறையாக. இரண்டாம் முறையாயும் இவனுக்கு அண்டபுண்டமெல்லாம் ஏறிக்கொண்டு வந்தது. படேற்றம். என்னதான் சர்வதேசியம், சமத்துவம் பேசினாலும் மனித விலங்குகள், தம் இனத்துடன்தான் தின்ன வெளிக்கிடும், குருதி வரை கடிபட்டாலும் குருதி வர கடிபட்டாலும்.

What the hell. you are talking about…??.' என்றான், கடுங்கோபமாக இவன்.

'நான் 'எருது எரு' (bullshit) பேசவில்லை. உள்ளதை, உண்மையை சொல்கிறேன்,' என்று திருப்பியடித்தாள், உஸோமி.

'இல்லை நீ போடுவது, பசுவின் சாணி,' என்றான்.

போச்சு.

அதை, 'நீ பேசுவது பசுவின் மயம்,' என்று சொல்லி தப்பியிருக்கலாம். சொல்லவில்லை. ஆதலின், தப்பவில்லை.

பெண்கள் யாரிடமும் இவண் 'சாணி போடுகிற கதையை' என்றுமே பேசியிருக்கவில்லை, என்பதால்,- அது எவ்வாறு எடுக்கப்படும் என்பது தெரியாது. அது கடுஞ்சினத்துடன்தான் எடுக்கப்பட்டது.

"

'நீங்கள் கீழைத்தேயர், பெரும்படியாய் பொய்யர்,' என்றாள் உஸோமி, இரண்டாம் முறையாக. இரண்டாம் முறையாயும் இவனுக்கு அண்டபுண்டமெல்லாம் ஏறிக்கொண்டு வந்தது. படேற்றம். என்னதான் சர்வதேசியம், சமத்துவம் பேசினாலும் மனித விலங்குகள், தம் இனத்துடன்தான் தின்ன வெளிக்கிடும், குருதி வரை கடிபட்டாலும் குருதி வர கடிபட்டாலும்.

What the hell. you are talking about…??,' என்றான், கடுங்கோபமாக இவன்.

'நான் 'எருது எரு' (bullshit) பேசவில்லை. உள்ளதை, உண்மையை சொல்கிறேன்,' என்று திருப்பியடித்தாள், உஸோமி.

'இல்லை நீ போடுவது, பசுவின் சாணி,' என்றான்.

போச்சு.

‘நீங்கள் சாணியை எரித்து மண்டையிலும் உடல் பூராவும் பூசுகிற வெருளிகள்தானே.‘

‘நான் பூசுவதில்லை.‘

‘நீ பூசாவிட்டால் போல் சாணி எரிப்பு நடப்பதில்லையா..? சுடுகாடுடைய சுடலைப்பொடியை கூட பூசுகிறார்களாமே !‘

‘யாரின் சாணகத்தை யார் எரித்தால் எனக்கென்ன..? யாரின் பிரேத அஸ்தியை யார், எங்கு பூசினால் எனக்கென்ன..?? எனக்கு பசுப்பால் கிடைத்தாலே போதும். ஆட்களை உயிருடன் எரிக்கிறார்கள். குழந்தைகளை உயிருடன் வெட்டி எரிக்கிறார்கள். இடம் வலம் தெரியாமல்மாட்டுண்ட சிறுவர்களின் கழுத்தில் tire ஐ கொழுவி, கொளுத்தி பொசுக்குகிறார்கள். ஏழை பாழைக்களுக்கு உதவ வந்த மதப்பாதிரியான தேசத்தலைவர்,- தன் கொல் படையை, ‘கழுத்தில் ரயர் போட்டெரிக்க வரும் வாசனை சுகம் தருவது,‘ என்று ஏவி பொசுக்க வைத்தார். எரியும் சூர்யனால் வாழும் தீ உலகில் எரிந்தால் எனக்கென்ன;??!!‘

‘ரயர் வாசத்தை மோந்த முக்கியது, Haiti ஜனாதிபதி, Jean Bertrand Aristide தானே, 2004 இல்;??!!‘

‘ஆம். ஆனால், அவர் ரயரெரித்த உடல் பொடியை, தனது தடித்த உதடுகளில் பூசினாரோ, தெரியவில்லை.‘

‘நீங்களேதோ திறந்தான். கீழைத்தேயர், நீங்கள் உதடுகளைத் திறந்து அசிங்கங்களை எல்லாம் அடைந்து அதக்குபவர்கள் தானே. சாணியையும் பசுச்சலத்தையும் கலந்து தின்பவர்கள் தானே..!! அசிங்கர்.‘

‘நீ இன்றைக்கு கொழுவலுக்குத்தான் வந்திருக்கிறாய். அசிங்க கதை பேசிக்கொழுவ. அது பஞ்ச கௌவியம். பால், தயிர், நெய்யும் சேர்ப்பது.‘

‘இன்றைக்கு மட்டுமா..? ஒவ்வொரு முறையும் கொழுவலுக்குத்தானே வருகிறேன். கொழுவலில்லாமல் ஏது உயிர்..? ஏது வாழ்க்கை..?! பால்,

**‘அவள் சோக்கான வடிவு அப்ப. குளுகுளுவெண்டு அன்னாசிப்பழம் மாதிரி இருப்பாள்.‘**

**‘அன்னாசிப்பழம் முள்ளெல்லோ..??!!**

**‘அவள் முள்ளுத்தான் மொக்கா. அப்பவும் முள்ளு. இப்பவும் முள்ளு. ஆட்டக்காறியெண்டு ஊரிலை பேர். அவளும் கண்ணடிச்சு, நானும் கண்ணடிச்சு.நிறையப்பேர் அப்ப அவளைக் கலைச்சுக் கொண்டு திரிஞ்சாலும் நான்தான் துணிஞ்சு தூக்கிக்கொண்டு போனனான்‘**

**‘எங்கை செங்குப்பையா..??‘**

**‘வேறை எங்கை மொக்கா..?ஆவளைப் பிள்ளையார் தேரடி சள்ளை அறைக்குத்தான். அது பாதி இருட்டு முடக்கு. முருகன் ஏறிற மயில் வாகனமொண்டு சாடையாய் கால் முறிஞ்சு கிடந்தது அங்கை. அப்ப கொடிச்சிவாலிக்கிழவிக்கு பதினேழு வயசும் இராது.!!!!‘**

நெய் சேர்த்தால் துர் நெடி போய், நெய் நெடி வருமா;??‘

‘நாற்றக்கதைகள் கிடக்கட்டும். பஞ்ச கௌவியத்தை விட்டு மாறி, பஞ்சை கௌவுவோம், வா.‘

‘பஞ்சை கௌவுவதென்றால்...??‘

‘தலையணையில் பஞ்சில்லையா..?‘

‘இல்லை. பஞ்சம்தான் இருக்கிறது.‘

இப்படித்தான் கொழுவல், கௌவல், வௌவால் போல் தலைகீழாய்த் தொங்கிக்கொழுவல், தொங்கிக் கௌவல் என்று இவணதும் உஸோமியதும் ‘இரா‘ நாள், ‘நாள்நாள்‘ வாழ்வோடும்.

சுவாரஸ்மான வாழ்வோட சுவாரஸ்யமான சிறு விஷயங்கள் போதும்.

‘சமையறை வெள்ளை மேல் தட்டில் கறுப்பு சீனிக்கு பக்கத்தில் இருக்கிற Hennessy cognac போத்தலை எடு. ஆயிரத்து எழுநூ ற்று எழுபத்தைந்தாம் ஆண்டு தொடங்கிய வடிச்சாலை. xo extra old. என்றான், இவண். போத்தலை தேடி எடுத்தவள், ‘அரைவாசிதானே இருக்கிறது,‘ என்றாள். பெருமையாய் குடி வடி தொழிற்சாலையின் ஆண்டைச் சொன்னவன், அரைவாசிதான் இருக்கிற தென்றதைச் சொல்லவேயில்லை.

அரைவாசியும் அருந்தி முடிகையில் உஸோமியும் இரண்டு சிறு Drinks ஆச்சர்யகரமாய் குடித்திருந்தாள்.

ஏதோ நினைவு வந்தவள் போல், ‘அத்து ததி;.. ஏன்;. அதைப்போத்தல் கொணியாத்தை;.. கதுப்பு தீனிப்போத்ததுக்கு;. பத்தத்தில் வைத்தாய்;..??‘ என்று பித‘த்‘தலாய் (பிதற்றலாய்) கேட்டாள். அது, ‘அது சரி. ஏன், அரைப்போத்தல் கொனியாக்கை கறுப்பு சீனிப்போத்தலுக்கு பக்கத்தில் வைத்தாய்,‘ என்றிருக்க வேண்டும்;!!!

‘பிதது தொல்திறேன்,‘ என்றான் இவண்.

‘அத்தோது‘, ‘இதுதகை பத்தி பிததும் கதைத்தளாம்,‘ என்றும் சொன்னான். , அத்தோடு, ‘இதுகளை பற்றி பிறகும் கதைக்கலாம்.‘ை

•••

அங்கு (அ)

கொடிச்சிவாலிக் கிழவிக்குத்தான் ஊர் பூராவான குற்றொழுங்கை, கையொழுங்கை, கைக்கிளை யொழுங்கை காலொழுங்கை, எங்குமுள்ள சந்து பொந்து, சத்திர பொத்திரங்கள், எல்லாம் அத்துபடி, எல்லோரிலும் பார்க்க. ஒருவேளை, செங்குப்பு ஐயாவுக்கு மாத்திரம், அதேயளவு விபரணம் தெரிந்திருக்கலாம்.

ஆவளைப்பிள்ளையார் கோவில் தேர் முட்டியடி இறக்க இருட்டு கீழ் குகையறையின் இருளும் அதில் ஒளிந்திருக்கும் ஒளியும் பற்றி, கொ.வா.கி. இற்கு ‘அக்குள் வேறு அடித்தொடையிடை வேறாக‘

தெரியும். 'குறிப்பிட்டாற்போல்', செங்குப்பருக்கும் இது தெரிந்திருக்கலாம். குறிப்பிட்டாற்போல், இவணும் அம்பிகையும் பூஜை-புனஸ்கரிப்பில் இருந்ததை கொடிச்சிவா. கிழவி வேவு பார்த்ததில் வியப்பு கிடையாது. முன்னரும் குறிப்பிட்டாற்போல் கொண்டாடிச் சுப்பி, கொண்டோடியது, பூஜை-புனஸ்கார அபிஷேகத்தை. இம்முறை இரண்டு வீடுகளுக்கு..!!

ஒன்று (அ) இவண் வீடு.

இரண்டு (அ) அம்பிகை வீடு.

ஒன்று (ஆ) 'பிள்ளை, வியளம் தெரியுமே;.???!!! செங்குப்பு ஐயாவின்ரை பேத்திப்பெட்டை அம்பீயும் உன்ரை மோன்....... Blakkanda...Blakkanda...... Blakkanda.........

'ஒரு நல்ல குடும்பத்து பொடியன் செய்யிற வேலையே இது;??!!

இரண்டு (ஆ) 'குப்பப்பு, உனக்கு வியளம் தெரியுமே;.???!!! உன்ரை பேத்திப்பெடிச்சி அம்பீயும்;. Blakkanda...... Blakkanda...... Blakkanda......

'ஒரு நல்ல குடும்பத்து பொம்பிளைப்பிள்ளை செய்யிற வேலையே இது;??!!'

பேந்தென்ன;??!! போச்சு;!!
போச்சு;!! பேந்தென்ன;??!!

•••

அங்கு (ஆ)

இதுவும் முன்னர் குறிப்பிட்டாற்போல் தான். இந்த மடத்தடிக்கதை.

தூணில் சாய்ந்திருந்தார் செங்குப்பு ஐயா. வளையவர இளம் விடலைகள்.

'முன்னர் குறிப்பிட்டது (2002)' தும்பலைச் சுடலைக்குப் போகிற வழியில் வயல்வெளி தொடங்க முன், மண்டையில் கர்வம் பிடித்து;சினம் கொண்டதால், ஓலை மயிர்களைச் சிலுப்பி குரூராக்ரோஷ நர்த்தனம் புரியும் பனை மரங்களும் வயலும் வெளியும் வயல் வெளியும் தொடங்கமுன், கலவிக்கு முந்திய காந்துகை போல, புலவி மக்கட்குடியிருப்பின் இறுதி மூச்சாக, உயிருடன் இறப்பதற்கு முன் உயிருடன் இருக்கும் கட்டக்கடைசி வாழ் உலகாக, அதியாச்சர்யமாக இருந்தது, அந்த மூலை. அங்கானை அல்லை வீதி சலுக்கை சந்தியைத் தாண்டியவுடன் மக்கள் வாழ் நெருக்கம் இறுதி மூச்சிற்கு வரும் பிறகு சூசையப்பர் தேவாலயம் வரும். பிறகு, கலவி வர முன்னான காந்துகை முடியும்.

பனை, வயல் வெளி தொடங்க முன் திடுமென்று ஒற்றை ஒழுங்கையொன்று பெருந்தெருவிலிருந்து செங்குத்தாய் வடக்கு நோக்கிச் செல்லும் இந்த மூலையில்தான் அந்த மடம் இருந்தது. இந்த மூலையின் விஷேஸம் அறிய வேண்டுமென்றால் சூசையப்பர் தேவாலயத்திலிருந்து சுடலை வரை போனால் தான் உண்டு.

எவ்வாறாயினும், மூலையில் கிடந்தது மடம். சும்மா வெறும் மடந்தான். வாய்ப்பந்தல் போடுவதான இலகுமையுடன் சாதாரணமாய்ப் போடப்பட்டது. நாலு கால் மேல் வேய்ப்பு. போட்ட புண்ணியவான் செப்பமான சிரத்தை கொண்டு தளத்துக்கு செம்மையாக செம்பாட்டு சுடுமண்ணில் உறை திட்டு போட்டிருந்தான்.

இந்த மடத்தில்தான் 'விடலை வளையர்' செங்குப்பர் காவி நிற உத்தரீயம் போர்த்தி, கதை சொல்லத்தொடங்கினார். செ.கு. ஐயாவின் கதைகள் படு (ஊ) சுவாரஸ்ய அம்ஸம் கொண்டவை.

இது அடிக்கடி நிகழும் சடங்கு.

செ.கு. ஐயாவுக்கு இருமுகங்கள் அநேக மாந்தருக்குள்ளது போல். ஒன்று,- சாமிப்போக்கு. மற்றது,- சாக்குபோக்கு ஏதாவது சொல்லி, சாமிப்போக்கிலிருந்து விலகும் ஆசாமிப்போக்கு. ஆசாமிப்போக்கே படு(ஊ) சுவாரஸ்யம் கொண்டது. அதுதான், அவரது மன்மதலீலா லோலங்களைப் பறையும் காண்டங்கள். ஒவ்வொரு காண்டமும் ஒவ்வொரு தனி வேறு வகையானது. களவியல், கற்பில்லா இயல், கனவியல், நனவியல், தூக்கலியல், கொண்டு சென்று பறித்தலியல், கண்ணடியியல், களவாய் ஒளித்தல் இயல்;.இன்னபிற என்றபல இயல்பே இல்லா இயல் பல அவரது இயல்ப் இளமையில். இப்போ வயதாகி விட்டததால் இயல்பு எவ்வளவிற்கு மாறிற்றோ தெரியாது. பொதுவாய், பெரிதாய் மாறுவதில்லை.

விடலைகள் வாயூற, வாய் பிளந்து கேட்டார்கள்.

'அவள் சோக்கான வடிவு அப்ப. குளுகுளுவெண்டு அன்னாசிப்பழம் மாதிரி இருப்பாள்.'

'அன்னாசிப்பழம் முள்ளெல்லோ..??!!

'அவள் முள்ளுத்தான் மொக்கா. அப்பவும் முள்ளு. இப்பவும் முள்ளு. ஆட்டக்காறியெண்டு ஊரிலை பேர். அவளும் கண்ணடிச்சு, நானும் கண்ணடிச்சு;.நிறையப்பேர் அப்ப அவளைக் கலைச்சுக் கொண்டு திரிஞ்சாலும் நான்தான் துணிஞ்சு தூக்கிக்கொண்டு போனனான்'

'எங்கை செங்குப்பையா..??'

'வேறை எங்கை மொக்கா..?ஆவளைப் பிள்ளையார் தேரடி சள்ளை அறைக்குத்தான். அது பாதி இருட்டு முடக்கு. முருகன் ஏறிற மயில் வாகனமொண்டு சாடையாய் கால் முறிஞ்சு கிடந்தது அங்கை. அப்ப கொடிச்சிவாலிக்கிழவிக்கு பதினேழு வயசும் இராது;.!!!!'

•••

அங்குமிங்கும்

உஸோமி, ஏலவே எழுந்து போயிருந்தாள். இவணுக்கு தெரியாது. தலையணையில் சிறிது வாந்தி எடுத்திருக்க வேண்டும். சாத்துவாயாயும் இருக்கலாம். இரண்டு Drinks Cognac செய்த சகாயம்.

'அங்கே',- செங்குப்பு ஐயா கொடிச்சிவாலி 'வாலை'யை தூக்கிக் கொண்டு, ஆவளைப்பிள்ளையார் கோவில் தேரடி இறக்க அரை இருட்டு அறைக்குள் போக, இவண் 'இங்கே' Cognac வேலை செய்த முழுப்போதையின் முறிவில் முழு தூக்கத்தில் ஆழ்ந்தான்.

அ ,இன்னும் வர உண்டு.

# ‘சிதைப்பு‘ அல்லது ஐயர் வீட்டுக் கல்யாணம்

## அதிகாரம் 5

கணேசனின் முகம் கணேசக்கடவுள் முகம் மாதிரி இல்லை.

ஆனால், சின்ன தொந்தி இருந்தது.

‘சித்தி‘ என்கிற சித்திராவுக்கு முகம் இல்லை.

அது நீண்ண்ண்ண்டா(ஆ) க(வி)தை.

,இப்போ, அது தேவையில்லை.ை

கணேசனும் சித்தியும் காதலராயினர் கசிந்து கண்ணீர் மல்கினர் (?).

எல்லாம் எவருக்கும் தெரியாமல்தான்..!!

அது,- எப்படி முடியும்..??!!

கணேசன் பிராமணப்‘பிள்ளை‘.

சித்தி ‘வெள்ளாம் வீட்டாள்‘.

இவர்கள் எப்படி காதல் கொள்ளலாம்..??!!

கடைசியில்,- கூட்டிக் கொண்டோடினர்.

இடையில் நிகழ்ந்த ‘1000‘,

இப்போ தேவையில்லை.

போச்சு;.!

கணேசனின் ஐயா, ஐயர் வெடித்தார்.

சினத்தீயில்,-

சித்தியின் வீட்டை எரிக்க ஏவமுன், கணேசச்சாமிக்கு ‘பூக்கட்டி‘ பார்த்தார்.

சாமி,‘ வேண்டாம்,‘ என்றது;!!!

சித்தியும் சித்திரா வீடும் தப்பின.

இப்போ, சித்திக்கு ‘பிராமண-வெள்ளாள‘ பிள்ளைகள் மூவர்.

அவர்களை ‘நிஷதர்‘ எனலாம்.

பி(ற)கு॰பிராமணத் தந்தைக்கும் சூத்திரத் தாய்க்கும் பிறக்கும் மகன், நிஷதன்.

நன்றி॰கருட புராணம். காண்டம் 96.

# 'RUIN'

## (Or. Matrimony of Iyar's Household.)

**Chapter: 05**

Ganeshan's face is NOT as The face of GOD Ganesha

But. he had a tiny pot-belly.

Siththira. a.k.a. Siththi didn't have a face.

That's a looooonga(ä) story A.k.a a poem.

(But) It's not needed. now.

Ganeshan and Siththi became Lovers.

They 'oozed' and shed tears (?). All. without anybody knowing It..

How is it possible (anybody knowing it)..??

Ganeshan is a Brahmin 'child'.

Siththi is from 'Vellala House'.

How could they be in LOVE..?

['1000'. that happened in-Between are not needed. now. (though).

Eventually. they eloped.

Ohhh… 'Gonna'…

Iyar. the father of Ganeshan Exploded.

In the fire of rage.- before the 'Launch' to burn Siththi's house. he tried 'Flower Toss' To God Ganesha.

God said. 'Don't.'

By the grace of God. Siththi and Siththira's house escaped.

Now. Siththi has three Brahmin-Vellala 'children'.

They could be called 'NISHADAS'.

** N.B.: A son born to a Brahmin father and Sudra mother is called NISHADA.

— Courtesy: Garuda Purana. chapter 96.

**சிறினோ சிறி சிறிசு**

# இலக்கிய உலகின் மலைப்பிரசங்கிகள்

இன்று நாங்கள் பயன்படுத்தும் சீனி, அல்லது தமிழ்நாட்டுச் சக்கரை, கரும்பிலிருந்து பெறப்படுவது. பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் குடியேற்ற நாடுகளில் கரும்பு உற்பத்தி செய்து சீனி தயாரித்து, ஐரோப்பாவின் சீனிச்சந்தையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்களின் ஏகபோகம் காரணமாக சீனியின் விலை அதிகமானதாகவும் இருந்தது.

நெப்போலியனுடனான யுத்தத்தில், கப்பல் போக்குவரத்துத் தடை காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கான சீனி வினியோகம் தடைப்பட்டிருந்தது.

பீட்ரூட் மூலமாக சீனி தயாரிக்கும் முறை ஜேர்மனியில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டாலும், அது பரவலாக்கப்பட்டிருக்கவில்லை. இந்தத் தடையினால் ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக, நெப்போலியன் பிரான்சில் சீனி உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்து, ஐரோப்பாவில் பீட்ரூட்டில் சீனி தயாரிக்கும் முறை பரவலாக்கப்பட்டு, பிரிட்டிஷாரின் கரும்புச் சீனியில் தங்கியிருக்க வேண்டிய தேவை இல்லாமல் ஆக்கப்பட்டது. தற்போது பீட்ரூட் சீனித் தயாரிப்பு ரஷ்யா, அமெரிக்கா வரை பெருமளவில் நடைபெறுகிறது.

வழமையான பீட்ரூட்டை விட, பெரிய அளவிலான வெள்ளை வகை பீட்ரூட்டிலிருந்து சீனி தயாரிக்கலாம் என்று விதை விற்பனை நிறுவனத்தின் விற்பனை விபரப் புத்தகத்தில் கண்டு, நானும் என் தோட்டத்தில் விளைவித்திருந்தேன்.

ஆர்வக்கோளாறு!

சீனிப் பாணி செய்வதற்கு நேரம் கிடைக்காமல் ஒரு முறையோடு என்னுடைய அந்த சீனி பீட்ரூட் பயிர்ச் செய்கைப் பரிசோதனையும் முடிவுக்கு வந்தது.

இப்போது, சீனியை விட பல மடங்கு இனிப்புத் தன்மையுள்ள, தமிழர்களால் சீனித் துளசி என்று {ானஸ்நானம் அளிக்கப்பட்ட ஸ்டீவியாவை வளர்த்துக் கொண்டிருக்கிறேன். அதுவும் அதை நீரில் கொதிக்க வைத்து, அதன் பாணியைச் சேர்த்து வைக்க நேரமில்லாமல் சருகாகிக் கிடக்கிறது.

•••

முன்பு நான் வேலை செய்த இடத்தில், என்னுடன் நீண்ட காலமாக எரித்திரிய, எதியோப்பிய நண்பர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். எரித்திரியர்களுக்குத் திக்ரிஞ்ய மொழி தனித்துவமானது என்றாலும், நாடளாவிய வகையில் எதியோப்பிய மொழியான அம்ஹாரிக்கையே அவர்கள் எல்லோரும் பேசிக் கொள்வார்கள்.

நான் தொழிற்சங்கப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி பெரும் கலாட்டா பண்ணியதால், அவர்கள் என்னை 'தலைவா' என்று பொருள்படும் 'அலெய்க்கா' என்று அன்போடும் மரியாதையோடும் அழைப்பார்கள்.

அவர்களோடு நான் வேலை செய்த காலத்தில் அந்த மொழியை நான் இலகுவாகப் பயின்றிருக்க முடியும். மொழிகளை பயில்வதில் நாட்டம் உள்ள எனக்கு, அப்போது அது தோன்றவில்லை.

அந்த நேரம், வேலையும் செய்து வாரப் பத்திரிகையும் நடத்திக் கொண்டிருந்தேன்.
எனவே, அதற்கு நேரம் ஒதுக்க மூளையில் இடம் இல்லாததும் காரணமாக இருக்கலாம்.

பின்பு என் நண்பன் எரேமியாஸ் எரித்திரியா சென்றபோது, மொழி படிக்க புத்தகம் வாங்கி வரக் கேட்டபோது, அவனும் தேசிய உணர்வோடு, ஆங்கிலம் மூலம் திக்ரிஞ்ய படிக்கும் புத்தகம் ஒன்றையே வாங்கி வந்தான்.

மொழியைப் படித்திருந்தால், நான் ஒரு எதியோப்பியப் பெண்ணைத் திருமணம் செய்வதில் முடிந்திருக்கக் கூடும்.

•••

எனக்குப் பிடித்த றொக் அன்ட் றோல் கிட்டாரிஸ்டு கார்லோஸ் சன்ரானா தான். அவருடைய இசைத்தட்டு ஒன்று நான் நண்பர்களோடு தங்கியிருந்த காலத்தில் சனிக்கிழமை பார்ட்டிகளில் ஒலித்துக் கொண்டிருக்கும். அப்போது தான் அவர் எனக்கு அறிமுகமானார். அதன் பின்னால், நான் அவரின் ரசிகன் என்பதை அறிந்த என் எரித்திரிய நண்பன் ஒருவன் தனது குறுந்தட்டுகளை எனக்குத் தந்திருந்தான்.

இப்போதும் முன்பின் கேட்டிராத இசையாக இருந்தாலும்,

சன்ரானாவின் கிட்டார் இசையை அடையாளம் காணக்கூடியளவுக்கு அவரது இசைக்கு நான் ரசிகன்.

றொக் அன்ட் றோல் இசை என்றால், வெறும் காட்டுக்கத்தல் தான் என்ற எண்ணம் எனக்கு நீண்ட காலமாக இருந்தது. சன்ரானாவின் இசையைக் கேட்டு, அதில் இருந்த மென்மையான மெலடி என்னை மிகவும் கவர்ந்திருந்தது. எழுபதுகளில் ஹிப்பி யுகத்தில் வூட்ஸ்றொக்கில் நடைபெற்ற பெரும் இசை விழாவில் இடம் பெற்ற அவரது இசை நிகழ்ச்சியையும் பார்த்திருக்கிறேன். அவருடைய சுயசரிதைப் புத்தகத்தைக் கூட வாசித்திருக்கிறேன்.
அவருடைய Europa என்ற இசைக் கோர்வையை எலக்ட்ரிக் கிட்டாரில் வாசித்து யூடியூப்பில் பதிவேற்ற வேண்டும் என்ற எண்ணம் இன்னும் நிறைவேறவில்லை.

இதன் பின்னால் என்னோடு வேலை செய்த, எனக்கு ஒரு அண்ணன் போன்ற, இந்திய வம்சாவளிக் கயானியனான பிரையன் மூலமாக எனக்கு எரிக் கிளப்டனின் அறிமுகம் கிடைத்தது. அவன் கரிபியன் நாடுகளில் தயாரிக்கப்பட்ட முதல் படமான மிஸ்டர் பிம் என்ற இந்திய வம்சாவளிச் சிறுவன் பற்றிய படத்தில் பணி புரிந்தவன். அந்தப் படத்தை அந்தக் காலத்தில் இங்கே தொலைக்காட்சியில் ஒரு நள்ளிரவில் பார்த்தேன். இங்குள்ள யோர்க் பல்கலைக்கழகத்தில் ஒளிப்பதிவு பயின்று என்னோடு வேலை செய்து கொண்டிருந்தவன். அந்தப் படம் ஒவ்வொரு வருடமும் இங்கே அவ்வாறு திரையிடப்படுவதாக அவன் சொன்னான். இப்போது அதெல்லாம் இல்லை.

றொக் அன்ட் றோல் கிட்டார் கடவுள்களில் ஒருவராக கருதப்படுகிறவர் எரிக் கிளப்டன். பொப் மார்லி பாடிய I shot the sheriff என்ற பாடலை, அவர் வெவ்வேறு இடங்களில் பாடிய வீடியோக்களை ஆயிரக்கணக்கான தடவைகள் பார்த்திருக்கிறேன்.

பின்னர் றொக் அன்ட் றோல் கிட்டார் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தொடங்கி, இங்கே உள்ள Royal Conservatory of Music இல் வகுப்புக்குச் சென்ற போது, Jeff Beck கின் அறிமுகம் கிடைத்தது. ஜெஃப் பெக் எரிக் கிளப்டனோடு Yard Birds என்ற பிரிட்டிஷ் இசைக்குழுவில் இருந்தவர். உலகப் புகழ் பெற்ற கிட்டாரிஸ்டுகளில் ஒருவர்.
ஜெப் பெக்கின் Freeway Jam மிகவும் பிரபலமான கிட்டார் இசைக் கோர்வை.

•••

அ.முத்துலிங்கம் தமிழ் இலக்கிய உலகில் பிரபலமாக்கப்பட்டவர். இயல்விருது கொடுப்பதன் மூலம் இலக்கிய உலகில் தன்னைத் தக்க வைத்துக் கொண்டவர். அவரை ஆசான் ஜெயமோகன் அசோகமித்திரனுக்குப் பின்னால் சிறந்த எழுத்தாளர் என்று வர்ணித்திருந்தார்.

இனிப்புக் கிடைக்காத சிறுவன் போல, மண்ணில் புரண்டு அழுது, இயல்விருது பெற்று...
நக்கி நாவிழந்து!

நான் சிறுவனாக இருந்த காலத்தில் இலங்கையில் எழுதியிருந்த அவர், கனடாவில் நான் தாயகம் ஐந்து வருட காலங்களாக வெளியிட்ட காலத்தில் எழுதியிருக்கவில்லை. தாயகம் வெளிவருவது நின்று போனதன் பின்னால் தான் அவர் தமிழக சஞ்சிகைகளில் எழுதிப் பிரபலமானவர்.
தனது வெளிநாட்டு அனுபவங்களை எழுதி அதில் உப்புப் புளி மாதிரி, கற்பனையைச் சேர்த்து எழுதியவர்.

அவரை அசோகமித்திரன் ரேஞ்சுக்கு புகழ்ந்தேத்திய ஆசான் லேட்டஸ்டாக சேக்ஸ்பியர், கம்பன், தனது ரேஞ்சுக்கு தூக்கி விட்டிருக்கிறார்.

அந்தக் காலத்தில் வெளிநாட்டுப் பயணங்கள் பற்றி ஆனந்த விகடனில் எழுதிப் பிரபலமான மணியன் மாதிரி, இவர் இலக்கிய உலகின் இதயம் பேசுகிறது மணியன் என்று தான் நான் அவரை வர்ணிப்பதுண்டு.

•••

என்னுடைய வீட்டின் பின்புறத்தோட்டத்தில் கனடாவில் வளரக்கூடிய சகல பழ மரங்களும் பெரிகளும் உண்டு. அதில் கனடியர்கள் பலர் அறிந்திராத வட அமெரிக்க மண்ணுக்கே உரித்தான அபூர்வமான பழங்களும் உண்டு. இதெல்லாம் இத்தனை வருடமாக நான் தேடியலைந்து வாங்கி வந்து நட்டவை.
சிறிய செடிகளான பிளாக்பெரி, புளூபெரி முதல் பெரிய மரமான மல்பெரி வரைக்கும் என்னிடம் உண்டு.
பிளாக்பெரி வழமையில் முள்ளோடு இருக்கும் என்பதால், முள்ளில்லா வகைகளைத் தேடிக் கொண்டு வந்து நட்டிருக்கிறேன். புளூபெரி நீண்ட காலமாக நட்டாலும், பழமரங்கள் நிறைந்து காடு போல இருக்கும் கொல்லைப்புறத்தில் சூரிய வெளிச்சம் போதாததால் செழித்து வளர முடியாமல் பட்டுப் போயிருந்தன. முயற்சியில் சற்றும் மனம் தளராது இப்போது மரக்கறிகள் வளர்க்கும் பகுதியில் சூரிய வெளிச்சம் படும் இடத்தில் நட்டு நன்கு வளர்ந்து வருகிறது.

மல்பெரி இலைகள் வறையாக சமைத்து உண்ணக்கூடியன, ஆரோக்கியத்துக்கு உகந்தவை என்று சொல்லப்பட்டாலும், இதுவரைக்கும் நான் அவற்றை உண்ணத் தேவையில்லாதபடிக்கு, என் தோட்டத்தில் பல அபூர்வமான இலைவகை மரக்கறிகள் உண்டு.

•••

தமிழில் புணர்ச்சி விகாரம் குறித்து எழுத வேண்டும் என்ற நீண்ட நாள் திட்டம் இன்னமும் நிறைவேற முடியாதபடிக்கு நாய்க்கு வேலையுமில்லை. நிற்க நேரமும் இல்லை.

இதற்காகவே ஆறுமுகநாவலரின் இலக்கணச் சுருக்கத்தை தரவிறக்கம் செய்து நீண்ட காலம். நன்னூலையும் ஒருதடவைதட்டிப்பார்க்கவேண்டும் என்ற எண்ணம். அதற்கான எனது

பாணியிலான தலையங்கம் கூடத் தயாரான நிலையில் இன்னமும் அது சாத்தியப்படவில்லை.

மிகவும் ஆச்சரியமான விடயம், தமிழில் பிரசுரம் கண்ட எழுத்தாளர்கள், கவிஞர்கள் கூட தமிழில் எளிய இலக்கண விதிகளைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பது தான்.

என்னைப் போல, எட்டாம் வகுப்பில் ஆறுமுகநாவலரின் இலக்கணச்சுருக்கத்தைக் கரைத்துக் குடித்திருக்க வேண்டும் என்பது எழுதுவதற்கு அவசியமானது இல்லை தான். ஆனால், மொழிப்புலமை என்பது இலக்கணத்திற்கு அப்பாற்பட்டது. அது மிகுந்த வாசிப்பினால்வருவது. அதன்மூலமாக எங்களை அறியாமலேயே இலக்கண ஒழுங்குகள் எங்கள் மனதில் பதிந்து விடும். விதிமுறைகளை அறிந்து கொள்ளாமலேயே வழக்குமுறைகள் மூளைக்குள் நுழைந்து பதிவாவது அப்படித் தான்.

அப்படியிருந்தும் புணர்ச்சி என்றதுமே புல்லரிக்கின்ற நம் இலக்கியச் செம்மல்கள் இலக்கணப் புணர்ச்சி என்றதுமே முகம் விகாரமடைந்து விடுகிறார்கள்.

நான் கூட சோம்பேறித்தனமாக இடையில் வரவேண்டியதை தவிர்த்து விடுவதுண்டு. பிரச்சனை தவிர்த்து விடுவது பற்றியதல்ல, தவிர்க்க வேண்டியதை வலிந்து புகுத்துவது பற்றியது!

•••

இந்தியாவில் தேர்தல் ஆணையகம் அரசாங்கத்தின் மோசடிகளுக்கான உத்தியோகபூர்வ அலுவலமாகத் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலும் வாக்களிப்பு இயந்திரம் வந்த பின்னாலும், தேர்தல் முடிந்து முடிவுகளை அறிவிக்க மாதக்கணக்கில் எடுப்பது மிகவும் சிரிப்பாக இருக்கும்.

தேர்தல் கமிஷன் சங்கிகளின் ஐடி விங் கோமாதா மூளைத் தொகுதியாக இருக்கக் கூடும்.

மொழிப்புலமை என்பது இலக்கணத்திற்கு அப்பாற்பட்டது. அது மிகுந்த வாசிப்பினால் வருவது. அதன் மூலமாக எங்களை அறியாமலேயே இலக்கண ஒழுங்குகள் எங்கள் மனதில் பதிந்து விடும். விதிமுறைகளை அறிந்து கொள்ளாமலேயே வழக்குமுறைகள் மூளைக்குள் நுழைந்து பதிவாவது அப்படித் தான்.

அப்படியிருந்தும் புணர்ச்சி என்றதுமே புல்லரிக்கின்ற நம் இலக்கியச் செம்மல்கள் இலக்கணப் புணர்ச்சி என்றதுமே முகம் விகாரமடைந்து விடுகிறார்கள்.

ஆனால், ஒரு காலம் இருந்தது. தொண்ணூறுகளில் தேர்தல் ஆணையாளராக சேஷன் என்ற தமிழர் இருந்தார். அவர் பதவிக்கு வந்த பின்னால் தான், அவரது பதவிக்கு இருக்கும் அதிகாரம் பற்றி எல்லாருக்கும் தெரிய வந்தது. அவரது நடவடிக்கைகள் எப்போதும் பெரும் அதிரடியாக இருந்தது.

காரணம், தேர்தல் ஆணையகம் அரசின் கட்டுப்பாடு எதுவும் இல்லாத சுயாதீனமானது. பல்வேறு விடயங்களில் அதன் தீர்ப்பு இறுதியானதாக இருக்கும். ஆனால், அதற்கு மேலானதாக நாட்டின் அதிஉச்சநீதிமன்றம் மட்டுமே அதனை மட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். பிரதமரோ, பாராளுமன்றமோ, கீழ்நீதிமன்றங்களோ அதைக் கட்டுப்படுத்த முடியாது.

இந்த விடயங்கள் எல்லாம் அவர் பதவிக்கு வந்த பின்னால் தான் எல்லாருக்கும் தெரிய வந்தது. இதனால் அவர் பல அரசியல்வாதிகளுக்கு சிம்மசொப்பனமாக இருந்தார். இவரது அதிகாரத்தைக் குறைக்க அரசு பெரும் முயற்சிகள் செய்திருந்தது.

இவரை ஒரு தடவை தமிழ்நாட்டிலிருந்து பேட்டி காணச் சென்றவர்களை, ரபி பர்னாடு என்று நினைக்கிறேன், அவரது அலுவலகத்தில் ஒளிப்பதிவுக் கருவிகளைத் தயார் செய்து கொண்டிருந்தபோது, சாதி சொல்லித் திட்டியதாகவும், அவர்கள் கருவிகளை எடுத்துக் கொண்டு தலை தெறிக்க ஓடியதாகவும் வாசித்த ஞாபகம்.

•••

பத்திரிகை நடத்துவதற்கு முன்னால், பக்க வடிவமைப்பு என்ற விடயம் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. மக்கின்ரோஷ் கணனி வாங்கி, அதில் PageMaker என்ற மென்பொருளைப் பயன்படுத்தித் தான் தாயகம் இதழ்களை வடிவமைத்திருந்தேன்.

பின்னர் பேஜ்மேக்கருக்குப் பதிலாக InDesign என்ற மென்பொருள் வந்த போது, அதையும் கற்றுத் தேற வேண்டியிருந்தது. நீண்ட காலப் பாவனை காரணமாக, நான் கிட்டத்தட்ட அதில் நிபுணன் என்ற அளவில் இருக்கிறேன். நான் வடிவமைக்கும் வேகத்திற்கு என்னோடு போட்டி போடுவது பெரும் கஷ்டமாக இருக்கும். அபத்த வடிவமைப்பு கூட இரண்டு நாள் அவ்வப்போது வேலை.

சில நேரம் அதைப் பயன்படுத்துவது பற்றி ஒரு புத்தகம் அல்லது யூடியூப் வீடியோவோ வெளியிட வேண்டும் என்றெல்லாம் எண்ணம் வரும்.

பின்னர் மென்பொருட்களை நேரடியாக வாங்கிப் பயன்படுத்தாமல், அவர்களுடைய கணனித் தொகுதியிலிருந்து இணையம் மூலமாக (Cloud computing), மாதாந்தக் கட்டண அடிப்படையில் (Subscription model) பயன்படுத்தும் நிலை வந்த பின்னால், பின்னைய வடிவங்களில் அக்கறை கொள்ளவில்லை.

ஏற்கனவே வாங்கியிருந்த அதே மென்பொருளைப் பயன்படுத்தித் தான் இப்போதும் அபத்தம் இதழ்களின் வடிவமைப்பைச் செய்து கொண்டிருக்கிறேன்.

•••

இயேசுக்கிறிஸ்து ஒரு யூதர். இப்போது யூதர்கள் பேசுகிற எபிரேய

மொழி (Hebrew). அரபுமொழியும் எபிரேய மொழியும் ஒரே மூல மொழியிலிருந்த பிரிந்த கிளைகள். யேசுக்கிறிஸ்துவின் காலத்தில் லத்தீன் மொழி, கிரேக்க மொழி என்பனவும் பாவனையில் இருந்திருக்கின்றன. கிரேக்க மகா அலக்சாண்டரும் ரோம சாம்ராஜ்யமும் ஒவ்வொரு காரலங்களில் அந்தப் பகுதிகளை ஆண்டிருக்கின்றன.

இயேசு யூதராக இருந்த போதும் அவர் பேசிய மொழி அரமாய்க் எனப்படும் மொழி. இந்த மொழியும் அரபு, எபிரேய மொழிகள் போன்றே ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

•••

பேஸ்புக்கில் நம் இலக்கியவாதிகள் பலரும் தங்கள் பிரசன்னத்தை அறியப்படுத்தியபடியே உள்ளனர்.

சிறிய அளவில் வானொலி, தொலைக்காட்சி தவிர்ந்து, இலக்கியவாதிகள் பற்றி பொதுவெளி அறிந்து கொள்வதற்கு வசதியாக இருந்தது அச்சு மூலமான பிரசுரங்கள் வழியாகத் தான்.

உயர்ந்த மேடைகளில் கலை நிகழ்வுகளும், கதாப்பிரசங்கங்களும் நடந்ததால், இயல்பாகவே கலைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் சாமான்யர்களை விட, தாங்கள் மேலானவர்கள் என்ற உணர்வு வந்திருக்க வேண்டும். அதிலும் அந்த உரைகளையும், ஆற்றுகைகளையும் உட்கார்ந்திருந்து கேட்க வேண்டிய அளவில், பொதுசமூகம் அறிவு குறைந்தபாமர நிலையில் இருந்ததால், அவர்கள் எந்தக் கேள்விகளையும் எதிர்கொள்ள வேண்டிய தேவையும் இருக்கவில்லை.

கேள்விகளைக் கேட்கக் கூடியவர்கள் எல்லாம் அவர்களோடு சரிநிகர் சமானமாய் சங்கங்களிலோ, Royal Society களிலோ அமர்ந்து இருந்திருக்கக் கூடும்.

எனவே, விடிய விடிய ராமர் கதைகளை எத்தனை முறை கேட்டாலும் சலித்திருக்க நியாயம் இல்லை.

சமூக வலைத்தளங்களின் வருகை நிலைமையைத் தலைகீழ் ஆக்கி விட்டது. தொண்ணூறுகள் வரைக்கும், ஒரு இலக்கிய நிகழ்வு என்பது தினசரி, வார இதழ்களில் அதன் ஆசிரியர்களால், பாவனைக்கு உகந்தபடி, உப்புப் புளி விட்டு தாளிக்கப்பட்டு வரும் வரைக்கும், 'சம்பவம் நடந்த இடத்தில் இருந்தாலன்றி, அவை பற்றி சாதாரண வாசகன் அறிவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு.

அதிலும் வெறும் பேச்சுவழக்கில் சொல்லப்பட்ட 'உதிர்ப்புகளை' இலக்கண சுத்தியோடும், தணிக்கையோடும் சொன்னதால் தான், நடிகைகளின் மொக்கைத்தனப் பேட்டிகளும், பேச்சுவழக்கு மேடைப் பேச்சுகளும் எங்களுக்கு பிரமிப்பு ஊட்டுகிறவையாக இருந்தன.

எழுதுகிறவர்கள் போல நேரடியாகச் சொல்லாமல், எவராலோ சொல்லப்பட்டவைகளை யாரோ எழுதுவதால் அதில் 'மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு முழு உரிமையும் உண்டு!'.

இந்த ஆசிரியர்களின் உப்புப் புளித் தாளிப்புத் தான், இவர்களைப் பிரபலம் ஆக்குகின்றவையாகவும், அவர்களின் அறிவுத்திறன் பற்றிப் பிரமிப்பு ஊட்டுகின்றனவாகவும் இருந்தன.

பிலிமாலயாவிலும், பொம்மையிலும், பேசும் படத்திலும் கண்டு பிரமித்த எம்.எஸ்.விஸ்வநாதனை, கனடா வந்த போது, தாயகத்திற்காகப் பேட்டி கண்ட போது, அவருடைய எளிமையும், தன்னடக்கமும் என்னைக் கவர்ந்திருந்தாலும், அவர் பற்றி மனதில் கொண்டிருந்த எண்ணப்பாட்டை நினைக்கச் சிரிப்பாக இருந்தது. அதைப் போல, அப்போது அவரோடு வந்து, என் வீட்டில் நடந்த இரவுக் கும்மாளத்தில் கலந்து கொண்ட சிவமணியும், இடிகரை முருகேசுவும், தபேலா பிரசாத்தும் வித்தியாசமானவர்களாக இருந்தார்கள்.

என்னவோ, பிரமாண்டங்கள் பற்றிய பிரமிப்புகள் எல்லாம் சிறுவயதோடு போய்ச்சேர்ந்து விட்டன.

சமூக வலைத்தளங்கள் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டு விட்டன. எதிர் எதிரே உட்கார்ந்து கருத்துச் சொல்வது போன்ற சமரசத்தை அவை உருவாக்கி விட்டன. சாமான்யர்களுக்கும், பிரபலங்களுக்குமான ஏற்றத்தாழ்வை நீக்கி விட்டன. நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் உடனடியாகவே உலகைச் சுற்றி வரவும், உடனடியாகவே அவை பற்றிய கருத்தாடல்களை ஏற்படுத்தவும் வழிவகுத்து விட்டன.

சமூக வலைத்தளங்களின், விதிமுறைகளும் நடுவரும் இல்லாத தன்மையாலும், பொதுவெளியில் கண்ணியமாக கருத்துச் சொல்லிப் பழக்கமில்லாத பண்பாடுகளாலும், கணனியின் பின்னால் மறைந்திருந்தே அம்பு எய்யக் கூடிய வசதியாலும் இது free for all நிலைக்கு, எல்லோரையும் இந்நாட்டு மன்னர்களாக்கி... அல்லது அறிஞர்கள் ஆக்கி விட்டிருக்கிறது.

எந்த அறிஞரையும் அந்தத் துறை பற்றி எதுவுமே அறிந்தே இராதவர்கள் மொக்குத்தனமான கேள்விகள் கேட்கவும், எந்தச் சமூக உணர்வு மிக்க செயற்பாட்டையும் சமூகம் பற்றி எந்த அக்கறையும் இல்லாதவர்கள் கேலிக்கும் கேள்விக்கும் உள்ளாக்கும் நிலையும், காரண காரியம் தெரியாமல் தர்ம அடி போட்டுக் கலைக்கும் கும்பல் மனப்பான்மையும் இந்த சமூக வலைத் தளப்பயன்பாட்டின் வெறும் பக்க விளைவுகளாக மட்டும் இல்லாமல், ஒரே நோக்கமானதாகி விட்டன.

அச்சு ஊடகத்தில் நுழைவதற்கான தடைகள் (Barriers to entry), அதன் வாயிற்காப்போர்கள், குழு/ முகாம்/ தோட்டத் தொல்லைகள் காரணமாக இலக்கியவாதிகளுக்கு இருந்த தடைகள் இணைய யுகத்தில் தகர்க்கப்பட்டு விட்டன. இந்தத் தடைகளும் இடைத் தரகர்களும் இல்லாமல், ஒரு படைப்பாளி நேரடியாகவே வாசகர்களைச் சென்றடையக் கூடிய வசதி

இன்றைக்கு வந்து கிடைத்திருக்கிறது.

ஆனால், சிக்கல் என்னவெனில், படைப்பாளிகள் என தங்களை நினைத்துக் கொண்டிருப்போருக்கு bar was lowered என்பது மட்டுமன்றி, இந்தத் தர்ம அடிக் கும்பல் திறந்த வீட்டில் நாய் புகுவது போல, குரைக்கவும் கடிக்கவும் வசதியாகியும் விட்டது.

இன்றைக்கு பெரும்பாலான பிரபல இலக்கியப் பெருமகர்கள் பேஸ்புக்கில் பிரசன்னமாய் எழுந்தருளியுள்ளனர். அவர்களில் பலர் பேஸ்புக் அருளிச் செய்த ஐயாயிரம் நண்பர்களையும் கடந்து, அவர்களின் கடைக்கண் பார்வைக்காய் விருப்புக் கோரிக்கை விடுத்து கவனிப்பாரின்றி வரிசையில் காத்திருப்போர், அவர்கள் முன்னால போனா, பின்னாலே வாறதுக்காய் செல்வோர் என பல்லாயிரக்கணக்கானோரை தங்கள் மீதான ஆர்வலராகக் கொண்டுள்ளனர்.

எனவே, அவர்களின் நட்பு வட்டத்தில் திணித்துக் கொள்வது என்பது இலகுவானதுமில்லை. அத்துடன் தங்களின் நட்பு வட்டத்தில் என்னைப் போன்ற அனாமதேயப் பேர்வழிகளை உள்நுழைய அனுமதிப்பதுமில்லை. அவர்களுடைய தகுதி காண் பின்னணி விசாரிப்புகள் (Background checks) கடந்து, அவர்களின் நட்புக்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு, முற்பிறவியில் மாதவம் புரிந்திருக்க வேண்டும் என்ற அளவில் நிலை இருக்கிறது.

இவர்களுக்கு நண்பர்களாக அங்கீகரிக்கப்படுவதை விட, வார இதழ்களில் இலக்கியகாரர்களாக அங்கீகரிக்கப்படுவது இலகுவாக இருக்கும்.

ஒரு விஸ்கியோடு காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம்.

பாஜக கட்சிக்கு விசயம் தெரியாமலே ஆட்சேர்ப்பது போல, நான் ஆட்சேர்ப்புக்காக நட்பு விருப்புகளை அனுப்பாவிட்டாலும், இப்போதும் வாசிப்பதற்கு சுவாரஷ்யமாக இருக்கும், எதையாவது அறிந்து கொள்ளலாம் என்று கருதும் எவருக்கும் கோரிக்கை விடுவதில் எனக்குத் தயக்கம் இருப்பதில்லை.

அதுபோல, கோரிக்கை விடுகிறவர்களுக்கு எல்லாம் பின்னணி விசாரணைகளில் ஈடுபடுவதும் இல்லை.

'மாவீரர் கனவு பலிக்கும்', 'கொங்குத் தமிழன்டா' 'அண்ட்ரியா ஆர்மி' மாதிரியான லூசுக் கூட்டம் தவிர்ந்து, எவரையும் சேர்த்துக் கொள்வதில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

நான் என்ன கஞ்சா வியாபாரமா பண்ணுகிறேன்?

ஃபேக் ஐடியாக இருந்தாலும், நான் சொல்கிற எதையோ வாசித்து அவனது சிந்தனையில் ஒரு சலனத்தை ஏற்படுத்த முடிந்தால், அதுவே என் எழுத்துக்கான அங்கீகாரமாக இருந்து விட்டுப் போகட்டுமே!?

அப்படித்தான் வந்து, முட்டாள் கதை சொன்னாலும், மற்றவர்கள் பார்த்துச் சிரிக்கப் போகிறார்களே என்று வாங்கிக் கட்டிக் கொண்டு, வெட்கத்தில் தலைமறைவாகும் அளவுக்கு கிண்டலோடு பதில் சொல்லவும், தூஷணம் பேசும் போது, வெளியே சொல்லி முறைப்படுகிற அளவுக்கு அதை ஒரு பெரிய விசயமாக அலட்டிக் கொள்ளாமல் தடுத்தாட் கொள்ளவும் முடிகின்ற போது, எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

இருந்தாலும் நட்பு வட்டம் ஓமந்தை சோதனைமுகாம் மாதிரி, காத்திருப்பு வரிசைக்கு இடமில்லாமல், இரண்டாயிரங்களுக்குள் தான் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது.

கிடைக்கும் நாற்பது விருப்புக் குறிகளும் ஒரே நண்பர்களின் பின்னூட்டமும் பற்றியோ, படம் மாற்றும் பெண்களுக்குக் கிடைக்கும் ஆயிரக்கணக்கான விருப்புக்குறிகள் பற்றியோ, நம் இலக்கியவாதிகள் மாதிரி, பொருமியதும் இல்லை, பொறாமைப்பட்டதும் இல்லை.

•••

பேஸ்புக்கில் காணுகின்ற இரண்டு விடயங்கள் குறித்து, நான் அக்கறை கொள்வதுண்டு.

நண்பர்களாக இருந்தால்,

நீண்ட நாள் தலைமறைவானால்...

'என்ன ஆளைக் காணோம்!?'.

யாரோடாவது சண்டை என்றால்...

'எதற்கு அனாவசியமாக? எழுத வேண்டியதை எழுதிக் கொண்டே இருங்கள். அவர்களின் நோக்கமே கவனத்தைத் திசை திருப்புவது தான்'.

நண்பர்களாக இல்லாவிட்டாலும்...

ஒன்று, மன அழுத்தங்களால் பீடிக்கப்பட்டு, தங்கள் தற்கொலை எண்ணங்கள் பற்றிய பதிவுகளை யாராவது போடும்போது, அல்லதும் மனம் ஒடிந்து சோர்ந்து நம்பிக்கையீனமாக எதையாவது எழுதுவோருக்கு, அது எவராக இருந்தாலும், உள்பெட்டிக்குள் ஒரு ஆறுதல்.

'பதில் தர வேண்டிய கட்டாயம் இல்லை' என்ற கடைசி வரியோடு!

மற்றது, யாராவது தகவல் பிழை, ஆங்கில சொற்களுக்கான எழுத்துப் பிழை என்றால், அந்தத் தகவல் மட்டும், அல்லது சரியான ஆங்கில எழுத்துக்கள்.

வேறு எதுவும் இருக்காது.

புரிந்தவன் பிஸ்தா.
மாற்றிக் கொள்வார்கள்.

சிலர் நன்றி சொல்வார்கள்.
சிலருக்கு அது அனாவசியம் போல!

அந்தத் தவறுகளைப் பொதுவெளியில்

பின்னூட்டத்தில் சொல்ல விரும்புவதில்லை.

பிழை கண்டுபிடித்துப் பெயர் வாங்கும் புலவராக இருப்பதில் விருப்பம் இல்லை. என்னை மேதாவியாகக் காட்ட வேண்டும் என்று ஒரு போதும் நினைத்ததில்லை.

மற்றது, அவ்வாறாக பகிரங்கமாக அதைச் சொல்லி, பதிவு செய்தவரை சங்கடத்தில் ஆழ்த்துவதில் எந்த உடன்பாடும், இரகசிய இன்பமும் (secret pleasure) இல்லை.

எங்கள் இலக்கிய உலகில் பெயர் பெற்ற, பிரசுரம் கண்ட பலருக்கு நட்புப் பட்டியலிலும், பின்தொடர்வாளனாகவும் நான் இருக்கிறேன். அவர்கள் எழுதி, பேஸ்புக் செயற்கை நுண்ணறிவு கருணை கூர்ந்தவற்றை எல்லாம் தவறாமல் வாசிக்கிறேன். சில நேரங்களில் கண்ணில் படாவிட்டால், அவர்களின் பக்கத்திற்கே போய் வாசிக்கிறேன்.

நம் இலக்கியவாதிகள் மாதிரி, 'அதையெல்லாம் நான் வாசிக்கிறேலை' பந்தா எல்லாம் கிடையாது.

பலான கதைகள் வந்தாலும் அதை வாசிப்பதிலோ, அதை வாசிப்பதாகச் சொல்வதிலோ தயக்கமோ வெட்கமோ கிடையாது.

•••

பேஸ்புக்கில் எனக்கு நட்பாக இருப்பவர் ஒருவர்.
பாலோ, பெயரோ தேவையில்லை.

பிரசுரம் கண்ட எழுத்தாளர். ஆனால் புணர்ச்சி விகாரத்தில் வீக்!

விவகாரம் இல்லை. விகாரம்!

அனாவசியமான இடங்களில் புணர்ச்சி விகாரம் வரும். தேவையான இடங்களில் விடுபடுவது பிரச்சனையாக இருப்பதில்லை. அனாவசியமான இடங்களில் வரும்போது, வாசிக்கும்போது ஒலியோடு ஒத்துப் போவதாக இருக்காது.

**பேஸ்புக்கில் அடிக்கடி அவரைக் கண்டு வாசித்ததால், எம்.டி. முத்துக்குமாரசாமிக்கு நானும் நட்பு விருப்பு அனுப்பி, அதை அவரும் ஏற்றிருந்தார்.**

**அப்போது, அவர் ஜெயமோகனைப் பற்றி தினசரி எழுதிக் கொண்டிருப்பார். நானோ பேஸ்புக்குக்குப் புதிது. தினசரி அதை வாசிக்க, என்னவோ மாதிரி இருந்தது.**

**I hope it doesn't become an obsession என்று பின்னூட்டம் இட்டிருந்தேன்.**

அதையெல்லாம் நான் திருத்த முயற்சிப்பதில்லை.
அது கவிஞர் மகுடேஸ்வரனின் பிரச்சனை.

ஒரு தடவை பீட்ரூட் சீனி தயாரிப்பது பற்றி தனது பதிவு ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். அதில் பீட்ரூட் சீனியின் வரலாற்றுப் பின்னணி பற்றிய தவறு இருந்தது.
எனக்கு அதைச் சொல்ல வேண்டும் போல இருந்தது.

உட்பெட்டிக்குள் அதன் விளக்கத்தை எழுதியிருந்தேன்.
'I beg to differ about the history of sugar beet and sugar cane. Sugar cane was ancient, but extracting sugar from beets is only from 18th century'.

'Okay. But my FB page not talking about when they discovered. I am saying why it's become important in politics. Thanks' என்று ஒரு கும்பிடுவோடு கூடிய பதில் வந்தது.

தன்னைப் போன்றதொரு பிரபலம், என்னைப் போன்றதொரு அனாமதேயம் சொல்லித் திருத்துவது கௌரவக் குறைச்சலாக இருந்திருக்கக் கூடும்.

தான் தவறு செய்து விட்டேன் என்பதை ஒப்புக் கொள்வதற்கு அகந்தை இடம் விட்டிருக்காமல் இருக்கக் கூடும்.

தான் சொன்னது சரிதான் என்று நியாயப்படுத்த முடியாமல் சொன்ன விளக்கங்கள் எனக்குத் திருப்தி தரவில்லை.

அவருக்கு பின்னூட்டம் இட்ட அறிவாளிகளும் அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

நான் சொதப்பியிட்டேன் என்று சொல்வதற்கு தில் வேண்டும்.
அது தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளைக் கொண்டவர்களுக்கு இருப்பதில்லை.

•••

நான் பேஸ்புக்கிற்கு வந்த காலத்தில், என் நண்பர்கள் அவருக்கும் நண்பர்களாக இருந்ததாலோ என்னவோ, பேஸ்புக்கில் அடிக்கடி அவரைக் கண்டு வாசித்ததால், எம்.டி.முத்துக்குமாரசாமிக்கு நானும் நட்பு விருப்பு அனுப்பி, அதை அவரும் ஏற்றிருந்தார்.

அப்போது, அவர் ஜெயமோகனைப் பற்றி தினசரி எழுதிக் கொண்டிருப்பார். நானோ பேஸ்புக்குக்குப் புதிது.
தினசரி அதை வாசிக்க, என்னவோ மாதிரி இருந்தது.

I hope it doesn't become an obsession என்று பின்னூட்டம் இட்டிருந்தேன்.

பின்னர் ஒரு தடவை சீராபூஞ்சியில் காடுகள் அழிந்து பறவைகள் காணாமல் போனது பற்றி எழுதியிருந்தார். சமூகக் கல்விப் பாடத்தில் அதிகம் மழைவீழ்ச்சி உள்ள இடம் என்று படித்திருந்தேன். அதன் நிலை இப்படி முடிந்தது குறித்தும் பின்னூட்டம் போட்டிருந்தேன்.

பின்னர் ஒரு தடவை தாயகம் இணைய இதழின் முகவரியை அனுப்பி, நீங்களும் எழுத வேண்டும் என்று விரும்புகிறேன் என்று உட்பெட்டியில் கேட்டிருந்தேன். பார்க்கிறேன் என்று பதில் எழுதியிருந்தார். பின்னர் எதுவும் இல்லை.

அவரது முல்லா கதைகள் முதல் எல்லாமே நான் கிரமமாக வாசிப்பவை. அவரது விடயங்கள் மீள் என்ற குறிப்பு இல்லாமல் வரும்போது கூட, இதை முன்பே வாசித்திருக்கிறேனே என்று நினைவு வரும் அளவுக்கு!

இப்போது அடிக்கடி பின்நவீனத்துவக் கவிதைகள் எழுதுகிறார். மொழி பெயர்க்கிறார்.

எனக்கு எதுவுமே புரிவதில்லை. யார் யாரோ விருப்புக் குறி இடுகிறார்கள். 'செம, தலைவா!' பின்னூட்டம் இடுகிறார்கள்.

சில நேரம் அந்த படிமங்களின் அழகியலை விளங்கிக் கொள்ள, என்னுடைய அறிவு வளர்ச்சி போதாமல் இருக்கலாம்.

ஆனால், அவரது பின்நவீனத்துவக் கவிதை நூலுக்கு ரோயல்டி கிடைத்தது என்ற விடயத்தை அவர் சாருவுக்கு சொல்லி வைப்பது நல்லது!

ஒரு பின்நவீனத்துவக் கவிதைப் புத்தகம் ஆயிரம் பிரதி விற்க ஐந்து வருடம் எடுக்கவில்லை என்பது தமிழினம் தன்னைக் குறித்துப் பெருமைப்பட வேண்டிய விடயம்.

எம்.டி.எம் எதியோப்பியாவில் கல்வியியலாளராகப் பணி புரிந்திருக்கிறார்.

தன்னுடைய பதிவு ஒன்றில் 'எதியோப்பியாவில் 80 விதமான இனக்குழுக்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் செமிட்டிக் குடும்பத்தைச் சேர்ந்த அம்ஹாரிக் என்ற மொழியைப் பேசுகிறார்கள். எதியோப்பியக் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஏசு கிறித்துவானவர் ஒரு கறுப்பர் என்றும் அவருடைய தாய்மொழி அம்ஹாரிக் என்றும் நம்புகிறார்கள்.' என்று எழுதியிருந்தார்.

என்னோடு வேலை செய்த ஸாடனே, கிரேக்க துறவிகளின் monastery ஒன்றில் மதக்கல்வி பயில அனுப்பப்பட்டவன். எதியோப்பிய கதீட்ரல் பாடல் குழுவில் இருந்தவன். எதியோப்பிய மன்னர் ஹெய்லி சலாஸி அந்தக் கோயிலில் தனக்கு எட்டிய தூரத்தில் இருந்தவர் என்றும், 'இவங்கள் எல்லாம் ஏதோ சலாஸியைப் பற்றி கனக்கத் தெரிஞ்ச மாதிரி கதைக்கிறாங்கள்.' என்றும் மற்ற எதியோப்பியர்கள் பற்றி எனக்குச் சொல்வான்.

அவர்களுடைய கிறிஸ்தவ மதப் பின்னணி பற்றி எனக்குச் சொல்லியிருந்தாலும், அவர்களுடைய மொழிகள், வேறுபாடுகள், பரஸ்பர வன்ம குரோதங்கள், சுதந்திரப் போராட்டங்கள் பற்றி எனக்குத் தெரிந்திருந்தாலும், இப்படி அவர்கள் சொன்னதை நான் அறிந்ததில்லை.

கிறிஸ்துவைக் கறுப்பராக வரைந்த படங்கள் பல உண்டு. ஆனால், அவர்கள் அவ்வாறு நம்பியதாக எனக்குத் தெரியாது.

சாலமோன் மன்னனின் பெருமையைக் கேட்டு, மகாராணி ஷீபா இஸ்ரேல் போய் அவனோடு உறவு கொண்டு கர்ப்பிணியாகி திரும்ப வந்து பிள்ளை பெற்றாள் என்று நம்புகிறார்கள்.

அவளைத் திரும்பி வந்த வழியில் தண்ணீர் கேட்ட இடம் என்று ஒரு இடத்திற்குப் பெயர் உண்டு என்று என் நண்பன் ஒருவன் சொன்னான்.

எம்.டி.எம் இறுதியாகக் குறிப்பிடுகிறார்...
'இப்போது வரலாற்றாசிரியர்களும் ஏசுவானவர் அம்ஹாரிக் தான் பேசியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்' என்கிறார்.

இன்றைக்கு கூகிளில் தேடினாலும், இயேசு பேசியது அரமாய்க் என்பது தான் ஆய்வாளர்களின் முடிவு என்பதை கண்டு கொள்ளலாம்.

பின்னர் பழமைவாதக் கிறிஸ்தவம் 'எதியோப்பியாவைத் தவிர, ரஷ்யாவிலும் இலங்கையிலும் மட்டுமே இருப்பதாக அறிந்தேன்' என்கிறார்.

பழமைவாதக் கிறிஸ்தவர்கள் மற்றவர்கள் போல கிரகோரியன் நாட்காட்டியைப் பயன்படுத்தாமல், யூலியஸ் சீசரின் யூலியன் நாட்காட்டியையே பயன்படுத்துகிறார்கள். எதியோப்பியர்களுக்கு அதன்படி கிறிஸ்மஸ், ஈஸ்டர் எல்லாம் இரண்டு வாரம் பிந்தி இருக்கும்.

அதைவிட, அவர்களின் ஆண்டு, எங்களது நாட்காட்டியிலிருந்து ஏழு ஆண்டுகள் பிந்தியது. அவர்கள் புதிய ஆயிரமாம் ஆண்டை 2007ல் தான் கொண்டாடினார்கள்.

Y2K bug பற்றி அவர்கள் ஏழு வருடங்கள் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள். கவலைப்பட வைக்கும் அளவுக்கு கணினிகளும் இல்லாமல் இருந்திருக்கலாம்.

இதில் சுவாரஷ்யம் என்னவெனில், அவர்களின் பிறந்த தினம் அவர்களின் ஆண்டுப்படி பதிவு செய்யப்பட்டபடியால், இங்கே வந்தும் அதே ஆண்டுகளைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

இப்படி வயது முதிர்ந்த தோற்றத்தில் இருந்த என் நண்பர்களும் ஏழு ஆண்டுகள் இளமையாக இருந்தார்கள்.
65 வயதில் கட்டாய ஓய்வூதியம் எடுக்கும்வரை, 72 வயது வரைக்கும் வேலை செய்யலாம்.

எனக்குத் தெரிந்து இலங்கையில் ரஸ்புட்டின் மாதிரியோ, கறுப்பு உடை உடுத்திய விதவைகள் போலவோ உடுத்திய பழமைவாத கிறிஸ்தவர்கள் இல்லை.

ரஷ்யாவில் தொடங்கி கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கிட்டத்தட்ட முழுமையாகவும், மத்தியகரைக் கடல் பகுதியில் லெபனான், சிரியா, ஈராக், துருக்கி என, மேற்கு ஐரோப்பாவில் கிரேக்கமும் சைப்பிரஸூம் என பழமைவாதக் கிறிஸ்தவ நாடுகள்.

சைப்பிரஸின் ஜனாதிபதியாக அந்தக் காலத்தில் பழமைவாத மத ஆயர் மக்காரியோஸ் இருந்தார். அவர் அணிசேரா நாடுகளின் மகாநாடு இலங்கையில் சிறிமாவோ காலத்தில் நடந்த போது, வந்த {ாபகம்.

இந்த கிரேக்க, ரஷ்ய, கிழக்கு ஐரோப்பிய, எதியோப்பிய, மத்திய கிழக்கில் உள்ள லெபனானிய, சிரிய orthodox மதங்களுக்கும் கத்தோலிக்க வத்திக்கானுக்கும் தொடர்புகள் இல்லை. இவர்களை விட, ஆர்மீனிய பழமைவாதம் வித்தியாசமானது.

ஒரு கல்வியிலாளர் உண்மைத் தகவல்களை அறிந்து கொள்ளாமல், வட்சப் குழு ரேஞ்சில் இப்படி கதை சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு தூரம் உண்மைகளை அறிந்து கொள்ள முயற்சிப்பார் என்ற சந்தேகம் ஏற்பட்டது.

ஆனாலும், அதை அவருக்கு உட்பெட்டியில் அனுப்பத் தோன்றவில்லை. அவர் நான் அவரது பதிவுகளுக்குப் போடும் பின்னூட்டங்கள் பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

அதைப் பின்னூட்டத்தில் எழுத வேண்டும் என்றும் எனக்குத் தோன்றவில்லை. எழுதிய பின்னூட்டங்களை வாசித்ததாக விருப்புக் குறியிட்டதாகவும் நினைவில்லை. அவருக்கு விருப்புக் குறியிட்ட அவரின் அன்புக்குரியவர்களும் அது பற்றித் தெரிந்திருந்ததாகவும் தெரியவில்லை.

இப்போதும் பேஸ்புக்கில் அவரது அந்தப் பதிவு உலக முடிவு பரியந்தம் ஒரு வரலாற்று ஆவணமாக இருக்கக் கூடும்.

என்றாலும், உலக அழிவு எதியோப்பியாவில் ஏழு வருடம் கழித்துத் தானே வரும்!

•••

தமிழினி மின் இதழின் ஆசிரியரான கோகுல் பிரசாத்தின் பேஸ்புக்




நட்புப்பட்டியலில் நானும் இருக்கிறேன்.

உலக சினிமா பற்றி எழுதிக் கொண்டே, உள்ளூர் கட்டவுட் பாலாபிஷேகப் படங்களை முதல் நாள் பார்த்து எழுதுகிற விமர்சனங்களையும் பார்த்திருக்கிறேன்.

பல தடவைகளில் நடிகைகளின் படங்களுக்கு ஜொள்ளு விடுவது உட்பட!

வயதுக் கோளாறாக இருக்க வேண்டும், சரியான துணை கிடைக்கும் போது நெளிவு எடுக்கப்படக் கூடும் என்று நினைப்பதுண்டு.

இவர்கள் போன்றவர்களுக்கு சரியான துணை கிடைத்தால், நமக்கும் இவர்களது juvenile தனமான பதிவுகளில் இருந்து விடுதலை கிடைக்குமே என்று நினைப்பதுண்டு.

புத்தகத் திருவிழாவின் போது, நூல்களை வேறுமொழிகளில் மொழி பெயர்ப்பது குறித்து எழுதியிருந்ததை ஆர்வத்தோடு வாசித்திருந்தேன்.

சாரு பற்றி ஏதோ சொல்லப் போய், சாரு பொங்கியது பற்றியும் நினைவில் உண்டு.

பல தடவைகளில் பதிவுகளுக்குப் பின்னூட்டங்களும் விட்டிருக்கிறேன்.

ஒரு தடவை ஏதோ ஒரு படத்தின் ஸ்டிலைப் போட்ட போது, 7 சமுராய் படமா! என்று கேட்டிருக்கிறேன்.

என் பின்னூட்டங்கள் குறித்து பெரிய ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை.

ஒரு தடவை எரிக் கிளப்டனுக்கு ஆன்ம சாந்தி என்று ஒரு பதிவு வந்தது.

திடுக்கிட்டுப் போனேன்.

இறந்தது எரிக் கிளப்டன் இல்லையே, ஜெஃப் பெக் அல்லவா!?

உடனடியாக உட்பெட்டிக்குள் தகவல் அனுப்பினேன்.

Is it Jeff? or Eric?

அது தான் அதை அழித்து விட்டேன் என்று பதில் வந்தது.

•••

தமிழ்நாட்டு இலக்கிய மட்டங்களுக்குள் நான் பெரிதும் மதிப்பவர்களில் பேராசிரியர் அ. ராமசாமி முக்கியமானவர்.

அவர் அடிக்கடி அ.முத்துலிங்கத்தை புலம் பெயர்ந்த எழுத்தாளர்களில் மூத்தவர் என்று எழுதுவதுண்டு.

அதை நண்பர் கிரிதரனும் கேள்விக்குள்ளாக்கியிருந்தார்... ஆதாரங்களோடு.

அ.முத்துலிங்கம் ஊரில் இருந்த காலத்தில் முன்பு எழுதியது உண்மை. பின்னர் வெளிநாட்டு உத்தியோகத்தின் பின்னால், திரும்பவும் புலம் பெயர்ந்த பின்னால் எழுதத் தொடங்கியது தாயகம் நின்று போன காலத்தின் பின்னால் தான்.

அவருக்கு மூத்த எழுத்தாளர்கள் இங்கே நிறைய உண்டு.
வயதில் மூத்தவர் என்ற கருத்துச் சில

நேரம் உண்மையாக இருக்கலாம். அவ்வாறாயினும் கவிஞர் கந்தவனம் எல்லாருக்கும் மூத்தவர். அவர் தாயகத்தில் எழுதியிருந்தவர்.

பேராசிரியரோடு நடத்திய பாசாங்கு இல்லாத பகிர்வின் போதும், இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். தமிழ்நாட்டு இலக்கிய உலகினர் ஈழ இலக்கியம் பற்றியோ, புலன் பெயர் இலக்கியம் பற்றியோ, தேடல்கள் எதுவுமின்றி, தங்களுக்குத் தரப்பட்ட தகவல்களோடு மட்டும் முடிவுகளை மேற்கொள்வது பற்றி கேட்டிருந்தேன்.

எனவே, பேராசிரியர் அவர்கள், அ. முத்துலிங்கம் பற்றி எழுதிய பதிவு ஒன்றில், அவரை மூத்த எழுத்தாளர் என்ற போது பின்னூட்டம் விட்டிருந்தேன்.

'அ.முத்துலிங்கம் மூத்த புலம் பெயர் எழுத்தாளர் என்பது வரலாறா? ஐதீகமா?'

•••

ராஜன் குறை கிருஷ்ணன் பற்றி சுகன் எப்போதோ எழுதித் தான் அவர் எனக்கு தெரிந்தவர் ஆனார்.

அவருக்கு நட்பு விருப்பு அனுப்பி, அங்கீகரிக்கப்படா விட்டாலும், அவரைத் தொடர விரும்பியிருந்தேன்.

அவரைப்பற்றி ஆசான், தொட்டுவிடக் கூடாத ஒன்றைத் தொட்டு விட்ட அசூசையுடன், வழமை போல ஃபேக் ஐடியாக இருக்கச் சாத்தியமுள்ள ஒரு வாசகர் கடிதத்திற்கான பதிலாக, எழுதியிருந்ததைக் கூட வாசித்திருக்கிறேன்.

ஆசான் பற்றி அவர் எழுதியிருந்ததைக் கூட எப்போதோ ஒரு தடவை பேஸ்புக் காட்டியிருந்தது.

நான் வாசித்தவரைக்கும் தீவிர திமுக முண்டுகொடுப்பாளராகத் தான் எனக்குத் தெரிகிறார். உதயநிதி வாரிசாக உருவாகுவதைப் பற்றி எழுதியிருந்தபோது, சபாஷ் பலே சரியான போட்டி என்ற எண்ணம் வந்தது...

மனுஷ்ய புத்திரனுடன்!

இருவருக்கும் கனவு இல்லம் நனவாக வாய்ப்புகள் நிறைய!

சமீபத்தில் இரட்டை இலைக் கொடி யாருக்கு என்ற விடயத்தில், அதை முடிவு செய்வது யார்? தேர்தல் ஆணைக்குழுவா? என்பது பற்றி ஒரு பதிவு போட்டிருந்தார்.

சேஷன் காலத்தில் தொடங்கி, இந்திய அரசியலமைப்பு சொல்வது வரைக்கும் பெரும் பின்னூட்டம் போட்டிருக்கலாம்.

நட்புப் பட்டியலிலும் இல்லை. பட்டியலில் இல்லாதவர்கள் பின்னூட்டம் விட தெரிவும் இல்லை.

அவருக்கு விருப்புக்குறியும், பின்னூட்டமும் போட்ட ஒரு சிலரும் அது குறித்து எதுவும் தெரிந்தவர்களாகவும் தெரியவில்லை.

ஆக, A man is known by the company he keeps.

அதற்குள் நான் எதற்கு?

•••

மனுஷ்யபுத்திரனும் நான் தொடர்கிறவர்களில் ஒருவர். அவரது 'கவிதைகள்' பற்றி எனக்கு எந்தச் சிலாகிப்பும் இல்லை.

அந்தக் காலத்தில், கண்ணில் காணும் பெண்கள் எல்லாம் வருங்கால மனைவிகளாகத் தெரிந்த காலத்தில் வைரமுத்து எனக்கும் ஒரு சிறந்த காதல் கவிஞனாகத் தான் இருந்தார்.

ஆனால், காதல்கள் கிடைக்க கவிதை தேவைப்பட்டிருக்காததாலும், அகப்பட்டவர்களும் கவிதை பற்றி பெரிய பரிச்சயம் இல்லாதவர்களாக இருந்ததாலும், நானும் பார்ப்பதற்குச் சுமாராக இருந்தாலும் மற்றவர்களுக்குத் தெரியாத புலமையோடு இருந்ததாலும், அவரது கவிதைகளில் தங்கியிருக்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

மனுஷின் கவிதைகளை காதலுக்குப் பயன்படுத்துகிறவர்கள் என்னைப் பொறுத்தவரை kids with questionable literary tastes and intellectual capabilities.

அவர் தனது உயிர்மை இதழுக்கு InDesign வடிவமைப்பாளர்கள் தேவை, எங்கிருந்தும் பணியாற்றலாம் என்று பதிவு போட்டிருந்தார்.

Is it for version 6.5 or cloud version? என்று கேட்டிருந்தேன்.

அவர் தன் பதிவுகளுக்குப் பின்னூட்டம் விடுகிறவர்களை கணக்கே எடுப்பதில்லை போல!

தன் காதலிகளுக்குக் கவிதை எழுதவே அவருக்கு நேரமில்லை.

ஆளுக்காள் மாறி அனுப்பி, மாட்டிக் கொள்ளாமல் தன் காதலிகளுடனான communications ஐ track பண்ண என்ன app பயன்படுத்துகிறார் என்பதை தெரியப்படுத்தினால், என் மனைவி, துணைவி, இணைவிகளுடனான தொடர்பாடல்களை சிக்கல்கள் இல்லாததாக ஆக்க முடியும். அதற்காகவே அவரது சில கவிதைகளுக்கு விருப்புக் குறி போடவும் தயார்!

•••

பேஸ்புக்கிலும், தமிழ் பொதுவெளியிலும் கிட்டத்தட்ட தமிழ்க் கலைச் சொல்லாக்கத்திலும், இலக்கண விதிகளிலும் கிட்டத்தட்ட authority என்ற அளவில் பலராலும் கருதப்படுகிறவர் கவிஞர் மகுடேஸ்வரன்.

தமிழில் பெரும் வசதி. யாருமே தன்னைக் கவிஞர் என்று உத்தியோகபூர்வமாக அழைத்துக் கொள்ளலாம். எவரும் ஆட்சேபிக்க முடியாது.

அதெல்லாம் கவிஞர்கள், கலாரசிகர்கள் சார் பிரச்சனை. எனக்கு சம்பந்தம் இல்லாதது.

இப்போதும் நியூஸிலாந்து என்பதை,

நியூ டெல்கி என்பதை புது டெல்லி என்பது போன்று, புது சீலந்து என்று அழைக்க வேண்டும் என்று அவர் சொன்னது, பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது.

பேஸ்புக் பேரறிஞர்கள் சும்மா இருப்பார்களா? தங்கள் புலமையைக் காட்டிக் கொள்ள வேண்டுமே!?

நான் அந்தளவுக்கு அறிஞனாக இல்லாவிட்டாலும், எனக்குத் தெரிந்ததைச் சொல்வதில் ஆட்சேபனை இருக்காது என்று நினைக்கிறேன்.

நானும் ஒரு காலத்தில் விசயம் தெரியாமல், முகப்புத்தகம் என்று பாவித்ததுண்டு. இப்போது நிறுத்தி விட்டேன். நிறுவனங்களின் பெயரை மொழிபெயர்க்கக் கூடாது.

சர்வதேச வர்த்தக இயந்திரங்கள் என்றால், ஐபிஎம் என்று யாருக்கும் தெரியாது.

சமூக வலைத்தளங்களின் பெயர்களை மொழி பெயர்த்தலும், அவற்றுக்கான புதுக் கலைச்சொற்களை உருவாக்குவதும் அனாவசியம் என்பதே என் கருத்து.

ஆனால், அந்தப்பட்டியல் பரவலாக என்னப்பனில், அது தான் வட்சப்பில், அடிக்கடி பகிரப்படுகிறது.

‘மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும்’போது, ரா.பி. சேதுப்பிள்ளை சொன்னது போல, ‘செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் தரும் செஞ்சொற்கள் பலவிருக்க, அவற்றை விடுத்து வேறு சொற்களை எடுத்தாளுதல் கனியிருப்பக் காய் கவர்ந்தல் போலாகுமன்றோ!?’

அந்தச் சொற்கள் பிறமொழியில் இருப்பதால், செஞ்சொற்கள் ஆகிவிட முடியாதா?

உன்குழாயில் படம் பார்க்க வேண்டும் என்றால் எதுவும் புரியாது.

இடங்களின் பெயர்கள் எந்த மொழியில் இருந்தாலும், எல்லா

**இடங்களின் பெயர்கள் எந்த மொழியில் இருந்தாலும், எல்லா இடங்களிலும் அந்த இடங்களின் பெயர்களை மொழி பெயர்த்து மாற்றுவதில்லை. ஆனால், அந்தந்த மொழிகளுக்கு உரிய வகையில் உச்சரிப்பை உருவாக்கிப் பயன்படுத்த முடியும். ஆங்கில அ்ஃப்றிக்கா எங்களுக்கு ஆபிரிக்கா. இங்க்லண்ட் எங்களுக்கு இங்கிலாந்து.**

**லாந்து என்று முடியும் இடங்களை எல்லாம் நிலம் என்றெல்லாம் மொழிபெயர்ப்பதில்லை,**

**ஸ்தான்களை இடம் என்று எழுதுவதில்லை.**

இடங்களிலும் அந்த இடங்களின் பெயர்களை மொழி பெயர்த்து மாற்றுவதில்லை. ஆனால், அந்தந்த மொழிகளுக்கு உரிய வகையில் உச்சரிப்பை உருவாக்கிப் பயன்படுத்த முடியும். ஆங்கில அஃப்றிக்கா எங்களுக்கு ஆபிரிக்கா. இங்க்லண்ட் எங்களுக்கு இங்கிலாந்து.

லாந்து என்று முடியும் இடங்களை எல்லாம் நிலம் என்றெல்லாம் மொழிபெயர்ப்பதில்லை,

ஸ்தான்களை இடம் என்று எழுதுவதில்லை.

ஜப்பானிய முத்திரைகளில் நிப்பொன் என்று இருப்பது முத்திரை சேகரித்த எனக்கு ஆச்சரியமானது.

ஆனால் இடங்களின் பெயர்களின் முன்னால் உள்ள பெயரெச்சங்களை மாற்றுவது எல்லா மொழிகளுக்கும் உரியது தான். இப்படி தென் ஆபிரிக்கா, வட அயர்லாந்து, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் என்றெல்லாம் பல்வேறு வித மொழிபெயர்ப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆனால், நோவா ஸ்கோஷியா என்ற லத்தீன் மொழிப் பெயர் தான் ஒரு கனடிய மாகாணத்திற்கு ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படுகிறது.

அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நியூ ஸ்கொட்லாந்து என்று பயன்படுத்துவதில்லை.

ஆனால், அதே நோவா ஸ்கோஷியாவை கனடாவின் உத்தியோகபூர்வ மொழிகளில் ஒன்றான பிரெஞ்சு மொழியில், la Nouvelle-Ecosse என்று தான் அழைக்கிறார்கள்.

இந்தப் பரவலாக்கம் எல்லாம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பயன்படுத்தப் படுவதன் அடிப்படையிலேயே எழுதப்படுகின்றன, சொல்லப்படுகின்றன.

இலக்கண விதிமுறைகள் எதுவும் இல்லை.

ஒருவர் சொல்வதை மற்றவர் புரிந்து கொள்ளும் அளவுக்கு இருந்தால் போதும். அதை பின்நவீனத்துவ கவிதை மாதிரி, அனாவசியமாக நீட்டி முழக்கிக் குழப்பக் கூடாது.

ஆனால், முழத்துக்கு ஒரு மேதை வாழும் பாருக்குள்ளே நல்ல நாடு நம்ம நாடு.

எல்லாரும் கருத்துச் சொல்லியாக வேண்டும்.
தன்னை மேதையாகக் காட்டி, அறிவுள்ளவனைக் கிண்டல் பண்ண வேண்டும்.

தர்ம அடிக்கும்பலுக்கு ஒரு ஆள் கிடைத்திருக்கிறது. அவ்வளவுதான்.

இந்த தர்ம அடி முடிந்து திரும்பிப் போய் வேலையைப் பார்க்க, பிக் பொஸ்ஸோ, கட்டவுட் பால் அபிஷேக நாயகர்களோ உண்டு.

அதெல்லாம் கிடக்க, மகுடேஸ்வரன் ஒற்றுப் பயன்பாடுகளில் ஒற்றுப்பிழைகள் பற்றி தான் பத்திரிகை ஒன்றில் எழுதிய கட்டுரையைப் பேஸ்புக்கில் பகிர்ந்திருந்தார்.

அதில் ‘அங்கு, இங்கு, எங்கு ஆகிய இடச்சுட்டுக்களை அடுத்தும் கட்டாயம் வல்லொற்று வரும்.

அங்குச் சென்றான், இங்குக் கிடைக்கும், எங்குப் போனாய்? என்று உதாரணங்களோடு குறிப்பிட்டிருந்தார்.

எனக்குத் தெரிந்து இவ்வாறு பயன்படுத்தவது தவறு. அவ்வாறு நான் கண்டதில்லை.

அதற்கான ஆட்சேபத்தைப் பின்னூட்டமாக விடத் தோன்றவில்லை. அவரின் நட்புப்பட்டியலில் இல்லாமல், தொடராளியாக வேறு இருக்கிறேன். சலுகையை உரிமையாக எடுத்து, அழையா விருந்தில் நுழைந்து, துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்று பேசாமல் இருந்து விட்டேன்.

அனுபவம் சார்!

அதற்கான பின்னூட்டத்தில், 'அருமை', 'நன்றி, சார்', 'பயன் மிக்கது' எல்லாம் இருந்தது.
ஆனாலும், ஓரிருவர் அந்தக் குறிப்பு பற்றி நாகரீகமாக கேட்டிருந்தனர். அதற்கான அவருடைய பதில் தான் எனக்கு ஆச்சரியமானதாக இருந்தது.

'பழக்கத்தால் வந்தது' என்றும் 'வலி மிகும்' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எனக்கு என்னவோ, சொல்லி விட்டேன் என்பதற்காக தவறைத் தெரிந்து கொண்டும் நியாயப்படுத்துவது போலவே பட்டது.

அல்லது தவறை ஒத்துக் கொள்வதற்கான பக்குவமோ, தில்லோ இல்லாதிருந்திருக்கலாம்.

ஆனாலும், புணர்ச்சி விகாரம் அல்லது விகாரப் புணர்ச்சி என்றே இந்த சொற்களின் சேர்க்கை பற்றி அறிந்திருக்கிறேன்.
ஒற்று என்பது எனக்குப் புதிது.

அஃது இவ்வாறிருக்க, பேராசிரியர் அ.ராமசாமி நியூஸிலாந்து விவகாரம் குறித்து பேஸ்புக்கில் கருத்துத் தெரிவித்தபோது, மகுடீஸ்வரன் என்று குறிப்பிட்டிருந்தார்.

எனக்கோ குழப்பம்.

பின்னூட்டத்தில், 'அது சரி, மகுட ஈஸ்வரனா? மகுடி ஈஸ்வரனா?' என்று கேட்டிருந்தேன்.

அவரும் புணர்ச்சி விதிகள் தமிழ் மொழிக்கானவையே அன்றி, இன்னொரு மொழிச் சொற்களை இணைக்கும்போது பொருந்துவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், பேராசிரியர் தனது பெயரை அ.ராமசாமி என்று எழுதுவதாகவும் மற்றவர்கள் எழுதும்போது அவ்வாறு எழுத மறுக்கின்றனர் என்றும், 'எனக்கு என் பெயர் முக்கியம். நான் எழுதுவது அ.ராமசாமி' என்றும் தொல்.திருமாவளவன் ஆசிரியராக இருந்த தாய்மண் இதழில் எழுதிய கட்டுரையை, காலமாற்றம் கருதி சிறுதிருத்தங்களுடன் 'பெயரிலும் இருக்கிறது, முகவரியிலும் இருக்கிறது' என்று இணையத்தில் பிரசுரித்தபோது எழுதியிருந்தார்.

ஆனால் மகுடேசுவரன் என்று அவர் எழுதும் பெயரை, எதற்காக மகுடீஸ்வரன் என்று எழுதுகிறீர்கள்? Do unto others as you would have them do unto you என்ற golden rule ஐ நாங்களும் கடைப்பிடிக்க வேண்டும் அல்லவா? என்று அடுத்த தடவை அவர் கனடா வரும் போது, எந்தப் பாசாங்குகளும் இல்லாமல் கேட்கத் தான் வேண்டும்.

தமிழ்மொழியாக்கத்தை வலியுறுத்தும் மகுடேசுவரனின் பெயரில் உள்ள ஈஸ்வரன் என்பது பிறமொழிச் சொல் என்றால், அதை மொழி பெயர்க்கப் புறப்பட்டால்...
மகுடயிறைவன் என்பதில் வந்து முடியுமோ!?

ஆக, புணர்ச்சி விகாரம் என்பதே பெரிய உணர்ச்சி வெவகாரமான விடயமாக இருக்கும் போல!

•••

எனது நட்புப் பட்டியலில் உள்ள பலருக்கு, சர்மிளா சயீத் தோழராக உள்ளார்.

நான் பேஸ்புக் வந்த காலத்தில் தான் அவர் இறந்ததாகவோ ஏதோ, இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களால் படங்கள் வெளியிட்ட அல்லோலகல்லோலம் நடந்து கொண்டிருந்தது. எனக்கும், படத்திற்குப் பிந்தி வந்து, பக்கத்தில் இருக்கிறவரைச் சுரண்டி முன்கதைச் சுருக்கம் கேட்கும் அளவுக்குத் தான் அவர் பற்றிய விபரம் தெரிந்து இருந்தது.

அவருக்காக அவரது பல்வேறு தோழர்கள் பெரும் குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்கள். இஸ்லாமிய தீவிரவாதம் எழுச்சி பெற்ற சூழ்நிலையில், ஒரு பெண் தன் மதத்தின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் எழுப்புவது என்பது சாதாரணமான ஒரு விடயம் இல்லை.

அவர் பத்திரிகையாளராகவும் ஈழத் தமிழ் இலக்கியச் சூழலிலும் தமிழக இலக்கிய உலகத்திலும் அறியப்பட்டவராகக் கண்டுகொண்டேன்.

எனவே, விருப்புக்கோரிக்கை அனுப்பியிருந்தேன். ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தொடரத் தொடங்கியதால் அவரது பதிவுகள் எனக்கு வந்தபடியே இருந்தன.

அவர் திருமண பந்தத்தில் இருந்து வெளியேறி மகனைத் தனியே வளர்ப்பது, இன்னொரு குழந்தையைத் தத்தெடுத்தது, இன்னொரு துணையைத் தேர்ந்தெடுத்தது,

அவருக்கு அமெரிக்க பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்து குடும்பமாக வந்தது, அங்கு தனது வாழ்க்கை பற்றிய குறிப்புகள், புற்றுநோய்த் தொடக்கத்திற்கான சிகிச்சை விபரங்கள் தவிர்ந்து, இடையில் யாரோ யாரோ ஒரு பெண்ணியவாதியோடு 'உன்னை நான் தான் பெரிய ஆளாக்கினேன்' என்பதோ போல, குடுமிப்பிடி சண்டை நடத்தியது உட்பட, அவரது குடும்ப விவகாரங்கள் தவிர வேறு எதையும் அவர் எழுதியதாகக்

காணவில்லை.

என்னுடைய தனிப்பட்ட வாழ்வு பற்றி என் சகோதரர்களுடன் கூடப் பகிர்ந்து கொள்ள விரும்பாத எனக்கு ('என்ரை கஷ்டம் என்னோட!) பேஸ்புக்கில் வாழ்வை பதிவு செய்கிறவர்கள் ஆச்சரியத்தைத் தருகிறார்கள்.

கிட்டத்தட்ட அவர், தன்னுடைய ஆடம்பர வாழ்க்கை முறையை படம் பிடித்துக் காட்டும் Martha Stewart போன்றோ, self-improvement 'நினைப்பது நடக்கும்' Oprah Winfrey போன்றோ தனது வாழ்க்கை முறை பற்றியும், தான் மகிழ்ச்சியாக இருக்கிறேனாம் என்று யாருக்கோ கடுப்பு ஏற்ற முயற்சிப்பது போலவும் தான் அவரது பதிவுகள் இருக்கின்றன.

இடையில் நான் நட்பு விருப்பு ஒன்றை திரும்பவும் ஏதோ மாறித் தட்டுப்பட்டு அனுப்பியபோது...

Oh, what a coincidence!

நான் ஒரு பெரிய ஆள், உன் போன்ற அனாமதேயங்களை எல்லாம் நண்பராக ஏற்றுக் கொள்ள நேரமில்லை, எனக்கு நட்பு அழைப்பு எல்லாம் அனுப்ப வேண்டாம், விரும்பினால் தொடர் என்பது போல, arrogant ஆன பதிவு ஒன்று வந்திருந்தது.

அது யாருக்கானதோ எனக்குத் தெரியாது. அதில் இருந்த சுயமோக திமிர்த்தனம் சிரிப்பாக இருந்தது.

இவர்கள் எல்லாம் தங்களைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

தங்களைப் பற்றி அதீதமான மதிப்பீடுகளைக் கொண்டிருக்கும் படிக்கு, இவர்கள் ஊதிப் பெருப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அது அவர்களுக்கு தலைக்குள் நிறைய 'வாயு'வை நிரப்பி விட்டிருக்கிறது.

சல்மான் ருஷ்டி மீது நியூ யோர்க்கில் தாக்குதல் நடந்து அவர் தனது ஒரு கண்ணை இழக்க வேண்டியிருந்த போது, இவர் அமெரிக்காவில் இருக்கிறார்.

**தோழர்கள் தங்கள் தோழர் விவகாரங்களில் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதும் எனக்குப் புதியதுமல்ல.**

**அவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.**

**அவர்களது 'பிறந்த நாள் வாழ்த்துக்கள், தோழர்!', 'நலம் பெற்று வாருங்கள், தோழர்' பின்னூட்டங்கள் எல்லாம் கவனிப்பாரற்று, எந்த நன்றி விருப்புக் குறியும் இல்லாமல் அனாதரவாகக் கிடக்கின்றன. தன்னுடைய தோழர்களின் நல விசாரிப்பைக் கூட acknowledge பண்ணுகின்ற அடிப்படைப் பண்பு கூட இல்லாத இவரை தங்களுடைய தோழர் என்று சொல்லிக் கொள்வதில் அவர்களுக்கு இருக்கும் பெருமை குறித்து எனக்குச் சிரிப்பாக இருக்கிறது.**

ஆனால், தன்னைப் போல கருத்துச் சுதந்திரத்திற்காக இஸ்லாமிய தீவிரவாதத்தினால் தாக்குதலுக்கு உள்ளான ருஷ்டி பற்றி எதையுமே பகிரங்கமாகத் தெரிவித்ததில்லை. அவருக்கு நடந்தது போல தனக்கும் நடக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளதை உணர்ந்து கொண்டதாகவோ தெரியவில்லை.

அந்த நேரம் குடும்பமாக தான் ஐஸ் கிரீம் சாப்பிட்டு மகிழ்ச்சியாக இருப்பதைப் பற்றிய படங்களையே போட்டுக் கொண்டிருந்தார்.

எனக்கு இவரை விட, இவரது தோழர்களைப் பார்க்கும்போது தான் பரிதாபமாக இருந்தது.

இவர் மீதான இஸ்லாமிய தீவிரவாதிகளின் பயமுறுத்தலின் போது தோள் கொடுத்தவர்கள் அவர்கள். அவர்கள் கூட இவரது 'கள்ள மௌனம்' குறித்துக் கேள்வி எழுப்பியதில்லை.

தோழர்கள் தங்கள் தோழர் விவகாரங்களில் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதும் எனக்குப் புதியதுமல்ல.

அவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.

அவர்களது 'பிறந்த நாள் வாழ்த்துக்கள், தோழர்!', 'நலம் பெற்று வாருங்கள், தோழர்' பின்னூட்டங்கள் எல்லாம் கவனிப்பாரற்று, எந்த நன்றி விருப்புக் குறியும் இல்லாமல் அனாதரவாகக் கிடக்கின்றன. தன்னுடைய தோழர்களின் நல விசாரிப்பைக் கூட acknowledge பண்ணுகின்ற அடிப்படைப் பண்பு கூட இல்லாத இவரை தங்களுடைய தோழர் என்று சொல்லிக் கொள்வதில் அவர்களுக்கு இருக்கும் பெருமை குறித்து எனக்குச் சிரிப்பாக இருக்கிறது.

இன்னொரு தோழர் இவரது திருமணத்திற்கு தன்னால் வாழ்த்துச் சொல்ல முடியவில்லையே என்று தனது தனது பதிவில் மனம் வருந்தியிருந்தார். ஆனால், அவரது வீட்டில் நடந்த முக்கியமான மரண இழப்பிற்கு இவர் கண்ணீர்க் குறி இட்டதாகக் கூடக் காணவில்லை.

சில நேரம் ஐயாயிரம் நெருக்கமான நண்பர்களைக் கொண்டிருந்தால், இதெல்லாம் கஷ்டமான விவகாரமாகவும் இருக்கக் கூடும்.

மனுஷ்ஷும் தோழராக இருந்தால், இவர் அவரிடம் அந்த tracking app ஐ வாங்கிப் பயன்படுத்தாலாம்.

நான் மூணு பேர் தானே, சமாளிச்சிக்குறேன்!

சரி, விசயத்திற்கு வருவோம்.

இந்த ஈழத்தமிழ் இலக்கிய உலகின் மார்த்தா ஸ்ரூவார்ட் தனது சுற்று நடையின்போது ஒரு காட்டுப் பக்கம் போயிருக்கிறார். அங்கே பழுத்துக் கிடந்த பெரி பழங்களைப் பிடுங்கிப் பேஸ்புக்கில் படம் போட்டு புளூபெரி என்று விளக்கம் வேறு போட்டிருந்தார்.

அதன் இலைகளை வைத்தே எனக்கு மல்பெரி என்று தெரிந்து விட்டது. அவரை முன்பின் தெரியாவிட்டாலும், 'Mulberry', 'Leaves are healthy' என்று உட்பெட்டிச் செய்தி ஒன்று அனுப்பியிருந்தேன்.

இதற்குள், அவரது அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நட்பு வட்டத்தில் 'விசயம் தெரிந்த' யாரோ அதை பிளாக்பெரி என்று திருத்தியிருக்கிறார்கள்.

உடனே தனது தவறைச் சொல்லாமலேயே wild blackberries என்று மாற்றியிருந்தார்.

இன்று வரைக்கும் நான் அனுப்பிய உட்பெட்டிச்செய்தியை வாசிக்கவும் இல்லை.

இப்போதும் அதே காட்டு பிளாக்பெரியோடு பதிவு இருக்கிறது. அவருடைய நட்பு வட்டமும், 'தோழர்'களும், அந்த உண்மையோடு, அவரது நட்புக் கிடைத்த பெருமையில் திருப்திப்பட்டபடியே இருக்கிறது.

அடுத்த பிறந்த நாளுக்கும், ஏன் புரபைல் பட மாற்றத்திற்கும், இந்தத் தோழர்கள் சர்மிளா தோழருக்கு வாழ்த்துச் சொல்வார்கள்...

பள்ளிக்காலத்தில் கணக்கே எடுக்காத பெண்ணின் பின்னால் அநியாயத்திற்கும் அலைகிறவர்கள் போல!

•••

இப்படியாகத்தானே, பேஸ்புக்கில் உலா வருகின்ற பல்வேறு இலக்கிய மேதகுக்கள், பெருந்தகைகள், சில்லறைகள் என பல்வேறு தரப்பட்டவர்களையும் நான் வாசித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.

இவர்களில் பலர், தங்களை விட அதிகமான விருப்புக்குறிகள் பெறுகிறவர்கள் பற்றி அவ்வப்போது பொருமியதைக் கண்டிருக்கிறேன்.

மற்றவர்கள் தங்களைப் பற்றி மேலாக நினைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புத் தானே அங்கீகாரம் என்பது. அந்த அங்கீகாரத்தை quantize பண்ணக் கூடிய வசதியைச் செய்திருப்பது இந்த விருப்புக் குறி மட்டும் தானே.

சில நேரம் புத்தக விற்பனை எண்ணிக்கையும்!

You can never quantize 'pdf please'. or வெளியீட்டு விழாவுக்கு மொய் எழுத வந்தவர்களையோ!

ஆனால், நான் முன்பு ஒரு தடவை எழுதியது போல, பேஸ்புக் என்பது ஒரு பண்டமாற்றுச் சந்தை.

விருப்புக்குறிகளைக் கொடுக்கல் வாங்கல்களாகப் பரிமாறிக் கொள்வதற்கான!

இந்த விருப்புக்குறி மோகிகளான இலக்கியவாதிகளில் பலர் மற்றவர்கள் எவரது பதிவுகளுக்கும் விருப்புக்குறி இடுவதில்லை.

தங்களுக்குச் சாமரம் வீசுவோர், சமானமாக இருப்போர் (தோழர்கள்!), தாங்கள் கவனம் பெற விரும்பும் தங்களுக்கு மேலானோர் தவிர்ந்து, மற்ற சாமான்யர்கள் எவருக்கும் விருப்புக் குறிகள் இடுவதில்லை.

அவர்களது பிறந்த நாளுக்கு வாழ்த்துச் சொல்லும் நூற்றுக்கணக்கான நேயர்களில் எவருக்காவது இவர்கள் வாழ்த்துச் சொல்லியிருப்பார்களா? இல்லை.
அவ்வளவுக்கு இவர்கள் முக்கிய மானவர்கள். பிஸியானவர்கள்.

இதைவிட, தங்களது பதிவுகளுக்கு பின்னூட்டம் விடுவோருக்குக் கூட இவர்களில் பலர் விருப்புக்குறி இடுவதில்லை.

என்னைப் பொறுத்தவரை, இன்னொருவர் வீட்டுக்குப் போனால், உட்காரும் இடம் தவிர்ந்து அனாவசியமாக, யாழ்ப்பாணிகள் மாதிரி, படுக்கையறை வரைக்கு சோதனை போடுகிற பழக்கம் கிடையாது. தாங்கள் வாங்கியிருக்கும் பெரிய வீட்டை எனக்குச் சுற்றிக் காட்டிப் பெருமைப்பட வேண்டும் என்று நினைக்கும்போது கூட, எனக்குக் கூச்சமாக இருக்கும்.

எனக்கே தெரிந்திருக்கவில்லை. ஒரு தடவை பார்ட்டிக்கு போன வீட்டில், ஒரு பெண் சொன்னார்...
அவர் வந்தால் ஜக்கட்டும் கழட்ட மாட்டார். அப்பிடியே ஒரு இடத்தில இருப்பார்.

ஆனால், விருந்தாளியாகப் போகும் இன்னொருவர் வீட்டில் என்னுடைய இடத்தைத் தெரிந்து வைத்திருக்கும் அவ்வாறான எண்ணம் கொண்ட எனக்கு, ஒரு வீட்டுக்குப் போனால் என்னை வரவேற்று உபசரிக்கும் பழக்கம் இல்லாதிருந்தால், பிறகு போக விருப்பம் இருக்காது.

அதைப் போல, எப்படி என் வீட்டுக்கு வருவோரை உபசரிக்கிறேனோ, அதைப் போலத் தான் என் பதிவுகளுக்கு பின்னூட்டம் விடுகிறவர்களுக்கும் குறும்பாகவும் சுவாரஷ்யமாகவும் பதில் சொல்கிறேன். கருத்துச் சொல்வோருக்கு சிரமம் பாராமல் வாசித்திருக்கிறேன் என்பதைக் காட்ட விருப்புக்குறி இடுகிறேன்.

இந்த இலக்கிய பெருந்தகைகளில் பலருக்கு நான் விருப்புக் குறி போட்டிருக்கிறேன். அவர்கள் எழுதியவற்றில் பலதை ஆர்வத்தோடு வாசித்திருக்கிறேன்.

பல தடவைகளில் பின்னூட்டங்கள் விட்டிருக்கிறேன்.

ஆனால், அதை மதித்து அதற்குப் பதில் அளிப்பவர்கள் அரிதான சிலரே.

பெரும்பாலோர் அதை வாசித்தோம் என்றாவது கூட விருப்புக்குறி இடுவதில்லை. அதன் பின்னால் அவர்களுக்கு எல்லாம் விருப்புக்குறி இடுவதில் எனக்கு விருப்பு இருப்பதில்லை.

மதியாதார் தலைவாசல்!

இதற்குள் பேஸ்புக் படத்தை மாற்றும் பெண்களுக்கு ஆயிரக்கணக்கில் விருப்புக்குறி இடப்படுவது பற்றி இவர்கள் எதற்காக பொறாமைப்படுகிறார்கள் என்பது எனக்குப் புரிவதில்லை.

விருப்புக் குறிகள் என்பன எந்த அர்த்தத்தையும் தருவனவும் அல்ல. அவை வாசித்தேன் என்பதற்கான குறியீடாகவும் இருக்கலாம் என்றால், முழுமையாக வாசிக்காமல் போடப்படும் விருப்புக்குறிகளும், பிழையான பின்னூட்டங்களும் மறுபக்கத்தில்.

சில நேரம் தற்செயலாகக் கூடத் தட்டுப்பட்டிருக்கக் கூடும்.

ஆனால், தேடி வந்து கருத்துச் சொல்கிற ஒருவரின் கருத்துக்கு மதிப்பு அளிக்காமல், எல்லோருடைய பிறவியின் நோக்கமே தங்களின் திருவாயசைப்புக்காகத் தவம் கிடைத்தலே என்றே இந்த மலைப்பிரசங்கிகள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு நேரம் இல்லாத அளவுக்கு தங்களை முக்கியமானவர்களாகக் கருதுகிறார்கள்.

இவர்களுக்கும் தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றும் வித்தை தெரிந்திருந்தால், இவர்களுடைய கருத்துக்கள் பற்றி நானும் அலட்டிக் கொள்ளாமல் இருந்திருக்கக் கூடும்.

ஒரு கிண்ணத்தைக் கையில் ஏந்திய பேறுபெற்ற எளிய மனத்தினனாக நான் இருந்திருப்பேன்.

விண்ணக அரசு எனக்குத் தான் என்ற எண்ணத்தோடு!

•••

இவர்கள் நான் மேல் சொன்ன விடயங்கள் பற்றித் தெரியாமல் இருப்பதெல்லாம் சாவான பாவமுமில்லை.

நாங்கள் எல்லோருமே அறிவு

**தேடி வந்து கருத்துச் சொல்கிற ஒருவரின் கருத்துக்கு மதிப்பு அளிக்காமல், எல்லோருடைய பிறவியின் நோக்கமே தங்களின் திருவாயசைப்புக்காகத் தவம் கிடைத்தலே என்றே இந்த மலைப்பிரசங்கிகள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.**

**அதற்கு நேரம் இல்லாத அளவுக்கு தங்களை முக்கியமானவர்களாகக் கருதுகிறார்கள்.**

**இவர்களுக்கும் தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றும் வித்தை தெரிந்திருந்தால், இவர்களுடைய கருத்துக்கள் பற்றி நானும் அலட்டிக் கொள்ளாமல் இருந்திருக்கக் கூடும்.**

**ஒரு கிண்ணத்தைக் கையில் ஏந்திய பேறுபெற்ற எளிய மனத்தினனாக நான் இருந்திருப்பேன்.**

**விண்ணக அரசு எனக்குத் தான் என்ற எண்ணத்தோடு!**

வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் தான் இருக்கிறோம்.

எல்லாருக்கும் எல்லாம் தெரிந்திருப்பதும் இல்லை. தெரிந்திருக்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை.

அறியாமை ஒரு போதுமே தவறாக இருக்க முடியாது.

அறிய விரும்பாததும், முயற்சிக்காததும், உண்மையைத் தெரிந்து கொண்டும் அதை நம்ப மறுப்பதும், தெரிந்த உண்மையை மறைத்துப் பொய்ப் புகழ்ச்சி செய்வதும், அறியாததில் மேதைமைத் தனம் காட்டுவது தான் தவறானவை.

அறிவு என்பது தேடலிலும் பகிர்தலிலும் தான் வருகிறது.
புதிதாக ஒன்றை அறிந்து கொள்வதில் ஏற்படும் பரவசத்திற்கு இணை இல்லை. அதை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பை ஏற்படுத்துவது அந்தப் பரவசம்.

Golden ratio வையும், Gestalt theory ஐயும் அறிந்த போது எனக்கு அதை யாருக்காவது சொல்ல வேண்டும் போல இருந்தது.

பலருக்கு அது ஏற்கனவே தெரிந்திருக்கும். எனக்கு அது புதிது.

ஞானம் அடைந்த பரவசம் அது தான்.

அதற்கு திறந்த மனம் வேண்டும்.

அறிவை எங்களுக்கு மேலானவர்களிடம் இருந்து மட்டுமில்லை, எங்களுக்குக் கீழானவர்களிடம் இருந்தும் பெற முடியும் என்ற விசாலமான மனம் வேண்டும்.

நான் அறிந்து கொள்வதற்கு இனிமேல் எதுவும் இல்லை என்ற சிந்தனையும், எல்லாம் பற்றியும் என்னுடைய தீர்ப்பே இறுதியானது என்ற நினைப்பும் பணிவைத் தருவதில்லை.

பெரிய நினைப்பைத் தான் தந்து கொண்டிருக்கும்.

அது எங்காவது ஒரு இடத்தில் ஒரு அனாமதேயத்திடமோ, சாமானியனிடமோ மூக்கு உடைபடுகிற நிலைக்குத் தான் கொண்டு போய் விடும்.

பார்ப்பதற்குச் சுமாராகவும் அவர்களுடைய புலமையைப் பற்றி எங்களுக்குத் தெரியாததுமான பலர் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள்.

குறிப்பாக தோற்றத்தை வைத்து அறிவை அளவிடும் சிந்தனை கொண்டோருக்கு அவர்கள் பற்றிய மட்டமான மதிப்பீடுகளே இருக்கும்.

•••

படைப்பாளிகள் தங்கள் வாசகர்களோடு எந்த இடைத் தரகர்களும் தடைகளும் இல்லாமல் ஊடாடக் கூடிய வகையில், (Engagement) இந்த சமூக வலைத்தளங்கள்

கிடைத்திருக்கின்றன.

பல்வேறு படைப்பாளிகள் அந்தத் தொடராளிகளை engage பண்ணுவதன் மூலம் தங்களுக்கான சந்தையைப் பெருப்பித்துக் கொள்கிறார்கள். பலர் மில்லியன் கணக்கில் சம்பாதிக்கிறார்கள்.

சினிமா நடிகர்கள் போன்ற பிரபலங்களுக்கு தங்கள் ரசிகர்களோடு ஊடாட வேண்டிய தேவை இல்லாதபடிக்கு, அது கனவுலகம் சார்ந்ததாக இருக்கிறது.

பாடகர்கள் பலரும் டிக்கட் விற்பனை மூலம் நிகழ்வுகளில் பணம் சம்பாதித்தாலும், இசைத்தட்டுகளை விற்பதற்கான வழியாக அந்த நிகழ்வுகளைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆனால், எழுத்துப்படைப்பாளிகளின் நிலைமை வேறு. அவர்கள் தங்கள் வாசகர்களை சிந்தனை மட்டங்களில் மட்டுமன்றி, நேரடியாகவும் அணுகி உறவாட வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

ஆசான் ஆற்றிய உரை நிகழ்வின்போது, அங்கு வைத்திருந்த புத்தகங்கள் 'விற்றுத் தீர்ந்தன' என்பதே ஆசான் பெருமையாகக் குறிப்பிடும் அளவுக்கு இருக்கிறது.

தங்களது வாசகர்களை விட பெரிய வட்டத்திற்கு தங்களை பரவலாக்குவதற்கு முன்னால், தங்களைத் தேடி வருவோரை தக்க வைத்துக் கொள்கிற, அவர்களை மதிக்கிற பண்பு வேண்டும்.

ஆனால், இவர்களின் பலர் தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளோடு தங்களை எட்ட முடியாத தொலைவுகளில் இருக்கும் நட்சத்திரங்கள் போன்ற கனவுகளில் இருக்கிறார்கள்.

மலைகளில் உட்கார்ந்திருந்து wisdom dispensing காட்டூன் துறவிகள் போலவோ, மலை மேல் உட்கார்ந்திருந்து கீழே கூடியிருக்கும் 'ரசிகப் பெருமக்களுக்கு'

**இவர்களின் பலர் தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளோடு தங்களை எட்ட முடியாத தொலைவுகளில் இருக்கும் நட்சத்திரங்கள் போன்ற கனவுகளில் இருக்கிறார்கள்.**

உபதேசிக்கும் ஞானிகள் போலவோ தங்களை நினைத்துக் கொள்கிறார்கள்.

தங்களுக்கு இருப்பதை வைத்துக் கொண்டே வியாபாரம் பண்ணலாம் என்ற முடிவோடு, எதையும் புதிதாகத் தேடுவதற்கான முயற்சிகள் எதுவும் இவர்களுக்கு இருப்பதில்லை.

தங்களைப் புத்திசாலிகளாக மட்டுமன்றி, மற்றவர்களை முட்டாள்களாக நினைத்துக் கொள்வதிலிருந்தே இவர்களின் சிந்தனை தொடங்குகிறது.

இவர்கள் புதிதாக எதையும் அறிந்து கொள்வதற்கோ, விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் மூலமாக சிந்தனையை வளம்படுத்துவதற்கோ தயாராக இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரைக்கும், என்னைப் போல ஆர்வம் கொண்ட ஒருவரைக் கண்டால், பெரும் மகிழ்ச்சியோடு, அவரோடு உரையாடி புதிய விடயங்களை அறிந்து அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தேடல் எப்போதும் இருக்கும். நான் இங்கே தேடிப் போய் கலந்து கொள்கிற, அறிவைத் தேடுகிற எல்லா இடங்களிலும், தங்களைப் போன்ற ஆர்வலர்களைக் கண்டு மகிழ்ச்சி அடைவதையும், தங்கள் அறிவை எந்த பந்தாவும் இன்றி, ஆர்வத்தோடு பகிர்ந்து கொள்வதையும் கண்டிருக்கிறேன்.

எங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைக் கண்டு அவர்கள் அடையும் அடையும் உற்சாகம் சொல்லில் அடங்காதது.

உலக சினிமா பற்றி நான் பேசத் தொடங்க, தமிழ்நாட்டானுக்கு உலக சினிமா 'படம் காட்டிய' எஸ். ராமகிருஷ்ணன் மௌனமானது பற்றி அபத்தத்தில் எழுதியிருக்கிறேன்.

எங்கள் சூழலில் அறிவு மீதான பொறாமை அதிகம் என்றே நினைக்கிறேன். அது தங்கள் திறமையும் அறிவும் பற்றிய தன்னம்பிக்கையீனத்தால் வருவது.

தன்னை விட மேலான திறமையுள்ளவர்கள் மீது இயல்பாகவே வரும் பொறாமையுணர்ச்சி பற்றி இலக்கிய உலகில் உள்ள சகலருக்கும் தெரிந்திருக்கும். அதைப் பற்றிப் புலம்புவதை நீங்களும் எப்போதும் கண்டிருப்பீர்கள்.
வெறும் விருப்புக்குறிகளுக்கே அரைகுறை ஆடை நாயகிகள் மேல் பொறாமைப்படுகிறவர்கள் இவர்கள்.

நான் பேஸ்புக்கில் பின்தொடரும் பல இலக்கியப் பெருந்தகைகளும் எந்த ஒரு புத்திசாலித்தனமான உரையாடலுக்கும் தொடர் பாடலுக்கும் (Intellectual conversation and engagement) தயார் இல்லாதவர்களாகவே எனக்குத் தெரிகிறார்கள்.


உலக இலக்கியம் படிப்பதால் வரும் அறிவு வளர்ச்சி, பாலாபிஷேக கட்டவுட் நாயகனின் படத்தைப் பார்ப்பதால் வளரும் அறிவை விட மேலானதில்லை...

அதனால் சிந்தனையைத் தூண்ட முடியாமல் இருந்தால்!

சிந்தனையைத் தூண்டாத, சிந்தனையைச் செழுமைப்படுத்தாத எதுவும் எனக்கு அனாவசியமான பொழுதுபோக்கும் அல்ல, நேர விரயம்!

எழுதத் தெரிந்ததால், எல்லாம் பற்றியும் எல்லாமும் தெரியும் என்ற நினைப்பு ஆசான்களுக்கும் நம்பர் வண்களுக்கும் மட்டுமல்ல, இந்த மலைப்பிரசங்கச் சில்லறைகளுக்கும் உண்டு என்பது தான் தமிழ் இலக்கிய உலகின் பெரும் துயரம்!

**ஜோர்ஜ் இ.**




# நாய்க்கடிச்சார்

அ.விஜயன்

நான் சிறு வயதில் கண்ட மிகவும் சுவாரசியமான மனிதர் இவர். நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன் வாழ்நாள் முழுதும் உழைத்து உண்ட மனிதர். இவரது சொந்தப் பெயர் வேறு. இவரை நாய்க்கடிச்சார் என்று அழைப்பதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. இவர் எப்போதும் நடந்து செல்வதால் நாய்கள் துரத்தும்போது நாய்க்கு அடிப்பார் என்பது ஒன்று. அவருக்குப் பல தடவை நாய்கள் கடித்தன என்பது இரண்டாவது.

இவர் ஒரு றெயினிங் மாஸ்ரர். முசுப்பாத்திக்காரர். வயது வித்தியாசமில்லாமல் எல்லோருடனும் பழகும் பண்பிருந்தது. கிடுகு மேய்ச்சலில் இவரை விஞ்ச எவருமில்லை என்பதை எனது அனுபவத்தில் கண்டிருக்கிறேன். கிடுகு மேய்வது, விறகு வெட்டுவது, காடு வெட்டுவது, அரிவு வெட்டு, சூடடிப்பது எனப் பலர் சேர்ந்து செய்யும் வேலைகளுக்கு இவர் தலைமை தாங்குவதால் இவரது உழைப்பாளர் படையில் குருசு கந்தையா, ரயில் சின்னத்தம்பி, தெய்வத்தார் என 3பேர் எப்போதும் நாய்க்கடித்தாருடன் இருப்பார்கள். இந்த 3 பேரும் பெரிதாகக் கதைப்பதில்லை என்பதைவிட அவர்கள் கதைக்க வேண்டியதையும் சேர்த்து நாய்க்கடிச்சார் கதைத்து முடிப்பார்.

அம்மான்“ என்ற சொல் விடுதலைப் புலிகளின் காலத்தில் பலரும் அறிந்த ஒன்றாக இருந்தபோதிலும் அதற்கு முன்பே மல்லாவியில் நாய்க்கடிச்சாரை எல்லோரும் அம்மான் என அழைக்கும் வழக்கம் இருந்தது. தூசணத்தை அவரது செல்ல வாயால் உச்சரிக்கும்போது ரசிக்கக் கூடியதாக இருக்கும். “அடா, புஞ்ஞு தூ“ என்று அவர் அடிக்கடி கூறும் சொற்கள் அவரை எப்போதும் நினைவில் வைத்திருக்கின்றன.

அதைவிட அவரது வேட்டி கட்டும் பாணியே தனி. அவர் புதிதாக வேட்டி கட்டிய அன்று மட்டும்தான் அது வெள்ளையாக இருந்திருக்கும். வழமையாக அவரது வேட்டி ஒரு பழுப்புக் கலரில் இருக்கும்.

வேட்டியை மடித்துக் கட்டியிருப்பார். பின்னர் வேலைப் பழுவால் வேட்டி இடுப்பிலிருந்து இழகும்போது அதை அவிழ்த்து இறுக்கிக் கட்டமாட்டார். இடுப்புப் பாகத்திலுள்ள வேட்டியை உருட்டி இறுக்கிவிடுவார். அதனால் வேட்டியின் கீழ்ப்பக்கம் ஒருபுறம் தூக்கலாகவும் மறுபுறம் பதிவாகவும் இருக்கும். அவர் இடுப்பில் சுருட்டிய பகுதியின் கீழ்ப்பாகமே தூக்கலாக இருக்கும்.

கிடுகு மேய்வதில் கிங்

வீடுகள், குசினிகள், பாடசாலைகள் எனப் பெரிய கிடுகு மேய்ச்சல் அம்மானுக்கே கிடைக்கும். அவருடன் நிரந்தரமாக நிற்பவர்களைத் தாண்டி தேவையேற்படும்போது வேறு சிலரையும் கிடுகு மேய்ச்சலில் சேர்த்துக்கொள்வார். காலை 6 மணிக்குக் கிடுகு மேயுமிடத்துக்குப் போய் கிடுகை வளம் பார்த்துப் பிரித்துப் போடவேண்டும். ஏற்கனவே பழுதாகிப் போயுள்ள கிடுகை மேலேயிருந்து அறுத்து வீழ்த்தும்போது வேகமாக அவற்றை அகற்ற வேண்டும். பல ஈர்க்குகளைத் தண்ணீரில் நனையப் போடுவது, நுணியை வெட்டுவது என எல்லா வேலைகளிலும் வேகமாகச் செயற்படவேண்டும். கொஞ்சம் பிழைத்தால்கூட நாய்க்கடிச்சார் “புஞ்ஞு“ என்ற தனது செல்ல அழைப்பால் நெறிப்படுத்துவார்.

நான் பாடசாலைக் காலத்திலேயே நாய்க்கடிச்சாருடன் கிடுகு மேய்ச்சல் வேலை செய்திருக்கிறேன். பகல் 12 மணியளவில் வேலை முடிந்துவிடும். சம்பளம் வாங்கி நியாயமாக எனக்கும் சம்பளம் தருவார். அந்தக் காலத்தில் பத்து ரூபா கிடைத்தால் கூட அது பெரிய காசு. சின்னப்பெடியன் என ஏமாற்ற மாட்டார்.

கிடுகு மேய்ச்சலின் தத்துவமே நாய்க்கடிச்சார் போன்ற நெடுந்தீவு மக்களிடம் இருந்தது. காட்டில் மிகவும் நேரான காயான் தடி வெட்டி பாய்ச்சல் தடிபோட்டு அதற்குக் குறுக்காகப் பாவட்டை வரிச்சுக்கட்டி (வேலியிலுள்ள பாவட்டை அல்ல காட்டுப் பாவட்டை) காயாத் தடிக்கு மேல் தடித்த தும்புக் கயிற்றை இழுத்துக் கட்டி அந்தக் கயிற்றின்மேல் விரல்களின் இடைவெளியைப் பிடித்து (கிடுகை வைத்துவிட்டு முதல் கட்டிய கிடுகு மட்டையில் விரல் நுணி படுமாறு அளவு பிடிப்பது) நனைந்த பனை ஈர்க்கால் கிடுகைக் கட்டுவது ஒரு தனிக் கலை. கிடுகு வேயப்பட்ட பின்னர் வீட்டுக்கு உள்ளே நின்ற பார்த்தால் காயான் தடி மட்டும் தெரியுமே தவிர கயிறோ கட்டிய ஈர்க்கோ தெரியாது.

கிடுகை மரத்தில் ஒட்டிவிட்டது போல இருக்கும். அவ்வாறு கிடுகு மேயும்போது நாய்க்கடிச்சாரும் அவரது தோழர்களும் நான்கு பாய்ச்சி மரங்களில் உள்ள கயிறுகளுக்கு இருபுறமும் எட்டிக் கட்டுவார்கள் வேகமாகவும் கட்டுவார்கள்.

நெடுந்தீவு ஒரு தனித்தீவாக இருந்ததால் அங்கு வாழ்ந்த மக்கள் தமக்குத் தேவையான பல விடயங்களைத் தாமே உருவாக்கிக் கொண்டார்கள். கிடுகு பின்னுவது, கயிறு திரிப்பது, சிறிய வீடுகளைக் கச்சிதமாக அமைப்பது ஆகிய விடயங்களில் அவர்களுக்கு ஏற்கனவே இருந்த பயிற்சியும் அனுபவமும் குடியேற்றக் கிராமமான மல்லாவியை வளப்படுத்துவதில் அவர்களின் பங்கு முக்கியமாக இருந்தது. இது நெடுந்தீவு மக்களுக்கு இருந்த தனித்திறமை எனலாம்.

கணித மேதை நாய்க்கடிச்சார்

ஒரு தடவை பூநகரிப் பகுதியிலிருந்து துணுக்காய்க்கு அரிவு வெட்டுவதற்காக 5 பேரை மாங்குளம் சந்திக்கு பஸ்ஸில் கூட்டி வந்தபோது மாலை 6 மணிக்கு மேலாகிவிட்டது. அதன் பின்னர் மல்லாவிக்குச் செல்ல வாகனங்கள் இருக்கவில்லை. மாங்குளம்-துணுக்காய் வீதி தார்கூடப் போடப்படாத காலமது. ஆனால் கூட்டி வந்தவர்களுக்கு பஸ் இருக்கு என்று பொய் சொல்லியிருக்கிறார் நாய்க்கடிச்சார். சிறிது நேரத்தின் பின்னர் அங்கிருந்த சாராயத் தவறணையில் (மல்லாவியில் சாராயத் தவறணை இருக்கவில்லை. மாங்குளத்திலிருந்து மல்லாவிக்குச் சாராயம் கொண்டுவரும் பெரிய வர்த்தகம் பற்றிப் பின்னர் எழுதுவேன்) 2போத்தல்



சாராயம் வாங்கி அனைவரும் ஒரு சுற்று வாயில் ஊற்றிவிட்டுக் கதைத்துக்கொண்டிருக்கும்போது ஏனையவர்களிடம் இப்படிக் கூறினார் நாய்க்கடிச்சார் “ அடாநாம ஆறுபேர் இருக்கிறங்... இங்கயிருந்து துணுக்காய் 12 மைல். ஆறிரெண்டு பண்ரண்டு. ஆளுக்கு ரெண்டு மைல் நடப்பங்.“ என்று கூறி அவர்களையும் கூட்டிக் கொண்டு அம்மான் நடையில் துணுக்காய் போய்ச் சேர்ந்த கதை தற்போது மல்லாவியில் வாழ்பவர்களுக்குத் தெரிந்திருக்காது.

அந்தக் காலத்தில் கிரவல் வீதி மோட்டார் சைக்கிளோ ஏனைய வாகனங்களோ இல்லை. பஸ்ஸைத் தவிர லொறி ட்ராக்ரர் என்று எது வந்தாலும் ஏறிச்செல்லும் நிலையே இருந்தது. செருப்புக்கூட இல்லாமல் கால்நடையாகவே மக்கள் பிரயாணம் செய்வார்கள். அந்தக் கஸ்ரங்களைப் பட்ட மல்லாவியில் அம்மாக்களுக்கும் அப்பாக்களுக்கும் பாத வணக்கம் செய்யவேண்டியது மல்லாவியில் வாழும் ஒவ்வொருவரினதும் கடப்பாடாகும். உலகத்தில் எத்தனை கணித மேதைகள் இருந்தாலும் நாய்க்கடிச்சாரின்

6×2=12 தியறி மிகவும் காத்திரமானதும் அர்த்தமுள்ளதும் ஆகும். அதைவிட அந்தக் கணிதச் சூத்திரம் சரியானது என்பதை நிருபித்து நிறுவியுமிருந்தார்.

பிறகொரு சந்தர்ப்பத்தில் கடும்கோடை காலத்தில் வேதநாயகம் டொக்ரரின் மகன் பொன்ராசாவைக் கண்டு இப்படிக் கூறினார் நாய்க்கடிச்சார்" மருமகங் ஒரு வயலுக்குக் கம்பிக்கட்டை போட்டு கொடுக்க வாறியா?" என்று. பொன்ராசா கூறியிருக்கிறார் "என்னம்மான் பகிடி விர்றியள் இந்தக் கோடை நேரம் கம்பிக்கட்டை நடக் கிடங்கு கிண்டலாமா?" என்று.

அதற்கு நாய்க்கடிச்சார் "அந்தத் தறை சரியான ஈரம். அலவாங்கைப் போட்டால் ரெண்டடி உள்ளே போய்விடும். அலவாங்கை இழுத்து எடுக்கிறதுதான் கஸ்ரமான வேலை" என்று. பொன்ராசா மறுநாள் அம்மானுடன் அந்த இடத்துக்கு வேலைக்குச் சென்றபின் தான் தெரிந்தது அலவாங்கை ஓங்கிக் குத்தியபோது அது ரெண்டடி மேலே கிளம்புவதை. அலவாங்கால் கடும் நிலத்தில் குத்தியதால் உள்ளங்கை தோலுரிந்து பல நாள் துன்பப்பட்டார் பொன்ராசா.

நாய்க்கடிச்சாரின் இன்னோர் தொழில்முறையாக இருந்தது பேக்கறிப் போறணைகளுக்கு விறகு வெட்டிக் கொடுப்பது. குருசு கந்தையர், ரயில் சின்னத்தம்பியர், தெய்வத்தார் ஆகியோரே அந்த வேலையிலும் நாய்க்கடிச்சாருடன் பணியாற்றினார்கள்.

காலையில் பேரும் கோடங்கியைத் தோளில் கொழுவிக் கொண்டு கதைத்துக் கொண்டு காட்டுக்கு நடந்து செல்வார்கள். அவர்களின் கோடாலிப்பிடி வீரை மரப் புருவத்தில் சீவி எடுக்கப்பட்டது. எந்தக் கடினமான மரத்தை வெட்டினாலும் பிடி உடையாது. கோடாலியின் அடிப்பாகத்திலிருந்து குறைந்தது 4 அங்குலத்துக்கு மேல் கோடாலி இறுக்கப்பட்டிருக்கும். இது வழமையாக வீடுகளில் விறகு கொத்தும் கோடாலிகளுக்குப் போடப்படும் பிடியைவிட வித்தியாசமானது.

மரம் தறிக்கும்போது கோடாலி மரத்தில் இறுகி விட்டால் கீழே நீண்டிருக்கும் பிடியை ஒரு நெம்புகோல்போல தெண்டி இலகுவாகக் கோடாலியைக் கழற்ற முடியும். இந்தத் தத்துவத்தை அவர்கள் எங்கு கற்றுக்கொண்டார்களோ, கண்டுபிடித்தார்களோ தெரியாது.

காலையில் 6 மணிக்கெல்லாம் காட்டுக்குள் இறங்கும் இந்தக் குழுவினர் பகல் 12 மணிக்கும் வேலையை முடித்துவிட்டுக் கால்நடையாக அணிஞ்சியன் குளத்துக் கள்ளுத் தவறணைக்குப் போவார்கள். அவர்களுக்கான கள்ளைத் தவறணைக்காரன் புறம்பாக எடுத்து வைத்திருப்பான். கள்ளு முடிந்துவிட்டாலும் நாய்க்கடிச்சாரின் கள்ளை வேறு நபர்களுக்குக் கொடுக்கும் வழக்கம் இருக்கவில்லை.

அதேபோல கள்ளைக் குடித்துவிட்டு மீன் விற்கும் இடத்துக்குச் செல்வார்கள். மீன் விற்பவர்களும் அவர்கள் வருவார்கள் என்ற மீனை எடுத்து வைத்திருப்பார்கள். அதையும் வாங்கிக் கொண்டு உச்சிவெயிலில் நடந்து வீட்டுக்குப் போவார்கள். மல்லாவியிலிருந்து வீடு நோக்கிச் செல்லும்போது முதலில் குருசு கந்தையர் வீடு வரும். அடுத்த ஒழுங்கையில் நாய்க்கடிச்சாரின் வீடு. அதன் பின்னர் ரயிலரின் வீடு. கடைசியாகத் தெய்வத்தார் வீடு. நான்குபேரும் செருப்புப் பாவிப்பதில்லை. அவர்களின் பாதங்களில் குத்தப்போகும் முள்ளு அவர்களின் கால் பட்டார் முறிந்துபோகும் அந்தளவுக்கு அவர்களின் பாதங்கள் மரத்துப்போயிருந்தன.

இந்த 4 உழைப்பாளிகளும் மல்லாவியில் எங்கு சென்றாலும் நடந்தே செல்வார்கள். அவர்களின் பாதங்கள் வணக்கத்துக்குரியவை. அவர்கள் உழைத்து உண்ட மனிதர்கள்.

இறுதிவரை நாய்க்கடிச்சார் தலைமையிலான அந்த வயதான குழுவினர் ஒற்றுமையாக இருந்தார்கள். நட்பின் அடையாளமாக அவர்கள் வாழ்ந்தார்கள் என்பதையும் சொல்லி வைக்க வேண்டும்.

கிடுகு மேய்தல் என்ற உயரிய கலையின் நுணுக்கங்களை நாய்க்கடிச்சார் என்கிற ராஜ குருவிடம் கற்றுக்கொள்வதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.



# பத்து நீதிமான்களைத் தேடிப் பிடிக்க முடியாத எரியும் நகரம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றுவதற்கு அழைக்கப் பட்டிருந்த சட்டத்தரணி ஸ்வாஸ்திகா அருள்லிங்கத்தின் உரையை நிறுத்த வேண்டும் என்ற பல்கலைக்கழக மாணவர்கள் சிலரின் எதிர்ப்புக் காரணமாக அந்த உரைநிகழ்வு இறுதிநேரத்தில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் நிறுத்தப்பட்டிருந்தது.

புலிகள் ஒரு பாசிச அமைப்பு என்று அவர் கூறிய கருத்து ஒன்றுக்கு யாழ்ப்பாணிச் சிந்தனை கொண்ட தமிழ் உணர்வாளர்கள் கொதித்தெழுந்திருந்தனர்.

நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதில் புலிகளுக்கு மட்டும் இல்லை, புலிவால்களுக்கும் எந்தத் தெளிவும் இருந்ததில்லை.

மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், இராணுவத்தினரின் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள் என்று சிங்கள அரசுக்கு எதிரான பல்வேறு சட்டரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒருவரை, தாங்கள் கொண்டிருக்கும் 'புலிகள் புனிதப் போராளிகள்' என்ற மாயையோடு உடன்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக, தூஷண வார்த்தைகளால் திட்டுகின்ற அளவுக்கு பண்பாடு மிக்க சமூகமாக இந்த யாழ்ப்பாணிச் சமூகம் மாறி விட்டிருக்கிறது.

இதனால் தான், நான் சொல்கின்ற 'ஒரு அறிவார்ந்த, சிந்திக்கத் தெரிந்த ஒரு தலைமை (Intellectual class) எமது சமூகத்தில் மேலெழ வேண்டும்' என்ற கருத்தின் தேவை என்றைக்கும் விட, இன்றைக்கு அதிகமானதாக இருக்கிறது என்று அதன் அவசியத்தை உணர்த்தி நிற்கிறது.

இன்றைய தமிழர் அரசியல் தலைமை இந்த அடாவடித்தனம் குறித்து எந்த நிலைப்பாட்டையும் வெளியில் சொன்னதாக நான் கண்டதில்லை. வெறிநாய்களுக்கு உபதேசம் செய்ய எவருக்கும் துணிவில்லை.

தற்போதைய அரசியல் தலைமை பிழைப்புக்கான கதிரை அரசியல் என்பதையும் விட, அதில் இந்த யாழ்ப்பாணச் சிந்தனைக்கு எதிரான கருத்துக்களைச் சொல்ல முயன்ற எவரும், துரோகிகளாக்கப்பட்டு வாய் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால், இந்த சமூகம் கேட்க விரும்பும் பொய்களைச் சொல்வது பிழைப்புக்கு வசதியானதாக இருக்கும் என்பதால் எவரும் உண்மையைச் சொல்ல விரும்புவதில்லை.

தற்போதுள்ள எந்தவொரு தமிழ்த் தலைமைக்கும், அதை எதிர்க்கும் மற்றத் தலைமைக்குழு, அந்தத் தலைமை தமிழ்த்தேசியத்திற்கு எதிரானது என்று ஆதாரம் காட்ட ஏதோ ஒரு காரணம் இருக்கிறது.

யுத்தக் குற்ற விசாரணை, இன அழிப்பு என்ற யாழ்ப்பாணிகள் அழுங்குப்பிடி பிடித்திருக்கும் கருத்துக்களைச் சமரசம் செய்கிற கருத்துக்களை எங்கோ எப்போதோ அவர்கள் உதிர்த்திருந்ததை ஆதாரம் காட்டி அவர்களைத் துரோகிகள் ஆக யாழ்ப்பாணிச் சமூகத்தின் முன் காட்ட அந்த எதிர்த் தரப்பினர் முயன்று கொண்டே இருக்கின்றனர்.

ஆனால், இவர்கள் எல்லாரும் தமிழ்த்தேசியம் என்ற ஒரே குடைக்குள் தான் அரசியல் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நடக்காது என்று முடிவாகத் தெரிந்தாலும், அது நடக்கும் என்ற கனவுலகில் வைத்திருப்பது தங்கள் கதிரைகளுக்குப் பயன்தரும் என்பதால், இந்த யாழ்ப்பாணிச் சமூகத்திற்கு பொய் சொல்கிறவர்களே பிடித்தவர் களாகவும், தலைவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில், அவ்வப்போது மாறுகின்ற உலக ஒழுங்குகளை உள்ளடக்கிய, யதார்த்த சூழ்நிலையை உணர்ந்து, அதைச் சமூகத்திற்கு எடுத்துச் சொல்லி, நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை நோக்கி நகர வைப்பது, ஒரு அறிவார்ந்த தலைமையினால் தான் முடியும். அந்தத் தலைமை தான் பதவி எதிர்பார்ப்பு எதுவும் இன்றி உண்மை நிலையை இந்த யாழ்ப்பாணிச் சமூகத்திற்கு எடுத்துரைக்க முடியும்.

அது சமூகத்தில் மதிக்கப்படுகின்ற, நேர்மையாளர்களான, சமூக நலனில் அக்கறை கொண்ட அறிவார்ந்த சமூகத் தலைவர்களைக் கொண்டதாக இருக்கும்போது தான் இந்த யாழ்ப்பாணிச் சமூகம் அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கும்.

அவ்வாறான ஒரு அறிவார்ந்த சமூகம் தான் இன்றைக்கு இந்த ஸ்வாஸ்திகா விவகாரம் போன்ற ஒரு சூழ்நிலையில் ஒரு சமூகத்திற்கு வழி காட்ட முடியும்.

அவசியமான நேரத்தில், வாயைப் பொத்துங்கடா! என்று இந்த வெறிநாய்க்கூட்டத்தைத் தடுத்து நிறுத்தவும்!

ஏக பிரதிநிதிகள் அழிந்த தற்போதைய சூழ்நிலையில், ஏகப்பட்ட பிரதிநிதிகள் தமிழ் மக்களின் தலைமைகளாக வந்து சேர்ந்திருக்கிறார்கள். இயக்கத் தலைவர்கள் ஒன்றாக இருந்து படம் போட்ட போது, ஈழம் கிடைத்த பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டது போல, இவர்கள் எல்லாரும் ஒன்றாகக் கையெழுத்திடுவதும், போட்டோவுக்குப் போஸ் கொடுப்பதும் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்துவதும் திரும்பவும் இந்த சமூகத்தைப் புல்லரிக்க வைப்பதாகத் தான் நிலைமை இருக்கிறது.

இந்தச் சமூகம் மக்களால் வாக்குகள் மூலமாக தெரிவு செய்யப்பட்டும், வாக்குகள் மூலமாக தெரிவு செய்யப்பட வேண்டியும் உள்ள இந்தத் தலைவர்களையும், அவர்களின் தொண்டர்களையும் மட்டும் கொண்டிருக்கவில்லை என்பது தான் தற்போதைய பிரச்சனை.

தமிழ் சமூகத்திற்கு தற்போது தேர்தல், வாக்கு அரசியலுக்கும் அப்பாலும் தலைவர்கள் இருப்பது தான் எந்த முடிவுக்கும் வர முடியாமல் தடுக்கிற பெரும் பிரச்சனை.

அந்தத் தலைமைகளும் இந்த இனத்தின் ஏதோ வழித் தலைவர்களாக தங்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம், சமூகத்தில் செல்வாக்கையும், பணத்தையும், சுயநல வளர்ச்சிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை கொண்டனவாக இருக்கின்றன.

புலன் பெயர்ந்த நாடுகளில் புலிகளால் நிதி சேர்ப்பதற்கும் அடக்கி வைக்கவும் வளர்க்கப்பட்டு, சேர்க்கப்பட்ட நிதியைச் சுருட்டிக் கொண்ட பின்னாலும், இந்தச் சமூகத்தின் தலைவிதியை தங்களால் நிர்ணயிக்க முடியும் என்று நம்புகிற அடியாள் காடையர் கூட்டம் அதில் முதன்மையானது.

இது முற்றுமுழுதாக இனப் பிரச்சனையைக் கொதிநிலையில் வைத்திருப்பதன் மூலம் புலன் பெயர்ந்த நாடுகளில் பணம் சுருட்ட முடியும், அந்தப் பணத்தை வைத்து இலங்கையில் அரசியல் அமைப்புகளை மட்டுமல்ல, இந்திய கூலித் தலைவர்களையும் விலைக்கு வாங்கலாம் என்று நம்புகிறது.

புலன் பெயர்ந்த நாடுகளில் புலிகளால் நிதி சேர்ப்பதற்கும் அடக்கி வைக்கவும் வளர்க்கப்பட்டு, சேர்க்கப்பட்ட நிதியைச் சுருட்டிக் கொண்ட பின்னாலும், இந்தச் சமூகத்தின் தலைவிதியை தங்களால் நிர்ணயிக்க முடியும் என்று நம்புகிற அடியாள் காடையர் கூட்டம் அதில் முதன்மையானது.

இது முற்றுமுழுதாக இனப் பிரச்சனையைக் கொதிநிலையில் வைத்திருப்பதன் மூலம் புலன் பெயர்ந்த நாடுகளில் பணம் சுருட்ட முடியும், அந்தப் பணத்தை வைத்து இலங்கையில் அரசியல் அமைப்புகளை மட்டுமல்ல, இந்திய கூலித் தலைவர்களையும் விலைக்கு வாங்கலாம் என்று நம்புகிறது.

அதற்கு இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பது ஒரு பொருட்டே இல்லை என்பது மட்டுமல்லாமல், எந்தத் தீர்வும் வந்து விடக்கூடாது என்பதில் உறுதியாகவும் இருக்கிறது. அதனுடைய முற்றுமுழுதான நோக்கம் இந்த ஏமாளிகளை வைத்துப் பணம் திரட்டுவதும் சுருட்டுவதும் தான்.

இது புலிகளின் போராட்டம் கையளிக்கப்பட்ட ஏகபிரதிநிதிகள் தாங்கள் தான் என்று உரிமை கோரிக் கொள்வதுடன், ஈழத்திற்கு குறைவான எந்தத் தீர்வும் மாவீரர்களின் தியாகத்திற்கு இழுக்கு என்று புலன் பெயர்ந்த தமிழர்களைக் கொதிநிலையில் வைத்திருக்கிறது. மாவீரர் தினக் கொண்டாட்டம், கார்த்திகைப் பூ, விளக்கு, புலிக் கொடி விற்பனை என்று பணம் மட்டுமே அதன் குறி.

இதனால் தான் அங்கே தீவிரவாதத் தமிழ் அரசியலை முன்னெடுக்கும் வெட்டிப்பேச்சு வீரம் பேசும் அரசியல்வாதிகளை ஆதரித்துக் கொண்டிருக்கிறது.

அடுத்து, புதிதாகப் பணம் சேர்ந்து பிரமுகர்களான ஒரு கூட்டம். இங்குள்ள அரசியல்வாதிகளோடு ஒட்டிக் கொண்டு, அவர்கள் மூலமாக குறைந்தபட்சம் இலங்கையில் நடந்தது இன அழிப்புத்தான் என்று முத்திரை குத்துவதன் மூலம் புலன் பெயர் தமிழர்களைக் குஷிப்படுத்தி, வெளிநாடுகளில் தனது அரசியல் கனவுகளை நடைமுறைப்படுத்த, ‘தமிழன் தமிழனுக்கு வோட்டுப் போட வேண்டும்’ என்று கதை விட்டுப் பிழைப்பு நடத்துவது இது.

இங்குள்ள எந்த அரசியல் கட்சியும் இங்குள்ள சிறுபான்மையினரை குஷிப்படுத்தி வாக்குகளைப் பெற முயன்றாலும், அவற்றுக்கான தேசிய நலன் கருதிய நிலைப்பாடுகளை மீறுவதில்லை. அரசாங்கங்களுக்கு இடையிலான தொடர்பாடல்கள் அதன் அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றன.

ஆனால், தமிழர்களின் வாக்குகளை வைத்துக் கொண்டு இந்தக் கட்சிகளை பிளாக்மெயில் பண்ணலாம் என்ற பிரமையை ஏற்படுத்தும் அதே வேளை, இங்குள்ள அரசுகளின் தலைமை அதே நாடுகளுக்குப் போகும் போது, கோட், சூட் மாட்டிக் கொண்டு அந்த அரசுகளின் விருந்தாளிகளாகப் போய் இறங்குவதும் இதே கூட்டம் தான்.

இந்தக் கூட்டம் மிதவாத தமிழ்க் கட்சிகளை ஆதரிப்பதன் மூலம் தீர்வு காண முடியும் என்று நம்புவதுடன், தேவை ஏற்பட்டால் சிங்கள அரசுடன் பின்கதவுத் தொடர்புகளை ஏற்படுத்த தயங்குவதுமில்லை.

அடுத்ததாக, இந்த ஊடகவியலாளர் என்று சொல்லப்படும் சமூகப் புற்றுநோய்கள். இந்த சமூகத்தைச் சீரழிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் இந்தக் கூட்டத்தில் தான் அரசியல் ஆய்வாளர்கள் என்ற ஒட்டுண்ணிக் கூட்டம் வேறு இயங்குகிறது. இது தன்னை

ஒரு அரசியல் தலைமை என்றும் அங்குள்ள அரசியல் நிலையையும் பொதுச்சிந்தனையையும் தன்னால் நிர்ணயிக்க முடியும் என்று நம்புகிறது.

இதில் பலர் ஊடகங்களுக்கான விளம்பரங்களுக்கு மேற்குறிப்பிட்ட தலைமைகளை நம்புவதால் அவற்றின் நிலைப்பாடுகள் மிதவாதம் முதல் தீவிரவாதம் வரைக்கும் உண்டு.

அரசியல்வாதிகளைப் பேட்டி காணும் போது காட்டும் அதிகப் பிரசங்கித்தனத்தைப் பார்க்கும்போது, இவர்கள் எல்லாம் தங்களை போராட்டத்தை, துப்பாக்கியையும் தான், கையில் வைத்திருக்கிற ஒரு பிரபாகரன் அளவுக்குத் தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும்.

தமிழ் ஊடகங்கள் தவிர்த்து வேறெதையும் அறிந்திராத இவர்கள் பூகோள அரசியல் பற்றி பாடம் எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

பிரபாகரன் தன்னை அறிந்து கொள்ளாமல், தன்னை ஒரு சூரியதேவனாக நம்பிக் கொண்டதிலும், அதை இந்தச் சமூகம் நம்ப வைத்ததிலும் இவர்களுக்குப் பெரும் பங்குண்டு.

அடுத்ததாக, எந்தக் குழுக்களிலும் இல்லாத, கும்பல் மனப்பான்மை கொண்ட (Mob mentality) உதிரிக் கூட்டம். இது பேஸ்புக்கிலும் இருக்கும். புலன் பெயர்ந்தும் இருக்கும். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்திலும் மோட்டார் சைக்கிள் கூட்டத்திலும் இருக்கும்.

இந்த லூசுக் கூட்டம் பெரும்பாலும் புலிகள் குழந்தைகளை இழுத்துக் கொண்டு போய் பலி கொடுத்த போது, தாய்மாரின் சேலைகளுக்குள் மறைந்திருந்தோ, புலன் பெயர் நாடுகளில் தப்பி இருந்தோ வாழ்ந்தவர்களாக இருக்கும்.

**எந்தக் குழுக்களிலும் இல்லாத, கும்பல் மனப்பான்மை கொண்ட (Mob mentality) உதிரிக் கூட்டம். இது பேஸ்புக்கிலும் இருக்கும். புலன் பெயர்ந்தும் இருக்கும். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்திலும் மோட்டார் சைக்கிள் கூட்டத்திலும் இருக்கும்.**

**இந்த லூசுக் கூட்டம் பெரும்பாலும் புலிகள் குழந்தைகளை இழுத்துக் கொண்டு போய் பலி கொடுத்த போது, தாய்மாரின் சேலைகளுக்குள் மறைந்திருந்தோ, புலன் பெயர் நாடுகளில் தப்பி இருந்தோ வாழ்ந்தவர்களாக இருக்கும்.**

**இது தான் தர்ம அடி போட முனைகிற கும்பலாக இருக்கும். போன் அடித்துத் தூஷணம் பேசுவதை போராட்ட வடிவமாக நினைக்கும் கூட்டம். இது தன்னை ஒரு புலியாகவே நினைத்துக் கொண்டிருக்கிறது.**

**இதுதான் திலீபனைப் புனிதனாக்கும் கும்பல்.**

**விளங்கும் வகையில் சுருக்கமாகச் சொன்னால், இது பிரபாகரனின் கட்டவுட்டுக்கு பால் ஊற்றும் கூட்டம். அவ்வளவு தான்.**

இது தான் தர்ம அடி போட முனைகிற கும்பலாக இருக்கும். போன் அடித்துத் தூஷணம் பேசுவதை போராட்ட வடிவமாக நினைக்கும் கூட்டம். இது தன்னை ஒரு புலியாகவே நினைத்துக் கொண்டிருக்கிறது.

இதுதான் திலீபனைப் புனிதனாக்கும் கும்பல்.

விளங்கும் வகையில் சுருக்கமாகச் சொன்னால், இது பிரபாகரனின் கட்டவுட்டுக்கு பால் ஊற்றும் கூட்டம். அவ்வளவு தான்.

இது இப்போது தமிழ் அரசியலில் இருந்து வேரோடு அகற்றப்பட வேண்டிய ஒரு பார்த்தினீயமாக பரவலாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறான ஒரு சூழலுக்குள் இந்தச் சமூகம் சிக்கிக் கொண்டுள்ள நிலையில், ஒரு அறிவார்ந்த தலைமையை ஒன்றிணைப்பது மற்றச் சமூகங்களுக்குச் சில நேரம் இலகுவானதாக இருக்கக் கூடும். எங்களுடைய சமூகத்திற்கு இது சாத்தியமாகாது என்பதே என்னுடைய கணிப்பாக இருக்கிறது.

அதனால் தான் கடந்த இதழில் இவ்வாறான ஒரு அமைப்பின் தேவை குறித்துக் குறிப்பிட்ட போது, அது குறித்து எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்பதைக் குறிப்பிட்டிருந்தேன்.

இந்தச் சமூகத்தில் கல்விமான்களுக்கு இருந்த மதிப்பு இடதுசாரிகளோடு போய் விட்டது. தமிழ்த்தேசியம் உருக்கொண்டு எழுந்தபோது, அது ஏற்படுத்தக் கூடிய அழிவு குறித்து எதிர்வு கூறிய இடதுசாரிக் கல்விமான்களை, தமிழ்த்தேசியத் தலைவர்கள் இனத்திற்கு எதிரானவர்கள் என்றே வர்ணித்திருந்தனர். அதற்கான காரணம், யாழ்ப்பாணச் சிந்தனையின் சாதியை அடிப்படையாகக் கொண்ட ஆதிமூலத்தையே இடதுசாரிகள் தகர்க்க முயன்றது தான்.

சாதிய சிந்தனையில் ஊறிய யாழ்ப்பாணிச் சமூகத்தில் அந்த வர்ணனை எடுபட்டதில் ஆச்சரியம் இல்லை.

கல்விமான்களுக்கும் பட்டதாரி களுக்குமான இடைவெளி யாழ்ப்பாணத்தில் பெரியது. படித்த யாழ்ப்பாணம் என்று சுயபெருமை கொண்டிருந்த சமூகத்தில், கல்வி என்பது வெறும் பாடப்புத்தகப் படிப்பாகத் தான் இருந்தது. அது பட்டத்தை நோக்கமாகக் கொண்டிருந்ததே அன்றி, அறிவை நோக்கமாகக் கொண்டிருந்ததில்லை. அந்தப்பட்டமும் வேலைவாய்ப்புக்கும் சீதனத்துக்குமான நோக்கமாக இருந்ததே அன்றி, சமூக முன்னேற்றத்திற்கான நோக்கமாக இருந்ததுமில்லை.

றோட்டுப் போடும் என்ஜினியருக்கு, சம்பளத்தை விட, திருடுவதால் வருமானம் அதிகம் என்பதற்காகவே, பெண் கொடுத்து மாப்பிளையாக்கும் யாழ்ப்பாண மனநிலை பற்றி நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்வார்.

எனவே, கல்வி என்பது அறிவுக்கான தேடலாக இல்லாமல், பட்டத்திற்கான படிப்பாக இருக்கும் சூழ்நிலையில், வெறும் பட்டதாரிகளை இவ்வாறான ஒரு தலைமைக்குள் சேர்த்துக் கொள்ளவும் முடியாது.

அடுத்து, இந்தக் கல்வி இவர்களுக்குச் சிந்தனையில் எந்த மாற்றத்தையும் கொடுத்து விடவும் இல்லை. எப்படித் தான் படித்தாலும் சிந்தனை பிற்போக்கானதாகத் தான் இருக்கும் என்பதை, இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பார்க்கும் எவரும் புரிந்து கொள்ளலாம். சிந்தனை வளர்ச்சி இல்லாத துறைசார் பட்டதாரிகளைக் கொண்டு ஒரு இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் அரசியலை முடிவு செய்ய முடியுமா?

அடுத்து, இந்தச் சமூகம் சமூக நீதியின் அடிப்படையிலானதோ, அது குறித்த வேட்கையோ கொண்ட சமூகமும் இல்லை. அதே பிற்போக்குத் தனமான யாழ்ப்பாணச் சிந்தனைக்குள் பிறந்து வளர்ந்தவர்களால், அதைக் கடந்து சிந்திக்க முடியாதபடிக்கு, சிந்தனை யாழ்ப்பாணக் கிணற்றுக்குள் தான் இன்றைக்கும் இருக்கிறது. அது இத்தனை தூரம் வந்தும், சமூக நீதியை சட்டரீதியாக உறுதி செய்யும் இத்தனை நாடுகளைக் கண்ட பின்னாலும் இன்றைக்கும் அதே கிணற்றுச் சிந்தனைக்குள் இருக்கும்போது, இவர்கள் குறித்து என்ன நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியும்?

அடுத்து, இன்றைய பிற்போக்குத்தனமான புலிசார் தமிழ்த்தேசியச் சிந்தனையைக் கடந்தோ, அதை எதிர்க்கின்ற மாற்றுக் கருத்துச் சிந்தனையைச் சாராமலோ, சுயாதீனமாக சமூக நீதியையும், முன்னேற்றத்தையும் சிந்திக்கின்ற ஒருவரையேனும் காண முடியாதபடிக்கு, இன்றைக்கு பொதுவெளியில் காணும் படித்தவர்கள் கறை படிந்தவர்களாக இருக்கிறார்கள்.

**இந்தச் சமூகம் சமூக நீதியின் அடிப்படையிலானதோ, அது குறித்த வேட்கையோ கொண்ட சமூகமும் இல்லை. அதே பிற்போக்குத் தனமான யாழ்ப்பாணச் சிந்தனைக்குள் பிறந்து வளர்ந்தவர்களால், அதைக் கடந்து சிந்திக்க முடியாதபடிக்கு, சிந்தனை யாழ்ப்பாணக் கிணற்றுக்குள் தான் இன்றைக்கும் இருக்கிறது.**

**அது இத்தனை தூரம் வந்தும், சமூக நீதியை சட்டரீதியாக உறுதி செய்யும் இத்தனை நாடுகளைக் கண்ட பின்னாலும் இன்றைக்கும் அதே கிணற்றுச் சிந்தனைக்குள் இருக்கும்போது, இவர்கள் குறித்து என்ன நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியும்?**

பலர் புலிகளோடு தங்களை அடையாளம் காட்டுவதில் பெருமை கொண்டவர்கள். பலர் இன்றைக்கும் தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்கும் முனைப்போடு அமைப்பு ரீதியாக அடையாளம் காட்டுகிறவர்கள்.

பல அறிஞர்கள் இந்த அரசியலில் தன்மை பற்றி தெரிந்து கொண்டு பிச்சை வேண்டாம், நாயைப் பிடி நிலைமையில் வெளிநாடுகளில் தமிழ் அரசியல் குறித்து எந்த சம்பந்தமும் வேண்டாம் என்று ஒதுங்கி நிற்பவர்கள். இவர்களில் பலர் திட்டமிட்டே வெளிநாட்டுப் புலிக் காடையர்களால் ஒதுக்கப்பட்டவர்கள்.

ஏதோ கொள்கைகளோடு இணைத்துக் கொண்டபடியால், இவர்கள் பற்றிய நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்படும். அதிலும் மாவீரன், துரோகி என்று கறுப்பு வெள்ளையாகவே சிந்திக்கிற யாழ்ப்பாணச் சிந்தனைக்குள், இவ்வாறு ஒன்று சேரக்கூடிய எவரையும் முத்திரை குத்தி விட்டு, அப்பால் போகின்ற ஒரு சமூகமாகத்தான் இந்தச் சமூகமும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில் காசா பிரச்சனையில் பி.பி.சிக்கு பேட்டியளித்த பாலஸ்தீன தூதுவரைப் பார்க்கும்போது, எங்கள் சமூகத்தில் ஏன் இப்படி எங்கள் பிரச்சனையை சர்வதேச அளவில் நியாயப்படுத்தக் கூடிய ஒருவரைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது எனக்குப் பெரிய ஆதங்கமாக இருந்தது.

சர்வதேச அரங்கப் பொதுவெளியில் கருத்துச்சொல்கிற எங்கள் யாழ்ப்பாணிக் கருத்துக் கந்தசாமிகளைப் பார்க்கும் போது, ‘உடுப்பு உரியிற’ வெட்கம் தான் வரும்.

எங்களுடைய தகுதிக்கு தமிழ்ச்செல்வன் தான் வெளிநாட்டமைச்சர் என்ற நிலைமை இருந்தால், ஹி..ஹி.. என்று பல்லிளிக்கத் தான் முடியும்.

இப்படி பெரும் சிந்தனை வரட்சி உள்ள சூழ்நிலையில், இப்போது யாழ்.பல்கலைக்கழகம் கூட இதே சிந்தனைகளைக் கொண்ட ஒரு தலைமையாகத் தான் உருவெடுத்து வருகிறது. அதில் மௌனப் பெரும்பான்மையாக, அமைதிப் போக்கைக் கடைப்பிடிக்கும் ஒரு தொகுதி இருந்தாலும், சத்தம் போடும் சிறுபான்மை ஒன்றே அதற்கான முகம் ஒன்றை வெளியில் காட்டிக் கொண்டிருக்கிறது. இந்தச் சிறுபான்மை ‘சீன் காட்டும் அரசியலில்’ சிறுபிள்ளை வேளாண்மை செய்து கொண்டிருக்கிறது.

மாவீரர் தின விளக்கேற்றம், முள்ளிவாய்க்கால் நினைவுமையம் என்றெல்லாம் இன்றைக்கு சீன் காட்டுகிற இவர்கள் எல்லாம் யுத்த முடிவுக் காலத்தில் சிறார்களாக இருந்திருக்கக் கூடியவர்களே. இவர்கள் யாழ்ப்பாணிக் கிணற்றுச் சிந்தனையைத் தவிர அதற்கு அப்பாலான உலகங்களைப் பார்க்கும் திறன் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால், இவர்களுக்கும் தமிழ்

அரசியலைத் தீர்மானிக்கும் சக்தி தங்களுக்கு உள்ளதான நினைப்பு இருக்கிறது. இவர்களைத் தாஜா பண்ணுவதற்காக பின்புறமாக வளைவதற்குத் தமிழ் அரசியல் வாதிகளும் தயாராக இருக்கிறார்கள்.

எந்த விதமான அர்ப்பணிப்பும் தியாகமும் இல்லாமல், தங்களை அரசியல் தலைமையாக நினைத்து குழப்பங்களை ஏற்படுத்தும் இவர்களை எதிர்கொள்ளும் துணிவு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்குக் கூட இல்லை.

இவர்களும் புலன் பெயர்ந்த நாடுகளில் புலிகளின் உண்டியல் குலுக்கும் திருட்டுக் கூட்டம் போன்றவர்களே. இவர்களுக்குத் தீர்வு பற்றி எந்தத் தெளிவும் இல்லை. அதை அடைவதற்கான அர்ப்பணிப்புக்கும் தயாராக இல்லை.

இந்தப் போராட்டம் எல்லாம் இவர்களுக்கு பகிடிவதை போன்ற, கிக் ஏற்றுகின்ற விளையாட்டு மட்டுமே.

இவர்களுடைய 'போராட்ட குணாம்சமும்' பட்டம் கிடைக்கும் வரைக்கும் தான். இவர்களில் எவரும் எந்தப் போராட்டத்திலும் முன்னின்று தனியே களம் இறங்கக் கூடியவர்கள் இல்லை. வெறும் கும்பல் மனப்பான்மை மட்டுமே இதற்கு உண்டு.

இவர்களிடமிருந்து ஒரு அறிவார்ந்த, பொறுப்பு மிக்க சமூகத் தலைமையை எப்படி எதிர்பார்க்க முடியும்?

இவர்களை எல்லாம் வைத்துக் கொண்டு, யாழ்ப்பாணிகளுக்குள் ஒரு சிந்திக்கத் தெரிந்த, அறிவார்ந்த ஒரு தலைமையை எப்படி உருவாக்க முடியும்?

எப்படி மக்களின் ஆணையைப் பெறாத, துப்பாக்கி தூக்கியவன் எல்லாம் தலைவன் என்ற நிலை வந்ததோ, அதைப் போல தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்றது போல, உதிரிகள் சமூகத்தை மிரட்டவும், அதன் வழியை தங்களால் தீர்மானிக்க முடியும் என்று நம்புவதுமான நிலைக்கு இன்றைக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருக்கிறது.

**எப்படி மக்களின் ஆணையைப் பெறாத, துப்பாக்கி தூக்கியவன் எல்லாம் தலைவன் என்ற நிலை வந்ததோ, அதைப் போல தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்றது போல, உதிரிகள் சமூகத்தை மிரட்டவும், அதன் வழியை தங்களால் தீர்மானிக்க முடியும் என்று நம்புவதுமான நிலைக்கு இன்றைக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருக்கிறது.**

**எந்தவொரு சிந்திக்கத் தெரிந்த தலைமையை உருவாக்க முயன்றாலும், மேலே குறிப்பிட்ட சகல தலைமைகளும் அவ்வாறான ஒன்று தங்களுக்கு மேலானதாக உருவாகுவதை விரும்பப்போவதில்லை.**

எந்தவொரு சிந்திக்கத் தெரிந்த தலைமையை உருவாக்க முயன்றாலும், மேலே குறிப்பிட்ட சகல தலைமைகளும் அவ்வாறான ஒன்று தங்களுக்கு மேலானதாக உருவாகுவதை விரும்பப்போவதில்லை.

உணர்வுபூர்வமான அரசியல் சிந்தனையுடனேயே இன்றைக்கும் மக்களை மேய்க்க நினைக்கும் சக்திகள், நடைமுறைச் சாத்தியமான எந்தத் தீர்வையும், 'மாவீரர்களின் தியாகம் இதற்கா?' என்றபடி குழப்பியடித்தே தீரும்.

விட்டால் குடுமி, சிரைத்தால் மொட்டை என்று அடைந்தால் மகாதேவி என்று தொடங்கி முள்ளிவாய்க்காலில் மரணதேவியைத் தழுவிக் கொண்டாலும், அந்த உணர்வை வைத்தே பிழைப்பை நடத்தலாம் என்று இந்தச் சக்திகள் நம்புகின்றன.

யாழ்ப்பாணம் எப்போதுமே ஒரு சட்டமறுப்புப் பூமியாகத் தான் இருந்து வந்திருக்கிறது.

தெருச் சண்டியர்கள், கூட்டணியின் துரோகி அரசியல், துப்பாக்கி இயக்கங்கள் என்று தொடர்ந்த சகலமும் சட்டத்தைத் தங்கள் கையில் எடுக்கலாம் என்ற நினைப்பில் தான் நடந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு வாள் வெட்டுக்குழு, பல்கலைக்கழக நினைவேந்தல், பொங்குதமிழ்க் குழுக்கள், மோட்டார் சைக்கிள் மாவீர் தின மிரட்டல் குழுக்கள் எல்லாம் தங்கள் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் ஒரு புனிதப் போராட்ட ரேஞ்சில் தான் நினைத்துக் கொண்டிருக்கின்றன.

இப்படி சட்டத்தைக் கையில் எடுக்கும் 'வ.பீ.கோ 304', அது தான் வன்னி பீனல் கோட் இவர்கள் எல்லாருக்கும் அந்த அதிகாரத்தை வழங்குகிறது.

இப்படி உதிரி உணர்வுக் கூட்டம் தலையெடுப்பது பாசிச அரசுகளிலும், அரசு இல்லாத anarchy/lawless நிலைகளிலும் தான். இந்தியாவில் பசுவைக் கொண்டு போனவனைக் கொல்வதும், தலித் பெண்களை கூட்டு வல்லுறவு செய்வதும் இதே சட்டத்தைக் கையில் எடுக்கும் சிந்தனை அடிப்படையில் தான். சோமாலியா இன்றைக்கும் மீள முடியாமல் இருப்பது இந்த நிலையால் தான்.

அதே சிந்தனையில்தான் தமிழ்த்தேசிய உணர்வை கட்டாய அமுலாக்கம் செய்யும் சிந்தனையில் இந்த தான்தோன்றி காடையர் குழுக்கள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன.

சட்டம் ஒழுங்குக்கு கட்டுப்படாத ஒரு சமூகத்தை துப்பாக்கியால், 'மண்டையில் போடப்படும்' என்ற பயத்தை விதைத்து, அந்தப் பயத்தை தேசிய உணர்வாக்கி நடந்த கூத்து ஒரு தனிமனிதனை ஒரு சமூகம் முழுமையாக நம்பி தன்னை அழித்துக் கொள்வதில் வந்து முடிந்திருக்கிறது.

இந்தச் சமூகத்தில் அழிவதற்கு இனி என்ன இருக்கிறது? என்ற அளவில்,

எந்த நம்பிக்கையும் இந்தச் சமூகம் குறித்து எனக்கு இருந்ததில்லை.

இந்தச் சமூகத்திற்கான ஒரு அறநெறி ஒன்றை முன்னெடுத்து, அது தன் எதிர்காலத்தை நிர்ணயிக்க சிந்தனை மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஒரு அறிவார்ந்த தலைமையால் மட்டும் முடியும்.

ஆனால், யாழ்ப்பாணிகளை தெரிந்து வைத்திருக்கிற எனக்கு அதற்கான நடைமுறைப் பிரச்சனைகளை முன்கூட்டியே சொல்லவும் முடியும்.

இன்றைக்கு இந்தச் சமூகத்தில் தலைமையை முன்னெடுக்க முயலும் ஒவ்வொரு கூட்டமும் அந்தந்தக் கூட்ட நலன்களில் மட்டும், இந்தச் சமூகத்தை வைத்து தன்னை எப்படி வளர்த்துக் கொள்ளலாம் என்பதில் மட்டும் அக்கறையாக இருக்கிறது.

அரசியல் கட்சிகளாக இருந்தால் என்ன? வெளிநாட்டு அமைப்புகளாக இருந்தால் என்ன? உதிரிக்குழுக்களாக இருந்தால் என்ன? புதிதாகத் தோன்றியிருக்க இந்துத்துத்துவ, சைவ எழுச்சிக் கூட்டமாக இருந்தால் என்ன?

இவை எல்லாமே இந்த மக்களை ஒன்றிணைப்பதை விட்டு, அவர்களைப் பிரிப்பதன் மூலம் தங்கள் நலன்களையும், பொதுச்சொத்துக் கொள்ளையையும் தொடர முடியும் என்று நம்புகின்றன.

சட்டத்தை மீறிய வன்முறை மூலமாக தமிழ்த்தேசிய உணர்வை திணிக்கலாம் என்று நம்புகின்றன.

புதிதாகத் தோன்றிய இந்துத்துவ, சைவ எழுச்சிக் கும்பல் எப்படி மற்ற மதங்கள் மீது வெறுப்பை வளர்க்கின்றன என்பது எல்லாருக்கும் தெரியும்.

இவை மக்களை ஒன்றிணைக்கின்ற எதையும், தங்களுடைய கட்டுப்பாட்டை மீறிப் போகிற எதையும் மேலெழ அனுமதிக்கப் போவதில்லை.

**இன்றைக்கு இந்தச் சமூகத்தில் தலைமையை முன்னெடுக்க முயலும் ஒவ்வொரு கூட்டமும் அந்தந்தக் கூட்ட நலன்களில் மட்டும், இந்தச் சமூகத்தை வைத்து தன்னை எப்படி வளர்த்துக் கொள்ளலாம் என்பதில் மட்டும் அக்கறையாக இருக்கிறது.**

**அரசியல் கட்சிகளாக இருந்தால் என்ன? வெளிநாட்டு அமைப்புகளாக இருந்தால் என்ன? உதிரிக்குழுக்களாக இருந்தால் என்ன? புதிதாகத் தோன்றியிருக்க இந்துத்துத்துவ, சைவ எழுச்சிக் கூட்டமாக இருந்தால் என்ன?**

**இவை எல்லாமே இந்த மக்களை ஒன்றிணைப்பதை விட்டு, அவர்களைப் பிரிப்பதன் மூலம் தங்கள் நலன்களையும், பொதுச்சொத்துக் கொள்ளையையும் தொடர முடியும் என்று நம்புகின்றன.**

**சட்டத்தை மீறிய வன்முறை மூலமாக தமிழ்த்தேசிய உணர்வை திணிக்கலாம் என்று நம்புகின்றன**

அவ்வாறான ஒரு அறிவார்ந்த தலைமை உருவாகும்போது, பொதுவெளியில் யாழ்ப்பாணப் பாணியில் வெளிநாட்டுக் கைக்கூலிகள் என்பது முதல் பெண் பிரச்சனை வரைக்கும் அவதூறுகளைச் செய்து அவ்வாறானதொரு தலைமை தங்களை மீறி மேல் எழுவதை தடுத்துக் கொண்டே அவை இருக்கும்.

அந்தத் தலைமைக்குள் ஊடுருவி, தங்கள் சார்பான சிந்தனையை அதற்குள் புகுத்துவதற்கான சகல வேலைகளையும் இந்த மேற்படி குழுக்கள் செய்து கொண்டே இருக்கும்.

இந்தச் சமூகம் வளர்த்துக் கொள்ளும் பிராங்கென்ஸ்டைன் பூதம் எப்படி இந்தச் சமூகத்தை அழிக்கும் என்பதை முப்பது வருடங்களுக்கு முன்னால் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருந்தேன். அதைப் போல, இந்தச் சமூகம் பற்றி எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை.

ஆனால், நான் பிறந்து வளர்ந்த சமூகம். என் கண் முன்னாலேயே நாசமாகப் போய் விட்டது. எஞ்சியிருப்பதும் நம்பிக்கை தராவிட்டாலும், இது ஏதோ வழியில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கம் எனக்கு எப்போதும் இருந்து வருகிறது.

பைபிளில் சோதோம், கொமோரா என்ற இரண்டு நகரங்களில் பாவங்கள் மிகுந்ததால், கடவுள் அவற்றை அழிக்க சித்தம் கொண்டு, ஆபிரகாமை எச்சரிக்கிறார். ஆபிரகாமோ, ‘ஆண்டவரே, ஐம்பது நீதிமான்கள் இருந்தால் அதை அழிக்காமல் விடுவீரோ?’ என்று கேட்க, கடவுள் சம்மதிக்கிறார். ஆபிரகாமினால் ஐம்பது நீதிமான்களைத் தேட முடியவில்லை. திரும்பவும் போய் கடவுளிடம் கேட்கிறார். பத்துப் பேராவது இருந்தால் அழிக்காமல் விடுவீரோ? என்று கேட்கிறார். கடவுள் அதற்கும் சம்மதிக்கிறார்.
பத்துப் பேரைக் கூட ஆபிரகாமினால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இப்படி இன்றைய யாழ்ப்பாணத்திற்கான தலைமை என்று தங்களை நினைத்துக் கொள்கின்றவற்றைக் கணக்குப் பார்த்தால் கூட, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், ஐம்பது கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் ஊடகங்களுக்கும் மேல் இருக்கும்.

தீர்க்கதரிசனம் இல்லாத, எரிகிற நகரத்தில்பிடுங்கக்கூடியதைப்பிடுங்க முயலும் இந்தத் தலைமைகளினால் இந்தச் சமூகம் நாசமாகி அழிந்து போவதற்கு முன்னால், ஒரு பத்து நீதிமான்களையாவது தேடிப் பிடித்து ஒரு அறிவார்ந்த சமூகத் தலைமையை உருவாக்குங்கள் என்று நிறைவேற முடியாத ஆசை ஒன்றைத் தவிர, வேறெதைத் தான் சொல்லி விட முடியும்?

**ஜோர்ஜ் இ.**



# தாயக் கட்டைகள்

## பூங்கோதை

பச்சைப் பசேலென்ற மரங்கள் விசாலமான வீதியின் இரு பக்கங்களிலும் நீண்டு உயர்ந்து வளர்ந்து, வளைந்து ஒன்றையொன்று முத்தமிட்டுக் கொண்டிருந்த புற நகர்ப் பகுதி அது. வீடுகள் ஒவ்வொன்றும் தனித்தனியே ராணி விக்டோரியாவின் காலத்து வடிவமைப்பில், பிரித்தானிய கலாச்சாரத்தை பறை சாற்றிய படி நிமிர்ந்து நின்றன. வசந்த காலத்து தென்றலில் ஆடிய மரங்களின் இலைகளின் சலசலப்பையும் எப்போதாவது ஊர்ந்து செல்லும் வாகனங்களையும் தவிர அந்த வீதியில் வேறு எந்தச் சத்தமும் இல்லாதிருந்தது.

அந்த வீதியின் இறுதிப் பகுதியில், மாதங்கி தன் வீட்டு முற்றத்தில் நின்று, தோட்டத்தின் பசுமையை இரசித்தவாறே நின்றிருந்தாள். அவளுக்கு இடப்புறத்து வீட்டிற்கு

கடந்த வாரம் யாரோ புதிதாய்க் குடி வந்திருந்தார்கள். ஒரு வயதான முதிய தம்பதிகளோடு, அவர்களது மகளும், பேத்தி போலிருந்த அழகிய குட்டிப் பெண் ஒருத்தியும் அந்த வீட்டின் உள்ளே போவதும் வருவதுமாய் இருந்ததை அவள் அவதானித்தாள். இதற்கு முன்பு அங்கு வாழ்ந்தவர்கள் வயதானபின் தமது பிள்ளைகளின் வீட்டோடு போய் இருந்து விட்டார்கள். ஆங்கிலேயர்கள் மட்டுமே வாழ்ந்து வந்த அந்தப் பகுதிக்கு இப்போது தான் இன்னொரு தமிழ்க் குடும்பம் வந்திருந்தது அவளுக்கு மகிழ்வாய் இருந்தது.

மாதங்கிக்கு அவர்கள் பேசுவதும் தெளிவாகக் கேட்டது.

'அம்மா இவளை ஒருக்கால் பார்த்துக் கொள்ளுங்கோ, நான் கார் வரைக்கும் ஒரு தரம் போய் வர வேணும்.' மகள் தாயிடம் ஏழு அல்லது எட்டு வயதிலிருந்த பேத்தியைப் பாரம் கொடுத்து விட்டு, தன் காரிலிருந்து பாரமான ஒரு சில பொருட்களை இறக்கி வந்து கொண்டிருந்தாள்.

முதியவர் மரத்தின் கீழே ஒரு கதிரையைப் போட்டு இருந்து விட்டார்.

'இவ்வளவு பாரங்களையும் நீ ஒருத்தி தனியத் தூக்க வேண்டியிருக்கே...' அந்த வயதான அம்மா சலித்துக் கொண்டாள். அப்போது தான் மாதங்கிக்கு முதற் தடவையாக அந்த வீட்டில் வேறு ஒரு ஆணையும் காணாதது கவனத்தில் வந்தது.

அதே வேளை, மாதங்கி அந்த வீட்டில் உள்ளவர்களுக்குக் கையை அசைத்து அவர்கள் கவனத்தை ஈர்க்க முற்பட்ட போதெல்லாம் அவர்கள் அவளைப் பார்க்காதது அவளுக்குப் பெரும் கவலையாகப் போயிருந்தது. அவள் இந்த வாரம் வேலையிலிருந்து விடுப்பு எடுத்திருந்தாள். இனி வேலை ஆரம்பித்து விட்டால் அவளுக்கு அவர்களோடு பேசுவதற்கு நேரம் கிடைக்குமோ தெரியவில்லை. பரவாயில்லை, அவர்கள் வீட்டைத் தட்டி அறிமுகம் செய்து கொள்ளலாம் என நினைத்துக் கொண்டாள்.

பாமினிக்கு நினைவுகள் இருபத்தைந்து வருடங்கள் பின்னோக்கி, கைத்தொலைபேசியில் படங்கள், வீடியோ அழைப்புகள் இல்லாத யுகத்தை நோக்கி நகர்ந்தன.

அவள் பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டில் கால் வைத்த போது தான் அப்பாவை பக்கவாதம் தாக்கியது. அம்மா ஏற்கனவே சுவாச நோயால் தாக்குண்டு, சமையல், தோட்ட வேலைகள் என, ஏதோ தன்னால் முடிந்ததை வீட்டில் இருந்தபடியே செய்து தருவார். தான் ஒரே பிள்ளை என்ற குறை பாமினிக்கு இருந்தாலும், தான் கவனமாகப் படித்து முடித்ததும், வறுமையிலும் தன் கல்வி மீதான விருப்பை நிறைவேற்றிய தன் பெற்றோரை அவர்களது வயோதிப காலத்தில் நன்றாகப் பராமரிக்க வேண்டும் என்ற நிலை கொள்ளா ஆசை அவளுக்கு இருந்தது.

அந்த ஒரு ஆண்டில் ஊரெங்கும் அரசியல், பொருளாதார நெருக்கடியில் மக்கள் சிக்கித் தவிக்க, பாமினியின் தலை எழுத்தும் தடாலடியாக மாறியது. அவளது கையை விட்டு அவள் வாழ்வின் கட்டுப்பாடு எல்லை மீறியது.

'பிள்ளை, என்ர தம்பி, உன்ர மாமா ஒரு வெளிநாட்டு வரன் கொண்டு வந்திருக்கிறான். அப்பாவின்ர நிலையும் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டெல்லே போகுது. அவருக்கும் உன்ர வாழ்க்கை நல்லதாய் அமைஞ்சிட்டால் நிம்மதியாய் இருப்பார்.' அம்மா ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

அம்மாவின் தூரத்து உறவான, ஒரு மாமாவின், தரகர் வேலை பார்க்கும் நட்பு ஒன்றின் வாயிலாக வந்த வெளிநாட்டு மாப்பிள்ளை. அவளை ஒரு திருமண வீடியோவில் பார்த்ததில் இருந்து அவருக்கு அவள் மீது நாட்டம் வந்து விட்டதாம் என அம்மாவும் அப்பாவும் பூரித்துப் போயினர்.

'அம்மா, நான் உங்களை எல்லாம் விட்டிட்டு அவ்வளவு தூரம் போக வேணுமே? எனக்கு இங்கயே ஒரு சின்ன வேலை எண்டாலும் கிடைக்காதே?' பாமினி தன் எண்ணத்தை மெதுவாகச் சொன்னாள்.

'பிள்ளை, நாடு கிடக்கிற கிடையில நாங்கள் இந்த வீட்டை விட்டு போக வேண்டிய நிலை வரப் போகுது. இதுக்கை நீ இனி வேலை தேடி, பாதுகாப்பாய் போய் வந்து, வாழ்க்கை நடத்திறது கனவிலும் நடவாது. தயவு செய்து என்ர சொல்லைக் கேள் பிள்ளை.' அம்மாவின் கண்ணீர் கண்களில் முட்டிக் கிடந்தது. மூச்சு வேறு பெரும் இரைச்சலோடு வெளியேற அவதிப் பட்டது.

'ஏதோ இனி உங்கட விருப்பம்.' அவள் தன் கனவுகளை உடைத்து வீசினாள்.

அதன் பின் காரியங்கள் மள மளவென்று நடந்தன.

'பிள்ளை, உனக்கு ஒரு குறையும் வராது. மாப்பிள்ளை இலண்டனில ஏதோ நல்ல வேலையாம். அங்க அவருக்கும் ஒரு சொந்தங்களும் இல்லையாம். நீ போனால் அவருக்கு எல்லா சொந்தங்களும் வந்த மாதிரி இருக்கும் எண்டு மாமாவுக்குச் சொன்னவராம்.' அப்பா மெதுவாக அனுங்கினார்.

அவள் அதற்கு மேல் எதுவும் சிந்திக்கத் தோன்றாமல் நடப்பதை அதன் போக்குக்கு விட்டு விட்டாள். நல்ல காலம் அவளது இறுதித் தேர்வுகள் அனைத்தையும் முடித்து விட்டாள்.

'அம்மா, மாமாவிட்ட சொல்லி, என்ர சேட்டிஃபிக்கேட்டை மாத்திரம் எனக்கு அனுப்பி விடுங்கோ.' பாமினி அதை மாத்திரம் தான் கோரிக்கை ஆக்கினாள்.

அதன் பின் மாப்பிள்ளை சுதனின் படம் வந்தது. நிறைய சுருள் முடியோடு, நாகரீக உடையில் நன்றாகவே இருந்தான். அவளுக்கு பிடிக்கா விட்டால் தான் என்ன? எல்லோருக்கும் பிடித்திருந்ததால் அவளுக்கும் பிடிக்க வேண்டும்.

'எப்பிடி இருக்கிறீங்கள்? என்னைப் பிடிச்சிருக்கோ? நான் உங்களை நல்ல வசதியாய் வைச்சிருப்பன்.' இப்படியாக சுதன் வாரத்தில்

குறைந்தது ஐந்து நாட்கள் தொலைபேசியில் உருகினான்.

அவன் ஒரு நல்ல மனம் கொண்டவனாய் இருக்கலாம், இருந்தும் அவள் மனதில் இருப்பதை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டாது, தன் விருப்பத்தை மட்டும் மனதில் கொண்டு செயற்படுவது அவளுக்கு ஆழ் மனதில் அவன் குறித்து ஒரு கீறல் விழுந்திருந்தது. வீட்டு நிலவரம், அப்பாவின் நோய் என்பன குறித்து அவளுக்கும் சிறிது கலவரம் ஏற்பட்டதில், இலண்டனுக்கு போகும் ஏற்பாடு குறித்து அவள் அமைதியாக இருந்தாள்.

'நீ ஒண்டுக்கும் பயப்பிட வேண்டாம் பிள்ளை, ஏதோ உனக்கு ஒரு நல்ல காலம் பிறந்திருக்கு.' மாமா அடிக்கடி அவளைத் தைரியப்படுத்தியிருந்தார். அவளுக்கென்னவோ இன்னும் தான் முழுதாக இந்த திருமண ஏற்பாட்டில் மனது ஒன்றிக்கவில்லை.

விமான நிலையத்திற்கு சுதன் வருவான் என அவளுக்கு கூறியிருந்தான். அவள் பாதி கனவும் மீதி நினைவுமாக விமானத்தில் சரிந்து உட்கார்ந்திருந்தாள். அப்பா, அம்மாவின் நினைவுகளும் அவளை அலைக்கழித்தன. எதற்காக இவ்வளவு துயரங்களைச் சுமந்தபடி அவள் தொலைதூரம் செல்ல வேண்டும்? ஒரு திருமணப் பெண்ணிற்குரிய எந்த அழகும், மகிழ்ச்சியும் அவளில் தோன்றாவிட்டாலும், மனதளவில் அவள் தன்னை ஒரு புதிய சூழலுக்கும், கலாச்சார மாற்றங்களுக்கும் தயார் படுத்தலானாள்.

பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போதே அவள் பாடசாலை மாணவர்களுக்கு பாடங்கள் கற்பித்தும், வீட்டுத் தோட்டம், தையல் என பல சிறு தொழில்களைச் செய்தும் வருமானம் ஈட்டியவள். அவளிடம் சுய மரியாதை, தன்னம்பிக்கை என்பன நிறையவே இருந்தன. தன் வீட்டுக்கும் பெற்றோருக்கும் தேவையானதை வாங்கிப் போடக் கூடிய நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொண்டவள்.

இலண்டன் விமான நிலையத்தில் சுதனை முதன் முதலில் காணும் ஆர்வம் தானாகவே அவளுக்குத் தோன்றியது. படத்தில் பார்த்த அதே உருவம் அவள் மனதில் பதிந்திருந்தது. ஒருவாறு விமான நிலைய கெடுபிடிகளைக் கடந்து வெளியே வந்தவள் அவனைத் தேடினாள்.

தன்னோடு வேலை செய்யும் நட்பொன்றுடன் வருவேன் என்றவனைக் காணவில்லை. விமான நிலையத்தில் வருகை தருபவர்களை அழைத்துச் செல்ல வந்திருக்கும் மக்கள் கூட்டத்தை அவள் கண்கள் துளாவிய போது தான் சுமார் ஒரு ஐம்பது வயதிற்கு மேல் மதிக்கத்தக்க, அவள் தந்தை போல் இருந்த ஒருவர் அவளை நோக்' பாமினி?' அவர் விசாரித்தார்.

'ஓம், நான் தான்.' அவள் புன்னகைக்க முயன்றாள்.

'பயணம் எல்லாம் எப்படி? களைச்சுப் போணியலோ?' அவர் தொடர்ந்து கேள்விகளையும் பதில்களையும் தந்தபடி அவளையும் அவள் பயணப் பொதியையும் வாங்கிக் கொண்டார்.

அவளுக்கு சுதன் எங்கே என்று கேட்கும் ஆவல் நாக்கு வரை வந்தாலும், அது என்னவோ அப்படியே அடங்கிப் போய்விட்டது.

காரில் ஏறும் போது அவள் மெதுவாகக் கேட்டாள், 'சுதன் வரேல்லையோ?' அவளின் ஏமாற்றம் அதில் தொனித்தது.

'பயப்பிட வேண்டாம், வீட்டை போய்க் கதைப்பம்.' என்றவரிடம் மேலும் எதுவும் கேட்கத் தோன்றாமல் அவள் அமைதியாகினாள்.

ஒரு மணித்தியால பயணத்தில் பாமினிக்கு களைப்பும், ஏமாற்றமும் சேர்ந்து தூக்கத்தில் ஆழ்த்தியதில், வீடு வந்ததும் தான் விழித்துப் பார்த்தாள்.

'பாமினி, பாமினி, எழும்புங்கோ. வீடு வந்திட்டுது.'

அவள் சற்றே பதட்டத்துடன் எழுந்து, காரை விட்டிறங்கிய போது தான் அவள் சந்தேகம் உறுதியானது.

ஒதுக்குப் புறமாய் ஒரு சிறு சந்தில் இருந்த அந்த வீட்டின் முன் புறத்தில் இரண்டு குத்துவிளக்குகள், நிறைகுடம், சந்தனம், குங்குமம் எல்லாம் வைக்கப்பட்டிருக்க, ஒரு வயதான பெண்மணி முகமெல்லாம் சிரிப்போடு அவளை வரவேற்றார் .

'வாங்கோ, வாங்கோ, பொம்பிளை மாப்பிளை இரண்டு பேரும் இந்தப் பக்கம் வந்து நில்லுங்கோ. ஆரத்தி காட்ட வேணும்.' அப்பெண்மணி சொல்ல அவளைக் கூட்டி வந்த முதியவர் அவளோடு நெருங்கி நின்றார்.

இன்று பாமினியின் உழைப்பில் புறநகர்ப் பகுதியில் அழகான வீடு வாங்க முடிந்திருக்கிறது. அப்பா இறந்த போது, அவளுக்கு ஊருக்குப் போகும் வசதி கிடைக்கவில்லை. ஆனால் அதன் பின் வந்த காலத்தில், தன் அம்மாவை இங்கு அழைக்க முடிந்திருக்கிறது. ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடிந்திருக்கிறது. வைத்திய, மருத்துவ தொழில் நுட்பத்தின் உச்சமாக, தன் விருப்பத்திற்கேற்ப ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கிறது. தாயகத்தில் தாய், தந்தையை இழந்த சில குழந்தைகளுக்கான கல்விச் செலவை ஏற்க முடிந்திருக்கிறது. இத்தனை ஆண்டுகளில் அவளின் கடின உழைப்பும், மனத்தைரியமும் அவள் மண வாழ்வின் ஏமாற்றத்தைக் கடந்து செல்ல உதவியிருக்கின்றது.

சுதனுக்கு நோயும், வயதும் ஏறியதில் படுக்கையில் பாதியும் வைத்தியசாலையில் பாதியுமாய் வாழ்க்கை நகர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

மாதங்கி பாமினி வீட்டை நோக்கிப் போன போது அந்த எட்டு வயதான சுட்டிப் பெண் அந்த முதியவரின் கழுத்தைக் கட்டிப் பிடித்தபடி செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

'அப்பா, நாளைக்கு என்ர பள்ளிக்கூடத்துக்கு வருவீங்களோ?,'

'சரி, பார்ப்பம், அப்பா நாளைக்கு வாறன்.' முதியவர் பதிலுக்கு செல்லமாகக் கூறிக் கொண்டிருந்தார்.

அ

# Cyberbullying




Akaraa

Cyberbullying is an issue that affects 38% of people who use any sort of social media platform on a daily basis. This may occur via social media platforms, SMS messaging, and various other internet services. Cyberbullying has become more frequent in recent years. This is due to unrealistic expectations, enjoyment, beauty standards, and a variety of other factors. According to research, girls are more likely than boys to be cyberbullied. This is when it comes to poor mental health, insecure women, and even the loss of life.

More than 12% of girls aged 15 and above are cyberbullied online, compared to only 8% of guys. The figures for females are substantially greater as a result of the pressures that they face. Boys, like girls, are subjected to cyberbullying. However, because of the expectations that society has placed on women, they are far more prone to suffer. It might be sequential or discontinuous. Regardless of whether it is continuous or discontinuous, cyberbullying has risen with time due to the number of individuals who now utilize social media.

Misuse of social media has had a significant influence on the society we live in today. Everything is now commonplace, including beauty standards, expectations, nasty comments, insults, and racial remarks. Why is our society allowing this nightmare to come true? There is still no explanation for why such behavior has become acceptable. Few individuals strive to alter this, but there are more kids who make similar comments without realizing the hard reality behind them. People who make cyberbullying comments have yet to think twice about what they write or say online. This can cause a slew of unneeded conflicts.

Many people online nowadays have come to the conclusion that inappropriate comments are acceptable anywhere, especially online. such as comments on posts that relate to beauty standards. Beauty standards have a significant role in cyberbullying. The majority of remarks made by this generation are about physical appearance and why someone does not seem like a conventional female with a curvy figure and long locks. This is especially hard for women since society has created this ideal body for women to strive for. This is especially hard for women since society has created this ideal body for women to strive for.

Nobody ever talks about how many remarks women make about other women's appearances. All of this is considered cyberbullying. Many women have caused each other pain by injuring or insulting each other. A large number of people have been harmed as a result of remarks expressed on social media. Cyberbullying is currently the leading cause of sadness and anxiety all around the world. As a result, future generations will lack positive role models to look up to.

A positive atmosphere must be established in a variety of ways, but a negative environment can be generated by only one destructive statement. This can develop a pattern, which leads to it becoming normalized. This is the chain reaction that has taken place in our society. No one is eager to alter it right now, yet letting go and throwing this matter away will not help us in the long run.




# வழுக்கி விழுந்தவர்கள், விழுபவர்கள்.

## கற்சுறா

ஈழவிடுதலைப் போர்க்காலத்தில் யுத்தத்திற்காகக் குழந்தைகள் இழுத்துச் செல்லப்பட்டு பிணங்களாகத் திரும்பி கொண்டு வந்த காலம் ஒன்றிருந்தது. அவர்களைக் குழந்தைகளாகவே கணக்கில் கொள்ளாதவர்கள் அவர்களின் கொலைகள் எல்லாம் தமது தேசத்திற்கு விடுதலை பெற்றுத் தரும் என்ற கனவோடு அத்தனை கொலைகளையும் மனதார ஆதரித்து நின்றார்கள். அல்லது ஆதரவு கொடுப்பதாக நினைத்து மவுனமாக இருந்தார்கள். ஆனால் அவர்களே இன்று திடீரென பாலஸ்தீனக் குழந்தைகளுக்காகப் பொங்கி எழுவது வேடிக்கையானதொன்று.

அண்மையில் தமது முகநூலில் பலர் இந்தப் படத்தைத் தமது பக்கங்களில் பகிர்ந்து பாலஸ்த்தீனக் குழந்தைகளின் மரணத்திற்காகக் குரல் கொடுத்திருந்தார்கள். இது இந்தக் காலத்தில் பேசப்பட வேண்டியதும் இந்தக் கொலைச் சிந்தனை கொண்ட சமூகத்திற்கு எதிராகவும் அதன் அரசியற் செயற்பாட்டாளர்களுகு எதிராகவும் கொண்டு ஓடித் திரிய வேண்டிய ஒரு பதிவுதான். எனக்கும் அந்தக் கருத்தில் உடன்பாடுள்ளதுதான்.

ஆனாலும் ‘குழந்தைகள் நித்திரை செய்யும் போது அமைதியாக இருங்கள். அவர்கள் கொல்லப்படும் போது அப்படி இருக்காதீர்கள்’ என்ற இந்த வாசகத்தை நான் பகிர்வதற்கும், இந்தக் கருத்தை நான் கொண்டோடித் திரிவதற்கும், இன்று எழுப்பப்படும் இந்தக் குரலுக்கு ஆதரவாய் இயங்குவதற்கும் எனக்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்ற நிலைத் தகவல் மிகவும் முக்கியம் என்று கருதுகிறேன்.

ஈழவிடுதலைப் போர்க்காலத்தில் யுத்தத்திற்காகக் குழந்தைகள் இழுத்துச் செல்லப்பட்டு பிணங்களாகத் திரும்பி கொண்டு வந்த காலம் ஒன்றிருந்தது. அவர்களைக் குழந்தைகளாகவே கணக்கில் கொள்ளாதவர்கள் அவர்களின் கொலைகள் எல்லாம் தமது தேசத்திற்கு விடுதலை பெற்றுத் தரும் என்ற கனவோடு அத்தனை கொலைகளையும் மனதார ஆதரித்து நின்றார்கள். அல்லது ஆதரவு கொடுப்பதாக நினைத்து மவுனமாக இருந்தார்கள். ஆனால் அவர்களே இன்று திடீரென பாலஸ்தீனக் குழந்தைகளுக்காகப் பொங்கி எழுவது வேடிக்கையானதொன்று.

நாங்கள் யுத்த அபிமானிகளாக வளர்க்கப்பட்டவர்கள் அல்ல. நாங்கள் இயல்பாக ஆயுதங்களின் மேல் காதல் கொண்ட மனநோயாளிகளுமல்ல. ஆனால் எங்களை யுத்த அபிமானிகளாகவும் மனநோயாளிகளாகவும் மாற்றியது எது என அறிய முனையாது, நான் மேலே சொன்ன நமக்கான தார்மீக உரிமை குறித்துக் கணக்கிட

**மனித நீதி என்பது அனைவருக்கும் பொதுவானது. ஆனால் அந்த மனித நீதியென்பதை மறந்து மறுத்து நின்று அல்லது மவுனமாக நின்று கொலைக்களமான ஈழத்தை வேடிக்கை பார்த்தவர்கள் பல்லாயிரம் பேர்.**

**அவர்களுக்கு ஈழம் என்பது மற்றவர்களின் கொலைகளால் சமைக்கப்பட்ட உணவுப் பாத்திரம். அதற்கு மற்றவர்களுடைய குழந்தைகளைத் தொலைப்பதுதான் வீரம் என்றவர்கள். அவ்வாறு ஒவ்வொரு குழந்தைகளும் தொலைக்கப்படும் போதும் மவுனமாக இருந்து ஆதரவு கொடுத்தவர்கள் இவர்கள்தான்.**

**இந்த வகையினர் நம்மிடையே இன்றும் ஏராளம் உள்ளனர். இந்த ஆதரவு நிலைப்பாடு ஒரு இனத்தை எவ்வளவு மோசமான பாதாளத்தில் தள்ளியது என்பதனை அவர்கள் அறிந்தும் அவர்களால் அதனை வெளியில் சொல்லிக் கொள்ள முடிவதில்லை. அதனால் தொடர்ந்தும் அந்த ஏமாற்றின் கைத்தறிக்குள் சிக்குண்டு நிற்கிறார்கள்.**

முடியாது.

இந்தத் தார்மீக உரிமை குறித்து மிக அதிக பக்கங்களை பலர் பல்வேறு இடங்களில் எழுதிவிட்டிருந்தாலும் தொடர்ந்தும் பேசப்பட வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறது.

மிக இலகுவாக விளங்கிக் கொள்வதற்காகச் சொல்கிறேன். ஒரு மலையகச் சிறுமியையோ அல்லது வன்னிச் சிறுமியையோ வீட்டில் வேலைக்கு அமர்த்தி வதைத்து வந்த ஒருவர் புலம் பெயர்ந்து ஐரோப்பா வந்தபின் வேலை செய்யும் ரெஸ்ரோறன்டில் தான் கோப்பை கழுவுவது பற்றி அழுவதில் என்ன தர்மம் இருந்து விடும்?

வட்டுக்கோட்டையில் வேலைக்கும் சென்று வரும், பாடசாலைக்குச் சென்று வரும் இளையோர்களை வாளால் வெட்டி அடக்கும் சாதி வெறியர்களின் அடாவடியைப் பார்த்து மவுனமான இருப்பவன் தமிழகத்தில் நடக்கும் ஆணவக் கொலை பற்றிக் கவலை கொண்டால் அதனை எந்தக் கண்கொண்டு கவனிப்பது? அங்கே ஒருவித அறமும் இருக்கப் போவதில்லை. அதே போன்றதுதான் இந்தப் பாலஸ்தீனக் குழந்தைகளுக்கான கண்ணீர்ப் பூச் சொரிதலும். கண்டனக் குரலும்.

இப்படித்தான் ஈழவிடுதலையின் பெயரில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்த பல்வேறு தர்க்கங்கள் பலருக்கு அவர்கள் தர்மத்தையே கேலிக்குள்ளாக்கி விட்டிருக்கிறது.

மனித நீதி என்பது அனைவருக்கும் பொதுவானது. ஆனால் அந்த மனித நீதியென்பதை மறந்து மறுத்து நின்று அல்லது மவுனமாக நின்று கொலைக்களமான ஈழத்தை வேடிக்கை பார்த்தவர்கள் பல்லாயிரம் பேர்.

அவர்களுக்கு ஈழம் என்பது மற்றவர்களின் கொலைகளால் சமைக்கப்பட்ட உணவுப் பாத்திரம். அதற்கு மற்றவர்களுடைய குழந்தைகளைத் தொலைப்பதுதான் வீரம் என்றவர்கள். அவ்வாறு ஒவ்வொரு குழந்தைகளும் தொலைக்கப்படும் போதும் மவுனமாக இருந்து ஆதரவு கொடுத்தவர்கள் இவர்கள்தான்.

இந்த வகையினர் நம்மிடையே இன்றும் ஏராளம் உள்ளனர். இந்த ஆதரவு நிலைப்பாடு ஒரு இனத்தை எவ்வளவு மோசமான பாதாளத்தில் தள்ளியது என்பதனை அவர்கள் அறிந்தும் அவர்களால் அதனை வெளியில் சொல்லிக் கொள்ள முடிவதில்லை. அதனால் தொடர்ந்தும் அந்த ஏமாற்றின் கைத்தறிக்குள் சிக்குண்டு நிற்கிறார்கள்.

ஈழவிடுதலையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் குழந்தைகள்- சிறார்கள்- மாணவர்கள் கொல்லப்படும்போதும் மற்றய அரசியற் கொலைகளை விடவும் ஆக்குரோசமான குரல்கள் ஒலித்துக் கொண்டேதான் இருந்தன. ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் எழுப்பமுடியாத குரல்களை உலக மனித உரிமைகள் சார்பாக இயங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுப்பினார்கள்.

ஈழம் ஒரு சவக் காட்டைப் போல் உருமாறிக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் தான்.

எனது குழந்தையின் மரணம்  
உனக்கொரு தேசம்  
தருமென்று  
எழுதிவைத்த பொய்யை யார்  
அழிப்பது

என்று நான் எழுதினேன்.

நித்திரைப் பாயில்  
மூத்திரம் பெய்த சிறுவனின்  
களிசானைக் கழற்றி  
இராணுவச் சீருடை அணிந்தனர்  
பெரியோர்

என்று எழுதினான் சுகன்.

நமது கண்முன்னால் எத்தனை குழந்தைகள்- எத்தனை சிறார்கள்- எத்தனை மாணவர்கள் பலியாக்கப் பட்டார்கள் என்பது நல்லதொரு படிப்பினை. ஒரு அரசுக்கெதிராகவும் அது கைக்கொண்டிருக்கும் இராணுவத்திற்கு எதிராகவும் போராடத் தொடங்கியவர்களே தனது மக்களையும் அதன் குழந்தைகளையும் அந்த அரசும் இராணுவமும் கூட செய்திடாத முறையில் வதை செய்ததும் கொலை செய்ததும் பற்றி நமது சமூகத்தில் உரையாடத் தொடங்கியவர்கள் யார்?

ஈழதேச விடுதலையின் பெயரில் புலிகளின் பின்னால் வழிபற்றி நின்றவர்களுக்கு அதுபற்றி ஒரு பொருட்டும் இருந்தது இல்லை. அவர்களுக்கெல்லாம் யாரைக் கொன்றாவது தமிழ்த் தேசிய

மேலே சுட்டிக்காட்டிய தலைமுறையினரோ தங்களுக்குச் சொல்லப்படும் கதைகளை நம்பக் கூடியவர்கள். மாற்றுக் கருத்துக்களை தமது வாசிப்பின் மூலம் கூட அறிய அவர்கள் முனைவதில்லை. தமக்குச் சொல்லப்பட்ட கதைகளின்படி வாழ முற்படுகிறார்கள். புலிகளின் தற்கொலைப் போராளிக்குரிய மனவோட்டந்தான் அவர்களிடம் இருக்கும் மனநிலை. அதுதான் தமது அடையாளம் என்று நினைக்கும்படியாக இங்குள்ள தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து,அவர்கள் வாழும் வீட்டிலிருந்து, பொதுவான வாழ்விடங்களிலிருந்து அவர்களுக்கு அது தெளிவாகக் காட்டப்படுகிறது.

அந்த இடங்களில் மறு உரையாடல்களை அவர்கள் ஒருபொழுதும் எதிர் கொள்வதில்லை. அப்படி எதிர் கொண்டாலும் ஒரு வசைச் சொல் மூலம் அதனைக் கடந்துவிட அவர்கள் பழக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லது அதற்கெதிராக ஒரு சிறு வன்முறையை முன் வைக்கப் பழகியிருக்கிறார்கள்.

எவ்வாறு கடந்தகாலம் முழுவதும் புலம்பெயர்சூழலைப் புலிகள் கையகப்படுத்தியிருந்தார்களோ அதன் அசல் பிரதியாகவே அவர்கள் தம்மை வெளிக்காட்ட முனைகிறார்கள். அவ்வாறான செயற்பாட்டினால் திட்டமிட்டு தாங்கள் பலியாக்கப்படுகிறார்கள் என்பதனைக் கூட அவர்களால் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. அந்த இளையதலைமுறைக்கு ஈழவிடுதலைப் போராட்டத்தின் வேறு பக்கங்கள் ஒருபொழுதும் போய்ச் சேருவதில்லை. அதனை அவர்கள் அறியவும் மாட்டார்கள். அப்படி அறிந்தாலும் ஈழவிடுதலையின் துரோகம் என்றளவிலும் கொல்லப்பட வேண்டிய துரோகிகள் என்ற அளவிலுந்தான் அவர்கள் அறிந்திருப்பார்கள். அப்படியானவர்களால் இந்த சமூகத்திற்குத் தீங்கு குறைவு.. ஆகக் கூடியது ஒரு சினிமா ரசிகனுக்கு இருக்கும் மனநிலையின் செயற்பாடுதான் அது.

விடுதலை தேவை. அதுபற்றி வரும் எவ்வித உரையாடல்களையும் செவிமடுக்காது செம்மறி மனோநிலையில் நஞ்சுண்டகாடும் பனைமரக்காடும் நந்திக் கடல் பற்றியதும் மட்டுமே கனவில் வந்து அவர்களை உருட்டும். இந்த உருட்டு வியாதியில் தன்னைத் தொலைத்திருப்பவர்களில் தற் காலத்தில் முக்கியமானவராக நான் உணர்வது நண்பன் அருண்மொழிவர்மன் அவர்களைத் தான்.

தமது வாகனங்களில் புலிக் கொடியையோ, கழுத்தில் புலிச்சின்னத்தையோ அல்லது தமிழீழச்சின்னத்தையோ பொறித்துத் திரியும் இளைய தலைமுறையினரது உசார் மடைத்தன மனநிலை கொண்டவரல்ல அருண்மொழிவர்மன் என்பதனை நான் நன்கு அறிவேன். ஒரு இனத்தின் மொழி, பண்பாடு, மாற்று இனத்தின் பண்பாட்டுப் படையெடுப்பு என்று பன்முகத் திறமை கொண்டு உரையாடக் கூடிய ஒரு தகமை வாய்ந்தவராகத் தன்னை அடையாளம் காட்டுபவர்.

ஆனால் மேலே சுட்டிக்காட்டிய தலைமுறையினரோ தங்களுக்குச் சொல்லப்படும் கதைகளை நம்பக் கூடியவர்கள். மாற்றுக் கருத்துக்களை தமது வாசிப்பின் மூலம் கூட அறிய அவர்கள் முனைவதில்லை. தமக்குச் சொல்லப்பட்ட கதைகளின்படி வாழ முற்படுகிறார்கள். புலிகளின் தற்கொலைப் போராளிக்குரிய மனவோட்டந்தான் அவர்களிடம் இருக்கும் மனநிலை. அதுதான் தமது அடையாளம் என்று நினைக்கும்படியாக இங்குள்ள தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து, அவர்கள் வாழும் வீட்டிலிருந்து, பொதுவான வாழ்விடங்களிலிருந்து அவர்களுக்கு அது தெளிவாகக் காட்டப்படுகிறது.

அந்த இடங்களில் மறு உரையாடல்களை அவர்கள் ஒருபொழுதும் எதிர் கொள்வதில்லை. அப்படி எதிர் கொண்டாலும் ஒரு வசைச் சொல் மூலம் அதனைக் கடந்துவிட அவர்கள் பழக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லது அதற்கெதிராக ஒரு சிறு வன்முறையை முன் வைக்கப் பழகியிருக்கிறார்கள்.

எவ்வாறு கடந்தகாலம் முழுவதும் புலம்பெயர்சூழலைப் புலிகள் கையகப்படுத்தியிருந்தார்களோ அதன் அசல் பிரதியாகவே அவர்கள் தம்மை வெளிக்காட்ட முனைகிறார்கள். அவ்வாறான செயற்பாட்டினால் திட்டமிட்டு தாங்கள் பலியாக்கப்படுகிறார்கள் என்பதனைக் கூட அவர்களால் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. அந்த இளையதலைமுறைக்கு ஈழவிடுதலைப் போராட்டத்தின் வேறு பக்கங்கள் ஒருபொழுதும் போய்ச் சேருவதில்லை. அதனை அவர்கள் அறியவும் மாட்டார்கள். அப்படி அறிந்தாலும் ஈழவிடுதலையின் துரோகம் என்றளவிலும் கொல்லப்பட வேண்டிய துரோகிகள் என்ற அளவிலுந்தான் அவர்கள் அறிந்திருப்பார்கள். அப்படியானவர்களால் இந்த சமூகத்திற்குத் தீங்கு குறைவு.. ஆகக் கூடியது ஒரு சினிமா ரசிகனுக்கு இருக்கும் மனநிலையின் செயற்பாடுதான் அது.

ஆனால் அருண்மொழிவர்மன் போன்றவர்கள் அப்படியானவர்கள் இல்லை. அவர்களுக்கு அனைத்து விடயங்களும் நன்கு தெரியும். தம்மை ஒரு அறிவுசார் தளத்தில் வைத்து உரையாடக் கூடியவர்களாக எப்பொழுதும் தம்மை நிலைநிறுத்துபவர்கள். அதிகம் வாசிப்பு அனுபவம் உள்ளவர்களாகச் சொல்லிக் கொள்பவர்கள். ஈழவிடுதலைப் போராட்டம் வெறும் யுத்தங்களாக மாறிய கதைகளை நன்றாகவே அறிந்தவர்கள். அதற்குள் யாரெல்லாம் பலியிடப்பட்டார்கள் என்றும் எவ்வாறு அனைத்தும் காவு கொள்ளப்பட்டது என்பதையும் விளங்கிக் கொள்ளாதவர்களும் இல்லை. அனைத்தும் விளங்கிய இவர்களைப் போன்றவர்கள் செய்யும் செயற்பாடுகள் இந்த சமூகத்திற்கு மிகவும் ஆபத்தை விளைவிக்கும் என்பதனை விளங்க ஏன் மறுக்கிறார்கள் என்பது மிகப்பெரிய கேள்வியே. (இங்கே

அருண்மொழிவர்மன் என நான் குறிப்பிடுவது அவரை மட்டுமாகாது என்பதனையும் சொல்லி வைக்கிறேன்.)

இந்த இடத்தில் அவரை உதாரணம் காட்டும் முகமாக இவர் ‘காணாமல் ஆக்கப்பட்டவர்கள்’ குறித்து அக்கறை கொள்ளும் விடயத்திற்கு முதலில் வருகிறேன். இவரது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த அக்கறை தனியே முள்ளிவாய்க்காலில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றியதுதான். அதனை அவரைப் போன்றவர்கள் ‘வலிந்து காணாமல் ஆக்கியவர்கள்’ என்று பிரித்து அடையாளம் காட்டுகிறார்கள். இந்தச் சொல்லே ஒரு பொய்ச் சொல். அது ஒரு மாயச் சொல். தமிழ்த் தரப்பான புலிகளாலும் மற்றைய மாற்று இயக்கங்களாலும் காணமல் ஆக்கப்பட்ட பலரது வாழ்வை மறைக்க முனையும் அழுகிய தமிழ்த் தேசிய மனநிலை கொண்ட செயல் முறைச் சொல் அது. இந்த மனநிலைதான் அவர்கள் தேடும் முள்ளிவாய்க்காலுக்குள் காணாமல் அக்கப்பட்டவர்களையும் கண்டுபிடிக்கமுடியாது இருப்பதற்கும் முக்கிய காரணமாகிவிடுகிறது.

ஆனாலும் இந்த நிலையையும் அறியாதவரல்ல அருண்மொழிவர்மன் என்பதை நான் அறிவேன். அவருக்கும் அது தெரியும். ஆனால் புலி வால்களுக்கு அவர் காட்டிய விம்பத்தைக் கரைத்துவிட அவரால் முடியாதிருக்கிறது. அது ஒன்றுதான் அவர் இவ்வாறு தொடர்ந்தும் செயற்படுவதற்கான காரணம் என நான் நினைக்கிறேன்.

ஈழவிடுதலையின் ஆரம்பகாலந் தொட்டுப் பேச வேண்டிய ஒரு கருத்து நிலையை தனியே முள்ளிவாய்க்காலுக்குள் மட்டுமாகக் குறுக்குவதன் மனநிலைதான் ‘கார்த்திகைப் பூ’ மனநிலை என்கிறேன். அதாவது நச்சு மனநிலை. ஒரு சமூக வாழ்நிலையில் பல்வேறு தரப்பினரால் காணாமல் ஆக்கப்பட்டுக் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை அளவேயற்றது. தமது பிள்ளைகள்

**மே மாதத்திற்கும் நவம்பர் மாதத்திற்கும் வருடத்திற்கு இரண்டு முறை சித்தந்தனின் செயலிழந்த ஒரு கவிதையைக் கொண்டு இரண்டு பூக்களைக் காவியபடி கல்லறைகளுக்குச் செல்கிறார். ஒன்று அவர் கொண்டாடும் தியாகிகளுக்கு, மற்றயது அவரின் உள்மனது சொல்லும் துரோகிகளுக்கு!.**

**துரோகிகள்தான் ஆனால் இறந்தவர்களானபடியால் அவர் களுக்கும் அஞ்சலி செய்யுங்கள் என்ற அதி உச்ச அறிவு சீவித்தனம் அவருடையது.**

இன்னமும் உயிருடன் திரும்பி வந்துவிடாதா எனக் காத்திருக்கும் தாய்மனநிலை பொதுவானது.

ஆனால் அருண்மொழிவர்மன் போன்றவர்கள் அடையாளம் இடும் மனநிலை அதுவல்ல. அது ‘கார்த்திகைப் பூ’ மனநிலை. அதனால் தான் அவர் மே மாதத்திற்கும் நவம்பர் மாதத்திற்கும் வருடத்திற்கு இரண்டு முறை சித்தந்தனின் செயலிழந்த ஒரு கவிதையைக் கொண்டு இரண்டு பூக்களைக் காவியபடி கல்லறைகளுக்குச் செல்கிறார். ஒன்று அவர் கொண்டாடும் தியாகிகளுக்கு, மற்றயது அவரின் உள்மனது சொல்லும் துரோகிகளுக்கு!.

துரோகிகள்தான் ஆனால் இறந்தவர்களானபடியால் அவர் களுக்கும் அஞ்சலி செய்யுங்கள் என்ற அதி உச்ச அறிவு சீவித்தனம் அவருடையது.

அதனைச் சுட்டிக்காட்டித்தான் அபத்தம் இதழில் ‘நவ காசியானந்தன்கள்’ என்று இவரையும் அடையாளம் காட்டியிருந்தேன்.

அதனை நிரூபிக்கும் விதமாக அண்மையில் ‘புலிகளை ஒரு பாசிஸ அமைப்பு என்கிற கருத்துநிலைப்பாடுடன் எனக்கு உடன்பாடு இல்லை’ என ஒரு குறிப்பினை எழுதியிருந்தார். இந்த ஆழ்மன நிலைப்பாட்டின் மிகப்பெருடிவந்தான் அவருடைய சுற்றிச் சுழன்றடிக்கும் எழுத்துமுறை.

மிகப்பெரும் வரலாறுகளையும் ஆவணங்களையும் அறியமுனையும், அறிந்து கருத்துச் சொல்ல நினைக்கும் அவரால் புலிகளின் காலங்களின் கதைகளை மட்டும் அறிய முனைவதுமில்லை. அறிந்து கருத்துச் சொல்ல முனைவதுமில்லை. அப்பொழுதெல்லாம் அதற்குப் பதில் எழுத முடியாதுபோகும் போது, ‘அந்தக் காலத்தில் தான் சிறு பிள்ளை’ என்றும் தான் எழுதவரவில்லை என்று சொல்லிக் கடந்து செல்ல முடிகிறது அவரால். ஆனால் அதிலும் அவர் நேர்மையில்லை..

அதனையும் விட கடந்த காலங்களில் எவ்வளவோ விவாதங்கள் எழுதப்பட்டு தொடர்ந்து விவாதிக்கப்பட்டு இருந்தாலும், அவரை நோக்கிக் கேள்வியெழும் போது அதனை நீர்த்துப் போகச் செய்து எதையும் யாரும் எழுதாததைப் போல் அதுகுறித்து விபரமாக எழுதுங்கள் எனக் கேட்பார். அப்பொழுது தோன்றும் ‘திரும்பவும் முதலில இருந்தா?’ என்ற மனநிலையை அவர் இனியாவது விளங்கிக் கொள்ள வேண்டும். எழுதப்பட்ட விடயங்களை அவர் தேடி வாசிக்க வேண்டும் எனச் சொல்லவில்லை. அவர் கட்டாயம் அனைத்தையும் வாசித்திருப்பார். அனால் வாசிக்கவில்லை என்பது போலும் தான் அறியவில்லை என்பதாகவும் தொடர்ந்து சொல்லிவருவது அவரளவில் நல்ல நிலைப்பாடல்ல. ஒரு உசார் மடைத்தனமான சிந்தனையுடன் தன்னைப் பழிக்குள் தள்ளும் புலி ஆதரவாளர்களை விட அருண்மொழி வர்மன் போன்றவர்களது நிலைப்பாடு இந்த சமூகத்திற்குக் கேடு என்பதனை இந்தக்கட்டுரையில் சொல்லிக் கொண்டு இந்த இதழில் நிறைவு செய்கிறேன்.

இன்னும் நேரமெடுத்து அடுத்த இதழில் விபரமாக எழுத விரும்புகிறேன்.

# பாசிசத்தின் தோள் மீதமர்ந்த குழந்தைப்போராளி

பாசிசத்தின் தோள்மீதமர்ந்த குழந்தைப்போராளி

அந்தக் குழந்தை
எல்லோரதும் தோள் மீதமர்ந்து
கைகளை ஆட்டிக் களிக்கும்
அழகிற்கு ஈடில்லை.

பாசிசம் உலகை வெல்லவும் வேட்டலாம்
தன் குறு நிலத்தை ஆளவும் ஆகும்.

அப்படியே அந்தக் குழந்தையின் குதூகலம்
பாசிசத்தின் கட்டுமானத்தில் வசதியாக ஏறியிருந்து
தனக்கானதை ஈட்டும்.

சீசருக்குரியது சீசருக்கு.

தோள்களின் மீதமர்ந்து குழந்தை பார்த்ததோ
ஒரு தெருக்கோமாளியின் வினோத விதூ
சகங்களை.

அந்தக் கோமாளி எப்போதும்
குழந்தைப் போராளியின் வரவுக்காகக்
காத்திருந்தான்.

எட்டுத்திசைக்கு மேலும்
ஒன்பதாவதும் பத்தாவதும் திசையென
27 வது பரிமாணத்தில்

மெல்பேனிலும் பாரிசிலும் பேர்லினிலும்
லண்டனிலும் ரொரண்டோவிலும்
அந்தக் குழந்தைப் போராளி கோமாளியைத்
தேடிச் செல்வதில் சலிப்பதில்லை.

மாறாத ஆர்வம்

இன்னும் இன்னுமெனக் கேட்கும் நாளில்
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்
வளர்ந்தோங்கி நின்றான்.

பின்னொரு நாளில்
தேசியம் என்றால் என்னவெனில்...
எனக்கேட்கும் கேள்விகளுக்குப்
பதில் சொல்லிக்கொண்டும்
குழந்தைப்போராளி வளர்ந்து பெரியவனானான்.

எப்போதோவொருநாள் கடந்து தேசியத்தின்
கவர்ச்சியான ஈர்ப்பைப் பாவனை
பண்ணும்போதில்

அந்தக் குழந்தைப் போராளி முழுதான
கோமாளியானான்.

தனது குழந்தைமையை
லாபமான ஒரு தொகையில்
விற்பதற்கான பக்குவத்தில்
அவன் முதிர்ச்சியடைந்தான் .

தேசத்துரோகியெனும் சொல்லின்
தர்ம - நியாயங்களை
மொத்த விற்பனையின் சலுகை அன்பளிப்பாகக்
கொடுப்பதில் அவனுடன் எவரும்

போட்டியிடமுடியாதிருந்தது.

மேலும் தனது கோமாளித்தனங்கள்
மிகப் பெறுமதியானவை என

அறிக்கையிடவும் செய்தான் .

விளம்பரமற்றது செல்லாது
கிணறு நன்னீரானாலும் கிணறுதான்.
கடல் உப்பானாலும் கடல்தான்.

குதிரை லாயத்தில் பன்றிக் கூடடைப்பில்
நாய்க்கூட்டில் கோழி எச்சக்குவியலில்
எங்கெங்கெனும் வாரிக்குவித்துத்

தேற்றிக்கொண்டான்

தன்மீதான அருவருப்புப் பார்வையை
ஒரு தலைச் சிலிர்ப்பில் உதறியெறிந்தான் .

பாசிஸ்டுகளுடன்தான் நாம்
பேச வேண்டியிருக்கிறதெனச் சொன்ன
அந்த நாளில் பாசிசத்தின் தோளில் அமர்ந்து
பாசிசத்தின் இன்றியமையாத
மரியாதைக்குரிய நண்பனும் பங்காளியுமானான் .

ஜேர்மன் மூலம் ஹென்றிச் முல்லர்.
தமிழில் இரண்டாங்கையாக சுகன்.

அபத்தம் கார்த்திகை, 2023

# சுகன்

தவறுதலாக மாறி
ஒருவீட்டின் அழைப்புமணியை அழுத்தியபோது
ஒரு பெண் கதவைத்திறந்து
சற்றுப் பொறுக்கச்சொல்லி
சைகை செய்து
கதவைத் திறந்துவைத்தபடி
உட் திரும்பி
தரையில் படைத்துவைத்த
இரண்டு படையல்களிலும்
சரிபாதியை பங்குபிரித்து
ஒரு ஏதனத்தில் போட்டு
என்னிடம் கொடுத்து
என்னைப் பார்த்தபடி
கதவைச் சாத்தாமல் நின்றாள்.


அப் படையல்களிரண்டிலும்
குழந்தைகளுக்கான
இனிப்புவகைகளும்
குழந்தை உணவுகளும் இருந்தன.
இரண்டு மெழுகுவர்த்திகள்
எரிந்துகொண்டிருந்தன.

குழந்தைகள் அருந்தும்
இரண்டு குவளைகள்
நீராகாரத்தால் நிரப்பப்பட்டிருந்தன.

தனியே ஒரு குவளையை எடுத்துவந்து
இரண்டு படையல்களின்முன்வைக்கப்பட்ட
சிறு குவளைகளிலிருந்தும் எடுத்துவந்த
மூன்றாவதான குவளையில் நிரப்பி
வாசலில் நின்றிருந்த என்னைப்பார்த்தபடி
எதுவும் பேசாமல் நின்றிருந்தாள்.

எல்லாம் விளக்கமுற
வாசலின் முன் அமர்ந்து
அவள் தந்த ஈமப் படையல்களின் பங்கை
உண்டு முடித்து அவள் கையில் வைத்துக்
காத்திருந்த
நீராகாரத்தை கை நீட்டி வாங்கி
அருந்தி
எதுவும் பேசாமல் திரும்பிப் பார்க்காமல்
நடந்துகொண்டிருந்தேன்.

சரியாகத்தான் அந்த வீட்டுக் கதவின்
அழைப்பு மணியை அழுத்தியிருக்கிறேன் .



**எங்கே போய் முட்ட!**

# பூசணிக்காய்த் தலைவர்

தங்களைப் பற்றிப் புகழ்ந்து எந்த அனாமதேயங்கள் எழுதினாலும் அதைப் பகிர்ந்து கொள்கிற இலக்கியப் பிரபலங்கள், தங்களைப் பற்றிய விமர்சனங்கள் பற்றிச் சொல்வது போல, 'உதெல்லாம் நான் வாசிக்கிறேலை' என்று நான் பீலா விடுவதில்லை.

அதிலும் என்னைப் பற்றி எழுதப்படுகின்றவற்றை வாசிப்பது மட்டுமல்ல, அவற்றைப் பிரசுரிப்பதும் எனது வழக்கம். நான் வாசித்தேன் என்பது மட்டுமல்ல, மற்றவர்களும் அதை வாசித்து இன்புற வேண்டும் என்பதற்காக.

பேஸ்புக்கில் என்னைப் பற்றியும் அபத்தம் பற்றியும் கார் வண்ணா என்பவர் எழுதியிருக்கிறார்.

நான் தேசிக்காய்த் தலையர் என்று எழுதுவது, உடலின் அங்கங்களை பழிப்பது, கேலி செய்வது போன்றது என்று எழுதியிருக்கிறார்.

நான் ஏன் அதைப் பயன்படுத்தினேன் என்பது பற்றியும், அது பிரபாகரன் இருந்த காலத்திலேயே நான் எழுதினேன் என்பதையும் முன்பு தாயகம் இணையத்தளத்தில் எழுதியிருக்கிறேன். என்னைத் தொடர்ந்து வாசிக்கிறவர்களுக்கு அது தெரிந்திருக்கும்.
அதை இன்னொரு தடவை இந்தப் புலிவாலுக்கு சொல்ல வேண்டிய தேவை இல்லை.

இதைப்போல, பாலேய்ங்கத்தை நான் மது உரைஞர் என்றும் சொல்வதுண்டு.

உண்மையிலேயே தேசிக்காயரின் உடல்வாகு பற்றிக் கிண்டல் பண்ணுவதாயின் பூசணிக்காய்த் தலைவர் என்றல்லவா சொல்லியிருப்பேன்?

இவ்வாறு சொல்கிற என் போன்றவர்கள் மீது, கேலிப் பேச்சுகளையோ, வெறுப்பையோ, கோபத்தையோ அள்ளி வீசாது, அரவணைத்து ஆறுதல் கொடுப்போராய் இருப்போம் என்று அவர் மற்றப் புலிவால்களை வேண்டிக் கொண்டுள்ளார்.

இவருடைய இந்தப் பதிவிற்கு மூன்று விருப்புக் குறிகளும் மூன்று பேர் பின்னூட்டங்களும் விட்டிருக்கிறார்கள்.
அதில் ஒருவர் என் நண்பர் ரூபன்.

என்னுடைய பதிவுகளுக்கு 'உங்க பார், உவருக்கு குடுக்கிறன்' என்று, இடையில் குறுக்கால் ஓடி வந்து, எதையாவது சொல்லி வாங்கிக் கட்டி, வெற்றிகரமாகப் பின்வாங்குகிற யோகு அருணகிரி கூட அதற்கு விருப்புக்குறி இடவில்லை.

அன்பையும் அரவணைப்பையும் புலிவால்களுக்கு உபதேசிக்கிற இவரது பதிவு இன்னும் பலரை சென்றடைய வேண்டும், இதை வாசித்தாவது புலிவால்களுக்கு மற்றவர்களின் கருத்தை மதிக்கிற பண்பு வர வேண்டும், அதை அவர்களில் ஒருவரே சொல்லும்போது, அவர்கள் அதைக் கேட்டு ஒழுகுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் என்பதற்காக அதை இங்கே நன்றியுடன் மறுபிரசுரம் செய்கிறேன்.

ஏதோ நம்மாலானது.

•••

பால்யப்பருவத்திலிருந்து எனக்கொரு நண்பன் இருக்கின்றான். பாடசாலை முதற்கொண்டு ரியூசன் வகுப்பு வரைக்கும் ஒன்றாகவே படித்தோம். அவன், வகுப்பில் பாடங்கள் நடைபெறுகையில் அதனைக் கவனிப்பதனைவிட அங்கிங்கென திரும்பிப் பார்த்து மற்ற மாணவர்களுக்கும் பகிடியாக எதையேனும் கூறியபடியே இருப்பான். இதனால் ஆசிரியர்களிடம் அவன் வாங்கும் அடி கொஞ்சநஞ்சமல்ல. ஏழாம் வகுப்புப் படிக்கையில், ஒருநாள் நம் வகுப்பாசிரியர் அவனுக்கு ' ஓணான் தலையன்' என்று பெயர்சூட்டி அழைக்க ஆரம்பித்துவிட்டார். அன்றிலிருந்து அவன் வகுப்பில் 'ஓணான் தலையன்' ஆகிவிட்டான். ஆசிரியர் தனக்குப் பெயர் சூட்டியழைப்பதனைப்போலவே இவனும் மற்றவர்களுக்கு அவர்களின் உடல் அங்கங்களை, நடத்தைகளை வைத்து ஏதேனுமொரு பெயர் கூறியழைப்பான். கேட்டால், 'சேர் எனக்கொரு பேர் வைத்துக் கூப்பிடுகிறார், நானும் அவர்களுக்கொரு பேர் வைத்துக் கூப்பிடுகிறேன்' இதெல்லாம் ஒரு ஜாலிதான்' என்பான்.

இப்பொழுதும், ஊரிலிருக்கும் அவனுடன் தொலைபேசியில் கதைக்கும் பொழுதிற்கூட அன்றுபோலவே இன்றும் மாறாமல் எவருக்கேனும் ஏதேனுமொரு பெயர் சொல்லி அழைப்பான். இன்னுமாடா இதை மறக்காமலிருக்கிறாயெனக் கேட்டால், 'எனக்கொரு பேர் வைத்துக்கூப்பிட்ட மனிசன் செத்துப்போட்டுது, ஆனாலும், அதை மறக்க முடியுமா? அதுதான்' என்பான்.

இதனை எதற்காக இங்கே கூறுகிறேனெனில்,

கனடாவிலிருந்து வெளிவரும் 'அபத்தம்' ( அஃது உண்மையிலேயே அபத்தம்தானென்பது வேறுவிடயம்) இணைய இதழில் அதன் ஆசிரியர் ஜோர்ஜ் குருசேவ் அடிக்கடி ' தேசிக்காய் தலைவர்' என்றெழுதுவார்! இதனைப் பார்த்ததும் உடனே எனக்கு என் நண்பனின் ஞாபகம்தான் வந்தது. ஒருவேளையில், இவரும் எவரோ ஒருவரால் ' தேசிக்காய்த் தலையா' என்றோ அல்லது வேறேதேனும் பெயர் சூட்டியோ அழைக்கப்பட்டு அந்த மீளமுடியாத தாக்கத்திலிருந்துதான் பிறருக்கும் இப்படிப் பெயர் சூட்டி அழைக்கின்றாரோவென எண்ணத் தோன்றுகிறது! அப்படியாக உண்மையிலேயே அவர் பாதிக்கப்பட்டிருந்தால், எனது ஆதரவையும், அனுதாபங்களையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒருவரை அவரது உடலின் அங்கங்களையோ அல்லது அவரின் நடத்தைகளையோ வைத்து சீண்டுவதோ, பழிப்பதோ, கேலிசெய்வதோ குற்றத்திற்குரிய செயலென்றே கருதவேண்டும். அதிலும் சிறுவர்கள் மீது இப்படிப் புரிவதென்பதனைச் சிறுவர் துஷ்பிரயோகமாக எடுத்தலே ஏற்புடையது.

இங்ஙனம் ஒருவருக்குப் பட்டப் பெயர்சூட்டியழைத்து அதனால் அவருக்கேற்படும் உளவியற் தாக்கங்களைக் கவனத்திலெடுக்கத் தவறிவிடுகின்றோம். இனிமேலாவது இப்படியான சிறுசிறு விடயங்களையும் கவனத்திற் கொண்டு நடப்போம்.

இப்படியாய் பாதிக்கப்பட்டு இருப்போர் மீது, கேலிப் பேச்சுகளையே, வெறுப்பையோ, கோபத்தையோ அள்ளிவீசாது, அரவணைத்து ஆறுதல் கொடுப்போராய் இருப்போம்.

•••

பேஸ்புக்கில் ஒரு நியாயமான அறச்சீற்றம் கண்டேன்.
பெண் ஒருவர் ஒரு நாய்க்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி கடும் கோபத்துடன் பதிவிட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் பக்கத்து வீட்டுக்காரனோடு நடந்த தகராறுக்கு, அவன் வீட்டில் கட்டியிருந்த நாயை இழுத்துக் கொண்டு போய், அடித்து குற்றுயிராக விட்டிருக்கிறார்கள்.

எந்த மனிதப் பிறவியும் இவ்வாறான ஒரு குரூரத்தை வாய் பேசாத மிருகத்திற்கு, வேட்டை ஆடக் கூடத் தெரியாமல், பிடித்ததைக் கொண்டு வந்து காலடியில் ஒப்படைத்து, அவன் தரும் எலும்புத்துண்டுக்காகக் காத்திருக்கிற ஒரு ஜீவனுக்கு செய்திருக்க முடியாது.

எப்படித்தான் சட்டம், நீதி என்றாலும் இவ்வாறானவர்களை அதே விதமாகத் தண்டிப்பதில் எந்தத் தவறும் இல்லை என்பது, நாய் வளர்க்கிற என்னுடைய உணர்வாக இருக்கிறது. அறிவு மட்டும் தான் அதைத் தவறு என்கிறது.

தன்னைப் பற்றி பெரிய நினைப்போடு இருக்கிற யாழ்ப்பாணி இதைப் பற்றியும் பெருமை கொள்ள முடியாதபடிக்கு, அறச்சீற்றம் கொள்ள முடியாதபடிக்கு, தற்போது பிக் பொஸ், அது இது எல்லாவற்றையும் விட, கனடா விசா யாழ்ப்பாணியின் மனதை ஆட்கொண்டிருக்கிறது.

இதை விட, மோசமானவைகளை எல்லாம் கண்டு தானே வந்திருக்கிறேன்.

நெடுந்தீவில் அந்தக் காலத்தில் வீடு தேடிப் போய் சண்டையிட்ட இளைஞன் ஒருவனைக் கட்டி வைத்து வெட்டி, தண்ணீர் கேட்டும் கொடுக்காமல், கொன்று, விதானையார் வந்ததும் ஒப்படைத்த கதை எனக்குத் தெரியும்.

என்னைப் பார்க்க இலங்கையில் இருந்து வந்த என்னுடைய அண்ணன் சொன்னார்... இந்த யுத்தம் வராவிட்டால், அந்தக் கொலைகள் இன்றும் தொடர்ந்திருக்கும் என்று.

இதில் பஞ்ச் என்னவென்றால், அந்தப் பெண்ணின் வீடியோவுக்கு பின்னூட்டம் விட்ட தமிழ் உணர்வாளர் ஒருவர் 'புலிகள் இருந்தால் இப்படி நடந்திருக்குமா?' என்று அறச்சீற்றம் அடைந்திருந்தார்.

அடே, வாயைக் கிளறாதீங்கடா! மனிதன் மிருகத்திற்கும், மனிதன் மனிதனுக்கும் செய்த குரூரங்களை விட, அந்த 'மிருகம்' மனிதர்களுக்கு எத்தனையோ மோசமான குரூரங்களைச் செய்து விட்டுப் போயிருக்கிறது.

•••

இமான், சிவகார்த்திகேயன் படுக்கையறைக்குள் பயில்வான் வரைக்கும் விளக்குப் பிடித்துத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னமும் உண்மை கண்டுபிடிக்கப்பட்டதாக, எந்த யூடியூபரும் 'நடந்தது என்ன?' இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்ணலிஸ்ட் இணையத்தளங்களும், beyond reasonable doubt, செய்தி வெளியிடவில்லை.

பக்கத்து வீட்டுக்காரனை வேலிக்குள்ளால் பார்ப்பதில் உச்சம் காணும் voyeuristic தமிழர்கள், பிக் பொஸ் பார்ப்பதிலோ,

“

**இதில் பஞ்ச் என்னவென்றால், அந்தப் பெண்ணின் வீடியோவுக்கு பின்னூட்டம் விட்ட தமிழ் உணர்வாளர் ஒருவர் 'புலிகள் இருந்தால் இப்படி நடந்திருக்குமா?' என்று அறச்சீற்றம் அடைந்திருந்தார்.**

**அடே, வாயைக் கிளறாதீங்கடா! மனிதன் மிருகத்திற்கும், மனிதன் மனிதனுக்கும் செய்த குரூரங்களை விட, அந்த 'மிருகம்' மனிதர்களுக்கு எத்தனையோ மோசமான குரூரங்களைச் செய்து விட்டுப் போயிருக்கிறது.**

படுக்கையறைக்குள் விளக்குப் பிடிப்பதிலோ எனக்கு எந்த ஆச்சரியமும் இல்லை.

ஆனால், இப்படி மற்றவர்களின் நிர்வாண மர்மங்களை எல்லாம் மறைந்திருந்தே பார்த்து உச்சமடையும் இவர்கள், சினிமாவில் ஆபாசம், உடைகளில் ஆபாசம், பொதுவெளியில் பெண்கள் நடனம் ஆபாசம் என்றெல்லாம் அறச்சீற்றம் கொள்வது ஆச்சரியமாக இருக்கிறது. மற்றவர்களுடைய வெறும் நிர்வாண ஆபாசங்களில் உச்சம் காணும் இவர்கள், தங்கள் சமூகத்தில் பெண்களின் ஆடைகளுக்குள்ளும், யோனிகளுக்குள்ளும் மட்டும் கலாசாரத்தைத் தேடுவதன் முரண்பாட்டை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

•••

சபாஷ், பலே! சரியான போட்டி!

நீதிபதி ஒருவர் தனது உயிருக்கு அச்சுறுத்தல் என்று நாட்டை விட்டு வெளியேறுகிறார்.

போராட்டம் நடத்துவதற்கு தமிழ் அரசியல்வாதிகளுக்கு காரணமா தேவை!?

பகிஸ்கரிப்புப் போராட்டம் அறிவிக்கப்பட்டது.

இதற்குள் லீயோ படம் வெளியீடு. தமிழ்நாட்டுக்குழுவின் இசை நிகழ்ச்சி.

கட்டவுட் பாலாபிஷேக ரசிகர்களா? தமிழ்த் தேசிய உணர்வாளர்களா?

இந்த அரசியல் தலைவர்கள் அந்த நாளில் படம் வெளியிட வேண்டாம் என்று விஜய்க்கு கடிதம் எழுதியதாக ஒரு பதிவு உலவியது. நானும் அதைப் பகிர்ந்திருந்தேன்.

பின்னர் அது போலி என்று தெரிய வந்தது.

கடைசியில் பாலாபிஷேகமே வென்றது.

•••

பாதி நூற்றாண்டுப்
போராட்டவடிவம் மாறாமல்...
படுத்திருந்தபடியே
பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தும்
யாழ்ப்பாணிகள்...

ஆயுதங்களை மௌனித்து விட்டு...

படம் பார்க்கவும்
பாட்டுக் கேட்கவும்
போனார்கள்!

•••

தமிழ்த்தேசிய அரசியல் இப்போது கேலிக்கூத்தாகவும், கோமாளித்தனமாகவும் வந்து முடிந்திருக்கிறது.
போராட்டம் என்பது மக்களைத் திரட்டி தெருவுக்கு இறங்குவது என்பது யாழ்ப்பாணச் சமூகத்தில் இருந்ததில்லை.

மேடையில் இருந்தபடியே, அங்கே கூடியிருந்த கூட்டத்திற்கு, அங்கே பாதுகாப்புக்கு நின்ற பொலிசாரை 'இங்கே நிற்கிற அரசின் ஏவல்நாய்கள்' என்று வீரம் பேசுவதாகத் தான் எங்கள் போராட்டம் தொடங்கியது.

துப்பாக்கி வந்து சேர்ந்து, போட்டுத் தள்ளியதைப் போராட்டம் என்றெல்லாம் சொல்லும் அளவில்

**இப்படி மற்றவர்களின் நிர்வாண மர்மங்களை எல்லாம் மறைந்திருந்தே பார்த்து உச்சமடையும் இவர்கள், சினிமாவில் ஆபாசம், உடைகளில் ஆபாசம், பொதுவெளியில் பெண்கள் நடனம் ஆபாசம் என்றெல்லாம் அறச்சீற்றம் கொள்வது ஆச்சரியமாக இருக்கிறது. மற்றவர்களுடைய வெறும் நிர்வாண ஆபாசங்களில் உச்சம் காணும் இவர்கள், தங்கள் சமூகத்தில் பெண்களின் ஆடைகளுக்குள்ளும், யோனிகளுக்குள்ளும் மட்டும் கலாசாரத்தைத் தேடுவதன் முரண்பாட்டை விளங்கிக் கொள்ள முடியவில்லை.**

நான் இல்லை. அது கள்ளக்கடத்தல் மாபியாவின் சட்டமறுப்புச் சட்டவிரோதங்களின் தொடர்ச்சியே அன்றி, போராட்டத்திற்கான எந்த இயல்பையும் கொண்டிருக்கவில்லை.

மற்றும்படி மக்கள் போராட்டம் பகிஷ்கரிப்புத் தான். பகிஷ்கரிப்பு என்பது கடைகளை அடைத்து, வேலைக்கும் பாடசாலைக்கும் போகாமல், வீட்டில் படுத்திருந்தபடியே நடத்தும் போராட்டம் தான்.

திலீபனுக்கு அஞ்சலி செலுத்தக் கூடும் கூட்டம், பொங்குதமிழ், மாவீரர் தின அஞ்சலி, நினைவுதினம் என்பதெல்லாம் மக்கள் போராட்டம் என்று நம்புகிறவர்களை எதுவும் செய்ய முடியாது.

இதன் பின்னணியில் இருப்பவர்கள் கொதிநிலையில் வைத்து அரசியல் நடத்தலாம் என்று நினைக்கும் அரசியல்வாதிகளும், அதை வைத்து வெளிநாட்டில் தஞ்சம் கோரலாம் என்று நினைக்கும் கூட்டமும், காவடி எடுக்கிற மனநோய்க் கூட்டமும், அதை வேடிக்கை பார்க்க வரும் கும்பலும் என்பதைத் தவிர, இவையெல்லாம் முறைப்படுத்தப்பட்ட மக்கள் எழுச்சிகள் இல்லை.

இது சிங்கள தீவிரவாதத்திற்கு பயன்தரக் கூடியது என்பதன் அடிப்படையில், இதன் பின்னணியில், சிங்கள அரசும் புலனாய்வுப் பிரிவும் இருக்கக் கூடும்.

ஆனால், பத்துப் பேர் சேர்ந்தால் பேரணி, படுத்துக் கிடந்தால் ஹர்த்தால் வெற்றி என்று செய்தி போட ஊடகங்கள் இருக்கும் வரைக்கும் யாழ்ப்பாணிகளுக்கு உச்சம் தான்.

மோட்டுச் சிங்களவனுக்கும், சர்வதேசத்துக்கும் அண்ணை வேலையைக் குடுத்து அடிச்சுப் பறிப்பார் என்று நம்பிய அதே யாழ்ப்பாணி தான் இன்றைக்கும் இந்தப் போராட்டங்களை வெற்றி என்று நம்பிக் கொண்டிருக்க

முடியும்.

விகாரைக்கு அத்திவாரம் போட்டு, கோபுரம் கட்டும் வரைக்கும் வெள்ளி பார்த்துக் கொண்டிருந்த விண்ணன்கள், இப்படி வீரம் செறிந்த போராட்டங்களைத் தொடர்ந்து கொண்டே இருப்பார்கள்.

கடையைப் பூட்டியதால் வியாபாரம் இழந்த தமிழர்களும், நாட் கூலி இழந்த தொழிலாளிகளும் பற்றி யாருக்கு என்ன கவலை?

அலுவலகத்தில் களவாகக் கையெழுத்துப் போட்டுச் சம்பளம் எடுக்கும் யாழ்ப்பாணிக்கு, படுத்துக் கிடந்தபடி போராட்டம் நடத்தவும், சம்பளம் எடுக்கவும் தமிழ் உணர்வு வழி செய்திருக்கிறது.

இதே ரேட்டில் போனால், மீட்பதற்கு மண் இருக்கும்.
தமிழர்கள் இருக்க மாட்டார்கள்.

எரிகிறதில் பிடுங்கிய வரைக்கும் லாபம் தானே!

பொது பஸ்ஸில் சீட் கிழித்த பரம்பரை!
என்னத்தைச் சொல்ல!? எங்க போய் முட்ட!?

•••

முன்பு...

இறுதித் துளி இரத்தம்
இருக்கும்வரை
போராட்டம் தொடரும்.

இப்போது...

> முன்பு...
>
> இறுதித் துளி இரத்தம்
> இருக்கும்வரை
> போராட்டம் தொடரும்.
>
> இப்போது...
>
> கனடா விசா
> கிடைக்கும் வரை!

கனடா விசா
கிடைக்கும் வரை!

•••

பேஸ்புக்
பவாவிலிருந்து
பாலஸ்தீனத்திற்குப்
போய் விட்டது!

இலக்கிய தர்ம அடிக்கும்பல்
பிக் பொஸ்ஸிலிருந்து
பேஸ்புக்குக்கு
பின்வாங்கி விட்டது.

இந்தப் பரதேசிக்கும்பலை
புண்ணியவான்கள் யாராவது
பலஸ்தீனத்துக்குப்
படையெடுக்க வைக்கமாட்டார்களா?

பேஸ்புக்கில் பதிவு போட்டிருந்தேன்.

•••

பேஸ்புக் போராளிகள் அறச்சீற்றம் அடைந்திருந்தார்கள். பாலஸ்தீனம் பற்றிக் கருத்துச் சொல்லியே ஆக வேண்டும் என்றும், அவ்வாறு சொல்லாதவர்களின் கள்ள மௌனம் பற்றியும்!

நான் எதிர்வு கூறியிருந்தேன்.

•••

பாலஸ்தீனத்திற்கு
விடுதலை கிடைக்கும் நாள்
வெகு தொலைவில் இல்லை!

லீயோ வெளிவருகிறது!

•••

'இன்னும் சனம் செத்தால் தான்
ஐ.நா தலையிடும்.
சர்வதேசம் தனிநாடு வாங்கித் தரும்!'

ஒரே வித்தியாசம்...

அவங்கள் ஒருத்தரும்
உண்டியலோட கிளம்பேல!

•••

கனடாவில் வீட்டுக் கொல்லைப்புறத்தில் யாழ்ப்பாணித்

> பாலஸ்தீனத்திற்கு
> விடுதலை கிடைக்கும் நாள்
> வெகு தொலைவில் இல்லை!
>
> லீயோ வெளிவருகிறது!

தமிழர் ஒருவர் கிணறு கட்டி, வாழை மரம் நாட்டிய படத்தை 'தமிழேண்டா!' என்று பேஸ்புக்கில் பகிர்ந்திருந்தார்கள்.

கடுப்பு!

•••

'ஹெலிகொப்டரில் சாமத்தியச் சடங்கு
நடத்தின தமிழன் மாதிரி...

யாழ்ப்பாணத்தில் இருந்து
ஒரு கிணறு காவி வந்திருக்கிறது.

றொறன்ரோ
கடல் மட்டத்தில் இருந்து
அறுநூறு அடி உயரம்.

இங்கே கிணறு, துலா எல்லாம்
கட்ட முடியாது.

வாழை, தென்னை
கண்ணாடி வீட்டுக்குள் வளர்க்கலாம்.

வெளியில் முடியாது.

கடையில் வாங்கிய
வாழை, தென்னையை நட்டு...

கிணறு மாதிரியான
கட்டின தொட்டி.

உடுப்புத் தோய்க்கிற
கல்லு மிஸ்ஸிங்.

சினிமா செட்...

மலரப்போகும் தமிழ் ஈழம் மாதிரி!

கனடா வந்தாலும்...

சிந்தனை
அந்த யாழ்ப்பாணக் கிணத்துக்குள்
தான்.

•••

லீயோ படம் வந்தது.

'முதல் நாள் முதல் ஷோ பாத்திட்டு...

பேஸ்புக்கிலயும்,
யூடியூப்பிலயும்...

முழுக்கதையையும் சொல்லி விட்டு...

கிளைமாக்ஸைச் சொன்ன...
சுவாரஷ்யம் கெட்டுடும்னு...

'ஹீரோ தப்புறாரா? இல்லியா? என்பது
தான் சஸ்பென்ஸ்' னு...

தமிழ்ப்படத்திற்கு விமர்சனம்
பண்ணுறாங்களே!?

அந்த மனசு தான்யா பெரிசு!'

•••

சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்று சுமந்திரன் போர்க்கொடி தூக்கியிருக்கிறார். வானத்தில் போன சனியனை ஏணி வைத்து இறக்கியதே சம்பந்தர்.

இப்போது சம்பந்தருக்கு அதே சனி பிடித்திருக்கிறது.

பதவியில் இறக்கும்வரை ஒட்டிக் கொண்டிருப்பது, அல்லது கொல்லப்படும்வரைக்கும் ஒட்டிக் கொண்டிருப்பது தானே தமிழ்த் தலைவர்களின் பண்பாடு.

இதில் புதிதாக என்ன?

சம்பந்தர் வாரிசு அரசியல் செய்யவில்லை என்று திருப்தி கொள்ளவேண்டியது தான்.

•••

சம்பந்தன் ஐயா
பதவி விலக வேணும் எண்டு
சும்மா சொன்னா காணுமே!?

பொங்கலுக்கு முதலோ?
தீவாளிக்கு முதலோ? எண்டு
சொல்லவல்லோ வேணும்?

•••

ம்பந்தன் பதவி விலக வேண்டும் என்று சுமந்திரன் போர்க்கொடி தூக்கியிருக்கிறார். வானத்தில் போன சனியனை ஏணி வைத்து இறக்கியதே சம்பந்தர்.

இப்போது சம்பந்தருக்கு அதே சனி பிடித்திருக்கிறது.

பதவியில் இறக்கும்வரை ஒட்டிக் கொண்டிருப்பது, அல்லது கொல்லப்படும்வரைக்கும் ஒட்டிக் கொண்டிருப்பது தானே தமிழ்த் தலைவர்களின் பண்பாடு.

இதில் புதிதாக என்ன?

சம்பந்தர் வாரிசு அரசியல் செய்யவில்லை என்று திருப்தி கொள்ளவேண்டியது தான்.

சம்பந்தன் ஐயா
பதவி விலக வேணும் எண்டு
சும்மா சொன்னா காணுமே!?

பொங்கலுக்கு முதலோ?
தீவாளிக்கு முதலோ? எண்டு
சொல்லவல்லோ வேணும்?

சட்டத்தரணி ஸ்வாஸ்திகா புலிகளை பாசிஸ்ட்டுகள் என்று சொன்னது யாழ்ப்பாணிகளின் தமிழ்த்தேசிய உணர்வுகளைப் புண்படுத்தி விட்டது.

அவர் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும், அது யாழ்ப்பாணிகளுக்கு பிரச்சனையாக இருக்கவில்லை.

புனிதப் போராளிகளை பாசிஸ்டுகள் என்றால் மனம் புண் படத்தான் செய்யும்.

வழமை போல, புலன் பெயர்ந்த கூட்டம் தொலைபேசியில் அழைத்து யாழ்ப்பாணி மொழியில் அர்ச்சனை செய்திருக்கிறது.

•••

உலகத்திலேயே
நான்காவது பெரிய இராணுவத்தை
அடிச்சுக் கலைச்ச எங்களுக்கு...

ஒரு பெண் சட்டத்தரணியைக்
கலைக்கிறது பெரிய வேலையே!?

முறம் கொண்டு
புலி விரட்டிய பெண்டிர் பூமி இது.

சும்மா தூஷணத்தால பேசியே
ஓட ஓடக் கலைப்பம்!

யாழ்ப்பாணிடா!

•••

இறுதி யுத்தம் முள்ளிவாய்க்காலி முடியாமல், யாழ்ப்பாணத்தில் முடிஞ்சிருந்தா...
யாழ்ப்பாணிக்கும்
புலி பாசிச அமைப்பாக இருந்திருக்கும்...

பாசிசம் எண்டதின்ரை கருத்து விளங்காட்டியும்!

•••

மாவீரர் தினம் வருகிறது.
துவாரகா உரை நிகழ்த்துவார் என்று கதையைக் கிளப்பியிருக்கிறார்கள்.

இந்த விளப்பமான கூட்டம் விடிய எழும்பி குளிருக்குள்ள போய் நிக்கும்.
றிசைக்கிள் பூ, விளக்கு எல்லாம் காசு கொடுத்து வாங்கி பெருமை கொள்ளும்.

•••


ஸ்வாஸ்திகா
போ! போ!

துவாரகா
வா! வா!

யாழ்ப்பாணிக்கு
பே! பே! பே!

•••

**ஜோர்ஜ் இ.**




# அறச்சீற்றத்தின் அடிமுடி

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

இலக்கியவாதிகளுக்கான அறச்சீற்றம் தமிழ் இலக்கிய வரலாற்றில் எந்தக் காலத்தில், இடத்தில் இருந்து தொடங்குகிறது என்பது பற்றிய கேள்வி எனக்குள் நீண்ட காலமாக இருந்து வருகிறது.

அதற்காக அடுத்த தடவை ஆசான் வரும் வரைக்கும் காத்திருக்கவும் முடியாது. இப்போதிருந்தே அதற்கு ஐந்து டொலர் சேமிக்கத் தொடங்க வேண்டும்.

அல்லது விசேட இலவச அழைப்புக் கிடைக்க நானும் இலக்கியவாதியாக வேண்டும்.

அதற்கு விஸ்கி வாங்கும் செலவை விட, ஐந்து டொலர் செலவு பரவாயில்லை.

தமிழர்களின் அறம் சங்க இலக்கியங்கள் சொல்கின்ற, யுத்தத்திற்கான, அதன் கொடூரத்தை நியாயப்படுத்துகிற, புகழ்ந்தேத்துகிற அறம் என்பது ஆசான் புதைபொருள் ஆராய்ச்சி பண்ணிக் கண்டுபிடித்துச் சொல்லித் தான் தெரிய வேண்டிய நிலை எனக்கு இருக்கவில்லை.

அதை புலியின் யாழ்ப்பாணத்திலேயே நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். பங்கருக்குள் பதுங்கிக் கிடந்த புறநானூற்றுத் தலைவனை மட்டுமல்ல, தந்தையும் தனயனும் போரிலே இறந்த பின்னால், பால் மணம் மாறாப் பாலகர்களை இழுத்துக் கொண்டு போய் 'ஏகே 74' ஐக் கொடுத்து போர்க்களத்துக்கு அனுப்பியதையும், அந்தப் பலி கொடுப்பை மாவீரமாகக் கொண்டாடியதையும் நாங்கள் நேரில் பார்த்துத்தான் வந்திருக்கிறோம்.

அந்தப் புறநானூறையும், புறம் கண்ட தலைவனையும் பாடிப் புகழ்ந்தேத்த எங்களுக்கு ஒரு புதுவைப் புலவரும் இருந்தார்...
ஆஸ்தான இலக்கியவாதியாக!

அதே புறநானூற்றுப் புலிக்கொடியை வைத்து வருடாந்தம் பெரும் பிழைப்பு நடத்தும் அளவுக்கு, அந்தப் புறமுதுகு காட்டிய வெள்ளைக்கொடி மாவீரத்தின் பெருமை, வரலாறாக பழங்காலத்தில் மட்டும் அல்ல, எதிர்காலத்திற்கும் தொடரக் கூடியது என்பது தானே இன்றைய துயர நிலை?

எதிரிகளை ஈன இரக்கம் இல்லாமல் கொல்வதை, அதுவும் சகோதரப் படுகொலைகளை இன்ப அதிர்ச்சியோடும், வதை முகாம் சித்திரவதைகளை குரூர இன்பத்தோடும் கொண்டாடிய சமூகத்திற்குள் தான் நாங்களும் இருந்தோம்.

அரசுப் போட்டியில் யுத்தங்களில்

> **தமிழர்களின் அறம் சங்க இலக்கியங்கள் சொல்கின்ற, யுத்தத்திற்கான, அதன் கொடூரத்தை நியாயப்படுத்துகிற, புகழ்ந்தேத்துகிற அறம் என்பது ஆசான் புதைபொருள் ஆராய்ச்சி பண்ணிக் கண்டுபிடித்துச் சொல்லித் தான் தெரிய வேண்டிய நிலை எனக்கு இருக்கவில்லை.**
>
> **அதை புலியின் யாழ்ப்பாணத்திலேயே நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன்.**

வெல்லப்பட்ட மன்னர்கள் கொல்லப்பட்டது போல, அரசியலில் படுகொலை என்பதை விட, படுகொலையே அரசியலுக்கான ஒரே முறையாக இருந்து, புறநானூற்றுத் தலைவனின் படுகொலையோடு அந்த அரசியலே முடிவுக்கு வந்தது தான் எங்கள் புலிப் பங்கர் கால வரலாறு.

ஒரே மாற்றம், பெண்களைக் கொல்வது சங்க காலத்தில் அறத்திற்கு எதிரானது என்ற கருத்து, யாழ்ப்பாணி காலத்தில் பெருமைக்குரியதாக இருப்பது தான்.

இன்றைக்கும் போராட்டத்தின் பெயரால் கொல்லப்பட்ட பெண்களை, அழிக்கப்பட்ட துரோகிகள் என்று கொண்டாடுகின்ற மனநோய்ச் சமூகம் இது.

ஆனால், வழமை போல மன்னர்களை வள்ளல்கள் என்று பாடிப் பரிசில் பிச்சை வாங்கும் பாரம்பரியம் சங்க காலத்தோடு முடிவுக்கு வந்து விடவில்லை.

அது இன்றைய மேதகு தேசிக்காய்த் தலையர் முதல் விருதுப்புரவலர் வரைக்கும் தொடரத் தான் தொடர்கிறது.

பிச்சை பொற்காசாக இல்லாமல், பயன் ஏதும் இல்லாத வெறும் பேப்பராக இருந்தாலும், விருதும் மாவீரர் பட்டமும் பெருமைக்குரியவை தான்.

மாமனிதர் விருதுத் தலைவர் தேசிய மேதகு ஆன மாதிரி, கடதாசி விருதுப் புரவலர் இலக்கிய மேதகுதான்!

சங்க காலமோ, புலியின் பங்கர் காலமோ, கருமியை வள்ளல் என்றும் கொலைகாரனைத் தலைவன் என்பதும் தானே தமிழர் அறமாக இருந்து வந்திருக்கிறது.

அதன் அடிப்படையே அதிகாரத்தில் இருப்பவனுக்கு வால் பிடிப்பது. அவனைப் புகழ்ந்து வயிற்றுப் பிழைப்பு நடத்துவது.

மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ? என்று கேட்டவளை பிழைக்கத் தெரியாதவள் என்று தானே, இன்றைய இலக்கியவாதிகள் போல, அன்றைய பஞ்சப் பரதேசிகளும் சொல்லியிருப்பார்கள்.

காளமேகங்கள் எல்லாம் சொந்தப் புத்தகம் விட்டு வெளியீட்டு விழா நடத்த முடியாமல், அந்தக்காலத்து தமிழ் விக்கியான பொதுப்பாடற் திரட்டுகளில் மட்டும் தானே இடம் பெற்றார்கள்?

அதிகாரத்தில் இருப்பவனுக்கு வால் பிடித்துப் பழகிய சமூகத்தில், புலிக்கு வால் பிடிப்பது பிரச்சனையாக இருக்க வில்லை.

ஆனால், நாயர் பிடித்த புலி வால் போல, பிடிக்கவும் முடியவில்லை. விடவும் முடியவில்லை...

முள்ளிவாய்க்கால் வரைக்கும்!

அதிகாரத்தின் பாதங்களைப் பணிந்தேத்துவது என்பது அந்த அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஆள் பற்றியதல்ல.

அந்த ஆளின் கையில் இருக்கும் ஆயுதம் பற்றியதே.

பயம் ஆயுதம் மீதானதே அன்றி, ஆள் மீதானதல்ல.

ஆயுதம் இல்லாத ஆளுக்கு என்ன நடக்கும் என்பதை சதாமுக்கும் கடாபிக்கும் நடந்ததைப் பார்த்தாலும், வன்னியில் அது நடக்காமல் இருந்ததற்கு இறுதிவரைக்கும் துப்பாக்கியைக் கைவிடாமல் இருந்தது தான் காரணம்.

தடுப்புமுகாமில் அடைபட்டிருந்த மக்களே புலிகளை இராணுவத்திடம் காட்டிக் கொடுத்தார்கள் என்றால், தேசியத்தலைவர் ஆயுதம் இல்லாமல் அதே மக்களிடம் அகப்பட்டிருந்தால்...

அவருடைய கௌபீனமே மக்களின் வெற்றிக்கொடியாகி இருக்கும்!

அதிகாரத்தின் பாதங்களைப் பணிந்தேத்துவது என்பது அந்த அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஆள் பற்றியதல்ல.

அந்த ஆளின் கையில் இருக்கும் ஆயுதம் பற்றியதே.

பயம் ஆயுதம் மீதானதே அன்றி, ஆள் மீதானதல்ல.

ஆயுதம் இல்லாத ஆளுக்கு என்ன நடக்கும் என்பதை சதாமுக்கும் கடாபிக்கும் நடந்ததைப் பார்த்தாலும், வன்னியில் அது நடக்காமல் இருந்ததற்கு இறுதிவரைக்கும் துப்பாக்கியைக் கைவிடாமல் இருந்தது தான் காரணம்.

தடுப்புமுகாமில் அடைபட்டிருந்த மக்களே புலிகளை இராணுவத்திடம் காட்டிக் கொடுத்தார்கள் என்றால், தேசியத்தலைவர் ஆயுதம் இல்லாமல் அதே மக்களிடம் அகப்பட்டிருந்தால்...

அவருடைய கௌபீனமே மக்களின் வெற்றிக்கொடியாகி இருக்கும்!

இப்படி ஆயுதம் மீதான பயம் தான் தம்பியை அண்ணை, தலைவர், தேசியத் தலைவர், சூரியதேவன் என்றெல்லாம் பரிணாமம் அடைய வைத்தது.

அந்த ஆயுதம் மாத்தயாவிடம் என்ன, ஆரியகுளம் பொன்ராசாவிடம் இருந்திருந்தாலும், யாழ்ப்பாணி களுக்கு அவர்கள் தான் தேசியத் தலைவர்களாக இருந்திருப்பார்கள்.

ஆயுதம் தாங்கிகளை போற்றிப் பாடிக் கொண்டிருந்த சமூகத்தில் இருந்த வந்த இலக்கியவாதிகளின் அறம் விருது கொடுப்போரைப் போற்றிப் பாடுவதில் வந்துமுடிந்திருக்கிறது.

கருமியைக் கொடை வள்ளல் என்ற கூட்டத்தின் வாரிசுகள்!
என்னத்தைச் சொல்ல!

கடதாசிப் பேப்பரைக் கொடுத்தாலும், போற்றிப் பாடடி கண்ணே! தான்.

போற்றிப் பாடிப் பரிசிலும் பொற்காசுகளும் விருதும் பெறுவது தான் அறம் என்ற பாரம்பரியத்துக்குள், இந்தச் சீற்றம் எங்கே புதிதாக முளைத்தது என்ற புதைபொருள் ஆராய்ச்சியை எந்த கீழடிக்குள் தேட முடியும்?

கடவுள் என்ற ஒருவனையே நம்பாத, கோயில்கள் இல்லாத சமூகத்தில் இந்தத் தலைவனைப் பாடல் எங்கேயிருந்து வந்திருக்கும்?

அண்டிப் பிழைக்கும் பிச்சைக்காரப் பயல்களிடம் இருந்து என்பதைத் தவிர!

அறம் என்பதே சமூக நீதி பற்றியது. தனிமனித அறம் கூட, அந்த மனிதன் இன்னொரு மனிதனைக் கொண்ட சமூகத்தில் ஒழுகுவது பற்றியது தானே.

பரிணாமக் கொள்கை தக்கன பிழைக்கும் என்கிறது.
காட்டின் சட்டங்கள் வல்லன பிடித்துப் புசிக்கும் என்கின்றன.
ஆனால், மனித சமூகம் சமத்துவத்தையும் நீதியையும் வேண்டி நிற்பது. அதில் வலியாரிடமிருந்து மெலியாருக்கான பாதுகாப்பை சமூகமாக வழங்க வேண்டிய தேவை இருக்கிறது. இல்லை எனில், ஆண்டான்களுக்கு அடிமைகளாகவே உலகம் இருந்திருக்கும்.

அப்படித்தான், ஆயுதம் தாங்கியவன் யாழ்ப்பாணத்தை ஆண்டான். அழித்தான்.

இப்படிச் சமூகமாக அழிந்து போகாமல், சமூக நீதிக்காக மட்டுமல்லாமல், ஒரு சமூகமாகத் தொடரவும் அந்த அறத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை இருக்கிறது.

அந்த அறத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை எந்தக் காலத்திலும் உண்டு.

அதிகாரங்கள் தனிமனிதர்களின் கைகளுக்குப் போகும் போது இயல்பாகவே துஷ்பிரயோகங்கள் வரும். அதைத் தடுக்க இன்னொரு மாற்றம் வேண்டும்.

அடக்குமுறையில் அது வன்முறைப் புரட்சியாகவும், ஜனநாயகத்தில் அது வன்முறை இல்லாத தேர்தலாகவும் இருக்கிறது.

இங்கே இந்த மாற்றத்திற்கான தேவையை இந்தச் சமூகத்திற்கு உணர்த்திக் கொண்டிருக்க வேண்டியது அறிவார்ந்த சமூகம் தான்.

அதிகாரத்துக்கு அந்த தேவை இல்லை. அது தனக்கு கிடைத்த சொகுசை நீடிக்க சகல விதமான சாம, பேத, தான, தண்டங்களையும் செய்யும்.

அந்த சிந்திக்கத் தெரிந்த அறிவார்ந்த சமூகம் தான் சமூகத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும். அதற்கான வழிகளில் இலக்கியமும் ஒன்று.

கிரேக்க சிந்தனையாளர்கள் போன்று சமூகம் பற்றிய சிந்தனையை, அறநெறிக்கான தேவையை எங்களுக்கு போதித்தது திருக்குறள், அதன் குறைபாடுகள் சேர்த்து, என்பதைத் தவிர, எங்களுக்கு அதைத் தழுவிய சிந்தனை மாற்றங்கள் இந்தச் சமூகத்தில் இல்லை.

நவீன காலத்தில் பெரியார், அம்பேத்கார் முதல் வெளிநாட்டு சம தர்மக் கொள்கைத் தத்துவவிய லாளர்களைச் சொல்லலாம்.

சமூக நீதிக்கான அவர்களின் தத்துவங்களையும், மதங்கள் அளவுக்கு கேவலப்படுத்தும் அளவில் அதன் பக்தர்கள் அதிகம். அதை விட மனுநீதியால் மனதில் ஊறிப் போன சுயசாதிப் பெருமை சமூகத்தில் ஆழப் பதிந்து போயிருக்கிறது.

இதற்குள் சமூக நீதிக்கான அறத்தின் தேவையை அறைந்து சொல்கிற இலக்கியங்கள், இலக்கியவாதிகள் என்று யாரைச் சொல்ல முடிகிறது?

சமூகத்தின் அநீதியைக் கண்டு கொதிக்கிற, அதிகாரங்களின் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக பொங்கி எழுகிற இலக்கியவாதிகள் என்று யாரை அடையாளம் காட்ட முடிகிறது?

கொடி பிடித்துக் கூச்சல் போடும் தொண்டன் அளவில் கட்சி விசுவாசிகளாகத் தான் இருக்கிறார்கள்...
தீக்குளிக்கப் பயம் என்பதைத் தவிர!

தன்னைப் புனிதனாகவும், தன்னோடு முரண்படுகிறவர்களை பிற்போக்குச் சக்திகள், கைக்கூலிகள், ஒத்தோடிகள் என்றும், எதுவுமே சொல்லாமல் இருப்போரை 'கள்ள மௌனம் காப்போர்' என்று பேஸ்புக்கில் பதிவு போடுவதை எல்லாம் அறச்சீற்றம் என்பது போல கோமாளித்தனம் எதுவும் இல்லை.

வேலை வெட்டி இல்லாமல், அரச உதவிப்பணத்தில் வாழ்க்கை

**“**

**தன்னைப் புனிதனாகவும், தன்னோடு முரண்படுகிறவர்களை பிற்போக்குச் சக்திகள், கைக்கூலிகள், ஒத்தோடிகள் என்றும், எதுவுமே சொல்லாமல் இருப்போரை 'கள்ள மௌனம் காப்போர்' என்று பேஸ்புக்கில் பதிவு போடுவதை எல்லாம் அறச்சீற்றம் என்பது போல கோமாளித்தனம் எதுவும் இல்லை.**

**வேலை வெட்டி இல்லாமல், அரச உதவிப்பணத்தில் வாழ்க்கை நடத்திக் கொண்டு, பேஸ்புக்கில் படுத்து எழும்புகிற எந்த சுயப் பிரகடன மேதையும், தான் மட்டுமே அறச்சீற்றம் கொண்டிருப்பவனாக படம் காட்ட முடியும்.**

**அதற்கு முகம் கூடக் காட்டத் தேவையில்லை.**

**ஃபேக் ஐடியே போதும்.**

நடத்திக் கொண்டு, பேஸ்புக்கில் படுத்து எழும்புகிற எந்த சுயப் பிரகடன மேதையும், தான் மட்டுமே அறச்சீற்றம் கொண்டிருப்பவனாக படம் காட்ட முடியும்.

அதற்கு முகம் கூடக் காட்டத் தேவையில்லை.

ஃபேக் ஐடியே போதும்.

இதெல்லாம், எவரும் தங்களை மறந்து போகாதபடிக்கு, பற்றைக்குப் பின்னால், மலம் கழித்தபடி இருந்து, தங்கள் இருப்பைக் காட்ட சதா எழுப்பிக் கொண்டே இருக்கும் குரல்கள் தான்.

அதை தங்கள் மேதாவித்தனத்தின் குரலாக அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமூகம், தான் எடுக்க வேண்டிய முடிவுகளுக்கு எல்லாம், எல்லாம் பற்றிய தங்களின் கருத்துக்களுக்காகக் காத்திருப்பதாக நம்புகிறார்கள். தங்களுக்குக் கிடைக்கும் சில விருப்புக்குறிகளில் உச்சம் அடைகிறார்கள்.

அதனால் எல்லாம் தெரிந்த அவர்களுக்கு, எல்லாம் பற்றியும் கோபம் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

அவர்களின் இருப்பின் அடிப்படையும் நோக்கமும் அதுதான்.

அதை அறச்சீற்றம் என்று நம்புகிறார்கள்.

ஓய்வு பெறும்போது தாங்கள் இல்லாமல் எப்படி இயங்கப் போகிறது என்று பதறுகிற குமாஸ்தாக்களுக்கும், தான் இல்லாவிட்டால் எப்படி இந்த றெஸ்ரோறன்ட் இயங்குகிறது என்பதைப் பார்க்கத் தான் போகிறேனே? என்று நினைக்கிற கோப்பை கழுவுகிறவனுக்கும் இருக்கிற அதே சிந்தனை போல, இவர்களுக்கும் தாங்கள் இல்லாமல் இந்த உலகம் எப்படி இயங்கப் போகிறதாம்? என்ற எண்ணமும் இருக்கக் கூடும்.

பொற்காசும் பரிசில்களும் கிடைத்த புலவர்களுக்கு அங்கீகாரம் என்பது பற்றி எந்தச் சீற்றமும் இருக்கவில்லை. பேஸ்புக் விருப்புக் குறி கஞ்சிக்கும் ஆகாது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும்படிக்கு, பிழைப்பில் கவனமாக இருந்தார்கள்.

எங்கோன் மாறன் வழுதி கூடலில் ஆடையின்றி, வாடையின் மெலிந்து, பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் அந்தப் பரதேசிப் புலவனுக்கும் அறச்சீற்றம் அடைய அன்றைக்கு பேஸ்புக் இருக்கவில்லை. விசயம் தெரியாமல், இவனது கவிதையை காதலித்து, உடுத்த உடையோடு ஓடிவந்து, சோத்துக்கு வழியில்லாமல் ஓலைக்குடிசையில் காத்திருக்கும் மனைவிக்கு நாரையைத் தூது விடத் தான் முடிந்தது. 'இந்த நாசமாப் போனவனுகளை நம்பி ஏமாந்திடாதீங்கடி!' என்று இன்றைய கவிதைக் காதலிகளுக்கு அந்தப் புலவனின் பெண்ணிய மனைவி ஏதாவது கவிதை எழுதியிருந்தாலும், தமிழ் விக்கி தனிப்பாடற் திரட்டு முத்திரை குத்தாளர்கள் அவளை அங்கீகரித்தும் இருக்க மாட்டார்கள்.

ஆகவே, இந்த அறச்சீற்றம் என்பது எங்கிருந்து வருகிறது?

அங்கீகாரம் என்பதிலிருந்து தொடங்குகிறது.

தன்னைப் பெரியவனாக மற்றவர்கள் பிரகடனப்படுத்த வேண்டும் என்பதில் தொடங்குகிறது.
அது கிடைக்காத போது எழும் கோபத்திற்குத் தான் இவர்கள் அறச்சீற்றம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

பொற்காசும் பரிசில்களும் கிடைத்த புலவர்களுக்கு அங்கீகாரம் என்பது பற்றி எந்தச் சீற்றமும் இருக்கவில்லை. பேஸ்புக் விருப்புக் குறி கஞ்சிக்கும் ஆகாது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும்படிக்கு, பிழைப்பில் கவனமாக இருந்தார்கள்.

எங்கோன் மாறன் வழுதி கூடலில் ஆடையின்றி, வாடையின் மெலிந்து, பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் அந்தப் பரதேசிப் புலவனுக்கும் அறச்சீற்றம் அடைய அன்றைக்கு பேஸ்புக் இருக்கவில்லை. விசயம் தெரியாமல், இவனது கவிதையை காதலித்து, உடுத்த உடையோடு ஓடிவந்து, சோத்துக்கு வழியில்லாமல் ஓலைக்குடிசையில் காத்திருக்கும் மனைவிக்கு நாரையைத் தூது விடத் தான் முடிந்தது. 'இந்த நாசமாப் போனவனுகளை நம்பி ஏமாந்திடாதீங்கடி!' என்று இன்றைய கவிதைக் காதலிகளுக்கு அந்தப் புலவனின் பெண்ணிய மனைவி ஏதாவது கவிதை எழுதியிருந்தாலும், தமிழ் விக்கி தனிப்பாடற் திரட்டு முத்திரை குத்தாளர்கள் அவளை அங்கீகரித்தும் இருக்க மாட்டார்கள்.

புகழ்ந்து பாடிய புலவனுக்கு பரிசு கிடைக்கிறதாம் என்ற வதந்தி வந்தாலேயே 'பார் வேந்தே, என்னைப் பார் வேந்தே, பாட்டோடு வந்திருக்கிறேன்' என்று தருமிகளும், முன்நவீனத்துவக் 'கவிதை எழுதும் கிருமிகளும்' படையெடுத்திருப்பார்கள்.

கிருமிநாசினிக்கு அந்தக்காலத்தில் ஆசானும் வேறு இல்லை.

புகழ்ச்சியில் புல்லரித்த மன்னனும் அள்ளிக் கொடுத்திருப்பான்.

அவன் அள்ளிக் கொடுத்தே கஜானா காலியாகுவதற்குச் சந்தர்ப்பம் இருந்திருக்கக் கூடும்... இன்றைய கவிஞர்களின் சனத்தொகை அளவு அன்றும் இருந்திருந்தால்!

ஆனால், அந்த மன்னர் ஆட்சி முறை முடிந்து, எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் ஆன, புலவர்களுக்குப் பிழைப்புக் கெட்ட காலத்தில் தான் 'சரி, பொற்காசு கிடைக்கா விட்டால் என்ன? புத்தக விற்பனையும் pdf புண்ணியத்தில் பிழைப்புக்கான

வழியாகத் தெரியவில்லை. புகழாவது கிடைக்கட்டுமே?' என்று தான் அங்கீகாரத்திற்கான தேடல் ஆரம்பிக்கிறது.

அன்று பிடித்த சனியன்.

அது கிடைக்காத போழ்துகளில் ஒரே சீற்றம் தான்.
அது வெறும் விருப்புக்குறியாகத் தான் இருந்தாலும்!

அந்த அங்கீகாரம் தங்களுக்குக் கிடைத்திருக்கிறதாக நினைக்கிறவர் களுக்கு, அதை வைத்துக் கிடைக்கும் பால் உறவு உட்பட்ட சகல சொகுசுகளும் கிடைக்கிறவர்களுக்கு, அறமோ, அது பற்றிய சீற்றமோ அநாவசியமானவை.

அது பற்றிய சீற்றங்கள் எதிரிகளை உண்டாக்கும். யாரையோ பகைக்க வைக்கும். அதனால் பிழைப்புக்குப் பங்கம் வரும் என்ற உண்மை அவர்களுக்குத் தெரியும்.

பொதுவெளியில் தங்களுக்குக் கிடைக்கும் புகழும், விருதுகளும், பேட்டிகளும் கிடைக்காமல் போய் விடும் என்பது தெரியும்.

ஆனால், அந்த அயோக்கியர்கள் தான் அறம் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிறார்கள்.

தங்களுடைய அறம், சமூக அறம் பற்றி அல்ல.
மற்றவர்களின் அறம் பற்றி!

ஆசான் அறம் பற்றிப் பேசுவாரே அன்றி, அறச்சீற்றம் பற்றிப் பேசுவதில்லை. அவருடைய அறச்சீற்றம் எல்லாம் தன்னுடைய போட்டியாளர்கள் என நினைப்பவர்கள் மீதானது தான்.

அ.முத்துலிங்கமோ, காலம் செல்வமோ, ஏன் இப்போது சோபா சக்தியோ சமூக அறம் பற்றிப் பேசுவதைக் கண்டிருக்கிறீர்களா?

எப்போதாவது இலக்கிய அறம் பற்றிப் பேசியிருக்கக் கூடும். யாழ்ப்பாணி முறையில் தயாரிக்கப்பட்ட புலி பிராண்ட் தமிழ்த்தேசிய அறம்

**அந்த மன்னர் ஆட்சி முறை முடிந்து, எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் ஆன, புலவர்களுக்குப் பிழைப்புக் கெட்ட காலத்தில் தான் 'சரி, பொற்காசு கிடைக்கா விட்டால் என்ன? புத்தக விற்பனையும் pdf புண்ணியத்தில் பிழைப்புக்கான வழியாகத் தெரியவில்லை. புகழாவது கிடைக்கட்டுமே?' என்று தான் அங்கீகாரத்திற்கான தேடல் ஆரம்பிக்கிறது.**

**அன்று பிடித்த சனியன்.**

பேசியிருக்கிறார்கள்.
அதைத் தவிர்ந்து, அவர்கள் பேசுகிற அந்த அறம் என்ன என்பது அவர்களுக்கும் தெரியாது. உங்களுக்கும் தெரியாது.

வசுமித்ர மாதிரி யாராவது விளாசினாலும், விளங்காத மாதிரி கடந்தே போய் விடுகிறார்கள்.

அவர்களுக்கு இப்போது அந்த அறச்சீற்றம் ஒரு தேவையில்லாத ஆணி.

அங்கீகாரம் என்பதை அவர்கள் அடைந்து முக்தி பெற்று விட்டார்கள். அந்த முக்தியை அடைவதற்கு சாம, பேத, விஸ்கி, விருது தான, தண்டுதல்களை பயன்படுத்தியது மட்டுமன்றி, சாதி மறைத்து தலித் {ானஸ்நானம் கூடப் பெற்றிருக்கிறார்கள்.

அவர்களைப் போல முக்தியடைய வேண்டும் என்று தான் மீதிப் பேரும் முக்குகிறார்கள்.

தாங்கள் தேடிய அங்கீகாரத்தை அடைந்தவர்கள் அறச்சீற்றம் அடைவதில்லை.

இந்த இலக்கியக்கூட்டத்தின் அறச்சீற்றம் எல்லாம் தனக்குக் கிடைக்க வேண்டிய புகழும் பெருமையும் மற்றவர்களுக்குக் கிடைப்பது பற்றியதுதான்.

அந்த அறச்சீற்றம் அடுத்தவனுக்கு கிடைக்கும் விருது மட்டும் பற்றியதல்ல, விருப்புக்குறிகள் பற்றியதும் கூட.

அது தனக்குக் கிடைக்கும்போதும், கிடைக்கும் என நம்பும் போதும், அடங்கி விடுகிறது. 'கள்ள மௌனமாகி' விடுகிறது.

'அதுதானே பார்த்தேன்!'.

அல்லது பொங்கினேன்.

நான் சொல்வது போல, விருதுக்காக வடக்கு நோக்கியும், கனவு இல்லத்திற்காக கோட்டை நோக்கியும்!

எஸ்.ராமகிருஷ்ணன் எப்போதாவது அறச்சீற்றம் அடைந்ததைக் கண்டிருக்கிறீர்களா?


ஏன் இன்னொருவர் கதையைத் திருடினார் என்ற குற்றச்சாட்டு வந்த போதாவது அறம் பற்றித் தன்னிலை விளக்கம் அளித்தாரா?


ஆனால், அவர் ஒருவர் தான் இலக்கிய விருதும், கனவு இல்லமும் என இரண்டும் கிடைத்த ஒரே ஆள். சினிமாவில் பாலாபிஷேக கட்டவுட் நாயகனுக்கு பஞ்ச் டயலாக் எழுதுகிற அதிஷ்டமும் பெருமையும் வாய்க்கப் பெற்றவர்.


ஆக மொத்தத்தில், ஒரு தமிழ் இலக்கியவாதி அடைய வேண்டும் என்று கனவு காண்கிற உச்ச 'ஆர்கசத்தை' அடைந்த ஒரே ஆள் அவர் மட்டும் தான்.

ஆசானுக்குக் கூட அந்தப் பெருமை வாய்க்கப் பெறவில்லை.

இந்த armchair world traveler உட்கார்ந்த இடத்திலேயே உலகத்தைச் சுத்தி {ானப் பழங்கள் அனைத்தும் பெற்றிருக்க, இந்த நம்பர் வண்களும் மகத்தான சில்லறைச் சல்லிப்பயல்களும் எதற்காக அனாவசியமாக உலகத்தைச் சுற்றி வந்து அறச்சீற்றம் கொள்கிறார்கள் என்பது எனக்கு 'அருண்மொழி மர்மமாகத்' தான் இருக்கிறது.




# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**என்ற வார்த்தையைத்**

## தேடுங்கள்...
## கண்டடைவீர்கள்!



# Ciao, Papa!

நான் இந்த வீட்டுக்கு வந்து 25 வருடங்களுக்கு மேல். என் பக்கத்து வீட்டு இத்தாலியர், பெனிட்டோ, எனக்குத் தந்தை போன்றவர். என் மீது மிகுந்த நேசமும் மதிப்பும் அக்கறையும் கொண்டவர்.

ரொறன்ரோ பெருநகராக எழுபதுகளில் கட்டியெழுப்பப்பட்ட காலம். கியூபெக் பிரிவினை உச்சம் பெற்ற காலத்தில் மொன்றியலைத் தலைமையகமாகக் கொண்டிருந்த வங்கிகளும், ஆங்கிலேயர்களின் தொழில் நிறுவனங்களும் ரொறன்ரோவுக்குப் படையெடுக்கத் தொடங்கிய காலத்தில், அதன் கட்டுமானப் பணிகளுக்கான இத்தாலியர்களே வந்து சேர்ந்தார்கள். ரொறன்ரோவின் பிரபலமான சி. என்.கோபுரம் அவர்களால் தான் கட்டியெழுப்பப்பட்டது.

அவ்வாறு வந்து சேர்ந்தவர் அவர்.

தான் வாழ்ந்த கூட்டுக்குடும்ப வாழ்க்கையை இங்கே தொடர நினைத்து பெரிய வீடு ஒன்றைத் தானே திட்டமிட்டுக் கட்டியிருக்கிறார். ஆனால், குஞ்சுகள் கூட்டை விட்டுத் தனியே பறந்து விட்டன.

எனவே என் குடும்பத்தினர் அவர்களுக்கு பிள்ளைகள். நாங்கள் இருவரும் வேலைக்குச் செல்லும்போது, பாடசாலை பஸ் வரும்வரைக்கும், மாலை பாடசாலை முடிந்து வரும் போதும் எங்கள் மகனைப் பார்த்துக் கொண்டது அவரது மனைவி தான்.

நான் தோட்ட வேலைகளில் ஆர்வம் காட்டுவதால் என் மீது மிகுந்த பட்சம். ஓய்வு பெற்ற பின்னால், அவர் முழுநேரத் தோட்டக்காரன்.

என்னுடைய அசாதாரண நடவடிக்கைகள் அவருக்கு ஆச்சரியமூட்டும். ‘உவன் தெரியாத விசயங்களைச் செய்கிறான்’ என்ற சாதாரண தந்தைக்கு இருக்கக் கூடிய நினைப்பு. அதையும் என்னிடம் நேரடியாகச் சொல்ல மாட்டார். மனைவியிடம் கேட்டுக் கொள்வார்.

என்னுடைய முந்திரிக் கன்றுகளை வருடாந்தம் கத்தரிப்பது அவர் தான். ஒரு நாள் காலை வேலைக்கு புறப்படும்போது, பின்புறம் யாரோ பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

போய் பார்த்தால், இத்தாலியில் இருந்து வந்த அவரது மைத்துனரும் அவரும் ஏணியில் ஏறி முந்திரி கத்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். மைத்துனருக்கு ஆங்கிலம் தெரியாது. எங்கள் மொழிகளில் சுகநலம் விசாரித்துக் கொண்டிருந்தோம்.

ஒருநாள் தோட்டத்தில் நின்ற போது, அதில் இருந்த களைகளைப் பிடுங்கும்படி ஒரு வயோதிப மாது என்னை அதட்டிக் கொண்டிருந்தார், இத்தாலிய மொழியில். இத்தாலியில் இருந்து வந்த அவரது திருணமாகாத மூத்த சகோதரி.

எனது தோட்டத்தில்

எல்லாமே இருந்தாலும், என்னைக் கண்டால் அவருக்கு எதையாவது தர வேண்டும். தக்காளி, மிளகாய் என்று எல்லாம் அனாவசியமாக் கிடைக்கும்.

வீட்டின் முன்புறத்தில் நான் மழை நீர் சேர்க்கும் கொள்கலத்தில் உள்ள நீரை அவரே பயன்படுத்துவார். அவரது புல் வெட்டும் இயந்திரம் பழுதானால் திருத்துவது நான்.

அவருக்கு நான் ஒரு சகல கலாவல்லவன்.

நான் தோட்டத்தைப் படம் பிடிக்கும்போது, அவரை எப்போதும் படம் பிடிப்பேன். அவருக்குப் பெரும் மகிழ்ச்சி.

என்னுடைய கமெராவைப் பாராட்டுவார்.

சென்ற வருடம் நோய் வாய்ப்பட்டு, படுக்கையில் கிடந்தார். ஒருபோதுமே சும்மா இருக்க முடியாதவர். அவரால் சமாளிக்க முடியவில்லை. ஊன்றி நடக்க இருக்கும் நடைக் கருவியைப் பிடித்துக் கொண்டே, புல் வெட்டும் மகனுக்கும் பேரனுக்கும் அதட்டல் நடக்கும்.

அவருடைய மனைவி அவரை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டார். அடிக்கடி போய் கதைப்பேன்.

கடைசியில் முடியாமல் போய், அவரை வயோதிப இல்லத்தில் சேர்த்திருந்தார்கள். நாங்கள் இருவரும் பார்க்கப் போக இடம் கேட்டபோது, அவர் போய் விட்டார்.

அவர்களின் குடும்பத்தில் நாங்களும் பிள்ளைகள். இறுதியாகப் பார்வையிடச் சென்ற போது, மிகவும் சிறிய தொகை உறவுகளும் நண்பர்களும்.

அறைக்குள் போகும்போது, அவரது வாழ்க்கை வரலாற்றைப் படங்களாகத் தொகுத்து மேலே திரையில் போட்டுக் கொண்டிருந்தார்கள். காலடி வைக்கும்போது அவரை கையில் ஷவல் ஒன்றை வைத்திருக்கும்போது நான் எடுத்த படம் தான் போய்க் கொண்டிருந்தது. அந்தத் தொகுப்பில் பல படங்கள் நான் எடுத்தவை. நல்ல கமெராவினால் எடுத்ததால்



அழகாகவும் இருந்தன.

மறுநாள் கோயில் வழிபாட்டுடன் இறுதி அடக்கம். இருவரும் போனோம்.

ஆனால், நான் இதுவரை கண்டிராத, ஆனால் அறிந்த அடக்க முறை.

இறுதி அடக்க சேமக்காலையில், மாடிக்கட்டிடம்.

அதில் Vaults எனப்படும், சுவரில் குகையாக்கப்பட்ட அறைகளில், பெட்டியை உள்ளே வைத்து சீல் வைக்கிறார்கள். அந்தப் பகுதி முழுக்க முழுக்க இத்தாலியர்களுக்கானது. சீனர்களும் அந்த முறைகளைக் கையாள்கிறார்கள்.

இறந்தவர்களின் நினைவுப் பொருட்களை பொதுப்பகுதியில் படங்களுடன் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருக்கிறார்கள்.

குடும்பத்தினர் எல்லோரும் எங்களை இறுகத் தழுகி நன்றி சொன்னார்கள்.

மூத்த மகனைக் கட்டியணைத்த போது, விம்மி அழுதான். அவனுக்கும் கிட்டத்தட்ட என் வயது இருக்கும் என நினைக்கிறேன்.

எனக்கும் அழுகையை அடக்க முடியவில்லை.

